# சுவடிப் பதிப்புகளில் உரைவேறுபாடுகள்

தொகுதி
1






பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் தி. மகாலட்சுமி



T.17732



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள்

## (தொகுதி-1)


பதிப்பாசிரியர்

முனைவர் கோ.விசயராகவன்

முனைவர் தி.மகாலட்சுமி



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை – 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கோ. விசயராகவன்<br>இயக்குநர்<br>முனைவர் தி. மகாலட்சுமி<br>ஆய்வுஅலுவலர் |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113<br>தொலை பேசி எண் 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : | 750 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2012 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 அளவு |
| பக்க எண்ணிக்கை | : | viii + 296 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 135/- (ரூபாய் நூற்று முப்பந்தைந்து மட்டும்) |
| அச்சகம் | : | லட்சுமி ஏஜென்சிஸ்<br>23/11, பெருமாள் முதலி தெரு,<br>இராயப்பேட்டை<br>சென்னை-600 014 |
| பாடம் | : | பதிப்பு உரைவேறுபாடுகள் |

முனைவர் கோ. விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், பிஎட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

அண்மைக்காலத் தமிழாய்வுகள் அனைத்தும் செம்மொழித் தமிழ்ப் படைப்புகளை மையப்படுத்தியே அமைந்துவருகின்றன. தமிழிலக்கியப் பரப்பில் பழந்தமிழ்ப் படைப்புகளை நன்கு ஆராய்வதற்குத் தொடர்புடைய வேறு நூல்களையும் ஆய்வுகளையும் பயில வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு ஆய்வில் ஈடுபடும் தமிழ்த்துறை மாணவர்களும் ஏனைய ஆய்வாளர்களும் பயன்பெறும் பொருட்டு, **சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள்** என்னும் இந்நூல் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இத்தொகுப்பு நூல்,

1. தொல்காப்பிய ஆய்வுகள்
2. சங்க இலக்கிய ஆய்வுகள்
3. காப்பிய இலக்கிய ஆய்வுகள்
4. பக்தி இலக்கிய ஆய்வுகள்
5. சிற்றிலக்கிய ஆய்வுகள்
6. மருத்துவ, சோதிட, ஆவண ஆய்வுகள்

எனும் பகுப்புகளைக் கொண்டிலங்குவதன் மூலம் தமிழிலக்கிய வரலாற்றினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது. மேலும், இத்தமிழிலக்கியப் பரப்பு அனைத்தையும் உள்ளடக்கிய ஓலைச்சுவடிக் கட்டுரை ஆய்வுகளைக் கொண்டு திட்டமிட்டுள்ளமை சிறப்பானதாகும்.

மிகவும் குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டு, கட்டுரைகள் பெறப்பட்டு, நடத்தப்பெற்றுள்ள இப்பன்னாட்டு ஓலைச்சுவடிகள் பயிலரங்கமும் அதன் இரு தொகுப்பு நூல்களும் எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பயனளிக்கும்.

இந்நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் தொடக்கமாக, தமிழகப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பன்னாட்டுத் தமிழ் வல்லுநர்கள் மற்றும் இளந்தலைமுறைத் தமிழாய்வாளர்கள் பலரும் பங்களித்துள்ள இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2013 மார்ச்சு 6,7 ஆகிய நாள்களில் சிறப்புற நடந்தேறியமை தமிழுலகுக்கு வளம் சேர்ப்பதாகக் கருதப்படுகிறது.

இதுகாறும் தெரியவந்துள்ள ஓலைச்சுவடிகளுக்கு மேலாக, இடம்பெயர்ந்த தமிழர்களிடத்தும் தமிழ் ஓலைச்சுவடிகள் உள்ளன என்பதையும் அவற்றுள் தமிழாய்வுகள் நடந்துவருகின்றன என்பதையும் இந்நூல் மூலம் அறிய வருகின்றமை மேலும் தமிழுக்கு வளம் சேர்ப்பதாக அமைகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழிலக்கியம் மற்றும் சுவடிப்புலத்தின் சார்பில் நடத்தப் பெற்ற இக்கருத்தரங்கிற்கும் வெளியிடப்பெற்றுள்ள இத்தொகுப்பு நூலுக்கும் தம் முழுஉழைப்பை நல்கிய இப்புலத்தின் ஆய்வு அலுவலர் பேராசிரியை முனைவர் தி. மகாலட்சுமி அவர்கள் பாராட்டுக்குரியவர். துணையாய் நின்ற அனைத்து ஆய்வாளர்களையும் நிறுவனக் கல்விப் பணியாளர்களையும் நிருவாகப் பணியாளர்களையும் பாராட்டுகிறேன்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு உயர்வுதனை நாளும் சிந்தித்து அல்லும் பகலும் உழைத்துவரும் உலகத் தமிழினத் தலைவி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு(ம) இளைஞர் நலத்துறை அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன்** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் ஒளிக்கோர்வை செய்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா, திருமதி எ.ம.லட்சுமி ஆயியோருக்கும், தட்டச்சர் செல்வி ல. தீபிகா ஆகியோருக்கு எம் பாராட்டுகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி ஏஜென்சிஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# பதிப்புரை

தமிழ் இலக்கிய, இலக்கண, மருத்துவ, சோதிடப் பனுவல்களைப் பதிப்பித்தல் என்பது தமிழ்ச் சமூகத்தின் அறிவுத் திரட்சியை ஆவணப்படுத்துதலாகும். 'பதிப்பித்தல்' என்னும் தொழிற்பாட்டை நவீனத்துவத்தின் ஒரு கூறாகப் புரிந்துகொள்ள இயலும்.

இத்தகைய பதிப்பு முறை, பதிப்பு நுட்பம், பாடவேறுபாடு, இடைச்செருகல், உரையாசிரியர் வரலாறு, உரை நுட்பம் இவையாவும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய ஆய்வுப் போக்கில் குறிப்பிடத்தக்க பொருண்மையாக அமைந்தன. இந்த நேரிய வரலாற்றில் அடுத்தகட்ட ஆய்வுக் கண்ணியாக அமைவது ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்ட பதிப்புகளை மறு ஆய்வு செய்தலாகும்.

இதனை நோக்கிய முயல்வாகவே இக்கருத்தரங்கம் அமைகின்றது. இதிலமைந்துள்ள கட்டுரைகள் சுவடிகள்-பதிப்புகளோடு வெவ்வேறு கோணங்களில் தொடர்பு கொண்டவை என்பதைப் புலப்படுத்துகின்றன. பதிப்பிக்கப்பட்ட இலக்கிய இலக்கண, மருத்துவ, சோதிட நூல்களின் சரியான பாட ஏற்பு குறித்த விவாதத்தை இக்கட்டுரைகள் முன்வைக்கின்றன.

சங்ககாலம் தொட்டு ஓலைகளிலும், தாள்களிலும் வந்துள்ள இலக்கண இலக்கியப் பதிப்புகளைத் தொகுத்துச் செம்மைப் படுத்தி சான்றோர் உரைகண்டுள்ளனர். அவற்றைக் கணிக்கும் வகையில் நுட்பமான மதிப்பீடுகளை இந்நூல் தொகுப்பு அமைகிறது. இதில் பல அறிஞர் உரைவேறுபாடுகளைக் கண்டறிந்து செம்மையுற, பிழைகள், உரைவேறுபாடுகள், இடைச்செறுகல்கள் போன்றவற்றை நுட்பத்துடன் வெளிப்படுத்தியுள்ள கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை செம்பதிப்பு கொணரும் சிந்தனை மேலோங்கி இருக்கும் இந்தக் காலத்திற்கு உதவியாக இருக்கும்.

மூலநூல் ஆசிரியர்களின் மூலபாடச் சொற்களைக் காட்டிலும் பதிப்பாசிரியர்கள் மற்றும் உரையாசிரியர்கள் தந்துள்ள பாடவேறுபாடுகளிலுள்ள சொற்களும் உண்மைப்பாடமாக இருக்க வாய்ப்புண்டு. அதுமட்டுமல்ல இவற்றுக்கான வேறுபுதிய மூலபாடச் சொற்களையும் வல்லுநர்குழு அமைத்துக் கண்டறிய வாய்ப்புள்ளது. இது போன்ற சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் பலஅமைந்துள்ளன.

முதல் தொகுதியில் 29 கட்டுரைகளும், இரண்டாம் தொகுதியில் 35 கட்டுரைகளும் அமைந்துள்ளன. இவற்றைச் சிங்கப்பூர், மலேசியா, தில்லி, கேரளா, புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக் கழகத் தமிழ் அறிஞர்கள் தந்துள்ளனர். இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பெரிதும் பயன்படக்கூடிய நூல் தொகுதி எனலாம்.

ஐரோப்பிய நாடுகளில் தொல்இலக்கியப் பாடத்தை அறுதிசெய்யும் பயில்வு முறையாகவே மூலபாடத் திறனாய்வை (Textual Criticism) உருவாக்கியுள்ளனர். இதனடிப்படையில் சமய நூல்களையும் (Theology Texts), பழம் இலக்கியப் பனுவல்களையும், புதிய பொருள் கோடலுக்கு (Hermenautious) உட்படுத்தி உரைகாண்கின்றனர். இவ்வகையில் தமிழில் வரப் பெற்றுள்ள பதிப்புகள் அனைத்தும் பாடவேறுபாட்டு நோக்கிலும், உரைவேற்றுமை நோக்கிலும், மூலபாடத் திறனாய்வு நோக்கிலும், வரலாற்றுச் சமூகவியல் தளத்தில் இருந்து ஆராயப்பட வேண்டும். இந்த ஆராய்வுகள் நூலாக்கம் செய்யப்படவும் வேண்டும். இதனை முன்வைத்து உருப்பெறும் விவாதங்கள் ஒவ்வொரு நூற்கும் செம்பதிப்பு ஒன்றை உருவாக்கிடத் துணைபுரியும்.

இந்நூலில் அமைந்துள்ள கட்டுரைகள் தொல்காப்பியம் தொடங்கி மருத்துவ, சோதிட, மந்திர நூல்கள் வரை பல்வேறு பொருண்மை சார்ந்தன. தமிழாய்வுப் பரப்பில் தொடர்ந்த ஆய்வுப் பொருளாக 'பதிப்பும் சுவடியும்' இருந்து வருகின்றது. இதனை ஒட்டியே மார்ச்சு 6, 7ஆகிய நாட்களில் நடைப்பெற்ற சுவடியியல் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. இது தொடர்ந்து வரும் பல நல்ல ஆய்வுகளுக்கு நம்மை இட்டுச் செல்லும் என்று நம்புகிறேன்.

இந்நூல் ஆக்கம் பெறுவதற்கு உரிய நேரத்தில் கட்டுரைகளை அனுப்பிய அறிஞர் பெருமக்களுக்கும், நூல் தொடர்பான பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், உற்றுழி உதவிய ஆய்வுமாணவர்களுக்கும் என் அன்பான நன்றி.

**தி. மகாலட்சுமி**

# பொருளடக்கம்

பக்கம்

1. நச்சினார்க்கினியரின் உரை வழு - முனைவர் வெ.மு. ஷாஜகான்கனி 1

2. அடிகளாசிரியரின் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் சுவடி நோக்கு - முனைவர் சி. பழனியாண்டி 18

3. தொல்காப்பிய எழுத்ததிகார உரை வேறுபாடுகள் - முனைவர் கி. ஆதிநாராயணன் 22

4. தொல்காப்பியச் சொல்லதிகாரக் கல்லாடனார் உரைநெறி - மு.ப. ஆய்வாளர் பொ.வேல்முருகன்

5. தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில் சுவடிநோக்கு - மு.ப. ஆய்வாளர் ஆர். அருள்மணி 41

6. தொல்காப்பிய ஆங்கிலப்பதிப்புகளும் மொழிபெயர்ப்பும் - முனைவர் கா. இரவிச்சந்திரன் 45

7. தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் அறியப்படாத மறுபக்கம் [வ.உ.சி.-எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்புகள்] - மு.ப. ஆய்வாளர் த. தென்னவன் 55

8. தொல்காப்பிய உரைகள் முற்காலப் பார்வையும் தற்கால நோக்கும் - முனைவர் இரா. இராஜேஸ்வரி 53

9. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் - பொருளும் உரைகளும் - முனைவர் மா. பெரியசாமி 73

10. செம்மொழித் தகுதியும் செம்பதிப்புகளின் தேவையும் - முனைவர் இரா. வெங்கடேசன் 82

11. ஐங்குறுநூறு உரைவேறுபாடுகள் - முனைவர் அ. அறிவுநம்பி 97

12. அகாநானூறு நெய்தல் பாடல்கள் [சுவடிவேறுபாடுகளும், தீர்வுகளும்] - முனைவர் ச.வே. சுப்பிரமணியன் 106

13. அகநானூற்றில் பாடவேறுபாடு - முனைவர் அ. கந்தசாமி 117

14. உரைநடை வளர்ச்சியில் புறநானூறு காணும் உரைவேறுபாடு 137
- முனைவர் அ. சிவக்குமார்

15. பதிற்றுப்பத்து - முதற்பத்தின் தலைவன் உதியஞ்சேரலாதன் குறித்த உரைவேறுபாடுகள் 154
- முனைவர் ஆ. தசரதன்

16. கலித்தொகையில் பாடவேறுபாடு 168
- முனைவர் பா. ஜான்சிராணி

17. எழுகுளிறா? எழுகளிறா? 180
- முனைவர் மோ.கோ. கோவைமணி

18. உ.வே.சாமிநாதையரின் சங்க இலக்கியப் பதிப்பின் உரைநயம் 185
- மு.ப. ஆய்வாளர் சி. கங்காதரன்

19. ஆற்றுப்படை நூல்களில் உரைவேறுபாடுகளும் கருத்து வேறுபாடுகளும் 190
- மு.ப. ஆய்வாளர் க. கிரிவாசன்

20. பதிற்றுப்பத்து - ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரைத்திறன் 198
- மு.ப. ஆய்வாளர் ச. கண்ணதாசன்

21. கி.வா. ஜகந்நாதன் - திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு 211
- முனைவர் ச. சிவகாமி

22. திருக்குறள் பாடவேறுபாட்டின் சிறப்புகள் 221
- முனைவர் கை. சங்கர்

23. நாலடியார் - பதிப்பும் உரையும் 236
- மு.ப. ஆய்வாளர் ச. பிரியா

24. சிலம்பு - பாடவேறுபாடு 247
- முனைவர் இரா. காசிராசன்

25. சிலப்பதிகார உரைவேறுபாடுகள் 251
- முனைவர் தி. மகாலட்சுமி

26. சிலப்பதிகார அழற்படுகாதையில் இடைச்செருகல் 259
- மு.ப. ஆய்வாளர் ப. வித்தியாவதி

27. மணிமேகலை உரைவேறுபாடுகள் 264
- முனைவர் மு. சற்குணவதி

28. சீவகசிந்தாமணியில் உரைவேறுபாடு 271
- முனைவர் க. சங்கர்

29. காப்பியங்களில் காணப்படும் பாடவேறுபாடுகள் 278
- முனைவர் மூ. கருணாநிதி

# நச்சினார்க்கினியரின் உரை வழு

முனைவர் வெ.மு. ஷாஜகான்கனி

## முன்னுரை

'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்பது பழமொழி. 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' எனப் போற்றப்படும் நச்சினார்க்கினியர் தம் உரைகளில் பல இடங்களில் சறுக்கியுள்ளார். 'உரை வேற்றுமைகள்' பற்றிய இக்கருத்தரங்கில் நச்சினார்க்கினியரின் உரை வழுக்களை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உரையாசிரியர்களுள் பழந்தமிழ் நாடகம் தொடர்பான அறிவு நிறைந்தவர் நச்சினார்க்கினியர். தொல்காப்பியப் புறத்திணையியல், வெட்சித் திணையில் வரும் போந்தை, வேம்பு, ஆர் ஆகியன அவரவர் பூச்சூடி ஆடின 'கூத்துகள்' என்று கூறிய ஒரே உரையாசிரியர் நச்சினார்க்கினியரே ஆவார். சீவகசிந்தாமணிக்கு அவர் எழுதிய உரையில், மூவகை எழினிகள் பற்றிப் பழைய மேற்கோளுடன் விளக்கம் தந்திருப்பதும் அவரது நாடகப் புலமைக்குச் சான்றாகும். ஆனால். தொல்காப்பியப் புறத்திணையியல் மற்றும் பத்துப்பாட்டில் 'கூத்து' பற்றி வரும் சில இடங்களுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளில் வழுக்கள் பல உள்ளன. காலம் கருதி, அவற்றுள் ஒருசில வழுக்களை மட்டும் இங்குச் சுட்டிக் காட்டுவோம்.

## தொல்காப்பியப் புறத்திணையியல் உரைவழு

புறத்திணையியல் நச்சினார்க்கினியரின் உரை வழுக்களை முதலில் காணலாம். 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' முதலாக, 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே' வரை வந்துள்ள மாட்டேற்று நூற்பாக்கள் ஏழனுக்கும் இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர் எழுதிய உரைகள் வழுவானவை ஆகும். 'திணை வரலாறு' என்ற என் நூலில் இதனை விளக்கியுள்ளேன், இங்கு அதனை விளக்கினால் விரியும்.

வெட்சித்திணைத் துறையாக வரும் வள்ளிக்கூத்து **வாடா வள்ளி** (தொல். புறத்.5) எனப்பட்டது. வள்ளி என்ற சொல்

முருகனின் தேவி வள்ளியைக் குறித்ததன்று. வள்ளி என்றது வள்ளிக் கிழங்கைக் குறித்து, இக்கூத்திற்குப் பெயராகி வந்தது. வள்ளிக் கிழங்கு பசியைத் தீர்ப்பதோடு வமை தரும் மருத்துவக் குணமும் உடையது. பாரி வள்ளன் பறம்பு மலையில் உழவர் உழாமலேயே நான்கு பயனுடைத்து என்று கபிலர் பாடும்போது மூங்கில்நெல், பலா, வள்ளி, தேன் என்ற வரிசையில் மூன்றாவது இடத்தில்,

*மூன்றே*
***கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே*** (புறம்.109)

என்று வள்ளியைப் புகழ்வார். வள்ளலைப் போல வயிற்றுப்பசி ஆற்றும் பண்பால், வள்ளிக் கிழங்கினைக் காரணப் பெயராக ***வள்ளி*** என்றனர். போர் மறவர் போருக்குப் போவதற்குமுன் வள்ளிக் கிழங்கை உண்டு சென்றால் வெகு நேரம் பசி தாங்கும்; மலம் இறுகும்; அயராது போர் உடற்ற வள்ளிக் கிழங்கு உதவும். அதற்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான், வீரர்கள் வள்ளியைப் புகழ்ந்து பாடி ஆடும் கூத்து, வாடாத வள்ளி எனப்பட்டது. சங்க காலத்திலும் இக்கூத்து வழக்கத்தில் இருந்தது.

***வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்***
***நாடுபல கழிந்த பின்றை...*** (பெரும்பாண்.370-371).

வாடா வள்ளி = வள்ளிக்கூத்து. வள்ளிப்பூவினும் இக்கூத்தினை வேறுபடுத்த வாடா வள்ளி என்றனர். வள்ளிக் கூத்தை ஆடினால் நாட்டில் வளம் பெருகும் என்ற நம்பிக்கை நிலவியது. 'வளம்பல தரூஉம்' என்பது இதனைக் காட்டும். வேத்தியலாகப் போர்க்களத்தில் ஆடிய வள்ளிக்கூத்து சங்க காலத்தில் பொதுமக்களின் நம்பிக்கை சார்ந்த பொதுவியல் கூத்தாக மாறியிருந்தது என்பதை அறியமுடிகிறது.

இளம்பூரணர், "***வள்ளி என்பது ஒரு கூத்து***" என்று கூற, நச்சினார்க்கினியர், "***அஃது இழிந்தோர் காணும் கூத்து; இது பெண்பாற்குப் பெருவரவிற்று***" என்று மிகுத்து உரைப்பர். இழிந்தோர் காணும் கூத்து என்பதற்கு அவர் ஆதாரம் காட்டவில்லை. அதுவே அது வழுவான உரை என்பதை உணர்த்தும். நச்சினார்க்கினியர் காலத்தில் பெண்களே பெருவழக்கில் வள்ளிக் கூத்தை ஆடியிருக்கலாம். முருகனின் தேவி வள்ளியைப் போலக் குறத்தி வேடம் புனைந்த மகளிர், உரையாசிரியர் காலத்தில் ஆடிய வள்ளிக் கூத்து என்பது வேறு. தொல்காப்பியர் கூறும் வள்ளிக் கூத்து வேறு. தொல்காப்பியர் கூறும் வள்ளி, ஆடவர் ஆடிய கூத்தாகும். மேலும், **இது போர்க்**

*களம் சார்ந்தது. இதனைப் பெண்பாற்குப் பெருவரவிற்று என்றது பிழையான உரை.*

முருகனின் தேவி வள்ளி என்ற கருத்தாக்கம் சங்க இலக்கியங்களில் உண்டு.

> ***குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்***
> ***மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே***
> (திருமுருகு.101-102)
>
> ***முருகுபுணர்ந் தியன்ற வள்ளி போல*** (நற்.82: 4)
>
> ***குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர்*** (பரி.9: 67)
>
> ***நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே*** (பரி.14: 22)

என்பன இதற்குச் சான்றுகள். ஆனால், தொல்காப்பியர் காலத்திற்கும் மிகத் தொன்மையான வெட்சித் திணைக் காலத்தில் முருகன் தேவி வள்ளி பற்றிய கருத்தாக்கம் இருந்ததற்கோ, வள்ளிக் கூத்தைப் பெண்கள் ஆடியதற்கோ சான்றில்லை.

பெண்கள் ஆடிய வள்ளிக் கூத்து, சிலப்பதிகார உரையால் தெரிய வருகிறது. அடியார்க்குநல்லார் வள்ளிக்கூத்து பற்றிய ஒரு பழைய வெண்பாவைத் தருகிறார்.

> ***மண்டமர் அட்ட மறவர் குழாத்திடைக்***
> ***கண்ட முருகனும் கண்களித்தான் – பண்டே***
> ***குறமகள் வள்ளிதன் கோலங்கொண்(டு) ஆடப்***
> ***பிறமகள் நோற்றாள் பெரிது***

அமர்க்களத்தில் எதிரிகளை அழித்த மறவர் கூட்டத்தின் இடையே, முருகன் கண்டு களிக்கும்படி வள்ளியின் குறக்கோலம் தாங்கி ஒருத்தி ஆடினாள். ஒருத்திக்கு அப்படி ஆடும் வாய்ப்புக் கிடைப்பது, நோன்று பெறுதற்கரிய பேறு என்பது இதன் பொருள்.

வெட்சித்திணைக் காலத்தில், போர் வெற்றி ஒன்றே கருதி, வீரர்கள் ஆடிய வள்ளிக்கூத்து, சங்க காலத்தில் வளம்பல தரும் வள்ளி என்று நம்பிக்கை சார்ந்த கூத்தாக மாறி, உரையாசிரியர்களின் காலத்தில், முருகக்கடவுளின் தேவி வள்ளிபோல வேடமிட்டு முருகனை மகிழ்விக்க மகளிர் ஆடிய கூத்தாக மாறியது. எனினும், அந்த வெண்பாவின் முதலடி ***மண்டமர் அட்ட மறவர் குழாத்திடை*** என்று தொடங்குவதால், இது பழைய போர்க்கள ஆட்டத்தின் எச்சமே என்ற உண்மையை உணர்த்திவிடுகிறது!

**‘நிலை’ என்றால் கூத்து**

தொல்காப்பியப் புறத்திணையியல் வரும் ‘நிலை’ என்ற சொல்லுக்குக் ‘கூத்து’ என்று பொருள் கொள்வதே நேரிய உரையாகும். பதிற்றுப்பத்து 52ஆம் பாடல் துறை ‘குரவை நிலை’ என்பது. அது ‘குரவைக் கூத்து’ ஆகும். குறுந்தொகையில், ***“பு-நோக்கு உறழ்நிலை கண்ட”*** (குறுந்.328) என வருவது ‘புறநோக்கு உறழ்கூத்து’ ஆகும். ‘நிலை’ என்ற சொல் ‘அம்’ விகுதி பெற்று ‘நிலையம்’ என வரும். அது ‘நிலயம்’ எனவும் திரியும்.

***நிலயம் நிருத்தல் கூத்தெனப் படுமே*** (திவாகரம்9: 191)

***ஒருகால் தூக்கி நிலையம் ஒளிர்வித்து*** (கல்லாடம் 85:21)

***ஆடகத்தியன்று... மூவகை நிலையத்து எழுகரம் நிறீஇ***
(பண்டார மும்மணிக்கோவை 17:14)

என்பன இதற்குச் சான்று.

***வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை*** (தொல். புறத்.5)

என்பர் தொல்காப்பியர். இதன் உரையில் நச்சினார்க்கினியர், கழல்நிலையைக் ‘கழனிலைக்கூத்து’ என்பார். மேலும், “இது வள்ளிப்பின் வைத்தன் இருபாலரும் ஆடுதல் கொள்க” என்பர். கழல்நிலை என்பதைக் ‘கழல்கூத்து’ என்பதே சாலும்; ‘கழல்நிலைக்கூத்து’ என்றது மிகை. மேலும், இருபாலரும் ஆடுவர் என்ற அவரது கருத்திற்குச் சான்றாக எந்தவொரு பாடலையும் காட்டவில்லை. வெட்சித்திணைக் காலத்தில் வள்ளியே இருபாலரும் ஆடிய கூத்தன்று. எனவே, “இது வள்ளிப்பின் வைத்தன் இருபாலரும் ஆடுதல் கொள்க” என்றது வழுவான உரை.

கழல்நிலை என்றது கழல் கூத்து. வெற்றிக்குத் துணைநின்ற கழலுக்கு நன்றி தெரிவித்துப் பாடி ஆடிய கூத்து இது. வெட்சித்திணைக் காலத்தில் இது, ஆடவர் மட்டுமே ஆடும் போர்க்கள ஆட்டமாக இருந்தது என்பதே உண்மை.

**கழல்நிலை கழற்கூத்து என்றால், கொடிநிலை கொடிக்கூத்து அல்லவா?**

பாடாண் திணையில் வரும் ஒரு நூற்பா இது.

***கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற***
***வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்***
***கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே*** (தொல். புறத்.33).

கழல்நிலை-***கழல்கூத்து*** என்ற நச்சினார்க்கினியர், கொடிநிலையைக்

*கொடிக்கூத்து* என்றாரல்லர். இந்நூற்பாவிற்கு ஏதோ ஒட்டு உறவில்லாத பொருள் கூறிக் குழப்புகின்றார்.

> **"கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம், ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள், தண்கதிர் மண்டிலம் என்று சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்றுதெய்வமும் முற்கூறிய அமரரோடே கருதுமாற்றால் தோன்றும் என்றவாறு"**

என்பர். 'கடவுள்வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்பது, 'கடவுள்வாழ்த்தோடு பொருந்தி வரக்கூடிய (கூத்து)' என்று வெளிப்படையாகப் பொருள் தருகிறது. இவரோ, முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும் முற்கூறிய அமரரோடே தோன்றும் என்று கூறுவது ஏற்புடைய உரையன்று.

'கொடிநிலை' என்றால்... அது வெஞ்சுடர் மண்டிலமா? அதாவது சூரியனா? 'வள்ளி' என்றால்... அது... தண்கதிர் மண்டிலமா? அதாவது திங்களா? எப்படி?... உச்சி மேல் புலவர்கொள் நச்சினார்க்கினியருக்கு என்ன ஆனது! நமக்கு மயக்கமாக வருகிறது.

கொடிநிலை என்றால் ஞாயிறு என்றும், வள்ளி என்றால் திங்கள் என்றுமே உண்மையில் தொல்காப்பியர் கருதியிருந்தால்...

> **"ஞாயிறு திங்கள் சொல்லென வருஉம்"** (தொல். கிளவி.58)

என்று சொன்னவர், இங்கும் ஞாயிறு, திங்கள் என்றே தெளிவுறச் சொல் இருக்கலாமே? இங்கு மட்டும் கொடிநிலை, வள்ளி என்று சுற்றி வளைத்துச் சொல்வானேன்? சிந்திக்க வேண்டும். கொடிநிலையை, *"மாற்றாரை வென்றுயர்த்த கொடியின் சிறப்புணர்த்தும் கொடிநிலையென்ற துறையும்"* என்று வெள்ளைவாரணர் கூறுவது ஏற்புடைய பொருளாகும். இதனினும், 'கொடிநிலை' என்பது, அரச குடியின் கொடிப் புகழைப் பாடி ஆடுதல் என்று கூறுவது பொருத்தமாகும். சேரன் என்றால் வில் கொடிக்கென இமயத்தில் வில்பொறித்த ஒரு புகழ் உண்டு.

> **"இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி"** (புறம்.39)

> **"வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடி"**
> (பதிற். ஐந். பத். பதிகம்)

ஆரியரின் படையுடைத்த சோழர்களது புக்கொடி (அகம்.336), பாண்டியரின் மீன்கொடி (கத்.104) இவற்றிற்கும் புகழ் உண்டு.

*வான்தோய் வெல்கொடி தேர்மிசை நுடங்க* (பதிற்.44).
*மலைஉறழ் யானை வான்தோய் வெல்கொடி* (பதிற்.69).

இவ்வாறு அரச பரம்பரைக் கொடியின் புகழைச் சிறப்பித்துப் பாடி ஆடும் நாடகம் கொடிநிலை –**கொடிக்கூத்து** எனப்பட்டது!

'கந்து' என்றால் பற்றுக்கோடு. எதிரியின் பற்றுக்கோடாக உள்ள துணை வயை அல்லது அவனைப் பாதுகாத்து வந்த அரணை அழிப்பது கந்தழி ஆகும். இதற்கு மிகுந்த வமையான பேராற்றல் வேண்டும். எதிரியின் கந்தழித்த (வயழித்த) அரசனின் பேராற்றலைப் பாடி ஆடும் நாடகம் கந்தழி எனப்பட்டது.

வெட்சித்திணையின் துறையாக வந்த 'வள்ளி'யை உரையாசிரியர் "ஒரு கூத்து" என்றனர். இங்கும் வள்ளி என்றது ஒரு கூத்து. ஆனால் வெட்சித் திணைக் காலத்தின் வள்ளி என்பதினும் இது வேறு. இங்கு, வள்ளல் தன்மை **வள்ளி** எனப்பட்டது. அரசனின் வண்மையைப் பாடி ஆடும் கூத்தே வள்ளி. "தறுகண்மையினால் போருடற்றிய வீரர்க்கும் பரிசிலர்க்கும் வரையாது வழங்குதலாகிய மாறா வண்மையைக் குறிக்கும் வள்ளி என்னுந் துறையும்" என்பது இக்கருத்தை அரண்செய்யும்.

பாடாண் திணையைப் பிற்காலத்து ஐயன் ஆரிதனார்,

**ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்**
**அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று** (பு.வெ.மா.)

என்று விரித்துரைப்பர். **ஒளி** என்றால் புகழ். **ஆற்றல்** என்பது எதிரியின் வயை வேரறுக்கும் பேராற்றல். **ஓம்பா ஈகை** என்பது வரையாது கொடுக்கும் வண்மை. **அளி** என்றது மகளிர் மாட்டுக் காதல், கருணை என அளிக்கும் தண்ணளி. மேற்சுட்டிய முதலன மூன்றும், **கொடிநிலை-ஒளி; கந்தளி-ஆற்றல்; வள்ளி-ஓம்பா ஈகை** எனப் பொருந்துதல் காணலாம்.

***கொடிநிலை, கந்தழி, வள்ளி*** இம் மூன்று கூத்துக்களையும் வடுநீங்கு சிறப்பின் முதல் மூன்று கூத்துகள் என்றார் தொல்காப்பியர். பாடாண் திணை அரசனைப் பரவலும் புகழ்ச்சியுமான கூத்துகள் பலவற்றிலும், இம் மூன்று மட்டுமே முதலனவாக – குற்றமற்ற சிறப்பான கூத்துக்களாக முன்வைக்கத் தக்கன என்ற கருத்திலேயே,

**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே**
(தொல். புறத்.33)

என்றார். கொடிநிலை, கந்தளி, வள்ளி என்னும் ***முதலன மூன்று கூத்துக்களையும் கடவுள் வாழ்த்துப் பாடிமுடித்த பின்னரே தொடங்க வேண்டும்*** என்பது இதன் பொருளாகும்.

இன்றைய தெருக்கூத்துகள் மற்றும் கிராமத்துத் திருவிழாக்களில் நடத்தும் வள்ளி திருமணம், பவளக்கொடி போன்ற நாடகங்கள் தொடங்கும்போது விநாயகர் வணக்கம், சரஸ்வதி துதி முதயன பாடுவதைப் பார்க்கலாம். இவ்வழக்கம் தொல்காப்பியருக்கும் முந்திய தொன்மரபு என்பது தெரிகிறது.

சங்க காலத்து நாடகங்களின் தொடக்கத்திலும் இம்மரபினைப் பார்க்கிறோம். அதைத் தொடர்ந்து சிலப்பதிகார அரங்கேற்ற நிகழ்விலும் இம்மரபைக் காண்கிறோம்.

***கடனறி மரபில் கைதொழூஉப் பழிச்சி***
*(பெரும்பாண்.463)*

***அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை*** *(மலைபடு.538)*

***கைவல் இளையர் கடவுட் பழிச்ச*** *(பதிற்.41)*

***வாரம் இரண்டும் வரிசையில் பாட*** *(சிலப். அரங்.136)*

'வாரம் இரண்டு' என்பதால், சிலப்பதிகாரக் காலத்தில் கடவுள் வாழ்த்து இரண்டாகப் பாடிய வழக்கம் இருந்தது தெரிகிறது.

***தமிழ் நாடகத்தின் தொடக்கமாகக் கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு பாடாண் திணைக் காலத்திலேயே தொடங்கிவிட்டது.*** இதனை,

***"கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"***

என்ற அடியால் அறிகிறோம்.

**பத்துப்பாட்டில் உரைவழு**

***குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்து*** *(மதுரைக். 520)*

என்று மதுரைக்காஞ்சி தரும் குறிப்பு, நாடகத் திரை பற்றிய ஓர் அரிய செய்தி! ஆனால் துரதிர்ஷ்டவசமாக நச்சினார்க்கினியர் கவனக்குறைவாக எழுதிய உரையால், அந்த அரிய செய்தி இருட்டடிப்புக்கு ஆளானது. இச்செய்தி ஒரு முனைவர் பட்ட ஆய்வேட்டிலும் சுட்டப்பட்டுள்ளது.

அந்த 'நாடகத்திரை' பற்றிய குறிப்பை மதுரைக்காஞ்சி தரும் இடம் இதுதான்.

இப்பகுதி மதுரைக்காஞ்சியில் வரும் சூழலை முதல் மனங்கொள்ள வேண்டும். மாங்குடி மருதனார்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் தலைநகரான மதுரையின் 'நாளங்காடி' பகுதி ஆரவாரங்களைக் கூறிமுடித்து, அதைத் தொடர்ந்து 431ஆம் அடி முதலாக 544ஆம் அடி வரையிலும் 'அல்லங்காடி' என்னும் இரவுக் கடைவீதிகளின் ஆரவாரங்களை வருணிக்கும் இடத்தில் பின்வரும் அடிகள் இடம்பெற்றுள்ளன. இமையா நாட்டத்து உருகெழு பெரியோர்க்குப் பகொடுக்கும் அந்திவிழவில் பேரிளம் பெண்டிர் பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிய கடவுட் பள்ளியும், வேதம் விளங்கப் பாடும் அந்தணர் பள்ளியும், அறங்கூறவையமும் கூறியபின்னர், பண்ணியம் பகர்நரும் கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும் சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும் கங்கம் பகர்நரும் செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநருமான பல்வகை மக்களைக் காட்டியபின் இப்பகுதியை வருணிக்கிறார் மாங்குடி மருதனார்.

*"பூவும் புகையும் ஆயும் ஆக்களும்*
*எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி*
*நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்*
*கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடித்*
*தெண்டிரை அவிர்அறல் கடுப்ப ஒண்பல்*
*குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்துச்*
*சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ*
*நால்வேறு தெருவினும் காலுற நிற்றரக்*
*கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்*
*தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை*
*பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ*
*விழைவுகொள் கம்பலை கடுப்ப..."* (மதுரைக். 515-526)

*இவ்வடிகளுக்குப் பொருள்:* "பூ, மங்கலப் புகை, ஆய் (தாய்-கொற்றவை), ஆக்கள் (பசுக்கள்) என்பனவற்றை – எவ்வகைச் செய்தியையும் ஒப்புமை காட்டி நுட்பமாக உணரத்தக்க முறையில் தீட்டும் நுழைபுலம் மிக்க கண்ணுள் வினைஞர் எனப்பட்ட ஓவிய வல்லுநர்களும் அவர்களுக்குத் துணையான பிறரும் கூடிச் செய்த – தெளிந்த அலைகளால் ஒளிரும் கருமணல் போல் ஒளிவீசக் கூடிய பல குறுகியதும் நெடியதுமான திரைச்சீலைகள் மடித்து வைக்கப்பட்டிருந்தன. அந்த 'மடி' எனப்பட்ட திரைகளைச் சிறுவர்களும் பெரியவர்களுமாகக் கம்மியர் (தச்சர்) கூடி, நான்கு தெருக்கள் சந்திக்கும் நாற்சந்தியில் கால்களை (தூண்களை) நட்டு நிறுத்தினர். அதன்பின் கொடும்பறைக் கோடியரான கூத்தர் தம் நாடகக் குழுவினருடன் வாழ்த்துப்பாபாடி நாடகத்தைத் தொடங்கினர். அதன் ஆரவாரம், சேரன் அவையில் விழுமிய புலவர்கள் விருப்பத்துடன் பாடிப் பங்கேற்கும் ஆரவாரத்தை

ஒத்திருந்தது" – இது மேற்சுட்டிய அடிகளின் தெளிந்த பொருள் ஆகும். இந்த அடிகளுக்கு நச்சினார்க்கினியர் பின்வருமாறு உரைகூறுகிறார்.

பூக்களையும் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும், பலவகைப்பட்ட கூரிதாக உணர்ந்த தொழில்களையும் ஒப்புக்காட்டி, சித்திரமெழுதுவார்க்கு வடிவின் தொழில்கள் தோன்ற எழுதுதற் கென்பது பற்றிச் செய்தியுமென்றார். கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும், நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்தற் கண்ணுள் வினைஞரென்றார். பிறருங் கூடி - யான் கூறப்படாதோரும் திரண்டு, தெளிந்த திரையில் விளங்குகின்ற அறலையொப்ப ஒள்ளிய பலவாகிய சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடவைகளைக் கொண்டு வந்து விரித்து, மடித்தது அறலுக்கு உவமை. சிறியோரும் பெரியோரும் நெய்தற்றொழிலைச் செய்வார் திரண்டு, நான்காய் வேறுபட்ட தெருவுகள் தோறும் ஒருவர் காலோடு ஒருவர் கால் நெருங்க நிற்றலைச் செய்ய, கம்மியர்-விரித்து-குழீஇ-நிற்றலைச் செய்ய, இஃது அந்திக்கடையில் தெருவிற் புடவை விற்பாரைக் கூறிற்று. கோயிலைச் சூழ்ந்த ஆடவர் தெரு நான்காதன், நால்வேறு தெருவென்றார். இனிப் பொன்னும் மணியும் புடவைகளும் கருஞ்சரக்கும் விற்கும் நால்வகைப்பட்ட வாணிகர் தெருவென்றுமாம். கண்கள் வளைந்த பறையினையுடைய கூத்தருடைய சுற்றம் சேரவாழ்த்தும் குளிர்ந்த கடல் சேர்ந்த நாட்டையுடையவனாகிய ஒள்ளிய பனந்தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே, எல்லாக் கலைகளையும் உணர்ந்த சீரியோர் திரண்டு அவன் கேட்பத் தருக்கங்களைக் கூறி விரும்புதல் கொண்ட ஆரவாரத்தை ஒப்பக் கல்லென்ற ஓசை நடக்க பல சமயத்தோரும் தம்மிற்றாம் மாறுபட்டுக் கூறுந் தருக்கத்தைச் சேரக்கூறக் கேட்டிருக்கின்ற கம்பலை போல என்றார். – இந்த உரைமேல் சில கேள்விகள் எழுகின்றன.

1. 'ஆயும் மாக்கள்' என்றால், 'நன்றாக ஆராய்ந்து விற்பார்' என்று பொருள் ஆகுமா? பொருளை வாங்குவோர் ஆராய்ந்து வாங்கலாம். விற்போர் ஆராய்ந்து விற்பது எப்படி?

2. பலவகைப்பட்ட கூரிதாக உணர்ந்த தொழில்களையும் ஒப்புக் காட்டிச் சித்திரம் எழுதுவார் இரவுக்கடைக்கு வந்தனரே, வந்த காரணம் என்ன?

3. 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்தற் கண்ணுள் வினைஞரென்றார்' என்ற உரைகாரர், கண்ணுள்வினைஞர் – அதாவது ஓவியர் அங்கே வந்த காரணத்தைக் கூறாமல் போனது ஏன்?

4. 'சிறியோரும் பெரியோரும் நெய்தல் தொழிலைச் செய்வார் திரண்டு' வந்துதான் புடவை விற்பார்களா? புடவை விற்பதற்குச் சிறியோர் (சிறுவர்கள்) எதற்கு?

5. 'நான்காய் வேறுபட்ட தெருவுகள்தோறும் ஒருவர் காலோடு ஒருவர் கால் நெருங்க நிற்றலைச் செய்ய' என்று கால்நெருங்க நிற்றலைக் கூறவா 'நால்வேறு தெருவினும்' என்றார் புலவர்?

6. 'இஃது அந்திக்கடையில் தெருவிற் புடவை விற்பாரைக் கூறிற்று' என்ற உரைக்கு மூலத்தில் என்ன சான்று? 'புடவை விற்றனர்' என்று பாட்டில் இல்லையே! 'மடிதரூஉ விரித்து' என்றால் 'புடவையை விற்றனர்' என்று அர்த்தமாகுமா?

7. 'நால்வேறு தெருவினும்' என்பதற்கு – 'கோயிலைச் சூழ்ந்த ஆடவர் தெரு நான்காதன், நால்வேறு தெருவென்றார். இனிப் பொன்னும் மணியும் புடவைகளும் கருஞ்சரக்கும் விற்கும் நால்வகைப்பட்ட வாணிகர் தெருவென்றுமாம்' என்றால், பொன்னும் மணியும் கருஞ்சரக்கும் விற்கும் தெருக்களில் புடவைகளும் விற்றனரா? இது குழப்பமாக இல்லையா?

8. 'காலுற நிற்றர' என்பதற்கு, 'ஒருவர் காலோடு ஒருவர் கால்நெருங்க நிற்றலைச் செய்ய' என்று பொருள்கூறுவது இயல்பு மீறிய கற்பனையாக இல்லையா? 'கம்மியர்-விரித்து-குழீஇ-ஒருவர்காலோடு ஒருவர்கால் நெருங்க' நிற்பது விற்பனையாகுமா?

9. இரவுக்கடையில் கொடும்பறையினை யுடைய கூத்தருடைய சுற்றம் சேர வாழ்த்துவது ஏன்?

10. 'கொடும்பறைக் கூத்தருடைய சுற்றம் சேரவாழ்த்தும் குளிர்ந்த கடல் சூழ்ந்த நாடனான சேரன்' என்று கொண்டுகூட்டுவது எனில், இங்கு பாட்டுடைத் தலைவன் சேரனாக இருக்க வேண்டும். அப்படியில்லையே. பாட்டுடைத் தலைவன் மதுரையை ஆளும் பாண்டியன் அல்லவா? எனவே, அப்படிக் கொண்டுகூட்டுவது பொருந்தாது.

இந்த அடிகளுக்குமுன் வந்துள்ள 'பண்ணியம் பகர்நரும்', 'கங்கம் பகர்நரும்' என வருவன கொண்டு, நச்சினார்க்கினியர் இப்பகுதியும் விலைபகர்நர் பற்றிய செய்திகளே என்னும் கருத்தில் உரையெழுத முனைந்தார் எனத் தெரிகிறது. அதனால்தான் 'பூவும்

புகையு மாயு மாக்களும்' என்ற அடிக்கு, "பூக்களையும் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும்" என்று உரைகூறினார். இனி, நச்சினார்க்கினியரின் உரையில் உள்ள முரண்களைத் தனித்தனியே சுட்டிக்காட்டி, அவரது கவனக் குறைவால் நேர்ந்த தவறுகளைப் புலப்படுத்துவோம்.

**'பூவும் புகையும் ஆயும் (ஆராயும்) மாக்கள்' என்பது சரியா?**

மதுரைக்காஞ்சியின் 515ஆவது அடி, 'பூவும் புகையு மாயு மாக்களும்' என்றே மூலப்பிரதியில் உள்ளது. சொற்புணர்ச்சியைப் பிரித்து நாம், 'பூவும் புகையும் ஆயும் ஆக்களும்' என்று கொண்டோம். நச்சினார்க்கினியரோ, 'பூவும் புகையும் ஆயும் மாக்களும்' என்று பிரித்துக் கொண்டு, "பூக்களையும் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும்" என்று உரை சொல்கிறார். 'புகை' என்ற சொல்லுக்குச் 'சாந்து' என்று பொருளுரைப்பது பொருந்தாது. சிலப்பதிகார மங்கலவாழ்த்துப்பாடல்,

***சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்*** *(மங்கல. 56)*

என்று சாந்தும் புகையும் வேறுவேறாகச் சுட்டியிருப்பது நோக்கத்தக்கது.

'ஆயும் மாக்கள்' என்று பதம் பிரித்தாலும் அதற்கு 'ஆராய்ந்து விற்பாரும்' என்ற பொருள் பொருந்தவில்லை. பொருளை வாங்குவார் இது விலைக்கு ஏற்றதா, இது நமக்கு உகந்ததா, நீண்ட நாளைக்கு உழைக்குமா, உண்மையா போயா, தரமான பொருள்தானா என்றெல்லாம் ஆராய்ந்து வாங்கலாம்; விற்பார்க்கு ஆராய்தல் எதற்கு? ஆராய்ந்து விற்பாரும் என்றது பிழை.

'பூவும் புகையும்' என்ற தொடர் சமயச் சார்பானது ஆகும். இதே மதுரைக்காஞ்சியில் பூவும் புகையும் என்ற தொடர் இது தவிர இன்னும் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

***பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்***
***சிறந்துபுறங் காக்கும் கடவுட் பள்ளியும்*** *(மதுரைக். 466-467)*
***பூவும் புகையும் சாவகர் பழிச்ச*** *(மதுரைக். 476)*

இவ்விரு இடங்களிலும் பூவும் புகையும் தொழவும் பழிச்சவும் செய்யும் வழிபாட்டுத் தொடர்பில் வந்துள்ளமை காணலாம். அதுபோல் இங்கும் பொருள் கொள்ள வேண்டும். சிலப்பதிகாரத்தில் சமயத்தொடர்பான செய்திகள் வருமிடங்களில் எல்லாம் இளங்கோவடிகள் 'பூவும் புகையும்' என்ற இரண்டையும் பல இடங்களில் குறிப்பிடுவதைக் காணலாம்.

*பூவும் புகையும் மேவிய விரையும்*
*ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின்வர* (சிலப். 12: 38-39.),

*பூவும் புகையும் மேவிய விரையும்*
*தூவியஞ் சேக்கை சூழ்ந்தனர் ஒருசார்* (சிலப். 28: 61-62.),

*பூவும் புகையும் மேவிய விரையும்*
*தேவந் திகையைச் செய்கென் றருளி* (சிலப். 30: 153-154.)

என்ற இடங்கள் வழிபாடு குறித்தவை என்பதை அறியலாம். 'பூவும் புகையும்' நம் வழிபாட்டு மரபு கருதிய மங்கலப் பொருட்கள் ஆகும்.

*பூவும் புகையும் ஆயு மாக்களும்*
*எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி*

என்பது, நாடகம் பார்ப்போரின் வழிபாட்டிற்குரிய பூவும் புகையும் கொற்றவையும் பசுக்களுமான உருவங்களை ஓவியமாகத் தீட்டி வைத்ததைக் குறித்தது எனக் கொள்வதே சரியாகும். சிலப்பதிகாரக் காலத்தில் வழிபாட்டிற்குரிய பூதரை எழுதி மேல்நிலை வைத்ததைப் போல, இங்கும் வழிபாட்டிற்கு உரிய ஓவியங்களைத் தீட்டினர். 'ஆய்' என்றது ஆதித் தாயான கொற்றவை; 'ஆக்கள்' என்றது கோமாதா என்று வழிபடத்தக்க பசுக்கள் எனக்கொள்வதே பொருத்தமாகும்.

**சங்க காலத்தில் 'மடி' என்றது புடவையா?**

'மடி' என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'மடிப்புடவை' என்று பொருள் கொள்கிறார். புடவையை 'மடி' என்று சுட்டும் வழக்கம் அந்தணர் தமிழாக இன்றும் வழக்கில் உண்டு. இவ்வழக்கு நச்சினார்க்கினியர் காலமான 14ஆம் நூற்றாண்டிலேயே வழக்கில் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் 'மடி' என்றதும் அந்தணரான நச்சினார்க்கினியருக்குப் 'புடவை' நினைவுக்கு வந்திருக்கிறது.

மடி என்றது புடவையாயின், 'குறியவும் நெடியவும்' – குறுகிய புடவை, நெடிய புடவை என்று ஏதும் உண்டா? இதை ஏன் அவர் சிந்திக்கவில்லை? விரித்துப் பரப்பும் துகிலை மடித்துவைத்தல் 'மடி' என்பது பழந்தமிழ்ச் சொல்வழக்கு ஆகும்.

*தோடமை தூமடி விரித்த சேக்கை* (நெடுநல். 135.)

என்று வருவது இதற்குச் சான்று. பயன்படும் நேரம் தவிர்த்த எஞ்சிய காலங்களில் மடித்து வைக்கப் படுவதால், அத்தகைய துகில், திரை முதயன 'மடி' எனப்பட்டன. சங்கப் பாடல்கள் எதிலும் 'மடி' என்ற சொல் புடவையைக் குறித்து வந்ததில்லை.

இதனைப் பத்துப்பாட்டுக்கு உரையெழுதியுள்ள நச்சினார்க்கினியரும் நன்கு அறிவார்.

***காம்பு சொத்தன்ன அறுவை உடீஇ*** *(சிறுபாண்.236.)*

***துகில்அணி அல்குல் துளங்கியல் மகளிர்*** *(சிறுபாண். 262.)*

***ஆவி யன்ன அவிர்நூற் கங்கம்*** *(பெரும்பாண். 469.)*

***துன்னற் சிதாஅர் நீக்கித் தூய***
***கொட்டைக் கரைய பட்டுடை நல்கி*** *(பொருந. 154-155.)*

***ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும்*** *(கந். 18)*

என்பவற்றால் சங்ககாலப் பாடல்களில் மக்கள் அணியும் ஆடைகள் 'அறுவை', 'துகில்', 'கங்கம்', 'உடை', 'ஆடை' என்னும் சொற்களால் வழங்கப்பட்டதை அறியலாம்.

மதுரைக்காஞ்சி ஆசிரியரும் 'கங்கம் பகர்நரும்' (அடி513), 'மென்னூற் கங்கம்' (அடி 554), 'நீருடைக் கங்கம்' (அடி 721) எனக் 'கங்கம்' என்றே பல இடத்தில் சுட்டியிருப்பதைக் காணலாம்.

**'மடிதரூஉ விரிப்பவர்' புடவை விற்பவர் எனில், 'கங்கம் பகர்நர்' யார்?**

'மடிதரூஉ விரித்து' என்பதற்குப் 'புடவை விற்பார்' என உரைகூறும் நச்சினார்க்கினியர், இதன்பின் வரும் 'கங்கம் பகர்நரும்' என்பதற்கும், 'புடவை விற்பாரும்' என்றே உரையெழுதுகிறார். நூலாசிரியர் புடவை விற்பாரை அடுத்தடுத்து இரண்டு முறை சொல்வாரா? அது கூறியது கூறல் குற்றமாகாதா? எனவே நச்சினார்க்கினியரின் இவ்வுரை பழுதானது என்பது தெளிவாகிறது.

**'சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ' – பொருள் என்ன?**

'சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ' என்ற அடிக்குப் பொருள்கூறும் நச்சினார்க்கினியர், சிறியரும் பெரியரும் குழுமினர் என்றாரேயொழிய, ஏன் குழுமினர் என்ற காரணம் கூறவில்லை. கம்மியர் என்பார் நெசவாளர் என்று பொருள் கொண்ட நச்சினார்க்கினியர், நெசவாளர் சிறியரும் பெரியருமாகப் புடவைவிற்கச் செல்லும் வழக்கிற்கு ஒப்புநோக்கும் ஒரு சான்று காட்டியிருக்கலாம். 'கம்மியர்' என்பார் நெசவாளர் என்று பொருள்கொண்டார். கம்மியர் 'தச்சர்' எனவும் பொருள்படும். எழினியை அசையாதபடி நிறுத்தும் தொழில் நுட்பம் அறிந்தவர் கம்மியர் என்ற தச்சர் ஆவார். கம்மியர் முடுக்கல் குற்றம் தீரும் என்பர்.

"*கைவல் கம்மியன் முடுக்கற் புரைதீர்ந்து*" (நெடுநல். 85)

என்பதனால் இதனை அறியலாம். அக்கால நாடகக் குழுவின் அங்கமாகக் கம்மியர் இருந்தனர் எனத் தெரிகிறது. ஏணியில் ஏறியும் கட்ட முடியாத உயரத்தில் கயிறு கட்டுவதற்குச் சிறுவரைத் தோளில் தூக்கி அவர்களைக் கொண்டு கட்டச் செய்யும் வழக்கினை இன்றும் காணலாம். இதற்காகவே, சிறியரும் பெரியருமாகக் கம்மியர் குழுமினர் என்பதை அறிய முடிகிறது. சிலப்பதிகார மூவகை எழினிகளையும் நிறுவி இயக்கியோரும் இவ்வகைக் கம்மியராதல் வேண்டும் எனக் கருதலாம்.

**'காலுற நிற்றர' என்றால் ஒருவர் காலை ஒருவர் மிதிப்பதா?**

'காலுற நிற்றர' என்பதற்கு, 'ஒருவர் காலொடு ஒருவர் கால் நெருங்க நிற்றலைச் செய்ய' என்ற நச்சினார்க்கினியரின் உரை வந்துரைப்பதாகத் தோன்றுகிறது.

"*நெடுங்கால் மாடத்து*" (பட்டினப்.111),

"*கணைக்கால் பந்தர்*" (பெரும்பாண்.124)

என வருமிடத்துப் போல, இங்குக் 'கால்' என்றது 'தூண்' (மூங்கில் கழை) என்ற பொருளில் வந்தது என்று கோடலே பொருந்தும்.

நால்வேறு வீதிகளும் சந்திக்கும் சந்திப்பில் ஓவியம் எழுதிய எழினிகளைக் காலுற நிறுவினர் என்பதே தக்க பொருளாகும்.

இதனால், **மதுரைக்காஞ்சி கூறும் இப்பகுதி, மதுரை அல்லங்காடியில் இரவில் ஓவிய எழினியின் பின்னணியில் நாடகம் நிகழ்த்திய வழக்கத்தையே குறிப்பிடுகிறது என்பது உறுதியாகிறது.** நாடகத்தமிழ் மதுரையில்தான் சிறக்க வளர்ந்தது என்ற உண்மையினையே மதுரைக்காஞ்சி தருகிறது. மதுரையில் வழக்கிருந்த ஓவிய 'மடி'களே சிலப்பதிகாரக்காலத்தில் மூவகை எழினிகளாகவும் 'ஓவிய எழினி' எனப் பரிணாமம் கொண்டன என்ற உண்மையை அறிதல் வேண்டும்.

"*ஓவிய எழினி சூழஉடன் போக்கி*" (சிலப். 6: 169.)

என ஓவிய எழினியை இளங்கோவடிகள் குறிப்பிடுவது காணலாம்.

**பழந்தமிழ் ஓவிய எழினியில் இருந்த ஓவியங்கள்**

'சுத்தானந்தப் பிரகாசம்' என்னும் பிற்கால நாடக இலக்கண நூன் நூற்பா ஒன்றில், நாடக அரங்கின் அமைப்பையும் பின்திரையில் தீட்டத்தக்க ஓவியங்களையும் பற்றிய செய்தி கிடைக்கிறது. இதனை உ.வே.சாமிநாதையர் சிலப்பதிகாரப் பதிப்பில் தன் அடிக்குறிப்பாகத் தந்துள்ளார்.

“பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னுந் தெய்வமும் அமைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்து . . .
கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும்
பாவையும் பாங்குடை புருடா மிருகமும்
யாவையு மெழுதி யிந்நிலம் விளங்கப்
பாவையர்க் கியற்றுவ தரங்கெனப் படுமே”

என்னும் நூற்பா, பின்திரையில் எழுதப்படும் ஓவியங்கள் குறித்துச் சில புதிய தகவல்களையும் தருகிறது.

1. நந்தி என்னும் தெய்வத்தை அமைத்தல்.
2. பசு, யானை, குரங்கு, பிச்சன் (பித்தனான சிவன்), பாவை (காளி), புருடா மிருகம் (ஆண் தலையும் விலங்கு உடலும் கொண்ட ஒரு கற்பனை மிருகம்) முதலிய ஓவியங்களைப் பின்திரையில் எழுதிவைத்தல்.

இரண்டாவது செய்தியில் ‘பசு’, ‘பாவை’ என்னும் படங்கள் மதுரைக்காஞ்சி கூறும்‘ஆயும் ஆக்களும்’ என்பவற்றோடு பொருந்துவதைக் காணலாம். பழந்தமிழ் நாடகத் திரையில் வரைந்த ‘பூவும் புகையும்’ பிற்காலத்தில் பூதரை எழுதி மேல்நிலை வைக்கும் வழக்கமாக மாறியிருக்கலாம். நந்திதேவனை அமைக்கும் வழக்கத்தை சுத்தானந்த பிரகாசம் கூறுவது புதிய செய்தி. தமிழ்த் தெருக்கூத்தில் இருவரால் பிடிக்கப்படும் திரையில் பூவும் சரஸ்வதியும் தீட்டப்படும் வழக்கம் உண்டு என்பர்.

**‘விழவு’ என்றால் கூத்து, நாடகம்!**

சங்கப் பாடல்களில் கூத்து என்ற சொல் கத்தொகையில் இரண்டே இடங்களிலும் நாடகம் என்ற சொல் பத்துப்பாட்டில் இரண்டே இடங்களிலும் வந்துள்ளன. கூத்து, நாடகம் என்ற சொற்களினும் ‘விழவு’ என்ற சொல்லே கூத்தினைக் குறித்த பெருவழக்கான சங்ககாலச் சொல் ஆகும். ‘விழவு’ என்ற சொல் 92 இடங்களில் வந்துள்ளது எண்ணத்தக்கது. அந்த 92 இடங்களையும் ஆராய்ந்தால், அச்சொல் நாடகம், கூத்து என்ற பொருள் தருவதைத் தெளிவாக உணரலாம். ஆனால் விழவு என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் உட்பட உரையாசிரியர்கள் அனைவருமே திருவிழா என்றே பொருள் கூறினர். அது வழுவான உரையாகும். குறுந்தொகைக்கு உரையழுதிய உ.வே.சாமிநாதையர் ‘விழவு’ என்பதைக் கூத்து எனக் கொள்ளாததால் பொருள் இடர்ப்பாடுற்றமைக்கு எனது ‘தமிழ் நாடக வகையும் வரலாறும்’ என்ற நூல் பல சான்றுகள் காட்டி விளக்கியுள்ளேன். இங்கு ஒரு சான்று உதாரணம் காட்டலாம்.

**யாயா கியளே விழவுமுத லாட்டி** (குறுந்.10)

என்ற அடியில் வரும் 'விழவுமுதலாட்டி' என்பதற்கு, "விழவுமுதலாட்டி யென்றது தலைவி இல்லறம் நிகழ்த்தவந்தபின்பே தலைவனுக்குச் செல்வம் உண்டாயிற்று என்பதைத் தெரிவின்றது" என்று உரையெழுதியுள்ளார். அது பிழையான உரை. விழவு என்ற கூத்தினை முதலாகக் கொண்டு வாழும் பரத்தையையே 'விழவுமுதலாட்டி' என்ற தொடர் உணர்த்திற்று; தலைவனால் பரத்தை தாய்மை எய்தினள் என்ற தலைவனின் கொடுமை உணர்த்திற்று. 'விழவுமுதலாட்டி' தலைவி ஆகாள்.

*கூத்தரும் விழவும்*

'கோடியர்' என்பார் கூத்தர். *கோடியர் விழவு* என்றே விழவு என்பது பல இடங்களில் வருவதைக் காண, அது கோடியர்க்கான கூத்து என்பதை உணரலாம்.

> *விழவுவீற் றிருந்த வியலுள் ஆங்கண்*
> *கோடியர் முழவின் முன்னர் ஆடல்* (பதிற்.56: 1-2).

> ... ... ... ... ... ... ... ... ... ... கோடியர்
> *விழவுகொள் மூதூர் விற பின்றை* (அகம்.352).

> *விழவில், கோடியர் நீர்மை போல முறைமுறை*
> *ஆடுநர் கழியுமிவ் வுலகத்து...* (புறம்.29).

*விறயும் விழவும்*

கூத்தர் போலவே விறலியர்க்கும் விழவு சுட்டப்பட்டது.

> *இழையணி அல்குல் விழவாடு மகளிர்* (நற்.138)
> *யாயா கியளே விழவுமுதல் ஆட்டி* (குறுந்.10)
> *வாழை மகளிர் விழவணிக் கூட்டும்* (குறுந்.386)
> *விழவொ கூந்தல் மாஅ யோளே* (ஐங்.306)
> *பொய்தல் மகளிர் விழவுஅணிக் கூட்டும்* (அகம்.26)
> *விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்* (அகம்70)
> *விழவுக்கள விறயில் தோன்றும் நாடன்* (அகம்.82)
> *விழவாடு மகளிரொடு தழூஉவணிப் பொந்து* (அகம்.176)
> *விழவுகொண் மூதூர் விற பின்றை* (அகம்.352)

என்று வருவன இதற்குச் சான்றாகும்.

*ஆடுதலும் விழவும்*

'ஆடுதல்' என்ற செயலோடு தொடர்புபடுத்தியும் 'விழவு' வரும். இதைச் சங்கப் பாடல்களில் பரவலாகப் பார்க்கிறோம்.

> *ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே* (மதுரைக்.428)

*விழவின் ஆடும் வயிரியர் மடிய...* (மதுரைக்.628)
*ஆடியல் விழவின் அழுங்கல் மூதூர்* (நற்90)
*இழையணி அல்குல் விழவாடு மகளிர்* (நற்.138)
*விழவாடு மகளிரொடு தழூஉவணிப் பொலிந்து* (அகம்.176)

என்பன இதற்குச் சான்றுகள்.

*விழவின் ஆடும் வயிரியர்* (மதுரைக்.628)

என்றால் கூத்தில் ஆடும் வயிரியர் என்று பொருள்படும்.

***விழவுக்களமும் விழவணியும்***

*விளவுக்களம்* (நற்.19, நற்.170, அகம்.232)

என்றால் நாடகக் களம்.

*விழவாற்றுப் படுத்தபின் புல்லென்ற களம்போல* (கத்.5)
*விழவொழி வியன்களம் கடுப்ப* (நற்.320)

என்றால், ***கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே*** என்றது போல, நாடகம் முடிந்து வெறிச்சோடிய ஆடுகளம் என்று பொருள்படும்.

*விழவணி* (குறுந்.386; கத்98; அகம்26, அகம்70; புறம்390)

என வருவன கூத்தில் புனையும் ஒப்பனை, அலங்காரம் ஆகும்.

***விழவுக்களம் பொலிய வந்துநின் றோளே***
***எழுமினோ எழுமின்நம் கொழுநற் காக்குவம்*** (நற்.170)

என்று விறலி வரக் கண்டு குலமகளிர் தம் கொழுநனைக் காக்கத் துடிப்பது, அவள் நாடகத்தில் புனைந்த ஒப்பனை அழகைக் கண்டே என்பதை உணரலாம்.

***சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி***
***அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுமகள்***
(குறிஞ்சிப்.192-193)

இதில் வந்துள்ள 'சாறு' என்பது திருவிழா; 'விழவு' என்பது கூத்து. ஆனால், நச்சினார்க்கினியர் 'விழவு' என்பதற்கும் 'விழா' என்றே பழுதாக உரையெழுதினார்.

**முடிவுரை**

தொல்காப்பியத்திற்கும் பத்துப்பாட்டிற்கும் நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளில் எண்ணிறந்த பழுதுகள் உள. காலம் கருதி, அவற்றுள் சிலவற்றை மட்டுமே இங்கே சுட்டிக் காட்டினோம்.

# அடிகளாசிரியரின் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் சுவடி நோக்கு

முனைவர் சி. பழனியாண்டி

## முன்னுரை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வழியாக இந்தியக்குடியரசுத் தலைவரின் தொல்காப்பியர் விருதை முதன்முதலாக பெற்ற விருதாளர் மூதறிஞர் அடிகளாசிரியராவார். இவர் தொல்காப்பியம் முழுமையும் இளம்பூரணர் உரையோடு பதிப்பித்த பெருமையர். அப்பதிப்புகளுள் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பைச் சுவடிநோக்கில் ஆராய முற்படுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு

பேராசிரியர் அடிகளாசிரியர் 1969ஆம் ஆண்டில் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையைப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பை அவர் சொந்தச் செலவில் வெளியிட்டுள்ளார். அப்பதிப்பைப் பற்றி அவர் கூறியக் கருத்துகள் வருமாறு,

> தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையினைக் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்க்குப் பலயாண்டுகட்கு முன்னர் பாடஞ் சொல்லத் தொடங்கி அதனை ஆழ்ந்து படித்து வந்தேன். அப்பொழுது பல பிழைகளிருப்பது புலனாயிற்று. அவற்றைத் திருத்துவதாயின் அதற்குயான் உய்த்துணர்ந்த உணர்ச்சியே யன்றி, ஏட்டுச் சுவடி முதலிய கருவிகளின் துணையும் வேண்டுமென்று கருதினேன்.[1]

மேற்குறிப்பிட்ட கருத்தின்படி மூன்று ஓலைச்சுவடித் தொகுப்புகளை அடிகளாசிரியர் துணையாக வைத்துக் கொண்டு தொல்-எழுத்துப் பதிப்பை மிகச்செம்மையுறப் பதிப்பித்துள்ளார்.

அவ்வகையில் சுவடியைத் துணையாகக் கொண்டு அவர் குறிப்பிட்ட ஆய்வு நுட்பங்களைக் கண்டறிவோம்.

**சிறப்புப் பாயிரத்தில் சுவடி நோக்கு**

வடவேங்கடம் எனத்தொடங்கும் சிறப்புப் பாயிரத்தை இயற்றிய பனம்பாரனாருக்கும், தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியருக்கும் உள்ள உறவை அடிகளாசிரியர் தம்பதிப்பில் பின்வருமாறு குறித்துள்ளார்.

> பாயிரம் செய்வார் தன்னாசிரியனும், தன்னோடு ஒருங்கு கற்ற மாணாக்கனும், தன்மாணாக்கனும் என மூவகையர்; அவருள், இந்நூற்குப் பாயிரஞ் செய்தார் தன்னோடு ஒருங்குகற்ற பனம்பாரனார். இச்சொற்றொடர் மட்டும் ஞானியார் மடத்துச் சுவடியில் காணப்பெறுகின்றது.[2]

கடலூர் ஞானியார் மடத்துச் சுவடியைச் சான்றாகக் கொண்டு பனம்பாரனார் தொல்காப்பியரோடு ஒருங்குகற்ற ஒரு சாலை மாணாக்கர் என்ற கருத்தை நிறுவிய முறை பாராட்டத்தக்கது. அடிகளாசிரியர் பதிப்பில் மட்டும்தான் இக்குறிப்பு காணப்படுகின்றது என்பது ஒப்பு நோக்கத் தக்கதாம்.

**நூன் மரபில் சுவடி நோக்கு**

தொல்காப்பிய எழுத்ததிகார நூன்மரபில் பின்வரும் நூற்பாக்களில் பாடவேறுபாடு உள்ளதாக அடிகளாசிரியர் குறித்துள்ளார்.

"அவற்றுள்

அ இ உ

எ ஒ வென்று மப்பா லைந்தும்

ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப"[3]

"ஆ ஈ ஊ

ஏ ஐ

ஓ ஔ வென்னு மப்பா லேழும்

ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப"[4]

மேற்குறித்த இரண்டு நூற்பாக்களின் கடைசிஅடி **ஓரளபிசைக்கும், ஈரளபிசைக்கும்** என்று காணப்படுகின்றது. ஆனால் அடிகளாசிரியருக்குக் கிடைத்த சுவடியில்

ஓரளவிசைக்கும், ஈரள விசைக்கும் என்று உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஓரள விசைக்கும், ஈரள விசைக்கும் என்ற பாட வேறுபாட்டினைக் காட்டிலும் ஓரளபிசைக்கும், ஈரள பிசைக்கும் என்ற பாடமே பொருத்தமாக உள்ளது. எவ்வாறெனில் நூற்பாவை நாவால் உச்சரித்துப் பார்க்கும்போது இசைக்கும் என்ற சொல் பொருத்தப்பாடுடையதாகத் தெரிகின்றது. ஆதலால்தான் அடிகளாசிரியர் தம்பதிப்பில் உய்த்துணர்ந்து பாடவேறுபாடு கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் கூறியுள்ளது கருதத்தக்கதாகின்றது.

மேற்குறிப்பிட்ட நூன்மரபின் இறுதிப்பகுதி நூற்பாக்கள் சுட்டெழுத்துக்களையும், வினா எழுத்துக்களையும் குறிப்பிடுவனவாக அமைந்துள்ளன. அந்நூற்பாக்கள் வருமாறு:

"அ இ உ அம் மூன்றும் சுட்டு"[5]

"ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா"[6]

மேல்நூற்பாக்களில் சுட்டெழுத்துக்குரிய நூற்பா, திவாகரம் பத்தாவது ஒலிபற்றிய தொகுதியில் அ. இ உ அம் மூன்றும் சுட்டே என இறுதியில் ஏகாரத்தோடு இந்நூற்பா எடுத்தாளப்பட்டுள்ளது என்ற அரிய குறிப்பையும் அடிகளாசிரியர் தம்பதிப்பில் குறித்துள்ளார்.[7]

வினா எழுத்துக்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது, திவாகரம் பத்தாவது ஒலி பற்றிய தொகுதியில் இந்நூற்பா இதே வடிவில் எடுத்தாளப் பட்டுள்ளது.[8] என்றும் அடிகளாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பிய நூற்பாக்களில் காணப்பெறும் பாட வேறுபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதோடு அந்நூற்பாக்கள் எந்தெந்த வடிவில் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதையும் அடிகளாசிரியர் குறிப்பிட்ட விதம் பாராட்டும்படி உள்ளது.

**பிறப்பியலில் சுவடி நோக்கு**

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பிறப்பியல்,

"அவ்வழிப்
பன்னீருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப்பிறந்த வளியி னிசைக்கும்"[7]

என்ற நூற்பாவில் வளியின் இசைக்கும் என்னும் தொடர் வளியின் ஒலிக்கும் என்ற சுவடி வேறுபாட்டுடன் காணப்பட்டுள்ளதாக அடிகளாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

வளியின் இசைக்கும் என்பது சரியா? வளியின் ஒலிக்கும் என்பது சரியா? என்ற வினா தோன்றலாம். இளம்பூரணர் தம் உரையில் வளியின் ஒலிக்கும் என்று உரைஎழுதியுள்ளார். ஆதலால் வளியின்ஒலிக்கும் என்ற பாடவேறுபாடு பொருத்தப் பாடுடையதாகக் கொள்ளலாம் போலும்.

**முடிவுரை**

1. அடிகளாசிரியருடைய தொல்காப்பிய எழுத்ததிகாரப்பதிப்பில் சுவடியின் பங்கு போற்றற்குரியதாகும்.
2. சுவடியின் துணையால் பனம்பாரனாருக்கும், தொல்காப்பியருக்கும் உள்ள சமகால உறவு சான்றுடன் குறிக்கப் பெற்றுள்ளது பாராட்டும்படி உள்ளது.
3. பிறப்பியலில் காணப்படும் நூற்பாவை ஓரளவு இசைக்கும், ஈரளவு இசைக்கும் எனப் பாடங் கொள்ளல் பொருத்தமாகிறது.
4. தொல்காப்பிய நூற்பாக்களில் காணப்பெறும் பாட வேறுபாடுகள் அன்றி திவாகரம் முதலான நிகண்டுகளில் அந்நூற்பா இடம்பெற்ற முறையையும் அடிகளாசிரியர் குறித்துள்ளது அவரது அறிவு நுட்பத்தைத் தெளிவாக உணர்த்துகின்றது.
5. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல் - எழுத்துப் பதிப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாட வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. அவற்றை அறிஞர்கள் தனித்து ஆராயலாம்.
6. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல் எழுத்து - இளம்பூரணர் உரையிலும் சுவடி வேறுபாடு உள்ளது குறிப்பிடத்தக்கது.

**சான்றெண்விளக்கம்**

1. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல். எழுத்து, இளம்பூரணர் உரை, பதிப்புரை, பக்.8 , 9.
2. மேலது, ப. 6
3. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூன்மரபு, 3
4. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூன்மரபு, 4.
5. மேலது, நூற்பா. 31
6. மேலது, நூற்பா, 32
7. மேலது, பிறப்பியல், நூற்பா, 2.

# தொல்காப்பிய எழுத்ததிகார உரை வேறுபாடுகள்

முனைவர் கி. ஆதிநாராயணன்

## முன்னுரை

தமிழ்மொழி மிகவும் பழைமையானது, தூய்மையானது, இனிமையானது, உயர் தனிச் செம்மொழியாக விளங்குவது. பழங்காலத்திலேயே செம்மையும் சிறப்பும் மிக்க இலக்கண இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் இன்றைக்குக் காணும் நிலையில் இருக்கும் பழைமையான இலக்கண நூல் தொல்காப்பியமே யாகும். இதுவே தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் நூல் என்ற பெருமைக்குரியதாகும்.

தொல்காப்பிய உரைகளில் முந்தியது இளம்பூரணர் உரை. காலத்தால் பிந்தியது நச்சினார்க்கினியர் உரை. எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரது உரைகள் கிடைத்துள்ளன. சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்பவர்கள் எழுதிய உரைகள் உள்ளன. இவற்றுள் கல்லாடர் உரை இன்னும் முழுவடிவில் தனிப்புத்தகமாக வெளிவரவில்லை. பொருளதிகாரம் முழுமைக்கும் இளம்பூரணர் உரை உள்ளது. பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களுக்கும் செய்யுளியலுக்கும் நச்சினார்க்கினியர் உரை கிடைத்துள்ளது. மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் நான்கிற்கும் பேராசிரியரின் உரை உள்ளது. பழைய உரைகளுள் தொல்காப்பியம் நூல் முழுமைக்கும் இருப்பது இளம்பூரணர் உரை ஒன்றே. இது சுருக்கமும் தெளிவும் கொண்ட உரை.

## ஒத்தமதிப்பு

நூலாசிரியர்களுக்கு உரிய சிறப்புகள் யாவும் உரையாசிரியர்களுக்கும் உரியவை. மூலநூலைப் போலவே உரையும் சிறந்தது. உரைநூலின் சிறப்பைத் தமிழ்ப்புலவர்கள் அவ்வப்போது

நினைவூட்டி, மூலநூலைப் போலவே மதிக்குமாறு அறிவுரை கூறியுள்ளனர்.

இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகர்,
இவ்வுரை பெருகிற்று, சுருங்கிற்று,
உரையால் அறிவித்தான்,
இவ்வுரையது பெருமைக்கு ஒப்பில்லை. (இலக்.66)

என்று கூறி, உரையின் பெருமையை விளக்கியுள்ளார். உமாபதி சிவாசாரியார்,

வள்ளுவர்சீர் அன்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுவரி மேலழகர் செய்தவுரை - ஒல்லியசீர்த்
தொண்டர் புராணம் தொகுத்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்

என்று மூலநூல்களோடு ஒத்த வரிசையில் பரிமேலழகர் உரையையும் வைத்துப் போற்றுகின்றார்.

சிவப்பிரகாசர் திருவெங்கைக் கோவையுள் (107)

சிந்தாமணியும் திருக்கோ வையும் எழுதிக்கொளினும்
நந்தா வுரையை எழுதல் எவ்வாறு நவின்றருளே
என்று உரைகளைப் பாராட்டியுள்ளார்.

உ.வே.சாமிநாத ஐயர், "நூலாசிரியர்களைக் காட்டிலும் உரையாசிரியர்கள் பாஷையில் மிக்க பயிற்சியுள்ளவர்கள் என்பதும் மிக்க உபகாரிகள் என்பதும் ஒரு சாரார் கொள்கை'' (சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், ப.154) என்று கூறுகின்றார்.

"மூலநூல்களைப் போலவே உரை நூல்களும் இலக்கியம் போல் இன்பம் ஊட்டுகின்றன. மூலநூல்களில் உள்ள எல்லாச் சிறப்புக் கூறுகளும் உரைநூல்களில் உள்ளன. உரைகளில் கற்பனைச் சிறப்பு வாய்ந்த உவமைகள் உள்ளன. நினைக்க நினைக்க இனிக்கின்ற இலக்கியச் சுவை மிகுந்த பகுதிகள் உள்ளன. சிந்தனையாளர்களை வியப்பில் ஆழ்த்துகின்ற பலவகையான ஆராய்ச்சிகள் உள்ளன. எதுகை மோனைகள் அமைந்த ஓசையின்பம் கொஞ்சி விளையாடுகின்றது'' (உரையாசிரியர்கள் ப.100) என்று மு.வை. அரவிந்தன், உரை இலக்கியங்களின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு மூலநூல் ஆசிரியர்களோடு ஒத்த மதிப்புள்ள உரையாசிரியர்களைப் பற்றியும் அவர்தம் உரைகளைப் பற்றியும் ஆராய்வது இன்றியமையாததொன்றாகும். இந்நிலையில்

தொல்காப்பிய எழுத்ததிகார உரைவேறுபாடுகளை ஆராயும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு உரையெழுதியவர்கள் இருவர். ஒருவர் இளம்பூரணர் மற்றொருவர் நச்சினார்க்கினியர். இவ்விருவருடைய உரைகள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு அவற்றிற்கிடையே காணலாகும் வேறுபாடுகள் வெளிப்படுத்தப் படுகின்றன.

## நான்கு வகையான வேறுபாடுகள்

எழுத்ததிகார உரைவேறுபாடுகளை,

1. நூற்பா எண்ணிக்கையில் வேறுபாடு (இரண்டு இயல்கள்)
2. நூற்பா அமைப்பதில் வேறுபாடு (ஆறு நூற்பாக்கள்)
3. பாடம் கொள்வதில் வேறுபாடு (முப்பத்து மூன்று நூற்பாக்கள்)
4. உரை கூறுவதில் வேறுபாடு (24 நூற்பாக்கள்)

என்ற நான்கு வகைகளில் பிரித்துக் காணலாம்.

### 1. நூற்பா எண்ணிக்கையில் வேறுபாடு

எழுத்ததிகார நூற்பாக்களின் எண்ணிக்கையை 483 என இளம்பூரணரும் நச்சினார்க்கினியாரும் கொண்டுள்ளனர். எனினும் பிறப்பியல், குற்றியலுகரப் புணரியல் நூற்பாக்களின் எண்ணிக்கையில் இருவரும் வேறுபாடு கொண்டுள்ளனர். இதனைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| அதிகாரம் இயல் | நூற்பாக்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | இளம் | நச்சர் |
| 1. நூன்மரபு | 33 | 33 |
| 2. மொழிமரபு | 49 | 49 |
| 3. பிறப்பியல் | 21 | 20 |
| 4. புணரியல் | 40 | 40 |
| 5. தொகைமரபு | 30 | 30 |
| 6. உருபியல் | 30 | 30 |
| 7. உயிர் மயங்கியல் | 93 | 93 |
| 8. புள்ளிமயங்கியல் | 110 | 110 |
| 9. குற்றியலுகரப் புணரியல் | 77 | 78 |
| | 483 | 438 |

## 2. நூற்பா அமைப்பதில் வேறுபாடு

நச்சினார்க்கினியர் கூறும் 102ஆம் நூற்பாவை இரு நூற்பாக்களாக இளம்பூரணர் கொள்வர். மேலும் நச்சினார்க்கினியர் கூறும் 440, 441 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாக இளம்பூரணர் கொள்வர். நச்சர். கூறும் 2,3,4 ஆம் நூற்பாக்களை இளம்பூரணர் வேறு விதமாகச் சீர்பிரித்து அமைப்பர். இதனைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| நூற்பா எண் | நச்சினார்க்கினியர் | இளம்பூரணர் |
|---|---|---|
| 102 | எல்லா எழுத்தும் வெளிப் படக்கிளந்து சொல்லிய பள்ளி எழுதரு வளியிற் பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத் தகத்தெழு வளியிசை அரில்தப நாடி அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும் மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே. | 1. எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து சொல்லிய பள்ளி எழுதரு வளியிற் பிறப்பொடு விடுவழி உளழ்ச்சி வாரத் தகத்தெழு வளியிசை அரில்தப நாடி அளபிற் கோடல் அந்தணர் மறைந்தே<br>2. அஃதிவன் நுவலா தெழுந்து புறத் திசைக்கம் மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே |
| 440 | மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுமும் | 1. மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும் மூன்று னொற்றே பகார மாகும் |
| 441 | மூன்ற னொற்றே பகற மாகும் | |
| 2 | அவைதாம் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன | அவைதாம் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன |
| 3 | அவற்றுள் அ,இ,உ,எ,ஒ என்னும் அப்பா லைந்தும் ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப | அவற்றுள் அ இ உ எ ஒ என்னும் அப்பால் ஐந்தும் ஓரள பிசைக்கும் குற்றெழுத் தெனப |
| 4 | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும் ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப. | ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் அப்பால் ஏழும் ஈரள பிசைக்கும் கெட்டேழுத் தென்ப |

## 3. பாடம் கொள்வதில் வேறுபாடு

நூற்பாக்களைப் பாடம் கொள்ளும் நிலையிலும் இளம்பூரணரும் நச்சரும் வேறுபட்டுள்ளனர். அவற்றைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| நூற்பா எண் | இளம்பூரணர் | நச்சினார்க்கினியர் |
|---|---|---|
| 11 | மெய்யின் அளபே அறையென மொழிப. | மெய்யின் அளவே அரையென மொழிப. |
| 13 | அரையளபு குறுகல் மகரம் உடைத்தே இசையிடன் அருகுந் தெரியுங் காலை | அரையளவு குறுகல் மகரம் உடைத்தே இசையிடன் அருகுந் தெரியுங் காலை |
| 18 | மெய்யின் வழிய உயிர் தோன்றும் நிலையே | மெய்யின் வழிய உயிர்தோன்று |
| 48 | யரழ என்னும் மூன்றுமுன் னொற்ற கசதபஙஞநம ஈரொற் றாகும் | யரழ என்னும் மூன்றும் ஒற்றுக் கசதப ஙஞநம ஈரொற் றாகும். |
| 102 | அஃதிவண் நுவலா ழெழுந்துறுத் திசைக்கும் மெய்தெரி வளியிசை அளபுறுவன் றிசினே | எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து சொல்லிய பள்ளி எழுதரு வளியிற் பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத் தகத்தெழு வளியிசை அரில்தப நாடி அளபிற் கோடல் அந்தணர் மறைந்தே அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும் மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே |
| 121 | அளபாகும் மொழி முதல் நிலைஇய உயிர்மிசை னஃகான் றாஃகா னாகிய நிலைத்தே | அளவாகும் மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை னஃகான் றஃகா னாகிய நிலைத்தே |
| 140 | எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் | எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே உடம்படு மெய்யின் உருவு கொளல் வரையார். |
| 151 | உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும் புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும் இயல்பா குநவும் உறழ்பாகு நவும் என்று ஆயீரியல வலலெழுத்து வரினே | உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும் புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும் இயல்பா குநாவும் உறழாகுநவு மென்(று) ஆயீரியல வல்லெழுத்து வரினே |
| 154 | அவற்றுள் இகர ஈற்றுப் பெயர் திரியிட னுடைத்தே | அவற்றுள் இகர இறுபெயர் திரிபிட னுடைத்தே |
| 158 | வேற்றுமை யல்வழி இ ஐ யென்னும் ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைஇய அவைதாம் இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும் என்னோர் புலவர். | வேற்றுமை யல்வழி இஐ யென்னும் ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைய அவைதாம் இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும் என்மனார் புலவர் |
| 160 | நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும் இறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும் அறியத் தோன்றிய நெறியிய லென்ப | நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும் குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும் அறியத் தோன்றிய நெறியிய லென்ப. |
| 188 | தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாமென் இறுதியும் அதனோ ரன்ன ஆ எஆகும் யாமென் இறுதி ஆவயின் யகர மெய் கெடுதல் வேண்டும் ஏனையிரண்டும் நெடுதல் குறுகும் | தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாமென் இறுதியும் அதனோ ரன்ன ஆ எவ்வாகும் யாமென் இறுதி ஆவயின் யகர மெய் கெடுதல் வேண்டும் ஏனை யிரண்டும் நெடுதல் இறுகும் |
| 211 | வாழிய என்னுஞ் சேயென் கிளவி இறுதி யகரங் கெடுதலும் உரித்தே | |

| | | |
|---|---|---|
| 214 | தொடரால் இறுதி தன்முன் தாம்வரின் லகரம் நகர வொற்றாதலும் உரித்தே | வாழிய என்னுஞ் செயவென் கிளவி இறுதி யகரங் கெடுதலும் உரித்தே<br>தொடரல் இறுதி தம்முன் தாம்வரின் லகரம் நகர வொற் றாகலு முரித்தே |
| 240 | உரிவரு காலை நாழிக் கிளவி இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே டகாரம் ஒற்றும் ஆவயி னான | உரிவரு காலை நாழிக் கிளவி இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே டகர மொற்றும் ஆவயி னான |
| 256 | ஏனைய வரியே மேல்நிலை இயல்பே | ஏனைய வரினே மேல்நிலை இயல |
| 275 | மாறு கொள் எச்சமும் வினாவும் எண்ணும் கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் | மாறுகோள் எச்சமும் வினாவும் எண்ணும் கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் |
| 282 | விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும் சுவை முப்பெயரும் சேமர இயல | விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும் ஆமுப் பெயரும் சேமர இயல |
| 291 | ஒழிந்ததன் நிலையும் ஒழித்தவற் றியற்றே | ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற் றியற்றே |
| 342 | மெல்லெழுத் தியையின் இறுதியோ டுறழும் | மெல்லெழுத் தியையின் இறுதியொ டுறழும் |
| 393 | ஐ அம் பல்லென வரூஉ மிறுதி அல்பெய ரெண்ணும் ஆயியல் நிலையும் | ஐ அம் பல்லென வரூஉ மிறுதி அல்பெய ரெண்ணினும் ஆயியல் நிலையும் |
| 404 | மக்க ளென்னும் பெயர்நிலைக் கிளவியும் தக்கவழி அறிந்து வலித்தலு முரித்தே | மக்க ளென்னும் பெயர்ச்சொ லிறுதி தக்க வழி அறிந்து வலித்தலு முரித்தே |
| 408 | அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லா இறுதியும் உகர நிறையும் | அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லா இறுதியும் உகர நிலையும் |
| 432 | திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும் கெடுதல் வேண்டும் என்மனார் புலவர் ஒற்று மெய்திரிந்து னகற மாகும் தெற்கொடு புணருங் காலை யான | திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் கெடுதல் வேண்டும் என்மனார் புலவர் ஒற்று மெய் திரிந்து னகார மாகும் தெற்கொடு புணருங் காலை யான |
| 438 | ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர் நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தம் வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப கூறிய இயற்கைக் குற்றியலுகரம் ஆற னிறுதி அல்வழி யான | ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர் நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தல் வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப கூறிய இயற்கை குற்றியலுகரம் ஆறனிறுதி அல்வழி யான |
| 439 | இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கும் நடைமருங் கின்றே பொருள்வயி னான | இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு நடைமருங் கின்றே பொருள்வயி னான |
| 445 | ஒன்பான் ஒகர மிசைத் தகரம் ஒற்றும் முந்தை யொற்றே ணகறம் இரட்டும் பஃதென் கிளவி ஆய் தபக ரங்கெட நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி ஒற்றிய தகரம் றகார மாகும் | ஒன்பான் ஒகர மிசைத் தகரம் ஒற்றும் முந்தை யொற்றே ணகாரம் இரட்டும் பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி ஒற்றிய தகரம் றகர மாகும். |

| | | |
|---|---|---|
| 451 | ஐந்தும் மூன்றும் நமவருங் காலை வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே | ஐந்தும் மூன்றும் நமவரு காலை வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே |
| 452 | மூன்ற னொற்றே வகாம் வரும்வழித் தோன்றிய வகரத் துருவா கும்மே | மூன்ற னொற்றே வகரம் வருவழித் தோன்றிய வகரத் துருவா கும்மே |
| 474 | அளவும் நிறையும் ஆயியல் திரியா குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும் முற்கிளந் தன்ன என்மனார் புலவர் | அளவும் நிறையும் ஆயியல் திரியாது குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும் முற்கிளந் தன்ன என்மனார் புலவர் |
| 476 | ஆயிரம் வரினே இன்னாம் சாரியை ஆவயி னொற்றிடை மிகுத லில்லை | ஆயிரம் வரினே இன்னென் சாரியை ஆவயி னொற்றிடை மிகுத லில்லை |
| 479 | அதனிலை உயிர்க்கும் யாவரு காலையும் முதனிலை ஒகரம் ஓவா கும்மே ரகரத் துவரக் கெடுமே | அதனிலை உயிர்க்கும் யாவரு காலை முதனிலை ஒகரம் ஓவா கும்மே ரகரத் துகரந் துவரக் கெடுமே |
| 480 | இரண்டுமுத லொன்பான் இறுதி முன்னர் வழங்கியல் மாவென் கிளவி தோன்றின் மகர அளபொடு நிகரலு முரித்தே | இரண்டுமுத லொன்பான் இறுதிமுன்னர் வழங்கியல் மாவென் கிளவி தோன்றின் மகர அளவொடு நிகரலு முரித்தே |

## 4. உரை கூறுவதில் வேறுபாடு

1. எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன்மரபிற்கு பெயர்க்காரணம் கூறுவதில் பின்வருமாறு இருவரும் வேறுபடுகின்றனர்.

இளம்பூரணர் "இவ்வதிகாரத்தால் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தை ஓராற்றல் தொகுத்து உணர்த்துதலின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று''.

நச்சர். "இத்தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபாந் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமையின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று.

2. டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னு முவெழுத் துரிய (நூன்மரபு.23)

என்ற நூற்பா தனிமெய் பிறமெய்யோடு மயங்கும் மயக்கத்தைக் கூறுகின்றது. மொழியிடை நின்ற டறலள என்று கூறப்படும் நான்கு புள்ளிகளின் முன்னர் கசப என்று கூறப்படும் மூன்றெழுத்தும் வந்து மயங்குவதற்குரியன என்பது இதன் பொருளாகும்.

(எ.கா.) கட்க, கட்சி, கட்ப, கற்க, முயற்சி, கற்ப, செல்க, வல்சி, செல்ப.

இம்மயக்கம் ஒரு மொழிக்கண் மட்டுமே வரும் என்பது நச்சினார்க்கினியரின் கருத்து. ஒருமொழி, இருமொழி ஆகிய ஈரிடத்தும் வரும் என்பது இளம்பூரணரின் கருத்து.

எனவே நச்சர் கட்கிறார், கற்கிறார் என இளம்பூரணரின் எடுத்துக்காட்டுகளைச் சுட்டி, "இவை இருமொழிப் புணர்ச்சியாகலின் ஈண்டைக்காகா'' என இளம்பூரணரை மறுத்துரைக்கின்றார்.

3. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர் (நூன்மரபு.33)

இசை நூலின்கண் ஆவியும் ஒற்றும் அளவிறந்து இசைத்தலும் உண்டு என்பது இந்நூற்பாவின் பொருள். இளம்பூரணரின் கருத்தும் இதுவே.

ஆவியும் ஒற்றும் அளவிறந்திசைத்தலும் இசை நூலிடத்தில் பொருந்தும், அங்ஙனம் நீண்டு ஒலித்தல் நால்வகைப் பாவிற்கும் பொருந்தும் என்று நச்சா வலிந்து இந்நூற்பாவிற்குப் பொருள் கூறுகின்றார். இவ்வாறு பொருள் கூறுவதற்குப் பின்வரும் மூன்று காரணங்களை எடுத்துரைக்கின்றார். அவையாவன,

1. ஆசிரியர் இந்நூற்பாவில் 'மொழிப' என்றும் 'என்மனார்' புலவர் என்றும் கூறியிருப்பதால் இங்ஙனமே பொருள் கொள்ளல் முறைமையாம்.
2. செய்யுளியலில் 'மாத்திரையளவும் எழுத்தியல் வகையும் மேற்கிளந்தன்ன' (செய்யுள்-2) என்னும் 'மாட்டேறு இருப்பதாலும் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப இந்நூற்பா தவிர வேறு நூற்பா இன்மையாலும் இங்ஙனமே பொருள் கொள்ள வேண்டும்.
3. இங்ஙனம் உரையாக்கால் செய்யுட்குப் 'பா' என்னும் உறுப்பு நிகழாது.
4. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல் (மொழிமரபு-17)

ஒவ்வொரு எழுத்திற்கும் உரிய மாத்திரையைக் கொண்டே அவற்றைக் குற்றெழுத்தென்றும் நெட்டெழுத்தென்றும் கூறுகின்றோம். ஆதலின்அளபெடையில் நெட்டெழுத்துகள் மாத்திரை மிக்கு நீண்டு ஒலிக்குங்கால், அம்மாத்திரைக்குரிய குற்றெழுத்துகளும் சேர்ந்தே அளபெடுக்கும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

உயிரெழுத்திற்குக் குறுமையும் நெடுமையும் அளவிற் கொள்ளப்படுதலில், தொடர் மொழிக்கீழ் நின்ற ரகற ழகாரங்களெல்லாம், நெடிற்கீழ் நின்ற ரகற ழகாரங்களின் இயல்பையுடையனவாம் என்று இளம்பூரணர் உரையெழுதியுள்ளார்.

இதனை நச்சினார்க்கினியர்,

1. புகார், புகழ் என்பனவற்றை நெட்டெழுத்தென்றே ஆசிரியர் ஆளவில்லை.
2. இங்ஙனம் கூறுவதால் பயன் ஒன்றும் இல்லை.
3. செய்யுளியலில் புகார், புகழ் என்பனவற்றைக் குறிலினையடுத்த ஒற்றென்றே கொள்வதல்லது நெடிற்கீழ்வந்த ஒற்றென்று கொள்ளவில்லை.

என்ற மூன்று காரணங்களைச் சுட்டி இளம்பூரணர் உரையோடு வேறுபடுகின்றார்.

**5. அன்ன வென்னும் உவமக் கிளவியும்**

...... ...... ...... ........
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
.... ...... ...... .......

(உயிர் மயங்கியல்-8)

இந்நூற்பாவில் ஏவல் கண்ணிய வியங்கோள் என்பதற்கு "ஏவற் பொருண்மையை முற்ற முடிக்கின்ற சொல். ஏவியதை உணர்ந்து செய்யும் ஆற்றல் உயர்திணைக்கண் அல்லது அஃறிணைக்கு இன்மையின் அஃறிணைக்கண் வருவனவற்றை ஏவல் கண்ணாதன'' என்று நச்சர் உரை கூறியுள்ளனர்.

இளம்பூரணரோ "உயர்திணையாயினும் அல்லது அஃறிணையாயினும், ஏவற்பொருள் உடன் நிகழுமேல் அது ஏவல் கண்ணியது என்றும் அப்பொருண்மை உடன் நிகழாதேல் அது ஏவல் கண்ணாதது'' என்றும் வேறுபட்டு உரை எழுதியுள்ளார்.

இளம்பூரணரும், நச்சரும் உரை கூறுவதில் வேறுபடும் இடங்களை, பின்வருமாறு காணலாம்.

**சிறப்புப் பாயிரம்**

| | |
|---|---|
| நூன்மரபு - 11, 23, 27, 28, 29, 33 | - 6 நூற்பாக்கள் |
| மொழிமரபு- 40, 41, 45, 47, 49, 53 | - 6 நூற்பாக்கள் |
| பிறப்பியல் - 101 | - 1 நூற்பா |
| தொகைமரபு - 153, 159 | - 2 நூற்பாக்கள் |
| உயிர் மயங்கியல் - 210,211,214,285,288 | - 5 நூற்பாக்கள் |
| புள்ளி மயங்கியல் - 312, 363 | - 2 நூற்பாக்கள் |
| குற்றியலுகரப் புணரியல் - 408, 409 | - 2 நூற்பாக்கள் |
| | - 24 நூற்பாக்கள் |

**சான்றுக்குச் சிலவற்றைக் காணலாம்**

மேற்கூறப்பெற்ற வகைகளில் மேற்கூறப்பெற்ற நிலைகளில் எழுத்ததிகார உரை வேறுபாடுகளை அறியமுடிகின்றது. இங்கே சுட்டிக் காட்டப் பெற்றுள்ள இவ்வுரை வேறுபாடுகள் மேலும் விரிவாகவும் விளக்கமாவும் ஆராய்வதற்குரிய ஒன்றாகும்.

இனி, எழுத்ததிகார உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சர் ஆகியோரிடையே காணலாகும் வேறுபாடுகளைக் கீழே காணலாம்.

| வரிசை எண் | இளம்பூரணர் | நச்சினார்க்கினியர் |
|---|---|---|
| 1. | தமிழில் மட்டுமே பயிற்சியும் புலமையும் உடையவர் | தமிழிலும் பிறமொழிகளிலும் பயிற்சியும் புலமையும் உடையவர் |
| 2. | தன் கருத்தையே சரி என்று நிலை நாட்டாதவர் | தன் கருத்தையே சரி என்று நிலை நாட்டுபவர் |
| 3. | ஆற்றொழுக்காகல் பொருள் கூறுபவர் | கொண்டு கூட்டிப் பொருள் கூறுபவர் |
| 4. | பிறர் கருத்தை ஏற்கும் மனப் பாங்குடையவர் | பிறர் கருத்தை மறுக்கும் மனப்பாங்குடையவர் |
| 5. | பழைமையை போற்றக் கூடியவர் | புதுமையைப் புகட்டக் கூடியவர் |

## துணைநூல்கள்

1. தொல்காப்பியம், நியூ செஞ்சுமி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1981.
2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை, திருப்பனந்தாள் மடம், 1965
3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணருரை, கழக வெளியீடு, சென்னை, 1958.
4. க.ப. அறவாணன், தொல்காப்பியக் களஞ்சியம், பாரிநிலையம், சென்னை, 1975.
5. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995.

# தொல்காப்பியச் சொல்லதிகாரம்
# கல்லாடனார் உரைநெறி

முனைவர்பட்ட ஆய்வாளர் பொ. வேல்முருகன்

**முன்னுரை**

பழந்தமிழ் நூல்களின் வழியே நமக்குக் கிடைத்துள்ள முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களில் இலக்கிய வளங்களை விரிவாகக் கூறுகிறது. இரண்டாம் அதிகாரமாகிய சொல்லதிகாரம் தமிழ் மொழியின் தொடர் அமைப்பினை விரிவாகக் கூறுகிறது. சொல்லதிகாரத்திற்குத் தனித்தச் சிறப்பு உண்டு. உரையாசிரியர்களின் கவனத்தை மிகவும் ஈர்த்தவை சொல்லதிகாரம் எனில் அது மிகையன்று. இந்நூலுக்கு மட்டும் ஆறு உரைகள் உள்ளன. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், தெய்வச்சிலையார் ஆகியோர் உரையோடு 'ஒரு பழைய உரை' உண்டு. இவ்வாறு, பல்வேறு உரைகள் இருப்பினும் "தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குக் கல்லாடனர் வகுத்த உரைநெறியினை" குறித்ததாக இக்கட்டுரை அமைகிறது.

**கல்லாடர்**

'இப்பெயருடையார் மூவர் உளர்' என கு. சுந்தரமூர்த்தியும்,[1] 'கல்லாடர் என்ற பெயருடையொர் மூவர் உளர்'[2] என க. வேங்கடேசனும், கல்லாடர் என்னும் பெயரால் அறியப் பெறுபவர் நால்வருளர்[3] என இரா. இளங்குமரனும் கூறுகிறார். இவை ஆய்வுக்குரியது.

1. கல்லாடர் என்ற பெயருடையோர் முன்னவர், கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவர். இவர் பாடல்கள் அகநானூற்றில் ஏழு பாடல்களும், குறுந்தொகையில் இரண்டு பாடல்களும், புறநானூற்றில் ஐந்து பாடல்களும், திருவள்ளுவர் மாலையில் ஒரு பாடலுமாக மொத்தம் பதினாறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

2. இரண்டாம் கல்லாடம் அகப்பொருள் என்னும் அரிய நூலை இயற்றியவர். இந்நூல் அகப்பொருளிலக்கணமாகும். இவை,

திருக்கோவையாரின் பாடல்களை அகவற்பாக்களால் இயற்றப்பெற்ற நூலாகும்.

3. மூன்றாமவர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர் இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்திலது. கல்லாடம் என்பது ஓர் ஊர் என்றும், அங்கு இறைவன் உமையொரு பாகனாய் காட்சி அளித்து அருளினான் என்றும் கூறப்படுகிறது. அவை,

> கல்லா டத்துக் கலந்தினி தருளி
> நல்லா ளோடு நயம்புற எய்தியும்[4]

என்று திருவாசகத்தில் அறிய முடிகிறது.

> ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்கு
> உரையிடை யிட்ட விரகர்கல் லாடர்[5]

என்று பாராட்டப்படுகிறார். இக்கல்லாடர் தொல்காப்பிய உரையாசியர்களுள் தெய்வச்சிலையார்க்கும் பழைய உரையாசிரியர்க்கும் முற்படவும், மற்ற உரையாசியர்கள் பிற்படவும் இருந்தவர் என்பது ஆய்வாளர்களால் அறிய முடிகிறது.

கல்லாடர் காலம்

இலக்கண வரலாறு கூறும் இரா. இளங்குமரன் இக்கல்லாடரின் காலம் குறித்து,

> பிரயோக விவேக நூலார், மக்கட் சுட்டு என்பதனைக் கல்லாடரும்பின் மொழியாருபெயராய் நின்று இருபெயரொட்டு பண்புத்தொகை என்பர்" என்றும் கல்லாடர் பெயரைச் சுட்டிக் கூறுகிறார் (பிரயோக.22 வரை) ஆதலால் அவர்க்கு முன்னரும் நச்சினார்க்கினியருக்குப் பின்வரும் காலத்தில் அதாவது 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் எனக் கொள்ளலாம்.[5]

என்று இளங்குமரன் கூறுகிறார்.

மு. அருணாசலம்பிள்ளை இலக்கிய வரலாறு

தமிழிலக்கிய வரலாறு (பதினைந்தாம் நூற்றாண்டு) தந்த மு. அருணாசலம் இவ்விலக்கண உரையாசிரியர் காலம் குறித்து :

> 17 ஆம் நூற்றாண்டு பிரயோக விவேகம் என்ற இலக்கண நூல் செய்த சுப்பிரமணியம் தீட்சிதர் 22ஆம் சூத்திர உரையில் இக்கல்லாடரைப் பெயர் சுட்டிக்கூறுகிறார்.

> "மக்கட் சுட்டு என்பதனைக் கல்லாடரும் பன்மொழியாரு பெயரால் நின்ற இரு பெயரொட்டுப் பண்புத் தொகை என்பர்". எனவே இக்கல்லாடர் 17ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர். இவர் இளம்பூரணரையும் நச்சினார்க்கினியரையும் தழுவியே தம் சொல்லதிகார உரையை எழுதியிருக்கிறார். பரிமேலழகரின் திருக்குறளுரையில் காணும் தொடர்களும் இவர் உரையில் வருகின்றன. இவற்றால் இவர் இம்மூவருக்கும் பிற்பட்டவர் என்பது உறுதி." இளம்பூரணர் மிகவும் பிற்பட்டவர், பரிமேலழகர் 13ஆம் நூற்றாண்டு, நச்சினார்க்கினியர் 14ஆம் நூற்றாண்டு. ஆகவே, கல்லாடர் இக்காலத்துக்குப் பின் 17ஆம் நூற்றாண்டு முன் வந்தவர் என்றறிகிறோம். இவர் காலம் முந்திய உரையாசிரியர்களின் காலத்தை அடுத்தே வரக்கூடும் என்று எண்ணலாம் ஆகவே 15ஆம் நூற்றாண்டு பொருத்தமுடையது.[6]

என்று மு. அருணாசலம் பிள்ளை கூறுகிறார்.

சங்க காலப் புலவர்களில் ஒருவர் கல்லாடனார் அவர் இயற்றிய பாடல்கள் புறநானூற்றில் ஐந்தும் (பாடல் எண்கள் 23,25,371,385,391) அகநானூற்றில் ஏழும் (9,83,113,171,199,209,333) குறுந்தொகையில் இரண்டும் (260,263) என மொத்தம் 14 பாடல்கள் உள்ளன. அதில் பெரும்பாலானவை பாலைப் பற்றிய பாடல்களாகும். அவர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியவர். பொறையாற்றுக்கிழான், அம்பர்கிழான், அழுவந்தை என்னும் மன்னர்களால் ஆதரிக்கப்பட்டவர். கல்லாடனாரால் பாடப்பட்டவர்கள் அருதை, அம்பர்கிழான், அருவந்தை, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், காரி, கோசர், சேரலர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், தென்னர், தொண்டையர், நன்னன், பாணன், புல்லி, வல்வில் ஓரி முதலானோர் ஆவர். மேலும் கல்லாடர் பற்றி சு.அ. இராமசாமி 'கல்லாடம் உரைநடை' என்ற தம் நூலில் 'சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் கல்லாடரும் காணப்பெறுகிறார்.'[7] என்று குறிப்பிட்டுள்ளார்.

மு. அருணாசலம் பதினைந்தாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கல்லாடர் பற்றிக் குறிப்பிடுமிடத்தில்

> "பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த யாப்பருங்கல விருத்தியுரையில் செய்யுளியல் புறனடைச் சூத்திரமாகிய 93ஆம் சூத்திரவுரையில் உரைகாரர் மிகப்பலவான

பண்டையாசிரியர் பெயர்களைக் கூறுகின்றார். அவிநயனார், மயேச்சுரர், நக்கீரனார், பேராசிரியர், பெருஞ்சித்திரனார், மேலும் இருடிகளல்லா ஏனையோராகி, மனத்தது பாடவும் ஆகவும் கெடவும் பாடல் தரும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர் பெருத்தலைச்சாத்தனார் தொடக்கத்தோராலும் ஆரிடச் செய்யுள் போல மிகவும் குறையவும் பாடப்படுவன,[8] என்ற இடத்தில்

இவர் குறிப்படும் கல்லாடர் இச்சங்ககால கல்லாடரே என்று கூறியுள்ளார்.

**உரைதன்மை**

"இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகியோருடைய உரைகளில் காணப்படாதப் பல ஆய்வுகளும், விளக்கங்களும் இவர் உரையில் உள்ளன என்பதை, பண்டித வித்துவான் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்."[9]

**பிறர் உரையில் காணாதவை**

வேற்றுமை மயங்கியலுள் கூறிய கருத்துக்களை ஒருங்கே தொகுத்துக் கூறும் சிறப்புப் பிறர் உரையில் காணாதவையாகும். அவை

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உருபும் பொருளும் உடன் மயங்குதலும், ஒருவழி உருபே மயங்குதலும், ஒன்றற்குரியதனோடு ஒன்று மயங்குதலும், இரண்டு ஒத்து மயங்குதலும், ஒரு பொருண்மை ஒன்றற்கே உரியதாகாது பலவற்றோடு மயங்குதலும், ஓர் உருபு ஓர் உருபோடு மயங்குதலும், ஓர் உருபு பல உருபோடு மயங்குதலும் ஒன்றனது ஒரு பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றற்குரிமை பூண்டு எடுத்தோரின் பொருள்வழி மயங்குதலும், ஓதாத பொருள்வழி மயங்குதலும், ஒன்று தன் மரபாய் மயங்குதலும், இலக்கண வழக்குள் வழி மயங்குதலும், இலக்கணமில் வழி மயங்குதலும், மயக்க வகையான் மயங்குதலும், சொல்லுதல் வகையான் மயங்குதலும், ஒன்றனோடு பொருள் முடிந்து தொடர்ந்தடுக்கி மயங்குதலும், ஒன்றனோடு பொருள் முடியாது தொடர்ந்தடுக்கி மயங்குதலும், தொகையுள் மயங்குதலும், தொகையில் மயங்குதலும், உருபு வேற்றுமையாய் மயங்குதலும், உருபும் உருபும் மயங்குதலும். என்று இன்னோரன்ன

வேற்றுமை மயக்கம் பல கூறலின் "வேற்றுமை மயங்கியல்"[10]

என்னும் பெயர் உருவாகியது என்று கூறுகிறார்.

சொற்பொருள் விளக்கம்

நூற்பெயரிலும் நூற்பாவிலும் அமைந்துள்ள சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருகிறார். "சொல்லதிகாரம் என்பதில் அதிகாரம் என்பது முறைமை என்றும்"[11] கிளவியாக்கம் என்பதில் கிளவி என்பது சொல் : ஆக்கம் என்பது சொற்கள் பொருட்கண் மேலாமாறு என்றும்[12] "பொரு என்பது ஒன்றனோடு ஒக்கும் என்பதன்றி அதனின் இது நன்று என மிகுத்துக் கூறுவது என்றும்"[13] "சேரி என்பது பல குடியும் சேர்ந்திருப்பது என்றும்"[14] "தோட்டம் என்பது பல பொருளும் தொக்கு நின்ற இடம் என்றும்"[15] சொற்பொருள் விளக்கம் தருகிறார்.

உரையில் வினா எழுப்பும் முறை

பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என நான்கியலில் முடியக்கூடிய சொல்லதிகாரம் ஒன்பது இயல்களில் பேசப்படுவானே என்ற வினாவை எழுப்பி, அதற்கு விடை காண்கிறார் கல்லாடனார். "கிளவியாக்கத்தில் சொற்களின் பொதுவிலக்கணம் உணர்த்தி, அதன் பின்னர்ப் பெயர்க்குரிய இலக்கணமான வேற்றுமைக் குறித்த இலக்கணத்தை வேற்றுமையியலுள்ளும், வேற்றுமை மயக்கத்தை வேற்றுமை மயங்கியலுள்ளும், பெயர்ச் சொற்கள் விளியேற்பதை விளிமரபிலும் கூறி. அதன்பின் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகியவற்றைக் கூறி இறுதியில் எல்லா இயல்களிலும் எஞ்சி நின்ற சொற்களை எச்சவியலில் தொல்காப்பியர் கூறுகிறார்"[16] எனக் கல்லாடனார் குறிப்பிடுகிறார்.

இரு கருத்துக்களைக் கூறி ஐயுறல்

இவர் சிலக் கருத்துக்களை ஆராய்வுழி, இரு கருத்துக்களைத் தந்து விட்டு இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க என

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப[17]

எனும் தொல்காப்பியச் சொல்லதிகாரம் வினையியல் நூற்பாவின் இறுதியில் கூறிச் செல்வதை காணமுடிகிறது.

அடைச்சொற்கள்

அடைச் சொற்களுக்கு இலக்கண கூறும் போக்கினைக் கல்லாடனர் உரையில் பல இடங்களில் காணலாம். அடைச்சொற்களின் வரவு குறித்து அவர் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

"ஒரு சொல்முன் ஒரு சொல் வருங்கால் தொகைநிலையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும், பயனிலை வகையான் வருதலுமென இம்மூன்று வகையல்லதில்லை"[18] என வரையறைப்படுத்துவர். மேலும் உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே என்பதில் திணைக்கு முன் அடையாக உள்ள 'உயர்' என்பது பயனிலை வகையான் வந்தது என்பர், பயனிலை என்பது கருதி அமைவதாகும்.

இவ்வாறு அடைச்சொற்களை உரையில் காணமுடிகிறது.

**வேற்றுமை விளக்கம்**

வேற்றுமை குறித்துக் கல்லாடனார் கூறும் விளக்கம் மிக நுட்பமானதாகும், பொருள்களை வேற்றுமைச் செய்வதினால் வேற்றுமை ஆயிற்று என்று சுருங்கக்கூறிய கல்லாடனார் அதனை விளக்கமாக விரித்துரைப்பார்

....ஒரு பொருள் ஒன்றனைச் செய்யும் வினை முதலாகியும்", என எழுவாய் வேற்றுமையும் 'ஒரு வழி ஒன்று செய்தற்குச் செயப்படு பொருளாகியும' என இரண்டாம் வேற்றுமையும், 'ஒரு வழி ஒன்று நிகழ்வதற்கு ஏதுவாகியும்' ஒரு வழி ஒன்று செய்தற்குக் கருவியாகியும், என மூன்றாம் வேற்றுமையும், 'ஒரு வழி ஒன்று கொடுப்பதனை ஏற்பதாகியும்' நான்காம் வேற்றுமையையும் 'ஒரு வழி ஒன்றற்கு உவமமாகியும்' ஒரு வழி ஒன்று நீங்கற்கு இடமாகியும்' ஒரு வழி எல்லையாகியும்' என ஐந்தாம் வேற்றுமையையும், 'ஒரு வழி ஒன்றற்கு உடைமையாகியும' என ஆறாம் வேற்றுமையையும், 'ஒரு வழி முன்னிலையாதற் பொருட்டு விளிக்கப்படுவதாகியும்' என எட்டாம் வேற்றுமையும் என வேற்றுமைகளை [19]

தெளிவுபடுத்துகிறார். மேலும் இதனை விளக்கும் முகத்தான் சாத்தன் என்னும் சொல் பொதுநிலையில் நிற்றலும் அதனோடு ஐ, ஒடு, கு. இன், அது, கண் என வேற்றுமை உருபுகள் சேர்ந்து பொருள் வேறுபடுவன தெளிவுபடுத்தும் உரைகாரர் சாத்தன் என்பது சாத்தா என அன் என்பது சேர்ந்து விளியேற்றதையும் தெளிவுபடுத்துகிறார்.

**'போலும்' என்ற உரை**

கல்லாடர், பல ஆய்வுகளை எடுத்து ஆராய்கிறார் அவ்வாறு ஆராயும்போது, நன்கு துணிவதற்கு இயலாதனவற்றைப் 'போலும்' என்று

உரைப்பது பெருவழக்காக இருக்கின்றது. இவர் உரையில் நாற்பது இடங்களில் வருகின்றது. அவை

1. 'மக்கள் என்னாது சுட்டென்றதுதான் உயர்திணை என இடுகின்ற குறியீட்டிற்குக் காரணம் இதுவென்பது விளக்கல் வேண்டிப் போலும்' (கிளவி. நூற்பா:1)
2. 'முன்னும் ஏதுவின் பாகுபாடு ஓதிவைத்தப் பின்னும் ஏத என ஓதியது அவ்வாறொழிய வருவனவுற்றைக் கருதியது போலும்' (வேற்றுமை நு.12)
3. 'கிளவியென்றயுது ஆகுபெயராற் பொருளினை ஆக்கமொடு புணர்ந்ததென்று விசேடித்துக் கூறியமையின் ஆக்கமல்லா ஏது ஒத்த கிழமைத்தன்று என்பது போலும் கருத்து' (வேற்றுமை மயங்கியல் நூ.9)
4. 'மற்று இஃது 'ஆனென் இறுதி இயற்கையாகும்.' என்ற வழியே அடங்காதோ எனின், அளபெடுத்த ஆனென் இறுதியாகலின் வேறு கூறிற்றுப் போலும்' (விளிமரபு:நூ.8)
5. 'பிறவும் என்றனாற் கொள்வன யாவையெனின், குறவன், இறவுளன், குன்றுவன் எனவும், காடன் காடி எனவும், நாடன் நாடி எனவும், துறைவன், சேர்ப்பன், தரையன், திரையன் எனவும், ஒருமைத் திணைப் பெயராய் வருவனவும் ஆண் பெண் என்பனவும் பிறவும் இன்னோரன்னவும் போலும்' (பெயரியல் நூ.20)

என்ற நூற்பாக்களிலும் போலும் எனும உரை காணப்படுகிறது. மேலும், 22, 48, 51, 56, 57, 67, 69, 75, 81, 83, 94, 95, 100, 138, 159, 177, 216, 222, 224, 226, 231, 238, 244, 251, 252, 257 என்ற நூற்பாக்களிலும் 'போலும்' என்னும் உரையைக் கையாள்கிறார்.

முடிவுரை

கல்லாடனாரின் சொல்லதிகார உரை, சேனாவரையர் உரை போன்றே சிறப்பிற்குரியது. தமிழ் ஆய்வுலகில் பேசப்படும் உரையாகத் திகழ்கிறது. கல்லாடர் என்ற பெயரில் மூவர் உள்ர் என கு. சுந்தரமூர்த்தியும், நால்வர் உள்ர் என இரா. இளங்குமரனும் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. கல்லாடனார் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு என இக்கட்டுரை மூலம் அறியமுடிகிறது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகிய உரையாசிரியர்களின் உரையுடன் ஒப்பு நோக்கத்தக்க உரையாக இவ்வுரைத் திகழ்கிறது. மேற்கூறிய உரையாசிரியர்கள் கூறாத சில உரைகளைக் கல்லாடனார் கூறியிருப்பது இவ்வுரையின் சிறப்பாகும்.

ஒவ்வொரு நூற்பாவையும் மிகவும் விரிவாகவே விளக்கியுள்ளார். எந்த நூற்பாவிலும் வடமொழிச் சார்பானக் கருத்துகளை முன்மொழியாமல் தமிழ் மொழியின் சொல்லிலக்கண அமைப்பை விளக்கியுள்ளார். பல்வேறு சிறப்புகளுக்குரிய இவ்வுரை அமையினும் நூல் முழுமை பெறவில்லை என்ற குறையும் உண்டு. கிளவியாக்கம் தொடங்கி இடையியல் முதல் 10 நூற்பாக்களுக்கே கல்லாடனாரின் உரை உள்ளது. அவ்வகையில் 260 நூற்பாக்களுக்கே உரை கிடைக்கிறது. எஞ்சிய இடையியல், உரியியல், எச்சவியல் ஆகியவற்றிற்கு உரை இல்லை. இவை தமிழர்களின் தவக் குறையே ஆகும்.

## குறிப்புகள்

1. கு.சுந்தரமூர்த்தி, தொல்.சொல்.,கல்லாடன் விருத்தியுரையும், பழைய உரையும், ப.12.
2. ந.வேங்கடேசன், காலந்தோறும் கல்லாடம் (கட்டுரை), ப.250.
3. இரா. இளங்குமரன், தொல். சொல்லதிகாரம், கல்லாடம், ப.52.
4. கீர்த்திக் திருஅகவல், (11-12)
5. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.158.
6. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு, ப.326.
7. சு. அ. இராமசாமி, கல்லாடம் உரைநடை, ப.18.
8. மு. அருணாசலம், மேலது, ப.326.
9. கு.சுந்தரமூர்த்தி, மேலது, ப.15.
10. மேலது, ப.16.
11. இரா. இளங்குமரன், தொல்.சொல்.,கல்லாடம், ப.57.
12. மேலது, ப.59.
13. மேலது, ப.75.
14. மேலது, ப.96.
15. மேலது, ப.96.
16. மேலது, ப.59.
17. தொல். சொல். வினையியல் நூற்பா. 10.
18. இரா. இளங்குமரன், தொல்.சொல்.,கல்லாடம் உரை, ப.60.
19. கு. சுந்தரமூர்த்தி, தொல்.சொல்.,கல்லாடனர் உரை, ப.76.

## துணைநூல்கள்

1. சுந்தரமூர்த்தி, கு. தொல்காப்பியம் சொல்லதிகாரம், கல்லாடனார் விருத்தியுரையும், பழைய உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மு.ப.1964

2. இளங்குமரன் இரா. தொல். சொல்லதிகாரம், கல்லாடம், தமிழ்மண் பதிப்பகம் 2003.

3. சிவலிங்கனார் ஆ. தொல்காப்பிய சொல்லதிகார உரைவளங்கள், உ தநி. 1982.

4. இளங்குமரன் இரா. இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிகப்பகம், மு.ப.2009.

5. ராஜம் எஸ். தொல்காப்பியம் மூலம் முழுமையும், மார்ரே கம்பெனி, மு.ப. 1960.

6. அரவிந்தன் மு.வை. உரையாசிரியர்கள்

7. அருணாசலம் மு. தமிழ் இலக்கிய வரலாறு (நூற்றாண்டு முறை 9 (முதல் 16 வரை) பார்க்கர் பதிப்பகம், மு.ப. 2005.

8. கல்லாடன், காலந்தோறும் கல்லாடர், சேகர் பதிப்பகம், 2013.

9. சந்தானம் மு. பேராசிரியர் உரைத்திறன், கல்லம்பல் பதிப்பகம், மு.ப.1991.

# தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில் சுவடி நோக்கு

முனைவர்பட்ட ஆய்வாளர் ஆ. அருள்மணி

## முன்னுரை

தொல்காப்பிய அதிகாரங்களிலேயே சொல்லதிகாரம் மட்டும் ஆறு உரையசிரியர்களைப் பெற்றுத் தனிச்சிறப்புடன் திகழ்கிறது. சொல்லதிகாரத்திற்கு மூலம் பதிப்பிப்பதற்கு முன்பாகவே உரை பதிப்பிக்கப் பெற்றது. முதலில் பதிப்பிக்கப் பெற்ற உரை சேனாவரையர் உரை. அதனை அடுத்து நச்சினார்க்கினியர், இளம்பூரணர், தெய்வச்சிலையார், கல்லாடர், பழைய உரையசிரியர் உரைகள் முறையே பதிப்பிக்கப் பெற்றன.

தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் உரைப் பதிப்பில் அடிகளாசிரியரின் சுவடிப் பதிப்பின் சில சான்றுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சுவடிப்பதிப்பு

அச்சுப்பதிப்புக்குமுன் பதிப்பு என்ற நிலையைச் சுவடிகள் பெற்றிருந்தன. பனைஓலையைப் பதப்படுத்தி அதில் நல்லவற்றைத் தேர்வுசெய்து நறுக்கிச் சுவடி வடிவில் அமைத்து எழுதப் பயன்படுத்தினர். சுவடியில் இருந்து எழுத்து வடிவத்தை நேரடியாக அச்சில் பதிப்பிப்பதற்குச் சுவடிப்பதிப்பு என்று பெயர். சுவடிப்பதிப்பைச் செய்பவர் பல்துறை அறிவினையும், பதிப்புத்துறையில் ஆர்வங் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அடிகளாசிரியர் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் ஓலைச்சுவடித் துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றியதால் இப்பணி அவருக்குக் கைவரப்பெற்றது. இவர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து ஓலைப்பிரதி ஒன்றினையும், திருவாடுதுறை ஆதீனத்து ஓலைப்பிரதி ஒன்றினையும் பயன்படுத்தி 1988-இல் சுவடிப்பதிப்பாக இளம்பூரணர் உரையை வெளியிட்டார்.

இடையியல், உரியியலா? - இடைச்சொல்லியல், உரிச்சொல்லியலா?

அடிகளாசிரியர் தமக்குக் கிடைத்த இரண்டு சுவடிகளை வைத்துக் கொண்டு தொல்காப்பிய இயல்களை ஆய்வுக்கு உட்படுத்தி முடிவு காண்கிறார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் இயல்களான இடையியல், உரியியல் என்பவை இடைச்சொல்லியல் உரிச்சொல்லியல் என்று இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

> "இளம்பூரணர் உரை எழுதியுள்ள புலிசை ஏட்டில் பெயரியல், வினையியல், இடைச்சொல்லியல் என்று இவ்வியல்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. நன்னூல் மயிலைநாதர் உரையிலும் இவ்வாறே எழுதப்பட்டுள்ளன." [1]

இதற்கு யாப்பருங்கல விருத்தியுரையினையும் வீரசோழிய உரையினையும் நன்னூல் நூற்பாக்களையும் மயிலைநாதர் உரையினையும் மேற்கோளாகக் காட்டுகிறார்.

1. இடைச்சொல்லும் உரிச்சொல்லும், தொல்காப்பியம் தக்காணியம், அவிநயம், நல்லாறன் மொழிவழி முதலியவற்றும் காண்க. (யா.க.வி.கழ. 579)
2. வடமொழியில் அவ்வியச் (அவ்யச்) சொல்; தமிழில் இடைச்சொல் (வீரசோ. 49. உரை)
3. ...தணித்தியலின்றிப் பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல் (நன். 419)
4. பிறிதின் இடத்தைச் சார்ந்து நடத்தலால் இடைச் சொல் என்க என்பர் மயிலைநாதர் (நன். 419)" [2]

பேரிசை இமயமா? பேரிசை முள்ளூரா? பேரிசை மூதூரா?

"துவன்று நிறைவாகும்" (சொல். 326)[3] என்னும் உரியியல் நூற்பாவிற்கு உதாரணம் 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்' (பதிற்-11) என்று இளம்பூரணர் உரையின் கழகப் பதிப்பில் உள்ளது. சேனாவரையர், தெய்வச்சிலையார் உரையுள்ள கழகப் பதிப்பில் 'பேரிசை முள்ளூர்' (நற்.170) என்று உள்ளன. நச்சினார்க்கினியர் உரையில் 'பேரிசை இமயம்' (பதிற்.11) என்று உள்ளது. இதனை ஆராய்ந்த அடிகளாசிரியர் இளம்பூரணர்,

> "உரையுள் நிறைந்த மூதூர் என்று
> வருவதால் ஆசிரியர் துவன்றிய
> பேரிசை மூதூர் என்ற பாடம்
> தக்கது"[3]

என்று கூறி இப்பாடம் புலிசை ஏட்டில் உள்ளது என்கிறார்.

**வய-வயம்**

"வயம் வலியாகும்" (சொல் - 360)[5] என்னும் உரியியல் நூற்பாவில் உள்ள வயம் என்ற சொல் இளம்பூரணர், சேனாவரையர் நச்சினார்க்கினியர் உரைகொண்ட கா.நமச்சிவாய முதலியார் பதிப்பிலும் துறைசை ஏட்டிலும் "வய" என்று உள்ளது. இச்சொல்லை ஆராய்ந்த அடிகளாசிரியர் "வயம் வலியாகும்" என்னும் புலிசை ஏட்டின் பாடத்தைக் கொண்டு பிங்கலம், திவாகரம், நேமிநாத நூற்பாக்களைச் சான்று காட்டுகிறார்.

> " "வயம் வலியாம் வந்து" (நேமிநாதம்: உரி - 4)
> "வலியும் நீரும் புள்ளும் வயம் எனல்" (பிங்கலம்)
> "முரண் வயம் பாழி............வலி" (திவாகரம்)"[4]

**முடிவுரை**

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரையை அடிகளாசிரியர் திருவாடுதுறை ஆதீனத்து ஓலைச்சுவடி, திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து ஓலைச்சுவடி ஆகியவற்றின் துணைகொண்டு பல அரிய குறிப்புகளுடன் ஆராய்ந்து பதிப்பித்துள்ளார்.
2. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இடைச் சொல்லியல், உரிச்சொல்லியல் என்னும் இயல்கள் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன.
3. பேரிசை மூதூர் என்ற பாடம் புலிசை சுவடியைக் கொண்டு ஆராயப் பெற்றுள்ளது.
4. வயம் என்ற நூற்பாவின் சொல் புலிசைச் சுவடியையும் நிகண்டுகளையும் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.
5. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியம் முழுமையும் சுவடி நோக்குடன் பதிப்பிக்கப் பெற்ற பெருமை உடையது

என்பர். ஆதலால் அப்பதிப்புகளில் குறிக்கப்பெற்றுள்ள பாடபேதங்களைத் தனித்து ஆராயலாம்.

6. குடியரசுத்தலைவரின் தொல்காப்பியர் விருதை அடிகளாசிரியர் முதன்முதலாக பெற்றதற்கு அவரின் தொல்காப்பியப் பதிப்பின் சிறப்புகளே காரணமாயிற்று என்பர் அறிஞர். இத்தகைய சிறப்பிற்கு அவரின் சுவடியியல் ஆய்வே துணை நின்றதாம்.

## குறிப்புகள்

1. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல்காப்பியம், சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை. ப. 208
2. மேலது, ப. 209
3. மேலது, ப. 256
4. மேலது, ப. 270

# தொல்காப்பிய ஆங்கிலப் பதிப்புகளும் மொழிபெயர்ப்பும்

முனைவர் கா. இரவிச்சந்திரன்

## முன்னுரை

தொல்காப்பியப் பதிப்பு தொடர்பான பல்வேறு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் தொல்காப்பிய ஆங்கிலப்பதிப்புகள் அதன் மொழிபெயர்ப்பு நுட்பங்கள் குறித்து வரலாற்று நிலையிலான கட்டுரைகளோ , நூல்களோ காண்பது அரிது. இந்நிலையில் தொல்காப்பியம் ஆங்கிலத்தில் பதிப்பிக்கப்பட்ட வரலாற்றையும் அத்தோடு அவை மொழிபெயர்ப்பில் காட்டியுள்ள சிரத்தைகளும் பிழைகளும் இக்கட்டுரையில் ஆராயப்பெறுகின்றன. சில மொழிபெயர்ப்புகள் நூல்வடிவம் பெறவில்லை. எனினும் அதன் மொழிபெயர்ப்பு இயல்பு குறித்தும் இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது. குறிப்பாக, சிறந்த மொழிபெயர்ப்பாகக் குறிப்பிடப் பெறும் கமில்சுவலபிலின் மொழிபெயர்ப்பு நூலாக்கம் பெறவில்லை ஆயினும் அதன் நிலைப்பாடு குறித்து இதில் விவாதிக்கப் பட்டுள்ளது.

## பி. சுப்பிரமணிய சாஸ்திரியார் மொழிபெயர்ப்பு (1930)

தொல்காப்பிய ஆங்கிலப் பதிப்புகள் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் எழுத்ததிகார மொழிபெயர்ப்பிலிருந்து தொடங்குகின்றன. 1930இல் ‘தொல்காப்பிய எழுத்ததிகாரம் ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு என்னும் இருகூறுகளோடு பதிப்பிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் சொல்லதிகாரம் முதல் மூன்று இயல்கள் 1937ஆம் ஆண்டிலும், 1945இல் தொல்காப்பியம் சொல்லதிகாரம் முழுமையும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகப் பதிப்பிக்கப்பட்டது.

இந்த பதிப்பிற்குப் பதிப்பாசிரியராக தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அமைந்து ஆழ்ந்த திறனாய்வு நோக்கிலான

(மொழிபெயர்ப்பு நோக்கில்) பதிப்புரையை வழங்கியுள்ளார். இந்த பதிப்புரையில் சுப்பிரமணிய சாஸ்திரியாரைத் தமிழுலகிற்குப் புதியவராக தெ.பொ.மீ. குறிப்பிடுகின்றார்.[1]

இந்தப் பதிப்பில் 'ஒலி பெயர்ப்பு' (Scheme of Transliteration) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் ஆக இரண்டு அட்டவணைகள் தரப்பட்டுள்ளன. இவை 1940களில் இலக்கண மொழிபெயர்ப்பில் குறிக்கத்தக்க நன்முயற்சியாகும்.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் மொழி பெயர்ப்பில் காணலாகும் சில பொருட்படுத்தத் தக்க பிரச்சனைபாடுகளைத் தெ.பொ.மீ. காட்டுகின்றார். அவற்றுள் ஒன்றை இங்கே சுட்டுதல் தகும்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம் 47ஆம் நூற்பா
பண்ணுங் காலு மதுவதன் மரபே

என்று அமைகின்றது. இந்த நூற்பாவிற்கான உரையில் பி.சா.சு. பின்வருமாறு குறிப்புரை தருகின்றார்.

The same rule (as is mentioned in the previous sutra) should be observed when eatables of different nature are counted. (i.e.) the verb giving the general sense should be used.

இந்த உரையில் etables என்னும் சொல்லின் பொருத்தமின்மையைத் தெ.பொ.மீ. சுட்டிக் காட்டுகின்றார்.

மொழிபெயர்ப்பு அனைத்து பகுதிகளிலும் துல்லியத்தோடு அமையவில்லை. ப.36 இல் 47ஆம் நூற்பாவிற்கான உரையில் வரும் உண்ணத்தக்க என்னும் சொல் வேறுபாடுகளின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது [3]

இப்பதிப்பில் பலவிடங்களில் தெய்வச்சிலையாருடைய பாட வேறுபாடும் அதன் பொருத்தப்பாடும் பி.சா.சுவினால் போற்றப்பட்டுள்ளன.[4] கல்லாடர் உரையும் காட்டப்பட்டுள்ளமை கூடுதல் சிறப்பு.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் முழுமையான மொழிபெயர்ப்பில் தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்ப காணலாகும் வடமொழி நூற்பாக்களைப் பல்வேறு வடநூலிலிருந்து ஒப்புமை காட்டும் பகுதி ஆய்வாளர்கள் கருதத் தக்க இடமாகும்.

முழுமையான தொல்காப்பிய ஆங்கிலப் பதிப்பு 1949இல் குப்புசாமி சாஸ்திரி ஆய்வு நிறுவன வெளியீடாக வெளியானது.

இந்தப் பதிப்பின் சிறப்பியல்பு வடமொழி நூற்பாவோடு தொல்காப்பிய நூற்பா ஒப்பீடே ஆகும்.

**ஆர். வாசுதேவ சர்மா மொழிபெயர்ப்பு (1933)**

ஆர். வாசுதேவ சர்மாவின் 'தொல்காப்பியம் பொருளதிகாரம்' 1933ஆம் ஆணடு முருகவிலாஸ் பதிப்பகத்தின் வழியாக வெளியாகியுள்ளது. இப்பதிப்பு அகத்திணையிய ல், புறத்திணையியல் இரண்டையும் உள்ளடக்கிய ஒன்றாகும். 199 பக்கங்கள் கொண்டும் 12 அணாவிற்கும் இந்நூல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆர்.வாசுதேவ சர்மா திருச்சி நேஷனல் கல்லூரியில், முதுநிலை விரிவுரையாளராக வடமொழித் துறையில் பணியாற்றியவர் என்பது சில குறிப்புகளால் அறிய வருகின்றது.

இதன் முகப்பு பக்கத்தில்,

''உலகிலேயே மிகத் தொன்மைசான்ற கவிதையியல்
தொடர்பான நூல் முதன்முறையாக ஆங்கிலத்தில்,
சிறப்பான உரையோடும், விளக்கங்களோடும்[5]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பதிப்பில் நூற்பாக்களுக்கு உரிய ஆங்கில மொழியாக்கமும், விளக்கமும் மட்டுமே தரப்பட்டுள்ளன. நூற்பாவிற்கான ஒலிபெயர்ப்பு அமைக்கப்பெறவில்லை. அகம் என்பதை இம்மொழிபெயர்ப்பு Love என்னும் ஆங்கில சொல்லிலேயும், புறம் என்பதை Life என்னும் செ ால்லிலேயும் குறிப்பிடப்படுகின்றது.[6]

இப்பெயர்ப்பு தவறான புரிதலென்பதை இன்றைய மொழிபெயர்ப்பு போக்கு உணர்த்துகின்றது. Life என்பது வாழ்வு என்றும் அதனுள் அடங்கும் இருகூறுகளாவன அகம், புறம் என்பன என்பதும் இன்றைய கால ஆய்வுப் பரப்பின் பொதுப்புரிதலாகும்.

சில பெயர்ப்பு முறைகள் துல்லிதம் சான்றவையாக அமைகின்றன. சான்றாக,

| | | |
|---|---|---|
| முதற்பொருள் | - | Essentials |
| திணை மயக்கம் | - | Confusion of Tinais |
| உரிப்பொருள் | - | Appropriate action |

என்பனவற்றைக் கூறலாம். இவை இரண்டும் சொற்பெயர்ப்பு நிலையிலேயே நிற்காமல் மொழியாக்க (Transcreation) நிலையிலிருந்து காட்டப்பட்டுள்ளமை கருதத் தக்கது.

இப்பதிப்பில், சான்றாதாரப் பாடல்களாகக் குறுந்தொகை மொழிபெயர்ப்பு பாடல்களும், சில இடங்களில் தமிழ்ப் பாடல் வரிகளும் காட்டப்பட்டுள்ளன. இம் மொழிபெயர்ப்பின் இடையே இளம்பூரணர், நச்சினார்க்கினியர், உரை வேற்றுமைகள் கூர்மையாகக் கணிக்கப்பட்டுள்ளன.

**இ.எஸ். வரதராஜ ஐயர் பதிப்பு (1948)**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடாக 1948ஆம் ஆண்டு இ.எஸ். வரதராஜ ஐயர் மொழிபெயர்ப்புடன் ஒரு பதிப்பு வெளியாகியுள்ளது. இப்பதிப்பிற்கு அ.சிதம்பரநாத செட்டியார் முன்னுரை வரைந்துள்ளார்.

இந்தப் பதிப்பில் ஒவ்வொரு நூற்பாவிற்கும் உரிய மொழிபெயர்ப்பும், விளக்கமும் தரப்பட்டுள்ளன. ஒலிபெயர்ப்பு (Translitration) காணப்பெறவில்லை. இப்பதிப்பு தொல்காப்பிய நூற்பாக்களை முன்வைத்து, அரசமுறை, களவியல், பற்றிய விரிவான விளக்கத்தை முன்வைக்கிறது [7] இதனை, அ. சிதம்பரநாத செட்டியார் பாராட்டியுள்ளார். தொகுதி ஒன்றில் அகத்திணையியலும், களவியலும், தொகுதி இரண்டில் கற்பியலும், பொருளியலும் அமைந்துள்ளன. இப்பதிப்பில் பாடவேறுபாடுகள் காட்டப்பெறவில்லை, இரண்டு தொகுதிகளுக்கும் பக்க எண்கள் தொடர் எண்களாகப் இடப்பட்டுள்ளன.

**சி. இலக்குவனார் பதிப்பு (1963)**

சி. இலக்குவனார் தம்முடைய முனைவர்பட்ட ஆய்வேட்டை 'Tholkappiyam-(in English) with critical studies என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இந்நூல் குறள் நெறி பதிப்பாக 1963ஆம் ஆண்டு வெளியானது. 545 பக்கங்கள் உடைய இந்நூலின் முதற் பகுதி எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பாகவும், இரண்டாம் பகுதி தொல்காப்பியம் பற்றிய திறனாய்வாகவும் அமைந்துள்ளது. 'தொல்காப்பியப் பதிப்பாக இந்நூலைக் கருத இயலாது' என்றும் சிறந்த கருவிநூலாக இது அமையக்கூடியதென்றும் ச.வே. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.[8]

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு (1985)**

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970ஆம் ஆண்டு தொல்காப்பியத்தை ஆய்வு முறைகளுடன் கூடிய ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டுவர திட்டமிட்டது. கமில்சுவலபிலின் மொழிபெயர்ப்புடன் 'தமிழியல்' இதழில் எழுத்தும், சொல்லும் தொடர்ந்து வெளியிடப்பட்டன. எழுத்ததிகாரம் (தொகுதி 1-5,7,8) சொல்லதிகாரம் தொகுதி, 13, 21, 28 ஆகிய இதழ்களிலும் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன.

இதுவரை வந்துள்ள ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இதனைச் சிறந்த மொழிபெயர்ப்பாக ச.வே. சுப்பிரமணியன் கருதுகின்றார்[9] மேலும் இம்மொழிப் பெயர்ப்பின் தனித்த இயல்புகள் குறித்து, ஆய்வாளர் க. முருகன் காட்டும் கருத்து கருதத்தக்க ஒன்றாகும்.

> உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழியல் ஆய்விதழில் 1972இல் இருந்து தொடர்ந்து வெளிவந்த தொல்காப்பியம் எழுத்து, சொல் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு தற்கால மொழியியல் அடிப்படைகளையும் கோட்பாடு களையும் மனதில் கொண்டு உரையாசிரியர்களின் தாக்கத்திலிருந்து விலகி நின்று செய்யப்பட்ட முதல் ஆங்கில மொழிபெயர்ப்பாகும். சுவலபில் தரும் விளக்கமும் அடிக்குறிப்புகளும் எடுத்துக் காட்டுகளும் 'இன்றைய வாசகர்களின் புரிதலுக்குத் துணை செய்வன". [10]

கமில்சுவலபிலின் மொழிபெயர்ப்பு நிகழ்த்தப் பெற்ற காலம் (1970கள்) உலகம் முழுவதிலும் மொழியியல் தருவித்த தருக்க அடிப்படையில் மரபான இலக்கணங்களைப் புரிந்து கொள்ள தலைப்பட்ட காலமாகும். அந்த வகையில், சுவலபில் எளிய நடைமுறை வழக்கிலுள்ள சான்றுகளோடு கூடிய மொழிபெயர்ப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இத்தகு மொழிபெயர்ப்புகளை மேற்கொண்டபோது எழுந்த சிக்கல்களை முன்வைத்து 'மொழிபெயர்ப்பு கோட்பாடுகள் மற்றும் சிக்கல்கள்' பற்றிய கட்டுரைகளையும் கமில் சுவலமில் உருவாக்கியுள்ளார்.

**டி. ஆல்பர்ட் மொழிபெயர்ப்பு (1985)**

1985ஆம் ஆண்டு டி. ஆல்பர்ட் என்பவரைக் கொண்டு தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தையும், சொல்லதிகாரத்தையும்

மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினர். இப்பதிப்பில், இடப்பக்கம் தமிழ் மூலமும் வலப்பக்கம் அதற்கு இணையாக ஆங்கில மொழி பெயர்ப்புமாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அடிக்குறிப்புகளில் விளக்கங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் தமிழ் இலக்கணச் சொற்களுக்கான உரிய ஆங்கில கலைச்சொற்கள் அகரநிரலாக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

'Tolkappiam phonology and Morphology-An English Translation

என்னும் தலைப்பில் இந்நூல் வெளியானது. முன்னுரையாக தொல்காப்பியம் குறித்தும் மொழிபெயர்ப்பின் இயல்புகள் குறித்தும் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

**நிர்மல் செல்வமணி மொழிபெயர்ப்பு (1989)**

1989ஆம் ஆண்டு 'சோபிதம்' வெளியீட்டின் வழி 'தொல்காப்பியம் அகத்திணையியல்' (tolkaappiyam : akattinai iyal) என்னும் 18 பக்கத்திலான ஒரு குறும்பதிப்பொன்று வெளிவந்துள்ளது. இப்பதிப்பு முறைமையும், மொழிபெயர்ப்பு முறைமையும் தனித்துச் சுட்டப்பட வேண்டிய சில இயல்புகளைக் கொண்டமைந்துள்ளன. இப்பதிப்பிற்கு, வி.ப.க. சுந்தரம் அறிமுகவுரை வழங்கியுள்ளார். கிறித்துவக் கல்லூரி ஆங்கிலத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் நிர்மல் செல்வமணி அவர்களின் இம்மொழிபெயர்ப்பு நூற்பாவிற்குரிய நேரிய, நேரடியான பொருளைத் தருதல் என்னும் நோக்கோடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பு ஒவ்வொரு நூற்பாவிற்கும் முதலில் ஆங்கில விளக்கம், பின்னர் தமிழ் வடிவிலான நூற்பா என்பதாக அமைந்துள்ளது. இதுவரையிலான தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களில் இத்தகையதான அமைவுமுறை காணப்பெறவில்லை என்பது கருதத்தக்க ஒன்றாகும்.

தமிழ் இலக்கணவியல் கலைச்சொற்கள் தமிழ் ஒலிப்பு முறையிலேயே ஒலியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இத்தகு சொற்கள் மொழியாக்கம் செய்யப்படாமைக் குரிய காரணம் மொழிபெயர்ப்பாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

> ''உரிய மூலச்சொற்களை மொழிபெயர்த்தல் விரும்பத்தக்க ஒன்றன்று. அதனாலேயே மூலவடிவத்திலேயே அமைக்கப் பட்டுள்ளன. இவை, கலைச்சொல்லாக்க விதிக்குட்பட்டதுமாகும். கிரேக்கச் சொற்களும் மூலமொழிவடிவிலேயே ஆங்கிலத்தில் பயின்று வருகின்றன. சான்று: ''Catharsis, Nemesis, mimesis''

இதுபோல் இப்பதிப்பினுள் மேற்கோள்குறி, கவனமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. பன்மை காணும் சொற்கள் ஆங்கில வழக்குபடி 'எஸ்' என்னும் எழுத்து சேர்த்து எழுதப்பட்டுள்ளன.

சான்று : tiNa-s

'எஸ்' என்னும் ஆங்கில எழுத்து சேர்ப்பதற்கு முன் சிறுகோடு முறை பின்பற்றப்பட்டுள்ளது. தமிழில் காணலாகும் லகர, ளகர, னகர, ணகர வேறுபாடுகள் நீங்க ஆங்கிலப் பேரெழுத்துக்கள் இடப்பட்டுள்ளன.

சான்று:புறம்-puRam

இவ்விரு முறைகளும் தமிழில் இம்மொழிபெயர்ப்பில் மட்டுமே காணக்கூடியவை என்பதும் கவனிக்கத் தக்கது. கதைமாந்தர், இடப், பொருட் பெயர்கள் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இங்குக் குறிப்பாக மொழிபெயர்ப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

சான்று : மாயோன் - 'Mayon'

- <u>the black one</u>

the black one - என்னும் சொல் வழங்குமுறை சரியான மொழிபெயர்ப்பன்று என்பது இம்மொழிபெயர்ப்பாளர் முடிவு.

இத் தொல்காப்பிய அகத்திணையியல் மொழிபெயர்ப்பு மதுரை சருவோதயா இலக்கியப் பண்ணை (1978) க.ப. அறவாணனின் தொல்காப்பிய ஒப்பியல் மொழிபெயர்ப்பையும் பின்பற்றி மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக இந்நூலின் முகவுரை குறிப்பிடுகின்றது.

இப்பதிப்பின் சிறப்பியல்பாக மொழிபெயர்ப்பு எளிமையும், சுருக்கமும் கொண்டு அமைந்திருப்பதேயாகும். தொல்காப்பியம் போன்ற தொல்நிலை இலக்கண அமைதிகூறும் நூலுக்குத்

T.17932



தெளிவானதும், எளிமையானதுமான விளக்கஉரை வேண்டற்பாலது.

இந்நூலின் எளிமையான மொழிபெயர்ப்பிற்குச் சான்றாக பின்வரும் பகுதிகளைக் கூறலாம்.

9. வைகறை, விடியல்-மருதம்.
(To) marutam, dawn and morning

35 பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே
They (the others) are also apt to leave on account of wealth [11]

இம் மொழிபெயர்ப்பில் காணலாகும் சில சிறப்பான கலைச்சொற் பொருத்தப்பாடுகள்:

| | | |
|---|---|---|
| திணை மயக்கம் | - | Overlapping of tinai |
| கண்டோர் | - | onlookers |
| உள்ளுறைஉவமம் | - | Implicit simile |

இப்பதிப்பு மிகச் சிறிய பக்க உடையதாயினு தொல்காப்பிய மொழிபெயர்ப்பு வரலாற்றில் மிகப் பயனுடைய இழை எனக் கொள்ளவேண்டும்.

**ஜான் சாமுவேல் பதிப்பு (2001)**

2001ஆம் ஆண்டு ஆசியவில் நிறுவனத்தின் வெளியீடாக தொல்காப்பியம் முழுமைக்குமான ஆங்கிலப் பதிப்பு வெளியானது. 687 பக்கங்கள் கொண்ட இப்பதிப்பு தமிழ் நூற்பா, ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு விளக்கம் என்னும் நாற்கூறுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

**தொகுப்புரை**

தொல்காப்பிய மொழிபெயர்ப்புகள் 1930 இருந்து 2001 வரையிலும் பத்திற்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்துள்ளன, எனினும் அவற்றுள் இக்கட்டுரை எட்டு பதிப்புகளைப் பற்றிய குறிப்புகளை நிரல்பட பகிர்ந்து கொண்டுள்ளது. வரலாற்று நிலை நின்று நோக்கும்போது, பதிப்பு துறை செழுமை பெற்று வளர்ந்து வந்ததைப் போன்றே மொழிபெயர்ப்புத்துறையும் கலைச்சொல்லாக்கம், ஒலிபெயர்ப்பு முறைமை, நேரிய

சொல்தேர்வு, பண்பாட்டு தளத்திலான மொழியாக்கம் இவைகளில் தேர்ந்து விளங்கியமைமயை இக்கட்டுரை ஒரு பருந்து பார்வையால் விளக்க முற்படுகின்றது.

ஆகச் சிறந்த, மொழிபெயர்ப்பாக கபில் சுவலபின், நிர்மல் செல்வமணி ஆகியோரின் மொழிபெயர்ப்புகளும், வடமொழி ஒப்புமை காட்டலில் பி.சா.சு. அவர்களின் மொழிபெயர்ப்புகளும் தனித்து குறிப்பிடத்தக்கன. எனினும், ஆழ்ந்தகன்ற ஆய்வுரைகளோடும், உரைவளத்தோடும் கூடிய தொல்காப்பிய மொழிபெயர்ப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதையே சில இடைவெளிகள் உணர்த்துகின்றன.

## அடிக்குறிப்பு

1. T.P. Meenaksi Sundaram (Ed), Tolkappiyam preface.
2. Idbi, p.36.
3. Idbi, p. 6.

   ''The translations are not always accurate; for instance, on page No.36, in translating the sutra 47, the word ''eatable" is introduced without any warrant.
4. Idbi, p.47.

   The later reading seems to be better since the use of tthe Ennum kalum 'um' is appropriate.
5. R. Vasudeva sarma, tolkappiam (porulathikaram) infront page, The oldest rhetorical work in the world done into English for the first time with exhautive comments and illustration.
6. Idbi, p.7.
7. E.S. Varadharaja Aiyar, Tolkappiam, porulathikaram, Forwarded.
8. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் பதிப்புகள், ப.34.
9. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியப் பதிப்புகள், ப.163.
10. வீ. அரசு (ப.ஆ.) உயராய்வு, ப.428.
11. Nirmal Selvamani, Tolkaappiyam" AkattiNai iyal. p.4

## துணைநூல்கள்

1. ச.வே. சுப்பிரமணிய,ன தொல்காப்பியப் பதிப்புகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 1992.
2. கணேசயர் (ப.ஆ.) தொல்காப்பியம், உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.
3. வீ. அரசு (ப.ஆ.) உயராய்வு, தமிழிலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், 2007.
4. P.S. Subrmaniya Sastri (tr.), Annamalai University, 1945.
5. E.S. Varadaraja Iyer, Tolkappiam-porulatikaram, Annamalai University, 1948.
6. R. Vasudeva Sarma, Tolkappiam porulatikaram, Murugavilas, Trichi, 1933.
7. Nirmal Selvamani, tolkaappiyam akattiNai iyal, Sobitham, 1989.
8. S. Ilakkuvanra, Tolkappiyam in English with critical studies, Kural Neri pub. House, 1963.
9. G. John Samuel, Tolkappiyam in English, Institute of Asian Studies, Madras, 2001.

# தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் அறியப்படாத மறுபக்கம்

## (வ.உ.சி. எஸ்.வையாபுரிப்பிள்ளை-பதிப்புகள்)

முனைவர்பட்ட ஆய்வாளர் த.தென்னவன்

தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பு வரலாற்றில் சி.வை.தாமோதரம் பிள்ளை எந்த அளவிற்கு முதன்மை பெறுகிறாரோ அந்த அளவிற்கு முதன்மை வ.உ.சிதம்பரம் பிள்ளை.பொருளதிகாரம் நச்சினார்க்கினியத்தை முதன்முதல் பதிப்பித்தவர் சி.வை.தா என்றால்,இளம்பூரணத்தை முழுவதுமாக முதன் முதலில் பதிப்பித்தவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. கப்பலோட்டிய தமிழனாக வ.உ.சியை அனைவருக்கும் தெரியும் அதேநிலையில் ஒரு சிறந்த பதிப்பாளராகவும் இருந்துள்ளார். தொல்காப்பியப் பதிப்பு வரலாறுகளில் இவரைக் குறித்த பதிவுகள் சில இடங்கள் தெளிவடையாமல் உள்ளன. அவற்றைத் தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை மூன்று வினாக்களுக்கு விடையளிக்க முயல்கிறது.

1. வ.உ.சி. அகத்திணையியலையும் புறத்திணையியலையும் எப்போது பதிப்பித்தார்?

2. கா.நமச்சிவாய முதலியார் அகம்,புறம் தவிர்த்த ஏனைய இயல்களைப் பதிப்பிக்காமைக்கான காரணம் என்ன?

3. எந்தச் சூழலில் பொருளதிகார இளம்பூரணப் பதிப்புகள் (வ.உ.சி. எஸ்.வையாபுரிப்பிள்ளை) வெளிவருகின்றன?

### வ.உ.சியின் முதற்பதிப்பு

வ.உ.சி பொருளதிகாரம் முதல் பகுதியை அகத்திணையியலையும் புறத்திணையியலையும் இணைத்துப் பதிப்பித்தார். இப்பதிப்பில் பதிப்புரையும் இல்லை; ஆண்டும் இல்லை. இதன் விளைவு எப்போது வெளியிட்டார் எனத் தெரியவில்லை. தொல்காப்பியப் பதிப்புகள் என்ற நூலை எழுதிய

மு.சண்முகம் பிள்ளை '1922 ஆம் ஆண்டு சிதம்பர புன்னைவன நாத முதலியார் வெளியிட்ட தொல்காப்பிய மூலபதிப்பின் பதிப்புரையில் "வக்கீல் வ.உ.சிதம்பரம்பிள்ளையவர்கள் அகத்திணை புறத்திணையியல்களின் இளம்பூரணம் அச்சிடப்பட்டுள்ளது"(பதிப்புரை-25) எனக் குறிப்பிடுகிறார். அதனால் 1922க்கு முன்னரே வெளியிடப் பெற்றமை தெளிவாம். எனவே பெரும்பாலும் 1921 ஆம் ஆண்டு இப்பதிப்பு வெளிவந்திருத்தல் கூடும்'(ப.22) எனக் குறிப்பிடுகிறார். இங்கு 1921எனக் கூறுவது கருதுகோளாகக் கொள்ளப்பட்ட முடிபே. 1920இல் கா.நமச்சியவாய முதலியார் முதலில் பதிப்பிப்பதாகக் குறிப்பிடுவதாலும் 1922இல் புன்னைவனநாத முதலியார் வ.உ.சி பதிப்பித்துவிட்டதாகக் கூறுவதாலும் இரண்டிற்கும் இடைப்பட்ட ஆண்டில் பதிப்பிக்கப் பட்டிருக்கலாம் என ஒருவாறு முடிவுக்கு வருகின்றனர்.

ஆனால் 1920ஆம் ஆண்டே வ.உ.சி பதிப்பித்திருக்க வாய்ப்புகள் உண்டு. எவ்வாறெனில் 1922 இல் புன்னைவனநாத முதலியார் பதிப்புரையில்,

"சிலவருடங்களுக்குமுன் சென்னைப் போலீஸ் அசிஸ்டெண்டு கமிஷனர் ஸ்ரீ எஸ்.பவானந்தம் பிள்ளையவர்களால் பொருளதிகார நச்சினார்க்கினியம் வெளியிடப் பட்டிருப்பதுடன்;வக்கீல் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களால் அகத்திணை புறத்திணையியல்களின் இளம்பூரணம் அச்சிடப் பட்டுள்ளது."(ப.25) எனக் குறிப்பிடுகிறார். இந்த மேற்கோளில் சில ஆண்டுகளுக்கு முன்பு என்ற குறிப்பு அரைநிறுத்தற்(;) குறியால் பவானந்தம் பிள்ளையின் பதிப்பை மட்டும் குறிக்காமல் வ.உ.சிதம்பரம் பிள்ளை பதிப்பையும் குறிக்கிறது. எனவே இந்தச் சில ஆண்டுகள் என்ற குறிப்பு ஒன்றிற்கு மேற்பட்ட ஆண்டு இடைவெளியைக் குறிக்கிறது.

மேலும் 1928 ஆம் ஆண்டு எழுத்ததிகாரத்தைப் பதிப்பித்த வ.உ.சி. பதிப்புரையில் "இவ்வெழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் 1920ஆம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன். பொருளதிகார அகத்திணையியல்கள் முன்னரே அச்சாகி வெளிவந்துள்ளன. இஃது (எழுத்ததிகாரம், இளம்பூரணம்)இப்போது வெளிவருகின்றது" எனக் கூறுகிறார்.

எனவே,1920ஆம் ஆண்டே அச்சிடத் தொடங்கியாயிற்று என வ.உ.சி. குறிப்பிடுவதாலும், 1922ஆம் ஆண்டில் சில

ஆண்டுகளுக்கு முன் என்ற குறிப்பு ஒன்றிற்கு மேற்பட்ட ஆண்டினைக் குறிப்பதாலும் 1920ஆம் ஆண்டின் இடைப்பகுதியிலோ இறுதிப் பகுதியிலோ பதிப்பிக்கப் பட்டிருக்கலாம்.

**கா.நமச்சிவாய முதலியார் பதிப்பிக்காமைக்கான காரணம்**

இளம்பூரணத்தை முதன் முதலில் அச்சிடத் தொடங்கியவர் கா.நமச்சிவாய முதலியார். இவர் அகத்திணையியலும் புறத்திணையியலும் இணைத்துப் பகுதி-1 என வெளியிட்டார். ஆனால் மேற்கொண்டு பகுதி 2,3 வெளிவரவில்லை. மாறாகத் 'தொல்காப்பிய மூலம்' பகுதி -2 என 1924ஆம் ஆண்டு பதிப்பித்தார். இதன் அடிப்படை நோக்கம் இளம்பூரண பாடத்தின் மூலத்தையாவது வெளிகொணர வேண்டும் என்பதே.

பதிப்பு வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் ஏன் இவர் இளம்பூரணர் உரையைத் தொடர்ந்து வெளியிடவில்லை என்ற வினாவிற்கு விடை தேட முயன்றனர். மு.சண்முகம் பிள்ளை 'தொல்காப்பியப் பதிப்புகள்' என்ற நூலில் "முதலில் இரு இயல்களையும் வெளியிட்ட இவர்கள் களவியல், கற்பியல், பொருளியல் பகுதிகளை ஒரு தொகுதியாகவும் எஞ்சிய நான்கு இயல்களையும் மற்றொரு தொகுதியாகவும் வெளியிடப்போவதாக அறிவித்திருந்தும், இப்பகுதிகள் எதனாலோ இவர் வழி தொடர்ந்து அச்சேறவில்லை" (ப.21) எனக் குறிப்பிடுகிறார். இங்குப் பதிப்பிக்காமைக்கான காரணம் வ.உ.சி. பதிப்பைப் பார்த்து விடுத்திருக்கலாம். ஏனெனில் இரண்டு பதிப்பிற்கும் அடிப்படையிலே உரை மாறுபாடுகள் உள்ளன.

1. வ.உ.சி. பதிப்பு இளம்பூரணரது உரையைக் **கண்ணழித்தலாக** விளக்கம் கூறுகிறது. கா.நமச்சிவாய முதலியாரது பதிப்பு இளம்பூரணர் உரையைக் கண்ணழித்தலாகக் கூறாமல் **பொழிப்புரையாகப்** பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. கா.நமச்சிவாய முதலியாரது பதிப்பு உரையை மட்டும் பதிவு செய்யும்போது உரைத்தொடர்ச்சிக்காக **இணைப்புச் சொற்கள்** பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. ஒவ்வொரு நூற்பாவின் இறுதியிலும் **என்றவாறு** என்ற சொல் உள்ளது. இந்தச் சொல் வ.உ.சி. பதிப்பில் இல்லை.

இந்த இரண்டு பதிப்புகளும் முற்றிலும் வடிவம் சார்ந்த மாற்றத்தைப்

பெற்றனவேயன்றி பொருள் சார்ந்த மாற்றத்தைப் பெறவில்லை. ஆதலால், கா.நமச்சிவாய முதலியார் பதிப்பித்த உரை சரியா? வ.உ.சி. பதிப்பித்த உரை சரியா என்பது தெரியவில்லை.

**வ.உ.சி.யும் இளம்பூரணப் பதிப்பும்**

வ.உ.சி. சரியான பதிப்பைக் கொணர்வதற்காக எடுத்த முயற்சிகள் அதிகம். 1933ஆம் ஆண்டு பொருளதிகாரம் பகுதி-2 களவியல்,கற்பியல்,பொருளியல் ஆகிய மூன்றையும் வெளியிடும்போது பதிப்புரையில் சுவடிகள் குறித்த தெளிவைத் தருகிறார்.

'த.மு.சொர்ணம்பிள்ளையவர்கள் கடிதப்பிரதி ஒன்று உள்ளது. அவர் பிரதி செய்யும்போது உரையில் இல்லாத பல சொற்றொடர்களை இடையிடையே பெய்திருக்கிறார்கள் என்பது பல காரணங்களால் ஊகிக்கக் கூடியதாயிருக்கிறது. பிரிதொரு பிரதி தி.ந. சுப்பிரமணிய ஐயரிடமிருந்து கிடைத்தது. இதுவும் சொர்ணம் பிள்ளையவர்களிடமிருந்து சுவடியைப் பார்த்து எழுதியதாகும் என்ற குறிப்பினைத் தருகிறார்' (முகவுரை). இந்தக் குறிப்பினை ஏன் தரவேண்டும். இந்தக் குறிப்பு பதிப்புச் சூழலில் பல வினாக்களை எழுப்புகிறது.

ஏனெனில் வ.உ.சி. எந்தச் சுவடி குறைவுடைய சுவடி என்று குறிப்பிடுகிறாரோ அந்தச் சுவடியை அடிப்படையாகக் கொண்டே கா.நமச்சிவாயம் பிள்ளை பதிப்பிக்கிறார். அதற்கான சான்று - கா.நமச்சிவாயம் பிள்ளை தொல்காப்பியம் பகுதி-1 (1920) முகவுரையில் 'ஒருசாலை மாணாக்கர் சே.சிவஞானம் பிள்ளையவர்கள் தாம் அரிதிற்றேடிய நல்ல ஏடு ஒன்றை அனுப்பினர். இது திருநெல்வேலிச் சொர்ணம் பிள்ளையவர்கள் தந்த ஏடு எனத் தெரிகின்றது'எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். கா.நமச்சிவாயம் பிள்ளைக்குக் கிடைத்த சுவடிகளில் நல்ல சுவடியை (த.மு.சொர்ணம்பிள்ளை) அடிப்படையாகக் கொண்டு வ.உ.சி. பதிப்பிக்கவில்லை. எனவே, தமது சுவடி பிழையுடையது என்பதைப் பதிப்புடன் ஒப்பிட்டுப் பார்த்து ஒருவாறு முடிவிற்கு வந்திருக்கலாம்.

வ.உ.சி. முகவுரையில்(1933) சுத்தப் பாடத்தைத் தேர்வுசெய்து கொண்டதற்கான வழிமுறையைக் கூறுகிறார். 'தமக்குக் கிடைத்த மூன்றாவது சுவடி வையாபுரிப்பிள்ளை

அவர்களுக்கு உரியது. 1912ஆம் ஆண்டு திரு.த.கனகசுந்தரம் பிள்ளையவர்கள் சுவடியைப் பார்த்து எழுதிய கையெழுத்துப் பிரதியாகும். இதுவே இடைச்செருகல்களைத் தெரிந்து கொள்வதற்கும் மூலத்தின் சுத்தப் பாடத்தை நிச்சயிப்பதற்கும் பெரிதும் பயன்பட்டது' எனக் குறிப்பிடுகிறார்.

இங்கு ஏன் இரண்டு சுவடிகள் இருந்திருக்கக் கூடாது என்ற கருத்தெழும். இதை நிறைவு செய்யும் பொருட்டே 'இளம்பூரண மூலச் சுவடி ஒன்றே. தமிழ்நாட்டில் இன்று உலவுகின்ற சுவடிகளனைத்தும் இதிலிருந்து பெயர்த்துதெழுதப் பட்டது'(பதிப்புரை.1936) என்ற கருத்தை வ.உ.சி முன்வைக்கிறார். மேலும் இவர் கருத்தை வலுசேர்க்கும் வகையில் எஸ்.வையாபுரிப்பிள்ளை "பொருளதிகாரத்தில் செய்யுளியல் தவிர ஏனைய இயல்களுக்குத் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏட்டுப்பிரதி ஒன்றேயாம் இரண்டாவது ஒரு பிரதியில்லை என்பது இங்கே மனங்கொளத்தக்கது" (இலக்கியச் சிந்தனைகள்.பக்.368) என்ற கருத்தை முன்வைக்கிறார்.

**பதிப்பில் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் பங்கு**

1936ஆம் ஆண்டு பொருளதிகாரம் இளம்பூரணம் முழுமையாக வெளியிடும்போது . அகத்திணையியல் புறத்திணையியல் தவிர ஏழு இயல்களையும் எஸ். வையாபுரிப்பிள்ளை சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்துள்ளார் என வ.உ.சி குறிப்பிடுகிறார். இவர் செய்த பணியினை, எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

இங்கு வையாபுரிப்பிள்ளையவர்கள் இல்லையென்றால் வ.உ.சியின் சொர்ணம் பிள்ளையின் சுவடி குறைபாடுடையது என்ற கருத்து நிலைபேறு அடைந்திருக்காது. ஏனெனில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பெரும்பாலான சுவடி த.மு.சொர்ணம்பிள்ளை யிடமிருந்து பெறப்பட்டது. வ.உ.சிக்குக் கிடைத்த மூன்று சுவடிகளில் இரண்டு சுவடி த.மு.சொர்ணம்பிள்ளையுடையது. அப்படியிருக்கையில் அவருடைய சுவடியைக் குறைபாடுடையது என்ற கருத்தை வக்கீல் தொழில் புரியும் வ.உ.சி. கூறினால் எடுபடுமா? எடுபடாது. தமிழறிஞர்களால் புறந்தள்ளப் பட்டிருக்கும். வ.உ.சி.யுடன் தமிழ்ப் பேரகராதித் துறையின் தலைவர் எஸ்.வையாபுரிப்பிள்ளை இணைந்து கூறியதினாலே இதைத் தமிழுலகம் ஏற்றது. 1936இல் பதிப்புரையில் எஸ்.வையாபுரிப்பிள்ளையவர்களால் சித்தஞ் செய்யப்பட்டுள்ளது

என வ.உ.சி குறிப்பிடுவதன் பின்புலமும் இதுவாகத்தான் இருக்க முடியும்.

வ.உ.சி. முகவுரையில்(1933) சுத்தப் பாடத்தைத் தேர்வுசெய்து கொண்டதற்கான வழிமுறையைக் கூறுகிறார். 'தமக்குக் கிடைத்த மூன்றாவது சுவடி வையாபுரிப்பிள்ளை அவர்களுக்கு உரியது. 1912ஆம் ஆண்டு த.கனகசுந்தரம் பிள்ளையவர்கள் சுவடியைப் பார்த்து எழுதிய கையெழுத்துப் பிரதியாகும். இதுவே இடைச்செருகல்களைத் தெரிந்து கொள்வதற்கும் மூலத்தின் சுத்தப் பாடத்தை நிச்சயிப்பதற்கும் பெரிதும் பயன்பட்டது' எனக் குறிப்பிடுகிறார்.

### பொருளதிகாரமும் இளம்பூரணப் பதிப்பு சூழலும்

தொல்காப்பிய முதல் பதிப்பு 1847 (நச்.எழுத்து) வெளிவந்தபிறகு 89 ஆண்டுகள் கழித்தும், இளம்பூரணம் எழுத்ததிகாரத்திற்கு (1868) வெளிவந்த பிறகு 68 ஆண்டுகள் கழித்துதான் இந்நூல் முழுமையாகப் பதிப்பிக்கப்படுகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பதிப்பிக்க முன்வராமைக்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். முதலாவது பயிற்சியின்மை; இரண்டாவது பெயருக்குக் களங்கம் ஏற்படும். எழுத்திலக்கண,சொல்லிலக்கணப் பயிற்சி தொடர்ச்சியாகக் கிடைத்த அளவு பொருளதிகாரப் பயிற்சி கிடைக்கவில்லை.

இதனைச் சி.வை.தா.வின் பதிப்பு சூழலிலிருந்தே அறியலாம். "வரதப்ப முதலியாரின் (1825)பின் எழுத்துஞ் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உரையுதாரணங்களோடு பாடங்கேட்டவர்கள் மிக அருமை முற்றாய் இல்லையென்றே சொல்லலாம்" எனக் குறிப்பிடுவதாலும்,மேலும் பெரிய பெரிய அறிஞர்களும் இதனைப் பதிப்பித்தால் தம் பெயருக்குக் குறைவு ஏற்படும் என அஞ்சி விடுத்தனர் என்பதைப் "பலபெரும் வித்துவான்கள் இந்நூலை அச்சிட விரும்பியதும் முயன்றதும், இரண்டொரு பிரதிகள் தேடிப் பார்வையிட்டதும் தமக்கு நிகழ்ந்த சந்தேகங்களான இதனை அச்சிடிற் தம் பெயருக்குக் குறைவு நேரிடுமென்று தம் முயற்சியைக் கைவிட்டதும் அடியேன் பூரணமாக அறிவேன். ஆதலான் பண்டிதர், கவிராஜபண்டிதர், மகாவித்துவான், புலவரென்றின்னை பெரும்பட்ட சுமையைத் தலைமேற்கொள்ளாது இன்னும் பலகாலுந் தமிழ் படித்தற்குரிமை பூண்டு நிற்கும் என் போலியரே இதற்கையிடுவது பேரவசியமாயிற்று" (1885.பொருள். நச்.ப.7) என்ற சி.வை.தா.வின் கூற்றால் உணரலாம்.

பொருளதிகாரத்தின் நிலை இவ்வாறு இருக்க இந்தச் சூழலில்தான் வ.உ.சி தொல்காப்பியத்திற்கு உரையெழுத முற்படுகிறார்;உரையை நிறைவு செய்யும் வேளையில் இளம்பூரணரது உரை கிடைக்க உரையெழுதும் முயற்சியைக் கைவிடுகிறார். இளம்பூரணத்தைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்.

1933 இல் வ.உ.சி களவு,கற்பு,பொருள் ஆகிய மூன்றையும் இணைத்து வெளியிடுகின்றார்; அப்பொழுது முகவுரையில் அடுத்த பதிப்பு ஒன்பது இயல்களும் இணைந்து விரைவில் வெளிவரும் என்று குறிப்பிடுகின்றார். இளம்பூரணத்தை முழுமையாகப் பதிப்பிக்க வேண்டும் என்பது வ.உ.சி.யின் கனவுத்திட்டம். அதை அவர் வாழ்கின்ற போதே நினைவாக்கித் தந்தவர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. பின்னான்கு இயல்களுக்கான அனைத்து வேலையையும் சிரமேற்கொண்டு செய்தார்.

இதை "அவ்வியல்களை அச்சிடுதல் சம்பந்தமான ஆசிரியர் வேலைகளைத் தாமே செய்வதாகப் பிள்ளையவர்கள் வாக்களித்தார்கள்"(வ.உ.சி.1936) என்ற வ.உ.சியின் கூற்றால் உணரலாம்.

1935 சூன்மாதம் அச்சடிக்கப்பட்ட இந்நூல்(பொருள்.இளம்) 1936ஆம் ஆண்டு சனவரி மாதம் வ.உ.சி. பதிப்புரையுடன் வெளிவருகிறது. (பதிப்புரை அணிந்துரையில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டை நோக்குக). எஸ்.வையாபுரிப்பிள்ளை இல்லையென்றால் இவரது பதிப்பு கனவு பதிப்பாகவே போயிருக்கும். ஏனெனில் 1936ஆம் ஆண்டின் இறுதியில் வ.உ.சி இயற்கை எய்தினார். இக்காலக்கட்டத்தில்(1935) தொல்காப்பியம் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையால் சுவடி பரிசோதிக்கப்பட்டுச் சோமசுந்தரம் பிள்ளையின் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் கனகசபாபதி பிள்ளையால் அச்சிடப்படுவதாயிருந்தது. இப்பணியினைத் தவிர்த்து எஸ்.வையாபுரிப்பிள்ளை வ.உ.சியின் கனவுப்பதிப்பை நினைவாக்குகிறார்.

இளம்பூரணப்பதிப்புகள் வெளிவந்த இக்காலக்கட்டத்தில் (1921-1933) வ.உ.சி. வறுமையின் உச்சிக்கே சென்றார். சாந்திக்கு மார்க்கம் நூலின் முகவுரையில்,

"1932 மார்ச் மாதம் முதற்கொண்டு என் குடும்ப
விஷேஷங்களுக்கும் யான் வேண்டிய காலங்களில்
யான் வேண்டியாங்குப் பொருள் அளித்தும் யான்

வேண்ட நாணிய காலங்களில் என் குறிப்பறிந்து பொருள் அளித்தும்" என இரண்டு புரவலர்களை நினைவுகூர்கின்றார். மேலும் இப்பதிப்பை வெளியிட்டதால் பொருளாதாரநிலையில் ஏதாவது பயனடைந்தாரா என்றால் எந்தப் பயனையும் அடையவில்லை. இறக்கும் தருவாயில் உயிலில் 'இப்பொழுதும் ரூபாய் இருநூறு விலை போகக் கூடிய சட்டப் புஸ்தகங்கள் என்னிடமிருக்கின்றன. அவற்றை விற்கவேண்டும். மேலும்,வீட்டு வாடகை பாக்கி ஐந்து மாதத்திற்கு ரூபாய்135, துணிக்கடைப் பாக்கி ரூபாய்30,எண்ணெய்க் கடைக்கு ரூபாய் 30,சில்லறைக்கடன் ரூபாய்60,தனிநபர்களுக்குத் தரவேண்டிய கடன் ரூபாய்86' (வ.உ.சி.வாழ்வும் பணியும் சிவசுப்பிரமணியன் ப.94)

எனக் குறிப்பிடுகிறார்.மேலும், கப்பலோட்டிய தமிழன் வறுமையின் உச்சத்திற்குச் சென்றபோது மனம் நொந்து பாடிய வெண்பா ஒன்றுண்டு.

**வந்த கவிஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்**
**தந்த சிதம்பரன் தாழ்ந்தின்று-சந்தமில் வெண்**
**பாச் சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம்**
**ஓடுகின்றான்**
**நாச் சொல்லும் தோலும் நலிந்து**

எனப் பாடுகிறார். இந்தச் சூழலில்தான் வ.உ.சி இளம்பூரணப் பதிப்பைக் கொண்டு வருகிறார். அதற்கு உறுதுணையாக இருந்தவர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. இவ்விடத்தில் வ.உ.சி, எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய இருவரது தியாகமும் இல்லையென்றால் இப்பதிப்பு(பொருளதிகாரம்.இளம்) இல்லை. இந்தச் சூழலில்தான் தொல்காப்பிய இளம்பூரணப் பதிப்புகள் வெளிவந்தன.

# தொல்காப்பிய உரைகள் முற்காலப் பார்வையும் தற்கால நோக்கும்

*முனைவர்* ரா.ராஜேஸ்வரி

பன்னூறாண்டு காலப் பழமையும் செழுமையும் கொண்ட தொன்மொழியாம் செம்மொழியின் முன்னூலாம் தொல்காப்பியத்திற்கு முற்காலந்தொட்டுத் தற்காலம்வரை எண்ணிலடங்கா உரைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவ்வுரைகளின் பொதுவான செய்திகளை நோக்குமிடத்து ஒற்றுமையினையும் சிற்சில குறிப்பிட்ட நூற்பாக்களில் பொருள் வேறுபாட்டினையும் காணவியல்கின்றது. எனினும் தற்கால உரைகளை எழுதப்புகுவோர் முற்கால உரைகளிலும் தேர்ச்சி பெற்று தற்காலச் சமூகத்திற்கும் தொல்காப்பியத்தினைக் கொண்டு செல்லும் நோக்குடன் செயல்படுவதை நிறுவுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**தொல்காப்பியத்தின் தனிச்சிறப்பு**

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் தனித்த பெருமையுடையது. "தொல்காப்பியம் மூத்த தமிழுக்கு வாய்த்த இலக்கணம். பல்லாயிரமாண்டு வாழ்வின் பிழிசாறாக அமைந்த இலக்கியங்களில் இருந்து எழுந்த இலக்கணம். செவ்வியல் மொழியாம் செந்தமிழில் இன்று கிடைக்கும் முதல் அடையாளம். தமிழர் வாழ்வியலின் ஆவணம். பண்பாட்டு நாகரிகத்தின் எழுத்தோவியம். எழுத்தும் சொல்லும் மொழியின் இலக்கணம். பொருளதிகாரம் தொல் பழங்காலத்து அமைந்த காதல் வாழ்வாம் அகம் பற்றியும் புறமாம் வீரம் பற்றியும் திட்பநுட்பத்துடன் எடுத்துரைக்கும் தீந்தமிழ்ப் பேரேடு. காலத்தால் முந்தியது என்ற பெருமைக்குரியது மட்டுமின்றி, முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையுடையதாய் விளங்கும் இறைமை உடையது. சாகாவரம் பெற்றதோடு இறைமையாய், இன்றும் விளங்கிக் கொள்ளத்தக்க எளிமையும் ஏற்றத்தையும் உடையது. ஒல்காப் பெரும்புலமை தொல்காப்பியரின் பெருமை பேசி முடியாது" (ச.மெய்யப்பன், அணிந்துரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-1).

"தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல். முன்னைப் பழமைக்கும் பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப்

பல்வேறு நலங்களைப் பெற்றுப் பூத்துக் குலுங்கும் இலக்கணச் சோலை.பரந்து விரிந்து கிடந்த இலக்கணச் செய்திகளைத் தம் முன்னோர் காட்டிய வழியில் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் தள்ளுவன தள்ளியும் கொள்ளுவன கொண்டும் குவலயம் போற்றும் இலக்கணக் களஞ்சியம். வழிநூல் பலவற்றிற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம். உயர்தனிச் செம்மொழியாம் ஒண்டமிழ்த் திறம் விளக்கும் ஒளி விளக்கு. இலக்கணமேயாயினும் படிக்கப் படிக்க நயம் காட்டும் பைந்தமிழ்ச் சுரங்கம்.தமிழரின் பண்டைய எழுத்து, சொல் இலக்கணங்களோடு உலகில் வேறெந்த மொழியிலும் இல்லாப் பொருள் இலக்கணத்தை விளக்கி நிற்கும் அருங்காட்சியகம். பல இலக்கண நூல்கள் பிற்காலத்தில் தோன்றிய போதும் செல்வாக்குக் குறையாத இலக்கணச் செல்வம். தமிழர் செய்த தவப்பயனால் இன்றும் என்றும் நிலைபேறுடைய மொழிக்கு வரம்பாகி நிற்கும் இமயம்; நற்றமிழ் கொழிக்கும் இலக்கணப் பண்ணை. எளிமையுள் எளிமை, அருமையுள் அருமை, அதுவே தொல்காப்பியத்தின் தனிப்பெருமை" (ந.கருணாநிதி, தொல்காப்பியம் மாணவர்க்கான எளிய உரை, ப.V). "தமிழ்மொழிக்கு முதன்முதலாகவும் முழுமையாகவும் கிடைத்துள்ள இலக்கண நூல் தொல்காப்பியமே. தொல்காப்பியர் எழுத்தினது பல்வேறு செய்திகளை எழுத்ததிகாரத்திலும், எழுத்துகளான் ஆக்கப்பட்டுப் பொருள் உணர்த்தும் சொல் பற்றிய செய்திகளைச் சொல்லதிகாரத்திலும், அகம், புறம், மெய்ப்பாடு, உவமம், செய்யுள், பல்வகை மரபு ஆகியன பற்றிய செய்திகளைப் பொருளதிகாரத்திலும் விரிவாகக் கூறியுள்ளார். பிற்காலத்தார் செய்து கொண்ட அணி இலக்கணத்தை உவம இயலிலும், யாப்பிலக்கணத்தைச் செய்யுளியலிலும் காணலாம். தொல்காப்பியர் ஒரு நூற்பாவில் ஒரு கருத்தையே கூறுவார். தாம் எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய தொகையினை முற்கூறிப் பின்னர் அதன் வகைகளைச் சொல்லிச் செல்வார். சில இடங்களில் இவைகளை முற்படக் கூறிப் பின்னர்த் தொகைப்படுத்துவார். சிற்சில இடங்களில் முதலிற் கூறிய தொகையினையே வகைகளைக் கூறிய பின்னர்த் திரும்பவும் கூறி வற்புறுத்துவார். முந்து நூல் கண்டு முறைப்படத் தொகுத்தவர் தொல்காப்பியர் என்பதனால் அவன் தாம் கூறும் இலக்கணச் செய்திகளைத் தாமே படைத்துக் கொண்டதாகக் கூறாமல் தமக்கு முன்னர் இருந்த சான்றோர், அறிஞர், புலவர் கூறியனவற்றைத் தாம் கூறுவதாகப் பொருள் கொள்ளும்படி 'என்ப', என்மனார், மொழிப எனக் கூறுவார்" (மேற்படி, ப.XViii). "தொல்காப்பியர் மாட்டேற்றுச் சூத்திரத்தை எழுத்ததிகாரத்தில் பல முறை பயன்படுத்தியுள்ளார். இதனால் நூற்பாவின் அடிகள் சுருங்குவதுடன் கற்பாரின் நினைவாற்றலும் பெருகும் என்பர்" (மேற்படி, ப.xix). "ஒவ்வொரு அதிகார முடிவிலும், தாம் கூறிய இலக்கண நெறிகட்கு மாறுபட்டு வேறு பிறவரினும் கூறிய இலக்கணத்தோடு

பொருத்திக் கொள்க எனப் புறனடையாகச் சொல்லிக் காலந்தோறும் வளரும் இலக்கண நெறிகளை வரவேற்கிறார் தொல்காப்பியர். இதுவும் அவரது இலக்கண நெறிகளுள் ஒன்று" (மேற்படி, ப.xix). "ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருவதாயின் தாம் எடுத்துக் கொண்ட சொல் இது என விளங்குமாறு அடைமொழி தந்து விளக்குவது தொல்காப்பியரின் இலக்கண நெறியாகும்" (மேற்படி, ப.xx). "தென்றல் கமழும் ஒரு பூஞ்சோலை! எங்கணும் வண்ண மலர்களும் வளரிளந்தென்றலும் நம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்தது அது. அதில் நுழைந்தார் பற்பல நலங்களைப் பெறுதல் திண்ணம்" (இரா.குமரவேலன், அணிந்துரை, இளம்பூரணர் உரைநெறி).

### இலக்கண இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட பாங்கு

தொல்காப்பியம் பிற்காலத்தில் தோன்றிய பற்பல இலக்கண மற்றும் இலக்கியங்களுக்கு வித்திட்ட தனிச்சிறப்புடையது. "தொல்காப்பியர் கூறியுள்ள உவம இயல் பிற்காலத்தில் அணி இலக்கணமாகவும், செய்யுளியல் யாப்பு இலக்கணமாகவும் விரிவு பெற்றன. அணி நூல்களும் யாப்புப் பற்றிய நூல்களும் பற்பல வந்துள்ளன. அகப்புறச் செய்திகள் நம்பியகப் பொருள் இலக்கணமாகவும், புறப்பொருள் வெண்பாமாலையாகவும் தனித்தனி நூல்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வாறே புறத்திணைக் கூறுகள் சில ஆற்றுப்படை, திருப்பள்ளியெழுச்சி, உலா, பரணி, களவழி, பிள்ளைத்தமிழ், மடல் முதலிய சிற்றிலக்கியங்களாக உருவெடுத்தன. இவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரம் இலக்கண இலக்கிய வளர்ச்சிக்குத் தாயாய் நின்று தண்ணளி செய்கிறது என்றால் அது மிகையாகாது" (ந.கருணாநிதி, மாணவர்க்கான எளிய உரை, ப. 3) என்னும் கூற்றும் இதனையே வலியுறுத்தும். இவ்வாறு பற்பல இலக்கியங்கள் தோன்றத் தொல்காப்பியம் முதன்மைக் காரணியாக இருந்தது போன்று அதன் உரைகளும் துணைக் காரணிகளாகச் செயல்பட்டமை மறுக்க வியலாத ஒன்று.

### உரைகள் தோன்றக் காரணம்

உரைகள் தோன்றியதற்குக் காரணங்களாக ஆய்வாளர்கள் விளக்குவன இவண் சுட்டத்தக்கன. "குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே 'அறிவுப்பசி' தலையெடுக்கின்ற பொழுது, பழம்பெரும் நூல்களுக்கு அக்கால வாழ்க்கைச் சூழலுக்கேற்ப விளக்கம் தர அறிஞர்கள் முயன்றுள்ளனர். அவர்களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்ற பொழுதும், பழமையில் புதியன காண வேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உண்டாகின்ற பொழுதும் பழைய நூல்களுக்கு

உரையெழுதி வந்துள்ளனர்" என்பார் கி.ஆதிநாராயணன் (உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.33). "தமிழ் இலக்கண இலக்கியங்களின் பொருள் வளத்தையும் மொழி நுட்பத்தையும் அறிந்து கொள்வதற்கு உரைக்கல்வி மிகவும் இன்றியமையாதது. உரையாசிரியர்கள் மூலநூலை ஆராய்ந்து அதனுள் பொதிந்து கிடக்கும் நயத்தையும் சிறப்புக் கூறுகளையும் சொல்லாட்சித் திறனையும் புலப்படுத்தினர். ஓர் இலக்கியப் படைப்பின்கண் பொதிந்துள்ள இலக்கியச் சிறப்புக்களையெல்லாம் கலை நுணுக்கத்தின் உதவியால் வெளிப்படுத்துவதே சிறந்த திறனாய்வு என்பர். பண்டைய உரையாசிரியர்களும் தாம் உரை எழுதிய இலக்கியங்களின் பல்வேறு சிறப்புக் கூறுகளையும் தம் உரைமூலம் வெளிக்கொணர்ந்து புலப்படுத்தினர். வளம் நிறைந்த வற்றாத இலக்கிய மரபும் புலமை மரபும் கொண்டு இலக்கண இலக்கியங்களைக் கூர்ந்தாராய்ந்து தெளிவுறுத்தினர். இலக்கிய வரலாற்று வளர்ச்சியை அறிந்துணரும் திறனும், அவற்றுள் சிறந்தன இவை எனத் தெரியும் தகுதியும் அவை போல்வன பிறவற்றைப் பிறிதோரிடம் காலத்தும் கண்டவிடத்தும் பொருத்தி விளக்கும் நுண்மாண் நுழைபுலமும் உடையவராக உரையாசிரியர்கள் திகழ்ந்தனர்" (இ.சுந்தரமூர்த்தி, அணிந்துரை, சேனாவரையர் உரைநெறி).

**தொல்காப்பியம் சுட்டும் உரைகள்**

தொல்காப்பியரே சுட்டும் உரைகளை இவண் சுட்டல் தகும். தொல்காப்பியத்தில் 'உரை' என்ற சொல் விருத்தி என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றியமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே
(தொல்.பொருள். நூ.649)

மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்த நூலானும் ஐயமும் மருட்கையும்
செவிதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்
(தொல். பொருள். நூ. 650)

என்ற இரண்டு நூற்பாக்களும் விருத்தியுரையின் தன்மையினை நுவல்கின்றன.

காண்டிகை உரை என்ற உரை வகையினைப் பற்றித் தொல்காப்பியம்,

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்
(தொல். பொருள். நூ.647)

விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேலாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே
(தொல். பொருள். நூ. 648)

என்கின்றது. தமிழில் தற்போது கிடைக்கும் முதனூலான தொல்காப்பியத்திலேயே உரைகளைப் பற்றிய தெளிவான விளக்கம் உள்ளமையால் தொல்காப்பியத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழில் உரைகள் இருந்தமையை உணரலாம்.

**முற்கால உரைகள்**

எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 1610 நூற்பாக்களையும் கொண்ட தொல்காப்பிய நூலுக்குப் பற்பல உரைகள் தோன்றியுள்ளன. உரை வகுத்த பெருமக்களில் காலத்தால் முற்பட்டவர் இளம்பூரணர். இவரை உரையாசிரியர் என்றே பலரும் குறிப்பிடுவர். இவரது காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டு என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவருக்குக் காலத்தால் பிற்பட்ட தொல்காப்பிய உரையாசிரியர்கள் சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலானோர். இவர்களுள் இளம்பூரணர் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதியுள்ளார். சொல்லதிகாரத்திற்கு மட்டும் சேனாவரையர் உரை எழுதியுள்ளார். நச்சர் எழுத்து, சொல் மற்றும் பொருளதிகாரத்துள் ஆறு இயல்களுக்கு நயமான உரை எழுதியுள்ளார். பேராசிரியர் உரை மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய இயல்களுக்கு அமைந்துள்ளது. கல்லாடர் மற்றும் தெய்வச்சிலையார் உரைகள் சொல்லதிகாரத்திற்கு எழுதப்பட்டுள்ளன. "தொல்காப்பியம் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த நூலாதலால் தொல்காப்பியர் காலத்திருந்த மொழிநூற் கருத்துகளைப் புரிந்து கொள்ள உரையாசிரியர்களின் உரைநெறிகள் இன்றியமையாதவையாய் விளங்குகின்றன. காலந்தோறும் மொழியில் சமூகச்சூழலில் வாழ்வியலில் பல்வேறு மாற்றங்கள் தோன்றிக் கொண்டேயுள்ளன.நூல் தோற்றத்தின்பின் பல ஆயிர வருடங்கள் கடந்த நிலையில் தொல்காப்பியத்தைப் புரிந்து கொள்ள உரையாசிரியர்கள் பெரிதும் உதவினர். கி.பி.பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை தமிழ் உரைநடை செழித்து வளர்ந்தது.

இக்காலத்தில்தான் உரையாசிரியர்கள் பழமையான இலக்கிய இலக்கண நூல்களுக்கு உரை கண்டனர். இக்காலம் உரைநடையின் பொற்காலம் என்பர். உரைநூல்கள் எழுந்த காலச்சூழலை 'மீட்சி இயக்கம்' என்பர். இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோர் தொல்காப்பியத்திற்கு அரிய உரைகளை வழங்கினர். குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே 'அறிவுப்பசி' தலையெடுக்கின்றபோது தங்கள் பழம்பெரும் நூல்களுக்குத் தங்கள் புலமைநயந்தோன்ற சுவையான விளக்கங்களைத் தருகின்றனர். இடைக்காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட புலவர்கள் உரைகள் எழுதுவதன் மூலம் தங்களின் ஆராய்ச்சிக்கு உருவம் கொடுத்தனர். உரை எழுதுவதை அரிய இலக்கிய ஆக்க முயற்சியாகவே கருதினர். ஒரு வகையில் இம்முயற்சியை இலக்கிய ஆக்க முயற்சிக்கு நிகராகவே கருதலாம்" (இ.சுந்தரமூர்த்தி, அணிந்துரை, சேனாவரையர் உரைநெறி) என்பார் கருத்துகள் இவண் நினைவு கூரத்தக்கன.

### முற்கால உரைகளின் தனித்தன்மைகள்

தொல்காப்பியத்திற்கு முற்காலத்தில் எழுந்த உரைகளின் தனிச்சிறப்புகள் என்றுமே பின்பற்றப்பட வேண்டியவை. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்த இளம்பூரணரின் திறம் எண்ணி வியக்கத்தக்கது. "இவரது உரை ஆற்றொழுக்கானது; நூற்பாவின் கருத்தைச் சில இடங்களில் பொழிப்புரையாகவும் சில இடங்களில் பதவுரையாகவும் கூறுவது இவரது உரை மரபு. நூற்பாவில் கூறப்படும் விதிகளுக்கும் , செய்திகளுக்கும் ஏற்ற எடுத்துக் காட்டுகளும் மேற்கோள் செய்திகளும் நிரம்ப இவரது உரையில் இடம்பெற்றுள்ளன. புறநானூறு முதலிய சங்கப் பாடல்களும் புறப்பொருள் வெண்பாமாலை முதலான இடைக்கான நூற்பாடல்களும், பிற்கால நூல்களாகிய அறநெறிச்சாரம் போன்ற நூல்களிலிருந்தும் இவர் மேற்கோள் காட்டுவதால் இவரது இலக்கண இலக்கியப் புலமையின் சிறப்பினை அறியலாம். சேனாவரையரின் உரையோ தனித்தன்மை வாய்ந்தது; வடமொழி நூற்கருத்துகளை மேற்கோள் காட்டுவது; சூத்திரம் போலத் திட்பநுட்பம் உடையது; தமக்கு முன்னர் உள்ள உரைகளைத் தக்க சான்றுகளால் மறுத்து நிலை நாட்டுவது; நூற்பாக்களுக்குப் பதவுரையாக அமையாமல் திரண்ட கருத்தாகவோ பொழிப்புரையாகவோ அமைவது. நச்சினார்க்கினியர் தமிழ் வடமொழி இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர். இலக்கண இலக்கியப் புலமையாளர் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் (சில இயல்களுக்கு மட்டும்) என்னும் மூன்று அதிகாரங்கட்கும் இவரது உரை, நடை போடுகிறது. பெரும்பாலும் இவரது உரை இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் உரைகளைத் தழுவியே

அமைந்துள்ளது. எனினும் பொருளதிகாரத்திற்கு எழுதிய இவரது உரை இளம்பூரணர் கருத்துக்கு முரணாகவே பல நூற்பாக்களில் இடம்பெற்றுள்ளது. பேராசிரியர் உரை தொல்காப்பியப் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் மரபியல் என்ற நான்கு இயல்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. அவர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்திருப்பார் எனக் கருதுவார் உளர். தொல்காப்பியச் செய்யுளியலுக்கு அவரது உரை அருமையும் பெருமையும் சான்றது; மிகுதியான விளக்கம் தருவது; யாப்புப் பற்றிய பலப்பல நுண்ணிய செய்திகளை அளிப்பது. சற்றுக் கடினமானது; எனினும் பொருட்புலப்பாட்டிற்குப் பெருந்துணை புரிவது" (ந.கருணாநிதி, தொல்காப்பியம் மாணவர்க்கான எளிய உரை, ப.xii - xvi).

**உரையாசிரியர்கள்**

உரையாசிரியர்கள் இலக்கணம் மற்றும் இலக்கியங்களின் சிறப்பினை அறியப் பெருந்துணை புரிந்தனர். “மேற்கில் மெத்த வளர்ந்த மொழியியல் அறிஞர்கள் கண்டுணர்ந்து காட்ட முயலும் உண்மைகளைத் தொல்காப்பியன் குறிகளால் காட்டிய திறம் தமிழ் பெற்ற தனிப்பேறு. தொல்காப்பியம் பெற்ற தமிழர் தலைநிமிர்ந்து வாழலாம். அப்படி ஒரு பேரறிவு, பேராற்றல், பெருஞ்சிறப்புப் பெற்றது தொல்காப்பியம். காலவெள்ளம் அழிக்க முடியாது. காலச்சூறாவளி கொள்ளை கொண்டு போக முடியாதபடி காத்த பெருமை உரையாசிரியர்களின் தனிப்பெருமை” என்பார் ச.மெய்யப்பன் (அணிந்துரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-1). “முப்பத்தைந்து உரைநெறிகளை இளம்பூரணர் மேற்கொண்டிருக்கிறார். பாயிர உரை, அதிகார உரை, இயல் உரை, நூற்பா உரை என நான்கு பகுதிகளை உடையது. இவரது நூற்பா உரை அமைப்பு கருத்துரை, பொருளுரை, எடுத்துக்காட்டு, விளக்கவுரை என நான்கு பகுதிகளால் அமைந்துள்ளது. உரைநெறிகள் அனைத்துமே சிறப்பானவை. இயைபு வைப்பு, வகைமுறை வைப்பு, நூற்பா, சொற்றொடர் ஆகியவற்றை நிலைப்படுத்துதல், வினா விடை, நூற்பா உரை அமைப்பு முதலியன தலைமையிடம் பெறுகின்றன” என்பார் ச.குருசாமி (இளம்பூரணர் உரைநெறி, ப.361). தமக்கேயுரிய நுட்பத்தாலும் அறிவுச் செறிவாலும் உரை எழுதிய உரையாசிரியர்களை சோ.இலக்குவன் மூவகைப்படுத்துகிறார். “முன்னமே இருந்த இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் நுட்பமாக உரைகளும் நயமான விளக்கங்களும் எழுதியவர்கள் உரையாசிரியர்கள் ஆவார்கள். உரையாசிரியர்களை இலக்கிய உரையாசிரியர், இலக்கண உரையாசிரியர், இலக்கிய இலக்கண உரையாசிரியர் என 3 வகையாகப் பிரிக்கலாம். உரையாசிரியர்கள் சொற்பொருள் விளக்கம் தருதல், கொள்கை விளக்கம் தருதல், வைப்பு முறைக்குக் காரணம் காட்டுதல், இலக்கணக்

குறிப்பு தருதல், எடுத்துக்காட்டுத் தருதல், சிறப்பு விளக்கம் தருதல், ஆய்வுக்கான இடைவெளி நிரப்புதல், வரலாறு கூறுதல், திறனாய்வு செய்தல் போன்றவற்றை மேற்கொண்டனர். உரையாசிரியர் நடையைத் தருக்க நடை, விளக்க நடை என்று 2 ஆகப் பிரிக்கலாம்" (கழகப் பைந்தமிழ் இலக்கிய வரலாறு, ப.18/1).

### புதியன புகுதல்

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' காலத்தின் இயல்பு."ஒரு காலத்து இலக்கண நெறிகள், விதிகள் பின்னொரு காலத்து, மாறுவது இயல்பு. தொல்காப்பியர் சார்பெழுத்து எனக் கொண்ட கொள்கை நன்னூலார் காலத்தில் பத்தாகப் பரிமளிக்கிறது.தன்மைச் சொல்லைத் தொல்காப்பியர் உயர்திணையாகக் கூற நன்னூலார் விரவுப் பெயராகக் கொண்டார். வியங்கோள் வினைமுற்று, தன்மை, முன்னிலைக்கு வாராது என்பது தொல்காப்பியர் விதி., இருதிணை மூவிடம் ஐம்பாலுக்கும் வரும் என்பது நன்னூலார் புகுத்திய புதுநெறி. வாழிய, வாழ்க, வாழி என இய, க, இ என்ற ஈறுகளை மட்டுமே வியங்கோள் வினைமுற்று பெறும் என்பது தொல்காப்பியம். நன்னூலோ, 'க, யவோடு ரவ்வொற்று ஈற்ற' என 'இயர்' என்னும் ஈற்றினையும் சேர்த்துக் கொண்டது.சகரம் அ, ஐ, ஔ என்னும் உயிர்களுடன் கூடி மொழி முதற்கண் வாராது என்பது தொல்காப்பியம். நன்னூலாரோ சகரம் எல்லா உயிருடனும் கூடி மொழி முதலாகும் என்கிறார். தொல்காப்பியரின் எழுத்தெண்ணி அடி வகுக்கும் செய்யுட்கோட்பாடு இக்காலத்து முற்றிலும் மறைந்து சீரெண்ணி அடிவகுக்கும் மரபே போற்றப்படுகிறது. கட்டளைக் கலித்துறை ஒன்று மட்டுமே எழுத்தெண்ணிப் பாடப்பெறுகிறது. தொல்காப்பியர் கூறிய நேர்பு நிரைபு அசைகளும் கைவிடப்பட்டன" என்பார் ந.கருணாநிதி (தொல்காப்பியம் மாணவர்க்கான எளிய உரை, ப. xxx - xxxi).

### தற்கால உரைகள்

முந்தைய உரையாசிரியர்களைத் தொடர்ந்து பலர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினர். "அண்மைக் காலத்தில் சிவஞான முனிவர் தொல்காப்பியப் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரை எழுதியுள்ளார். அரசஞ்சண்முகனார் பாயிரத்திற்கு விருத்தியுரை எழுதியுள்ளார். பி.சா.சுப்பிரமணிய சாத்திரியார் முதலிரண்டு அதிகாரங்கட்கும் விளக்கவுரை வழங்கியுள்ளார். நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் பொருளதிகாரம் அகத்திணை இயல், புறத்திணை இயல், மெய்ப்பாட்டியல் என்னும் மூன்று இயல்கட்கு மட்டும் புத்துரை மலரச் செய்தார். திரு. க.வெள்ளைவாரணம் தொல்காப்பியம் முழுமைக்கும் குறிப்புரையும் ஒப்பீட்டுரையும் வரைந்துள்ளார். புலவர் குழந்தை உரையும்

வெளிவந்துள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொல்காப்பியம் முழுமைக்கும் உரைவளம் வெளியிட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணம் கணேசையர், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை, பூவராகம் பிள்ளை, தேவநேயப் பாவாணர், கு.சுந்தர மூர்த்தி, அடிகள் ஆசிரியர் முதலிய புலவர் பெருமக்கள் குறிப்புரை எழுதியுள்ளனர். புலியூர்க்கேசிகன் எளிய உரை, நூல் முழுமைக்கும் இயற்றியுள்ளார். ச.வே.சுப்பிரமணியனின் சுருக்க உரையினை ச.மெய்யப்பன் வெளியிட்டுள்ளார். மேலும் டாக்டர் தமிழண்ணலின் தொல்காப்பிய உரைச் செம்பதிப்பினை மணிவாசகர் பதிப்பகம் நேர்த்தியான முறையில் வெளியிட்டுள்ளது. மகாவித்துவான், சி.அருணை வடிவேலு முதலியாரின் தொல்காப்பிய, "எழுத்ததிகாரம், புத்துரையும்" வெளிவந்துள்ளது" என்னும் கூற்றால் தற்காலத்தில் தோன்றியுள்ள உரைகளைப் பற்றி அறிய முடிகின்றது.

**எளிய உரைகள் தோன்றக் காரணம்**

தற்காலத்தில் தோன்றும் எளிய உரைகள் பெரும்பாலும் மாணவர்களைக் கருத்தில் கொண்டே எழுதப்படுகின்றன. "மாணவர் உலகம் தொடுவதற்கே அஞ்சி நடுங்கும் நூலாகத் தொல்காப்பியம் இருந்து வருவது கண்கூடு. தமிழ் இலக்கணம் நுட்பமானது. அறிவார்ந்த முறையில் முன்னோர்களால் அமைக்கப்பெற்றதும் புரிந்து கொள்ளும் வரையில் கடினமாகவும் புரிந்து கொண்ட பிறகு எளிதாகவும் இருப்பதைப் பலரும் தம் பயிற்சியில் வருவார்கள். மொழிக்கு வரம்பாக அமைந்து காலத்தால் சிதையாமல் மொழியைக் காப்பாற்றி வருவது இலக்கணமாகும். மொழியைக் காப்பாற்றும் இலக்கணத்தை ஆர்வத்தோடு பயின்று தாய்மொழிச் செல்வத்தைப் போற்றிப் பேண வேண்டியது பெருங்கடமை. அந்த நெறியிலே மாணவர் அனைவர்க்கும் எளிதாக விளங்கக் கூடியதும் சுருங்க உரைக்கத் தக்கதும் ஆகிய ஓர் எளிய உரை தொல்காப்பியத்திற்குத் தேவை என்ற எண்ணம் நீண்ட காலமாகவே இருந்தது" (கோ. மோகனரங்கன், பதிப்புரை, தொல்காப்பியம் மாணவர்க்கான எளிய உரை, ப. iii). தொல்காப்பியம் என்றாலே தற்காலச் சமுதாயம் அஞ்சும் சூழலில், இயன்றவரை எளிமைப்படுத்தி மாணவர்களையும் இவ்விலக்கியத்தின்மீது ஆர்வம் கொள்ளச் செய்தலே தற்கால எளிய உரைகளின் நோக்காகின்றது.

**நிறைவுரை**

தொல்காப்பியத்திற்குத் தோன்றிய முற்கால உரைகள், எடுத்துக் கொண்ட பொருளைச் செவ்விதாய் விளக்கும்வண்ணம் எழுதப்பெற்றன. மேலும் அவற்றில் இலக்கியச் சான்றுகளும் இயன்றவரை ஒவ்வொரு நூற்பாவிற்குமே காட்டப்பட்டன. நூற்பாக்களை முழுவதுமாக விளக்கும் வகையில் அவை அமைந்தன. மிகத் தெளிவினை ஏற்படுத்துவதையே

கொள்கையாகக் கொண்டன. தற்கால உரைகள், மாறிவரும் சமூகத்தின் பிரதிபலிப்பாக அமைகின்றன. விரைவினை விழையும் காலச்சூழலில் மாணவர்கள் பல துறைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதால் தற்காலச் சமூகம் தொல்காப்பியத்தைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்குடனேயே இவை அமைகின்றன. மாணவர்க்கான உரைகளாகவே எளிய உரைகள் அமைவது இவண் சுட்டத்தக்கது. இவ்வுரைகளில், ஒவ்வோர் இயலின் செய்திகளையும் சுருக்கமாக முற்பகுதியில் தொகுத்தளிக்கின்ற தன்மை குறிப்பிடத்தக்கதாகின்றது. தனித்தனியாக நூற்பாக்களுக்கு விளக்கமளிக்குமுன் 'இயல் நுவலும் பொருள்' என்ற பாங்கில், இயல்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் குறிப்புகளை அளித்தலும் சுட்டத்தக்கது.

## துணைநூல்கள்


1. இளம்பூரணர் உரைநெறி, ச.குருசாமி, இராணி பதிப்பகம், சென்னை, 2007
2. உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும், கி. ஆதிநாராயணன், சித்திரா நிலையம், சென்னை, 2001
3. கழகப் பைந்தமிழ் இலக்கிய வரலாறு, சோ.இலக்குவன், கழக வெளியீடு, சென்னை, 2001
4. சேனாவரையர் உரைநெறி, சா.குருசாமி, இராணி பதிப்பகம், சென்னை, 2007
5. தொல்காப்பியம் தெளிவுரை, ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, எட்டாம் பதிப்பு, 2006
6. தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி-1, தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003
7. தொல்காப்பியம் மாணவர்க்கான எளிய உரை, ந.கருணாநிதி, வசந்தா பதிப்பகம், சென்னை, மறு பதிப்பு, 2008
8. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, இருபத்தி ஆறாம் பதிப்பு, 2010

# 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்' - பொருளும் உரைகளும்

முனைவர் மா.பெரியசாமி

## முன்னுரை

தொல்காப்பியம் தமிழ்ச் சமூகத்தின் தலை ஊற்றாக திகழ்கிறது, இவ்விலக்கண நூல் ஈராயிரம் ஆண்டுகளைக் கடந்தும் உயிர்ப்புடன் திகழ்கிறது, இன்றைய கலை, இலக்கிய மரபுகளை அளப்பதற்கு, அறிவதற்கு அதனின் துணை கொள்ளப்படுவது அதனின் சிறப்பைத் தெளிவாக்குகிறது.

இத்தகைய பண்புகளை உடைய தொல்காப்பியம் உரைகள் பல கண்டுள்ளது. அவற்றில் மாறுபட்டதும் உண்டு. இயைபுடையதும் உண்டு. குறிப்பாகத் தலைமக்கள், மக்கள் முதலானோர்களின் தொழில் சமூக முக்கியத்துவம் போன்றவற்றில் சிக்கல்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

அவற்றைப் பற்றி பலவகையான கருத்துகள் முரண்பட்டு கூறப்பட்டுள்ளன. எனினும் இக்கட்டுரை அடியோரையும், வினையோரையும் பற்றிக் கூறுவதாக அமைகிறது,

## அகவாழ்வு

மக்கள் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இருவகைப்படுத்துகிறது. அகவாழ்வை அகத்திணையில் எடுத்துரைக்கின்றார் தொல்காப்பியர்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இருவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல்.பொ.அக-1)

இதற்குப் பொருள் கைக்கிளைத் திணைமுதல் பெருந்திணை இறுதியாக உள்ள முன்னே சொல்லப்பட்ட ஏழு திணைகளையே அகத்திணையென்று சொல்லுவார்கள் என்பதாகும்.

இதில் முதலாக இருக்கும் கைக்கிளையும் இறுதியாக இருக்கும் பெருந்திணையும் இடையில் இருக்கும் ஐந்திணையும்

எவருக்கு உரியது என்பதை முதலில் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட இளம்பூரணரும், 19 ஆம் நூற்றாண்டில் உரைகண்ட ச.சோமசுந்தர பாரதியாரும் முரண்பட்டு கூறுகின்றனர். அது மட்டுமல்ல 20-ஆம் நூற்றாண்டில் அதற்குப் பொருளுரைத்தவர்களில் சிலரும் மாறுபடக் கூறுகின்றனர். அது எவ்வாறு, என்பதைக் காண்போம்.

**தொல்காப்பிய உருவாக்கம்**

தொல்காப்பியம் எந்நோக்கில் படைக்கப்பட்டது என்பதை அறிவதும் முக்கியமானது.

“தொல்காப்பியத்தைப் பார்க்கின்றபொழுது, தொல்காப்பிய எடுத்துரைப்பினுடைய முக்கிய இலக்காக அமைவது, தமிழ் மொழியின் நியமங்களை - தமிழ் எழுது முறையின் நியமங்களை - தமிழிலக்கியத்தின் நியமங்களைக் கூறிச் செல்வதேயாகும். உண்மையில் தமிழைப் பயன்படுத்த விரும்பும் ஒருவரை நோக்கியதாகவே (user oriented) உள்ளது. அதாவது தமிழில் எவ்வாறு விடயங்களை எடுத்துக் கூறுவது என்பதனை எடுத்துச் சொல்கின்ற ஒரு வழிநடத்து நூலாக அதனைப் பார்க்க வேண்டும். விதிமுறையான விதிப்புகளாகக் கூறாமல் இயங்குநிலை நியமங்களைக் கூறுவது என்ற முறைமையிலேயே கூறிச் செல்கிறது. (நூல் மரபு, மொழி மரபு, கிளவியாக்கப் பண்பு, இலக்கிய அமைதி என்றே செல்லும்)''. (கா.சிவத்தம்பி, தொல்காப்பியமும் கவிதையிம் ப.5).

எனவே, அன்றைய நிலையில் இருந்த மரபையும் வாழ்க்கை நெறியையும் அறிந்து கொள்ளும் தேவை உள்ளவருக்குத் தொல்காப்பியம் இயற்றப்பட்டது என்பதை உணரலாம்.

அதோடு, பாடல்கள் எத்தகையனவாய் அமைய வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகிறார் தொல்காப்பியர். அது நாடக வழக்கும், உலகியல் வழக்கும் பாடலில் பொருந்துவதாக அமைய வேண்டும் என்பதாகும். இதனை,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் (அகத். நூற். 56)

என்று தொல்காப்பியம் வரையறை செய்யும்.

நாடக வழக்கு என்பது மாந்தரின் வாழ்வில் நடக்கும் சிறப்பான நிகழ்ச்சிகளை நிரல்படக் கூறுவது எனலாம். உலக

வழக்கு என்பது உலகத்தாரின் ஒழுக்கத்துடன் ஒத்திருப்பதாகும். இவ்விருதன்மையும் பாடலில் இருக்கும் என்பது 'புலனெறியாகும்'. (ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - ப.50).

இதிலிருந்து, பெரும் செய்தி என்னவென்றால் இலக்கியம் படைக்கும்போது மரபில் நின்று படைப்பதுவும் அக்காலத்து உலகியலுக்கு முரண்படாது படைக்கப்படுவதும் அடிப்படையானது என்பதாகும்.

எனவே, தொல்காப்பியம் அக்காலத்துச் செய்யுள் வாசிப்போருக்கும், செய்யுள் படைப்போருக்காகவும் படைக்கப்பட்டது. செய்யுள் படைப்போர், அக்கால மரபிற்கும் உலகியல் நெறிக்கும் முரணாக இல்லாதவாறு அதனைச் செய்ய வேண்டும் என்பதைத் தெளிவுறுத்துகிறது. எனவே, அதில் கூறப்பட்டவற்றை ஒரு நிகழ்காலத் தேவை இருந்தது என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும்.

**உரையாசிரியர்கள்**

தொல்காப்பியத்திற்கு உரையாசியர்களான இளம்பூரணர், நச்சினார்கினியர், பேராசியர் போன்றோர் உரை செய்துள்ளனர். பின்னர் உருவான சமயம் சார்ந்த ஆதினத்தினரும் இதற்கு உரைகண்டுள்ளனர்.

இவற்றில் இளம்பூரனர் 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவர். இவர் உரை காண்பதற்கு முன்பு 10 ஆம் நூற்றாண்டில் இறையனார் களவியலுக்கு மட்டும் உரை கண்டுள்ளனர். குறிப்பாக கி.பி பத்தாம் நூற்றாண்டு முதல் உரை கூறும் மரபு தோன்றி வளர்ந்து வந்துள்ளது. இன்றைய நிலையிலும் தொல்காப்பியத்திற்குப் பல உரைகள் வந்தவண்ணம் உள்ளன.

**நூற்பாவும் உரையும்**

ஐந்திணைக்குரிய மக்களைக் கூறிய நிலையில் அடுத்து இருக்கும் கைக்கிளை, பெருந்திணைக்கு விளக்கம் கூறும் முகமாக இருக்கும் நூற்பா பின்வருவதாகும்.

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்
(தொ.பொ.அக-25)

இந்நூற்பாவிற்குப் பொருள் கூறிய இளம்பூரணர் "இது, நடுவணைந்திணைக்குரிய தலை மக்களைக் கூறி, அதன்

புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணைக்குரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று'' என்கிறார் (மு,அருணாசலம் பிள்ளை, தொ.அக.உரைவளம் ப.259).

இத்திணைக்குரிய மக்கள் யாவர் என்பதை இளம்பூரணர் வருமாறு கூறுகின்றார்.

“அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் அடித்தொழில் செய்வார் (**அடிமைத் தொழில் செய்வார்**) பக்கத்தினும் வினைசெய்வார் பக்கத்தினும், கடிவரைஇல மேற்சொல்லப்பட்ட புணர்தல் முதலான பொருளைக் கூறல்) கடிந்து நீக்கும் நிலைமையில்லை, புறத்து என்மனார் புலவர் ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் என்று சொல்வர் புலவர்''. (மேற்படி. ப.259). மேலும் இளம்பூரணர் அதற்கான காரணம் என்ன என்று காரண காரியத்துடன் இணைத்து வருமாறு கூறுகிறார்.

“இவர் (அடியரும், வினைவலரும்) அகத்திணைக்கு (நடுவணைந்திணைக்கு) உரியரல்லரோ வெனின், அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும்; அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடைய ராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவராகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதானும் இவர் புறப்-பொருட்குரியராயினார் (அகப்புறமாகிய கைக்கிளை பெருந்திணைக்கு) என்க. எனவே, இவ்வெழுவகைத் திணையும் அகம் புறம் (அகப்புறம்) என இருவகையாயின'' (மேலது, ப.260).

இவ்வாறு இளம்பூரணர் கூறுவதின் கருத்து, பிறர்க்குக் குற்றேவல் செய்வோரிடம் பொருள் வளம் இன்மையால் தகுந்த முறையில் காதல் செய்யவும் இல்லறம் நடத்தவும் வழியில்லை என்கின்றார். இத்தகைய ஒழுக்கம் உடைய தலைமக்கள் அதாவது, அடியோரும் வினைவலரும் இடம்பெற்று, அவர்களது காதல் ஒழுக்கங்களை வெளிப்படுத்தும் பாடல் ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

மரக் கோட்டம் சேர்ந்து எழுந்த பூங்கொடி போல,
நிரப்பம் இல் யாக்கை தமீஇயினர், எம்மைப்
புரப்பேம் என்பாரும் பலரால், பரத்தை என்
பக்கத்துப் புல்லீயாய் என்னுமால் (கலித்தொகை-94)

இதன்பொருள், "திரண்ட மரத்தின் வளைவான இடத்தைவிட்டு நீங்காமல் வளரும் பூங்கொடி போல, வடிவம் ஒத்து இல்லாத யாக்கையைத் தழுவி எம்மைப் பாதுகாப்போம் என்று கூறுவாறும் பலராவர். இப்பரத்தமை உடையவன் பக்கத்தைப் புல்லுதற்குத் தாராய் என்று கூறி நின்றனன்'' என்பதாகும்.

இப்பாடல் எவ்வகையான கூற்று உடையது என்பதைக் கூறுகிறார் தற்காலத்து உரையாசிரியர் அ.விசுவநாதன்.

"கூற்று தலைமக்களிடத்தேயன்றி அடித்தொழில் செய்வார் மாட்டும் வினைவிலர் மாட்டும் நிகழும், இது ஐந்திணைக்குப் புறனாயது, அடியோராகிய கூனும் குறளும் தம்முள் உறழ்ந்து கூறிக் கூடியது'' (கலித்தொகை மூலமும் உரையும் ப-406)

இதிலிருந்து, வினைவலரும், அடியோரும் காதல் ஒழுக்கத்தை சிறப்புடன் ஆற்றமுடியாமையை வெளிப் படுத்துகின்றனர். நச்சினார்க்கினியரும் இளம்பூரணரின் கருத்தை ஒத்தே விளக்கமளிக்கின்றார். அவரும் மேற்காட்டிய கலித்தொகைப் பாடலையே சான்று காட்டுகிறார்.

தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள இ.எஸ். வரதராஜ ஐயர் (1948), ஆர். வாசுதேவ சர்மா (1933), நிர்மல் செல்வமணி (1989) ஆகியோர் இதற்கு Slaves, and servants என்றும், servants and skilled workers என்றும் மேற்கூரிய இளம்பூரணரின் கருத்தை ஏற்று மொழிபெயர்த்துள்ளனர்.

ஆனால், பூரணரின் உரை தவறானது என்று ச.சோமசுந்தர பாரதியார் மறுக்கிறார். அவர் பின்வருமாறு காரணம் கூறுகின்றார்.

"கைக்கிளை, பெருந்திணைக்கு உரியவர் என்று கூறினால் இதற்கு முன்னர் நூற்பாவில் எணவகை மணமுறையை விளக்கிய போது பூரணர் பிரம்மம் முதல் தெய்வம் ஈறாக நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கெனப் பயின்று வருதலானும். அது பெருந்திணையெனக் கருதப்பட்டது என்று கூறுதல் முரணாகும்'' (ச.சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி 2, ப.61).

இளம்பூரணர் அடுத்து வரும் 'ஏவல் மரபின் ஏனோரும் உரியர்' (தொல்.பொ.அக.26) என்னும் நூற்பாவிற்கு உரையாக ஏவுகின்ற மரபுடைய உயர்ந்தவர்களும் கைக்கிளை, பெருந்திணைக்குரிய மக்களாக உள்ளனர் என்கிறார். (மு. அருணாசலம்பிள்ளை, தொ.அகத்-உரைவளம், ப.273)

இவ்வாறு கீழ்மக்கள், மேல்மக்கள் அனைவரும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு திணைகளுக்கும் உரியவர் என்று கூறுவது 'மாறுகொளக் கூறலெனுங் குற்றத்திற்கவரை யாளாக்குகிறது' என்கிறார் (ச.சோமசுந்திர பாரதியார் நூல் தொகுதி-61). இவ்வாறு உரைப்பதால் இளம்பூரணர் மாறுபடக் கூறுகின்றார் என்பது பாரதியார் கருத்து.

தலைமகன் என்பவன் கல்வி, அறிவு, ஒழுக்கம் இவற்றில் சிறந்தவன், வழிவழியே வரும் உயர்குடியில் பிறந்தவன், பெருஞ்செல்வத்தினன் என்றும் இத் தன்மையில் அமைந்த ஒத்த தலைவியும் வழிவழியாக வரும் பந்தம் தொடருவதற்கு ஊழின் வலிமையும் கூறப்படுகிறது. இதனைப் பற்றிய நூற்பாவாக 'பாலது ஆணை' என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

தாழ்ந்த அடிமைகள், வினை செய்வோர் என்பவர்களுக்கு இவ்வாறு அமையாது என்பதால் தலைமக்கள் உரியவராகார் என்கின்றனர் தொல்காப்பியரும், உரையாசிரியரும். ஆனால் பாரதியார் அதனை மறுத்து உயர்ந்த மக்களும் கைக்கிளை, பெருந்திணைக்கு உரியவர் என்றும், அதேபோல் தன்மையர் அடியோரும் வினையோரும் என்கிறார்.

சமகாலத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரும், இளம்பூரணர் கருத்தை மறுத்து பின்வருமாறு கூறுகிறார்.

"இளம்பூரணரின் இந்த விளக்கம், தொல்காப்பியத்தின் உட்கருத்தைப் புலப்படுத்துவதன்று. தொல்காப்பியம் தோன்றி ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் அதற்கு உரையெழுதிய பூரணர், தம் காலத்து ஒழுக்கத்தை மனத்திற் கொண்டே இவ்வுரை செய்தாராதல் வேண்டும். சங்க காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் அகவொழுக்கம் என்பதை அறநெறியாகக் கொண்டொழுகுதல் எம்மக்கட்கும் அவர் திணை நிலை மக்களாயினும், தலைமக்களாயினும் பொருந்தும் என்பதே நிலை. தலைமக்கட்கே அகத்திணை உரியது என்பதும், ஏவலும் வினையும் ஆற்றும் நிலமக்கட்கு அஃதொழிந்த கைக்கிளையும் பெருந்திணையுமே உரியது என்பதும் மானிடவியல் உணர்வுக்கு முரணானது" (முனைவர் கி.இராசா, தொல்காப்பிய பொருளதிகாரம் ப.13).

மேற்கண்ட இவரது கூற்று இளம்பூரணரை மறுப்பதோடு பூரணர் வரலாற்று அறிவற்றுப் பிழை செய்கிறார் என்கிறார்.

எனினும் இவரது கூற்றில் 'அன்றிருந்த நிலையில் தலைமக்கள் ஏனைய பிரிவு மக்கள் அனைவருக்கும் காதல் ஒழுக்கம் பொருந்தும் என்பதே நிலை' என்னும் கூற்றில் அவர் எதனை மனங்கொள்கிறார் என்பது புரியவில்லை.

ஏனென்றால், தொல்காப்பியம் உருவானதற்குக் காரணமாக முன்னர் கூறியது போல அது இலக்கியம் எவ்வாறு வழங்குகிறது, படைப்போர் எதனைப் பிறழாது கைக்கொள்ள வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டுதான் படைக்கப்பட்டது. ஆனால் இராசாவின் கூற்று மானிடவியல் கோணத்தில் ஆராயப்பட வேண்டும் என்பதைக் கூறுகிறது.

மானிடவியல் என்பது என்ன என்று அகராதி தரும் பொருள் காண்போம். OXFORD, University Press (2009) ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ், அகராதி தரும் பொருள் பின்வருமாறு:

- The study of human beings, especially of their origin, development, customs, and beliefs.
- மனிதர்கள் பற்றிய குறிப்பாக அவர்களது தோற்றம், வளர்ச்சி, பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் பற்றிய ஆராய்ச்சி அல்லது அறிவுத் துறை, மானிடவியல்.

  இதிலிருந்து பெரும் முடிவுகள் மனிதரை உள்ளவாறே காணவேண்டும் என்பதும் ஆராய்ந்து தவறு, சரி கூறுவது அடுத்த நிலையாக உள்ளது. இது மானிடவியலின் வேலை அன்று. இலக்கண ஆசிரியர் தொல்காப்பியரின் மொழியில் கூறுவதனால் 'இயற்கை பொருளை இற்றெனக் கித்தல்' என்பதாகும். இராசாவினுடைய மானுடவியல் முறையில்தான் இளம்பூரணர், நச்சர் ஆகியோர் கூறியுள்ளனர். பாரதியார் மட்டும் அதனை மறுக்கிறார்.

தொடக்க நிலையில் மனிதரின் பாலியல் உறவுகள் முறைப்படுத்தப்படாமல் இருந்தன. குடும்பம், தனிச்செத்து, அரசு இவை தோன்றியவுடன் திட்டவட்டமான ஒழுக்கங்கள் வருகின்றன. ஒருதார மணமுறை அதைச் சார்ந்த ஒழுக்கம் பெண்களினால் உருவாகியிருக்கும் என்று இதனைப் பற்றி ஆராய்ந்த எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். (பி.எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து, அரசு, ஆகியவற்றின் தோற்றம், ப.80)

எனவே, 'மானிடவியல் முறை' என்னும் இராசாவினுடைய கூற்று இந்தப் பழைய முறையைக் குறிப்பதாகவே உள்ளது. அதாவது முறைப்படுத்தலற்ற முறையை.

பண்டைய இலக்கணத்தில் 'உயர்ந்ததின் மேற்றே' என்று கூற முடியும். தற்காலத்திலும் வகைமாதிரி பாத்திரங்களைக் கொண்டே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. (சான்று: நாவல், சிறுகதை)

கைக்கிளை, பெருந்திணை, என்னும் திணைகளில் படைக்கப்படுவது யார் என்றால் அடியோரும் வினையோரும் என்று கூறுவது தொல்காப்பியர் காலத்தில் அன்றைய நிலையில் பொருத்தமாக இருந்திருக்கக் கூடும். உரையாசிரியர் காலத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டது. அதாவது பக்தி இலக்கியப் பிராவகம் பாய்ந்து கோயில்களில் ஓதப்படுகின்ற காலம். இந்த இலக்கியத்தில் இறைவனை நாயக, நாயகி பாவணையில் அடியவர்கள் பாடுவது ஒரு விதிபோல் இருந்தது.

இளம் பெண்கள் மூத்த பெண்கள் என அனைவரும் இறைவன் மீது காதல் கொள்வது; இறைவனைக் காண முயல்வது: என்பதை இலக்கியம் எடுத்துப் பாடுகிறது. குறிப்பாக பன்னிரு திருமுறையில் பதினொறாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள சேரமான் பெருமாள் நாயனார் பொன் வண்ணத்தந்தாதி, இங்குக் கருதத்தக்கது. இப்பாடலில் பெண்ணொருத்தி சிவபெருமான்மீது காதல் கொண்டு பசலை கொள்கிறாள். இது கைக்கிளை திணையாகும். பாடல் பின் வருமாறு:

"பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக் குன்றம்
தன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக் கண்ட
என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே''

மேற்கண்ட பாடலில், ஓர் இளம் பெண் ஈசனின் கைலாய மலை போன்று எனது உடல் பசலையால் வெளிறியது என்கிறாள்.

அகப்புற மரபில் இது போன்ற, பாடல்கள், கருத்துகள் சைவ, வைணவ மரபில் வளர்க்கப்பட்டு பாடப்பட்டன. அவ்வாறு இருந்தும் இளம்பூரணர் தொல்காப்பியர் காலத்து இலக்கியக் கருத்தைக் கூறியிருக்கிறார். அல்லது அது, அவரது காலத்துக் கருத்து என்று கொண்டால் பூரணர் காலத்துச் சமூக நிலை பக்தி கால மரபிலிருந்து நன்றாக மாறிவிட்டது என்று பொருள் கொள்ளலாம்.

இன்னுமொரு காட்டு : நவீன காலத்துக் கவியான பாரதியார் 'காதல்போன பின்னர் சாதல் சாதல்' என்று பாடினார். அவரும்

'காதல் செய்வீர் ஜெகத்த்ரே' என்று உலக மக்களை நோக்கி அறைகூவல் விடுத்தார்.

உலகத்தில் உள்ள அனைவரையும் தொல்காப்பிய விதிகளை மீறி, உரையாசிரியர்களின் வரையறையை மீறி, காதலிக்க உலகத்தவரை அழைத்தார். ஏனென்றால் பாரதியார் காலத்தில்,

"எல்லோரும் ஓர்நிறை, எல்லோரும் ஓர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்"

எனவே அனைவரும் காதல் செய்தால் கவலைகள் தீர்ந்து மகிழ்வு எய்துவர் என்பது அவரது பட்டறிவு பாடம். அதையே அவரது பாடல் வெளிப்படுத்துகிறது எனக் கொள்ளலாம். ஆகவே, தொல்காப்பியர் காலம் முதல் இக்காலம் வரை காதல் பற்றிய கருத்து பெரிய விவாதமாக்கப்பட்டுள்ளது.

சமூகம் உயர்வடையும் போது, பழைய நிலையை மாற்றும் போது மக்கள் அனைவரும் இணைந்து கொள்வதற்கான சமூகச்சூழல் உருவாகிறது. அனைவருக்கும் விடுதலை, காதல், வாழ்வு என்பது கிட்டுகிறது. சமூகம் வீழ்ச்சியடையும்போது காதலில் கட்டுப்பாடு தோன்றுகின்றது என்பதே முடிவாக அமைகின்றது.

## துணைநூல்கள்


1. தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், மு.அருணாசலம் பிள்ளை, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1994.
2. கலித்தொகை, என்.சி.பி.எச், சென்னை 98, 2007.
3. ச.சோமசுந்தர பாரதியார், நூல் தொகுதி 2, வசுமதி பதிப்பகம், சென்னை 20, 1997.
4. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை ந.சுப்புரெட்டியார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 14, 2000.
5. தொல்காப்பியப் பொருளதிகாரம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை 14, 2007.
6. குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், என்.சி.பி.எச்., சென்னை 98, 2008.
7. கா. சிவத்தம்பி, தொல்காப்பியமும் கவிதையும் இயலும், குமரன் புத்தக நிலையம், சென்னை, 2007.

# செம்மொழித் தகுதியும் செம்பதிப்புகளின் தேவையும்

முனைவர் இரா. வெங்கடேசன்

தமிழ்ச் செவ்வியல் நூல் வரிசையில் உள்ளனவற்றுள் திருக்குறளும், நாலடியாருமே முதன் முதலாக அச்சு வடிவம் பெற்றன. 1812இல் தஞ்சை மாநகரைச் சேர்ந்த மலையப்பப் பிள்ளையின் மகனாகிய ஞானப்பிரகாசன் எனும் அறிஞர் திருக்குறள், நாலடியார் ஆகிய இரண்டு நூல்களை ஒன்றாக இணைத்து அச்சிட்டு வெளியிட்டார். இதனுள் திருவள்ளுவமாலையும் இணைத்து அச்சிடப்பட்டுள்ளது. செவ்வியல் நூல்வரிசையில் உள்ள வேறெந்த நூலும் இந்த இரு நூல்களுக்கு முன்னராக அச்சானதாகச் சான்றுகள் இல்லை. 1812இல் தொடங்கிய தமிழ்ச் செவ்வியல் நூல் பதிப்பு வரலாறு இன்றைக்கு இரு நூற்றாண்டு நிறைவை அடைந்துள்ளது. இரு நூற்றாண்டு நிறைவை அடையும் இந்த நேரத்தில் தமிழ் நூல்களின் பதிப்பு வரலாறு, பாடவேறுபாடுகள், செம்பதிப்புகள் குறித்த உரையாடல்கள் தமிழ்ச் சூழலில் எவ்வாறு நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன எனபன குறித்து விவாதிப்பதும் அந்த விவாதத்தின் பயனாகச் செம்பதிப்பிற்கான சூழலை அடையாளம் காண்பதும் பயனுள்ளதாக அமையும்.

2004ஆம் ஆண்டு இந்திய அரசு தமிழ்மொழியை செம்மொழியாக அறிவித்த பின்னர் தமிழ் நூல்களின், குறிப்பாகச் செவ்வியல் நூல்களின் பதிப்பு, பாடவேறுபாடுகள், இவற்றை உள்ளடக்கிய செம்பதிப்பு எனும் சொல்லாடல்கள் சற்று அதிகமாக நிகழ்த்தப்படுகின்றன. இவற்றை ஒருவகையில் தமிழில் ஏற்பட்டுள்ள புதிய ஆய்வுப்போக்காக மதிப்பிடலாம்.

செம்பதிப்பு என்ற சொல்லாடலை நிகழ்த்துவதற்கான வாய்ப்பைப் பாடவேறுபாடுகளே வழங்குகின்றன.

தொன்மையான இலக்கிய, இலக்கண உருவாக்க மரபைக் கொண்ட மொழியில் தோன்றிய நூல்கள் அனைத்திலும் பாடவேறுபாடுகள் ஏற்படுவது இயல்பான ஒன்றாக அமைந்து விடுகிறது. நீண்ட நெடிய இலக்கிய, இலக்கண உருவாக்க மரபைக் கொண்ட மொழியில் ஒரு காலத்துப் புலமை மரபினரால் உருவாக்கப்படுகின்ற இலக்கண, இலக்கிய நூல்கள் பல்வேறு வடிவங்களில் (வாய்மொழி மரபு, ஓலைச்சுவடி, அச்சுப் பதிப்பு), பல்வேறு சூழல்களை எதிர்கொண்டு பயணித்து வருகின்ற நிலையைக் கொண்டிருக்கும். அந்தப் பயண இடைவெளியில் விடுபடல்கள், இடைச்செருகல்கள், வேறுபாடுகள், திருத்தங்கள் ஆகியன மூலநூலோடு இரண்டறக் கலந்துவிடுகின்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. எது உண்மைப் பாடம், எது இடையில் சேர்ந்த பாடம் என்று எளிதில் கண்டு மதிப்பிடமுடியாத நிலையைப் பெற்றுவிடுகின்றன. மூலநூலோடு கலந்துவிடுகின்ற அவ்வகை வேறுபாடுகள் பற்றிய விவாதக் குறிப்புகள் உரைமரபில் நிரம்பக் காணப்படுகின்றன. சில உரையாசிரியர்கள் பாடவேறுபாடுகள் பற்றிய விவாதத்தை விரிவாக நிகழ்த்தியுள்ளதையும் உரை மரபில் காணமுடிகிறது. உரையாசிரியர்கள் பாடவேறுபாடுகள் பற்றி விவாதம் நிகழ்த்திய முறைகளுக்கிடையில், அவர்கள் உரைச்சான்றிற்காகக் மேற்கோளாக எடுத்தாண்டுள்ள பாடல்களில் காணப்படும் வேறுபாடுகள் தனித்து நோக்கத்தக்கனவாக உள்ளன. ஒரே பாடல் உரையாசிரியர்களால் வேறுபாட்டுடன் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு அனைவரும் அறிந்த பாடல் ஒன்றை இங்குச் சுட்டலாம்.

> கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
> சுரும்புபசி களையும் பெரும்புன லூர
> புதல்வனை யீன்றவெம் மேனி
> முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே
>
> *(உ.வே.சா. 1903)*

இது, ஐங்குறுநூற்றில் தலைவி கூற்றாக இடம்பெற்றுள்ள பாடலாகும். தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரைகண்ட உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர் மூவரும் இந்தப் பாடலை மேற்கோளாக

எடுத்தாண்டுள்ளனர். நச்சினார்க்கினியர் கற்பியல் ஆறாம் சூத்திரத்திற்கும் பேராசிரியர், இளம்பூரணர் இருவரும் உவமவியல் உள்ளுறை எவை என்பதற்கான 25ஆம் நூற்பா விளக்கத்திற்கும் இந்தப் பாடலை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர்.

இங்கு வியக்கத்தகும் செய்தி என்னவென்றால் மேற்கோளாகக் காட்டப்படும் இந்தப் பாடல் மூன்று உரையாசிரியரின் உரைமேற்கோள்களிலும் வெவ்வேறு பாடங்களுடன் வேறுபட்டு அமைந்திருப்பதாகும். இன்னும் இதனினும் வியக்கத்தகும் அம்சம் என்னவென்றால் தொல்காப்பியப் பொருளதிகார அச்சுப் பதிப்புகள்தோறும் இந்த மேற்கோள் பாடல் புதிய புதிய பாடங்களுடன் வேறுபட்டுக் காணப்படுவதாகும். உதாரணத்திற்கு ஒன்றிரண்டு சான்றுகளைக் காட்டலாம். பதிப்பாசிரியர்கள் வேறுபட்ட பாடங்களைக் கொண்டதற்கான சான்றுகள் இன்று கிடைக்காமல் போய்விட்டன. இன்றைய நிலையில் இது மிகப்பெரிய இழப்பாகும்.

1885இல் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையை முதன் முதல் பதிப்பித்து வெளியிட்ட சி.வை. தாமோதரம் பிள்ளை இந்தப் பாடலை இவ்வாறு காட்டியிருக்கிறார்:

கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் முயங்க
லதுவே தெய்யநின் மார்பு சிதைப் பதுவே
(கற்பு. 6ஆம் சூத்திர மேற்கோள்)

இதே பாடல் 1948இல் சி. கணேசையர் பதிப்பித்து வெளியிட்ட பொருளதிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பில் கீழ்வருமாறு இடம்பெற்றுள்ளது.

கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே
(கற்பு. 6ஆம் சூத்திர மேற்கோள்)

இதே பாடல் பேராசிரியர் உவமவியல் 25ஆம் சூத்திர உரையில் மேலும் வேறுபட்டு காணப்படுகின்றது. 1885இல் வெளிவந்த சி.வை.தா. பதிப்பில் (1885இல் சி.வை. தா. பொருளதிகார உரை முழுவதையும் பேராசிரியர் உரை என்று அறியாமல் நச்சினார்க்கினியருடையதாகக் கருதி வெளியிட்டார்; பின்னர் அது ரா. ராகவையங்காரால் தெளிவுபடுத்தப்பட்டது) கீழ்வருமாறு இடம்பெற்றுள்ளது.

கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வ னீன்றவெம் முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே

1943ஆம் ஆண்டு வெளிவந்த ச. கணேசையரின் பொருளதிகாரப் பேராசிரியர் உரைப்பதிப்பில் இதே பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

கரும்புநடு பாத்திகயிற் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வ னீன்றவெம் முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே

நச்சினார்க்கினியர், பேராசிரியர் எனும் இரு உரையாசிரியர்கள் கொண்ட பாடம் எது?, இவற்றுள் பதிப்பாசிரியர்கள் காட்டியுள்ள பாடத்திற்கான சான்றுகள் என்ன என்பதற்கான விவாதத்தைத் நிகழ்த்துவதற்குப் பாடவேறுபாட்டு ஆய்வு அவசியமாகிறது. இந்தப் பாடல் இதனினும் இளம்பூரணர் பொருளதிகார கற்பியல் 6ஆம் சூத்திர உரையில் வேறுபாட்டுடன் இடம்பெற்றுள்ளது; அதனினும் இந்தப் பாடல் இளம்பூரணர் உரை அச்சுப் பதிப்புகள்தோறும் வேறுபட்டுக் காட்டப்பட்டுள்ளது.

1933இல் வ.உ. சிதம்பரம் பிள்ளையால் அச்சிட்டு வெளியிடப்பட்ட பொருளதிகார இளம்பூரணர் உரைப் பதிப்பில் (இதற்கு முன்னரே அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டினையும் 1928இல் வெளியிட்டிருந்தார்) மேற்கண்ட ஐங்குறுநூற்றுப் பாடல் இவ்வாறு காணப்படுகிறது.

கரும்புநடு பாத்திக் கதிர்த்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே

இவற்றுள் களையும் என்பதற்கு தளையும் என்றொரு பாடமிருந்ததாகவும் வ.உ.சி. அடிக்குறிப்பில் காட்டியிருக்கிறார் *(1933, ப. 239)*. இதே பாடல் **1956**இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பொருளதிகார இளம்பூரணர் உரைப் பதிப்பில் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது.

கரும்புநடு பாத்திக் கதிர்த்த ஆம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கல்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே
*(1956, ப.272)*

இவற்றுள் சீர் அமைப்பு மாற்றிக் காட்டப் பட்டிருப்பதுடன் புதிய பாடவேறுபாடுகளும் அமைந்திருத்தலைக் காணமுடியும். மேலே கண்ட மூன்று சான்றுகளின்வழி மூல நூலாசிரியர் கொண்ட பாடம் எது என்பதைக் கண்டறிவதைக் காட்டிலும் உரையாசிரியர்கள் கொண்ட பாடம் எது என்பதைக் கண்டுதெளிய வேண்டிய சிக்கல் எவ்வளவு என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. இந்த ஒரு பாடலில் ஐங்குறுநூற்றுச் சுவடிகளிலும் அச்சுப் பதிப்புக்களிலும் காணப்படும் பாடவேறுபாடுகளோ இன்னும் மிக அதிகம். இந்த ஒரு பாடலில் மட்டும் சுவடிகள் அச்சுப் பதிப்புகள் இரண்டிலும் சேர்த்து காணப்படும் பாடவேறுபாடுகள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டனவாகும். **1903**இல் ஐங்குறுநூற்றைச் சுவடியிலிருந்து பெயர்த்து அச்சுப் பதிப்பை உருவாக்கிய உ.வே. சாமிநாதையர் இப்பாடலின் அடிக்குறிப்பில் ஆறு பாடவேறுபாடுகளைக் குறித்துக் காட்டுகிறார்.

பாத்தியிற், பாத்திக், பாத்தி ; கலித்த, கதித்த, கதிர்த்த, வாம்பல், தாமரை (அடி - *1*) ; களையும், தளையும் (அடி - *2*) புதல்வனை, புதல்வன், யீன்றவெம் மேனி,

யீன்றவென் மேனி, யீன்றதென்மேனி, யீன்றவெம் முயங்கல், யீன்றவென் முயங்கல், முயங்கன்மோ, முயங்கல், முயங்கலதுவே, முயங்கன்மே (அடி, 3,4)

ஐங்குறுநூற்றின் 65ஆம் பாடலுக்குரிய இப்பாடங்கள் சுவடிகளிலும் அச்சுப் பதிப்புக்களிலும் காணப்படுவனவாகும். ஐங்குறுநூற்றுப் பாடல்களுள் மிக அதிகமான பாடவேறுபாடுகளைக் கொண்டுள்ள பாடல் இந்த ஒரு பாடல் மட்டுமேயாகும். எப்படி இந்த ஒரு பாடலில் மட்டும் இவ்வளவு வேறுபாடுகள் தோன்றின என்பதையே தனித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியப் பாடல்களில் உரையாசிரியர் காலத்திலேயே மிகுதியான பாடவேறுபாடுகள் தோன்றிவிட்டன என்பதற்கு இந்த ஒரு பாடல் நல்ல உதாரணமாகத் திகழ்கிறது. செம்பதிப்பிற்கான அவசியத்தையும் இவ் வேறுபாடுகள்வழி அறியமுடிகிறது.

தமிழ்ப் பாடவேறுபாட்டு ஆய்வை உரைமரபிலிருந்து தொடங்கவேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்த ஏராளமான சான்றுகள் இவற்றுள் உள்ளன. பாடவேறுபாடுகள் பற்றிய விவாதக் குறிப்புகளை உரை மரபிலிருந்து ஏராளமாக மீட்டெடுக்க முடியும். பரிபாடலுக்குக் கிடைத்துள்ள பழைய உரைகளுள் ஒன்று பரிமேலழகர் உரை; இதற்கு அமைந்துள்ள உரைப்பாயிரம் பாடவேறுபாடுகள் பற்றியும், பாடத்தேர்வு பற்றியும் இவைகளை உள்ளடக்கிய செம்பதிப்பு உருவாக்கம் பற்றியும் வலியுறுத்துவதாக உள்ளது. பரிபாடலுக்கு உரை எழுதிய பரிமேலழகர் உரைப் பணியுடன் செம்பதிப்புப் பணியையும் மேற்கொண்டுள்ளார் என்பதற்கு இந்தப் பாயிரப் பாடல் சான்றாக உள்ளது. அப்பாடல் கீழ்வருமாறு:

கண்ணுதற் கடவு ளண்ணலங் குறுமுனி
முனைவேன் முருக னெனவிவர் முதலிய
திருந்துமொழிப் புலவ ரருந்தமி ழாய்ந்த
சங்க மென்னுந் துங்கமலி கடலு
ளரிதி னெழுந்த பரிபாட் டமுத
மரசுநிலை திரீஇய வளப்பருங் காலங்
கோதில் சொன்மக னோதகக் கிடத்தலிற்
பாடிய சான்றவர் பீடுநன் குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலிற்

றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பு
மெழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பு
மொருங்குடன் கிடந்த வொவ்வாப் பாடந்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
யெல்லையில் சிறப்பிற் றொல்லோர் பாடிய
வணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டின
னீணிலங் கடந்தோன் றாடொழு மரபிற்
பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே.

பண்டைக் காலத்தில் அரசர்களுடைய பிறழ்ச்சியால் இந்நூல் படித்துப் பாராட்டுவோரற்றுக் கிடந்ததென்றும் அக்காலத்தில் பழைய நூல்களினிடையே தம் சொல்லை மடுத்து வேறுபடுத்தும் இயல்புள்ள கந்தியா ரென்பவராலும் பொருள் தெரியாமல் எழுதியவர்களாலும் பாடகர்களாலும் இந்நூலில் நேர்ந்த பலவகைப்பட்ட பிழைகள் அறிஞர்களுடைய செவிகளை வெதும்பச் செய்தலைத்தெரிந்து அப்பிழைகளை நீக்கி ஆராய்ந்து உண்மையான பாடத்தையறிந்து சிற்றறிவினர்க்கும் தெற்றெனப் புலப்படும்படி இவர் இவ்வுரையை இயற்றினரென்று (உ.வே.சா. பரிபாடல் பதிப்புரை, *1903*, ப. *20,21)* இப்பாயிரம் கூறுகிறது.

பாடவேறுபாடுகள் நேர்ந்த சூழல், பாடவேறு பாடுகளைத் தொகுத்தல், தொகுத்த வேறுபாடுகளைக் கொண்டு பாடத்தேர்வு செய்தல், தெரிவுசெய்யப்பட்ட பாடங்களைக் கொண்டு உரை எழுதுதல் என்னும் செம்பதிப்பிற்கான பணிகள் இப்பாயிரத்தின்வழி கிடைக்கபெறுகிறது. பரிமேலழகர் பரிபாடலுக்குச் செம்பதிப்புப் பணியை மேற்கொண்டுள்ளார் என்பதைப் இப்பாயிரம் உணர்த்துகிறது.

பரிமேலழகர் காலத்தை மு. அருணாசலம் பிள்ளை *13*ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிடுகிறார். பரிபாடல் பாடல்கள் தோன்றின காலம் உரையாசிரியர்கள் காலத்திலிருந்து சில நூற்றாண்டிற்கு முற்பட்டதாக இருக்க வேண்டும். *13*ஆம்

நூற்றாண்டிலேயே பிழைகள் பல புகுந்துவிட்டதாகப் பரிமேலழகர் கருதியிருக்கிறார் என்றால் இன்றைக்குக் கிடைத்திருக்கும் பரிபாடல் பாடல்களை எவ்வகையில் மதிப்பிடுவது, அணுகுவது என்ற பெருஞ்சிந்தனை எழுகிறது.

பரிபாடல் 70 பாடல்களைக் கொண்ட நூலென்று ஒரு வெண்பா குறிப்பிடுகிறது. கிடைத்திருக்கும் பாடலோ இருபத்திரண்டுதான்(உ.வே.சா. *1918*, ப. *4*). இந்த இருபத்திரண்டு பாடல்களும் ஒரே சுவடியில் இருந்து பதிப்பிக்கப்படவில்லை. பழைய உரைகளில் காட்டப்பட்ட மேற்கோள்களிலிருந்தும், புறத்திரட்டிலிருந்தும் தேடிக்கண்டு தொகுத்துதான் பரிபாடலை உ.வே.சா. அச்சிட்டுள்ளார். உரைகளில் காட்டப்பட்ட மேற்கோள் பாடல்களின் நிலை உரையாசிரியர்கள்தோறும் பதிப்பாசிரியர்கள்தோறும் வேறுபட்டிருந்ததை மேலே கண்டோம். அப்படியென்றால் உரைமேற்கோள்களிலிருந்து கிடைக்கப் பெற்ற பரிபாட்டிலின் பாடல்களை இன்றைய நிலையில் எவ்வகையில் மதிப்பிடுவது என்று சிந்தித்தாக வேண்டும். இந்த முரண்பாடுகள் செம்பதிப்பிற்குரிய முக்கியத்துவத்தை ஆழமாகச் சிந்திக்க வழிவகுக்கிறது. உரை மரபில் இவ்வளவென்றால் அச்சுப் பதிப்பில் காணப்படும் வேறுபாடுகள் இன்னும் மிக மிக அதிகம். இவை பற்றிய குறிப்புகள் அச்சுப் பதிப்புகளிலேயே பரவலாகக் காணப்படுகின்றன.

*1812*இல் திருக்குறள், நாலடியார் இரண்டையும் இணைத்து முதன் முதலாக அச்சிட்டு வெளியிட்ட தஞ்சை ஞானப்பிரகாசன் குறித்திருக்கும் செய்திகள் திருக்குறளில் மட்டுமல்ல பழந்தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள் புகுந்த நிலையைத் தெளிவாக உணர்த்துகிறது. அப்பகுதி கீழ்வருமாறு:

> கற்றுணர்ந்த தமிழாசிரியர்களருமையி னியற்றிய - இலக்கணவிலக்கியங்களாகிய - அரிய நூல்களெல்லாம் - இந்நாட்டில் -அச்சிற்பதிக்கும் பயிற்சியின்றிக் கையினா லெழுதிக்கொண்டு வருவதில் - எழுத்துக்கள் குறைந்தும் மிகுந்தும் - மாறியுஞ் சொற்கடிந்தும் பொருள் வேறுபட்டும் பாடத்துக்குப்பாடம் -ஒவ்வாது

> பிழைகள் மிகுதியுமுண்டாகின்றவால் -அவ்வாறு பிழைகளின்றிச் சுத்தபாடமாக நிலைக்கும்படி - அச்சிற்பதித்தலை வழங்குவிப்பதற் குத்தேசித்து - நூலாசிரியர்களுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச்செய்த - அறம் பொருளின்ப மென்னும் - முப்பாலையும் நுட்பமாக விளங்கவுணர்த்துந் திருக்குறள் மூலபாடமும் - முனிவர்க ளருளிச்செய்த நீதிநூலாகிய நாலடி மூலபாடமும் - இப்பொதச்சிற் பதிக்கப்பட்டன.

எத்தனை விதமான பிழைகளுடன் திருக்குறள் சுவடிகள் காணப்பட்டிருப்பின் இப்படியான கருத்துகளைப் பதிப்பாசிரியரால் பதிவு செய்திருக்கமுடியும். இவற்றோடு அவர் நின்றுவிடவில்லை அப்பதிப்பை உருவாக்க அவர் மேற்கொண்ட சில குழு முயற்சிகள் குறித்தும் கீழ்வருமாறு பதிவுசெய்திருக்கிறார்.

> இவை அச்சிற்பதிக்குமுன் தென்னாட்டில் பரம்பரை - ஆதினங்களிலும் வித்துவ செனங்களிடத்திலுமுள்ள சுத்தபாடங்கள் பலவற்றிற்குமிணங்கப் பிழையற - இலக்கணவிலக்கிய வாராய்ச்சியுடையவர் களாலாராய்ந்து சுத்தபாடமாக்கப் பட்டன.

இன்றைய செம்பதிப்பு ஆக்கத்திற்கு அவசியமான கருத்தாக இவற்றைக் கொள்ளலாம். இவற்றோடு அவர் கொண்டிருக்கும் பாடங்கள் குறித்து ஐயம் ஏற்படின் கண்டு தெளியவேண்டிய வழிமுறை குறித்தும் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

> இஃதுண்மைபெற - திருப்பாசூர் முத்துச்சாமிப்பிள்ளை திருநெல்வேலிச் சீமை - அதிகாரி - ம. ராமசாமி நாயக்கர் முன்னிலையி லன்னாட்டிலிருந்தழைப்பித்த சுத்தபாடங்களுடனெழுதிவந்த வரலாறு.
>
> இந்தப் பொத்தகத்திலெழுதிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனா ரருளிச்செய்த திருக்குறள் மூலபாடமும் நாலடியார் மூலபாடமும் திருவள்ளுவ மாலையும் - ஆக- மூன்று சுவடியும் வெகு

மூலபாடங்கள் - உரைபாடங்களதற்குக் கருவியாக வேண்டும் - இலக்கண விலக்கியங்களெல்லாம் வைத்துப் பரிசோதித்துப்பாடந் தீர்மானஞ்செய்து - ஓரெழுத்து ஓர்சொல் நூதனமாகக் கூட்டாமற் குறையாம லனேக மூலபாடங்க ளுரைபாடங்களுக் கிணங்கினதாகத் தீர்மானம் பண்ணிய சுத்தப்பாடம் பார்த்தெழுதிச் சரவைபார்த்த பாடமாகையாலும் - அந்தப்படி தீர்மானம் பண்ணியெழுதின பாடமென்பதும் -இ(அ) வடங்களிலிருக்குந் தமிழாராய்ச்சியுடைய மகாவித்து செனங்களாற் பார்க்கும்போது மவர்கள் கருத்திற்றோன்றப்படும் - ஆகையாலும் பாடங்களி லெல்வளவேனும் சந்தேகப்பட வேண்டுவதின்று.

*1812*இல் வெளிவந்த திருக்குறள் அச்சுப் பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தச் செய்திகள் ஒருவகையில் செம்பதிப்பின் தேவையை அழுத்தமாக வலியுறுத்தி நிற்கின்றன. பாடவேறுபாடுகள் ஏற்படும் சூழல்கள், பதிப்பாசிரியன் செய்ய வேண்டியன, பதிப்பாசிரியனுக்குத் தேவையான இலக்கிய, இலக்கணப் புலமை, பாடம் குறித்து அறிஞர் பெருமக்களோடு விவாதம் செய்தல், சுவடி, அச்சுப் பதிப்புகளோடு ஒப்பிட்டு பாடம் நிர்ணயம் செய்தல், பாடம் கொண்டதற்குரிய ஆதாரம் போன்ற செம்பதிப்புப் பணிக்குரிய பல கூறுகள் மேற்குறித்தவற்றுள் பொதிந்து காணப்படுகின்றன. இவையெல்லாவற்றினும் ஒரு பதிப்பாசிரியரின் கடமை எதுவாக, என்னவாக, எப்படியாக அமைய வேண்டும் என்பதும் அவற்றுள் இடம்பெற்றுள்ளன. பழம்பெரும் நூலொன்றைப் பதிப்பிக்க முயற்சி மேற்கொள்ளும் ஒருவர் செய்ய வேண்டிய பணிகள் குறித்த தகவலும் அவற்றுள் இடம்பெற்றுள்ளன. பழந்தமிழ் நூல்களின் நிலை சுவடிகளிலும் அச்சுப் பதிப்புகளிலும் எப்படியிருந்தன என்பதற்கு உ.வே.சா. குறிப்பிடும் கீழ்வரும் செய்தி இன்னும் தெளிவுப்படுத்துவதாக உள்ளது.

> அந்தக் காலத்தில் காலேஜ் வகுப்புகளுக்குத் தமிழ்ப் பாடம் வைக்கும் முறை மிக விசித்திரமானது. பேர்

மாத்திரம் தெரிந்த நூலிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியைப் பாடமாக வைத்து விடுவார்கள். ஏட்டுச் சுவடியைத் தேடியெடுத்து உள்ளது உள்ளபடியே யாரேனும் பதிப்பிப்பார்கள். அதை வைத்துக்கொண்டு தெரிந்தோ, தெரியாததோ எல்லாவற்றையும் குழப்பித் தமிழாசியர்கள் பாடம் சொல்லுவார்கள். சிலப்பதிகாரம் பழைய நூலென்பது மாத்திரம் அக்காலத்தில் தெரிந்திருந்தது. நூலைத் தெரிந்துகொள்வதைவிட நூலின் சிறப்பைத் தெரிந்துகொள்ளவது சுலபம். ஆதலின் அதன் சிறப்பைத் தெரிந்தவர்கள் அதிற் சில பகுதிகளைப் பாடம் வைக்கத் தொடங்கினர். தியாகராச செட்டியார் காலேஜில் இருந்த காலத்தில் சிலப்பதிகாரத்திலுள்ள இந்திர விழவூரெடுத்த காதை பாடமாக வந்தது. ஏட்டுச் சுவடியை வைத்துக்கொண்டு அதை அவர் பார்த்தார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிள்ளையவர் களிடம் சென்று இருவரும் சேர்ந்து பார்த்தார்கள். புஸ்தகத்தில் பல காலமாக ஏறியிருந்த பிழைகளுக்கு நடுவே உண்மையான பாடத்தை அறிவதே பிரும்மப் பிரயத்தனமாக இருந்தது. செட்டியாருக்குப் புஸ்தகத்தின் மேல் கோபம் முண்டாது. "என்ன புஸ்தகம் இது? இந்திர இழவூரெடுத்த காதையா?" என்று கூறி, இந்தச் சனியனை நான் பாடம் சொல்லப் போவதில்லை; எனக்கு உடம்பு வேறு அசௌக்கியமாக இருக்கிறது. நான் ஆறு மாசம் லீவு வாங்கிக் கொள்கிறேன் என்று தீர்மானித்துக் கொண்டார் (என்சரித்திரம், ப. 519).

சென்னைப் பல்கலைக்கழகம் 1863ஆம் ஆண்டு இளங்கலை (பி.ஏ.) பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் புகார் காண்டத்திலுள்ள சில பாடல்களைத் (கானல்வரி வரை) தேர்வுக்குரிய பாடமாக அறிவித்துள்ளது. இதன் தேவை கருதிப் புகார் காண்டத்தை மட்டும் சுவடியிலிருந்து அச்சுக்குக் கொண்டுவர சிலர் முயற்சி மேற்கொண்டுள்ளனர். அம்முயற்சியின் தொடர்ச்சியாகப் புகார்காண்டத்தில் கானல்வரி வரையிலான பாடல்களை மட்டும் 1872ஆம் ஆண்டு

அன்றைக்குச் சென்னை பிரிஸிடென்சி கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக இருந்த தி.ஈ. ஸ்ரீநிவாஸராகவாசாரியார் அச்சுருவாக்கம் செய்துள்ளார். நான்கு ஆண்டுகள் கழித்து 1876இல் கானல் வரி உள்ளிட்ட புகார் காண்டம் முழுமையையும் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் மீண்டும் பதிப்பித்துள்ளார். இதில் இரண்டு பக்க அளவிலான முன்னுரையையும் எழுதி அமைத்துள்ளார். முதல் பதிப்பு முன்னுரையில் சிலப்பதிகாரத்தை இயற்றியவர் சேரமான் என்று கூறியிருப்பார். இரண்டாம் பதிப்பு முன்னுரையிலும் இவ்வாறே கூறியிருக்கிறார். ஆனால், முதல் பதிப்பு முன்னுரையில் அடியார்க்கு நல்லாரை நச்சினார்க்கினியன் என்று கூறியவர் இந்த முன்னுரையில் தனது கருத்தை மாற்றிக்கொண்டு இருவரும் வேறானவர்கள் என்பதைப் பதிவுசெய்திருக்கிறார்.

இவரின் தொடர்ச்சியாக 1880ஆம் ஆண்டு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர் தி.க. சுப்பராய செட்டியார் புகார்காண்டத்தை மட்டும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அடியார்க்கு நல்லார் உரையின் துணைகொண்டு தாம் எழுதிய உரையோடும், உரையில்லாத கானல்வரிக்கு மட்டும் தாமே புதிய உரையெழுதியும் அவர் அச்சிட்டு வெளியிட்டார். இந்தப் பதிப்புகள் பாடத்திட்டம் நோக்கம் கருதி வெளியிடப்பட்டனவாகும்.

கல்வி நிறுவனங்களில் பாடமாக இடம்பெற்ற உடன் உருவாக்கப்படும் அச்சுப் பதிப்புகளைக் கண்டுதான் உ.வே.சா. மேற்கண்ட கருத்தைப் பதிவுசெய்திருக்க வேண்டும். அவ்வாறான பதிப்புகளுள் ஒன்றைக் குறித்து மட்டும் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

> இப்படித் தியாகராச செட்டியாரே சிரமப் பட்டபோது மற்றப் பண்டிதர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. எப்போது பாடமாக வந்துவிட்டதோ உடன் புஸ்தகப் பதிப்பும் வந்துவிடும். சிலப்பதிகாரத்தின் முற்பகுதியை ஸ்ரீநிவாசராகவாசாரியாரும் சென்னையிலிருந்த சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும் பத்திப்பித்திருந்தனர் (என் சரித்திரம், ப. 519, 520).

இவ்வகையான சிக்கலை எதிர்நோக்கிய உ. வே. சா. இவற்றிற்கு மாற்றான பதிப்புகளை உருவாக்க வேண்டும் என்று சிந்தித்திருக்க வேண்டும். இதனாலேயே பல நூல்களுக்குச் சிறந்த, நல்ல பதிப்புகளை அவரால் உருவாக்க முடிந்தது.

உ.வே.சா. இப்படியொரு கருத்தைக் கூறிச்சென்றிருக்கும் நிலையில் இவர் பதிப்பித்த சிலப்பதிகார அச்சுப் பதிப்பிற்கும், சுப்பராய செட்டியார் பதிப்பித்த அச்சுப் பதிப்பிற்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுவது சிந்திக்கத்தூண்டுவதாக உள்ளது. குறிப்பாகச் சில மேற்கோள் பாடல்கள் இரு பதிப்பிதிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன; உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டலாம். அரங்கேற்றுக்காதை24ஆம் பாலடியின் உரைச்சான்றிற்குக் கீழ்க்காணும் பாடல் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. அப்பாடல் இருவர் பதிப்பிலும் கீழ்வருமாறு காணப்படுகிறது.

வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்

(தி.க.சு. *1880*, ப. *76*).

வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலு
மறியக் கூறி யாற்றுழி வழங்கல்

(உ.வே.சா. *1920*. ப. *99*).

தி.க. சுப்பராய செட்டியாரும், உ.வே.சாமிநாதையரும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர்கள். புலமையுலகம் போற்றிய புலமையாளனின் மாணவர்கள் பதிப்பித்த சிலப்பதிகார அச்சுப் பதிப்புகளே இப்படியென்றால் பிறவற்றை எப்படி மதிப்பிடுவது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படியாக வரலாறு நெடுக பாடவேறுபாடுகளும் பாடவேறுபாடுகள் குறித்த விவாதங்களும் தொடர்ந்து இருந்துவருகின்றன.

### முடிவாகச் சில கருத்துக்கள்

இதுவரை கண்ட பாடவேறுபாட்டுத் தரவுகள் அனைத்தும் செவ்வியல் தகுதியுடைய இலக்கியங்கள் என்று

வரையறுக்கப்பட்டுள்ள நூல்களிலிருந்து திரப்பட்டவையாகும். இந்தத் தரவுகள் செவ்வியல் நூல்களுக்குச் செம்பதிப்பு உருவாக்கம் குறித்த அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. செவ்வியல் நூல்கள் அனைத்திற்கும் முழுவதுமான செம்பதிப்பான ஆராய்ச்சிப் பதிப்பு, மூலப்பாடத் திறனாய்வு முறையில் வெளிவர வேண்டிய தேவை உள்ளதாக மேற்குறித்த தரவுகள்வழி பெறமுடிகின்றன.

தமிழ்க் கல்வி முறைக்குப் பயன்பட்ட நூல்கள் மட்டுமே அச்சுருவாக்கமும் மறுபதிப்புறுவாக்கமும் பெற்றன/ பெறுகின்றன. இவற்றைக் கடந்து செயல்பட்ட பதிப்பாசிரியர்கள் மிகச் சிலரேயாவர். அவர்களுள் சி.வை.தா., உ.வே.சா., வையாபுரிப்பிள்ளை, சண்முகம் பிள்ளை குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்களின் முயற்சி தனிமனித முயற்சியாகும். தனிமனித முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட இவர்களின் பதிப்பாக்கம் செம்மையாக அமைந்துள்ளன என்பதற்கு மாற்றுக் கருத்தில்லை. அதே நேரத்தில் இன்று கிடைக்கக் கூடிய செவ்வியல் நூல்கள் சார்ந்த ஓலைச் சுவடிகள், தாள் சுவடிகள், முக்கியமான அச்சுப் பதிப்புகள் ஆகியனவற்றைத் தேடித்தொகுத்துச் செம்பதிப்புப் பணியைச் செய்தால் சிறப்புற அமையும்; இன்றைய தமிழாய்விற்குப் பெரிதும் பயன்படும். அந்த மாபெரும் பணியைச் செம்மொழி நிறுவனம் செய்துவருகிறது. எதிர்காலத் தமிழாய்வு உலகம் அதைப் பயன் உள்ள வகையில் ஏற்றுக்கொள்ளும்.

## துணைநூல்கள்


1 அருணாசலம், மு. 2005. (திருத்தப்பட்ட பதிப்பு) தமிழ் இலக்கிய வரலாறு (13ஆம் நூற்றாண்டு). சென்னை: தி பார்க்கர்.

2. கணேசையர், சி. (ப.ஆ.) 1948. தொல்காப்பியம் பொருளதிகாரம்(முதற்பாகம்) முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும், சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.

3. கணேசையர், சி. (ப.ஆ.)2007 (2ஆம் பதிப்பு). தொல்காப்பியம் பொருளதிகாரம் (இரண்டாம் பாகம்) பின்னான்கியல்களும் பேராசிரியமும்) சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

4. கழகப் புலவர் குழு (ப.ஆ.). 1956. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்தய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

5. சாமிநாதையர், உ. வே. 2008 (ஏழாம் பதிப்பு). என் சரித்திரம். சென்னை: டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்

6. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.). 1918. எட்டுத் தொகையுள் ஐந்தாவதாகிய பரிபாடல் மூலமும் ஆசிரியர் பரிமேலழகரியற்றிய உரையும், சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம்.

7. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.). 1920. (2ஆம் பதிப்பு) சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம்.

8. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.). 1903. எட்டுத்தொகையில் மூன்றாவதாகிய ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், சென்னபட்டணம்: கணேச அச்சுக்கூடம் .

9. சிதம்பரம் பிள்ளை, வ.உ. (ப.ஆ.). 1933. தொல்காப்பியம் இளம்பூரணம், பொருளதிகாரம் (களவியல், கற்பியல், பொருளியல்) சென்னை: வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்.

10. சுப்பராய செட்டியார், தி.க. (ப.ஆ.). 1880. சிலப்பதிகாரம் புகார்க் காண்டம், அடியார்க்கு நல்லார் உரை, சென்னை: மிமோரியல் அச்சுக்கூடம்.

11. ஞானப்பிரகாசன் (ப.ஆ.). 1812. திருக்குறள் மூலபாடம், தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் அருளிச்செய்தது, சென்னைப் பட்டிணம்: மாசத்தினச்சரிதை அச்சுக்கூடம்.

12. தாமோதரம்பிள்ளை, சி.வை. (ப.ஆ.). 1885. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியார் உரை, சென்னை: ஸ்காட்டிங் பிரஸ்.

# ஐங்குறுநூறு உரைவேறுபாடுகள்

முனைவர் அ. அறிவுநம்பி

தமிழர்தம் பண்டைய வாழ்வியலைப் பரிமாறுபவை சங்கப் பனுவல்கள், அவற்றில் தமிழர்தம் பண்பாடு, மொழிப்பாங்கு, பழக்கவழக்கங்கள், வரலாறு, நிலவியல்சூழல் அரசியல் போன்ற பற்பல கூறுகள் இடம்பெற்றுள்ளன. அந்த நூல்கள் எழுதப்பெற்ற காலத்தில் அவற்றிற்கு உரைகள் தேவைப்படவில்லை. பிற்காலத்தில் உரைவரைய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஓருரை எழுதப்பெற்றதுடன் நில்லாது பலவுரைகள் முகிழ்த்தன. அஃது அந்நூல்களுக்கான வெற்றி எனக் கூறுவர். உரைகளுக்கிடையே வேற்றுமைகள் தென்படுவது இயல்பானது. தமிழரின் அகவாழ்வைப் படம்பிடிக்கும் சங்க நூல்களில் ஐங்குறுநூறு தனித்துவம் கொண்டது.

ஐங்குறுநூற்றில் அன்பின் ஐந்திணைகளும் பேசப்பெறும். ஒவ்வொரு திணைக்கும் நூறுநூறு பாடல்கள் ஐந்து புலவர்களால் செதுக்கப்பெற்றுள்ள பெற்றிமை குறிக்கத்தக்கது. குறிஞ்சியில் தொடங்கும் மரபும் மாற்றம் பெற்று மருதத்தை முதலில் பேசும் நூலும் இதுவே. ''இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு; இது பதவுரையும் அன்று; பொழிப்புரையும் அன்று! அகத்திணை நூல்களுக்கே உரிய உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் முதலியவற்றை விளக்கிச் சிற்சில இடத்து மட்டும் அருஞ்சொற்பொருளைப் புலப்படுத்துவது. இவ்வுரையும் 469ஆம் பாடலுக்கு மேல் இல்லை, இடையேயும் சில பாடல்களுக்கு இல்லை''[1]. உ.வே.சா., அரும்பதவுரை ஒன்றை செய்ததாகவும் அதனை அவர் பதிப்பிக்கவில்லை என்றுங்கூறுவர்.

1903ஆம் ஆண்டு, ஐங்குறுநூற்றில் முதற்பதிப்பு வெளிப்போந்து, இரண்டாம் பதிப்பு 1920இலும் மூன்றாம் பதிப்பு 1944இலும் வெளியிடப்பெற்றுள்ளன. உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை 1957-58 ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகத் தம் உரையை வழங்கினார்.

1959இல் மேலைப் பெருமழையைச் சார்ந்த பொ.வே. சோமசுந்தரனார் கழக வெளியீடாகத் தன் உரைநூலை வெளிக்கொணர்ந்தார். பின்னர் நிறைய உரைகாரர்கள் தத்தம் பங்களிப்பைச் செய்தனர். அந்நூல்களில் முன்னவர்களின் கருத்துகள் பொன்னேபோற் பேணப்பெற்றன. உரைநுவல் முறையிலேதான் வேறுபாடுகள் அமைந்தன. இந்த எழுத்துரையில் துரைசாமிப்பிள்ளை, பொ.வே. சோமசுந்தரனார் ஆகியோர்தம் உரைகள் ஒப்பியல் பார்வையில் நோக்கப்பெறுகின்றன.

உரைகளிடையே கருத்துமுரண்கள் ஏதுமில்லை. நேர்எதிர்மாறான உரைகளுக்கு வேலையே இல்லை. கூற்று நிகழ்த்துவாரும் உரைகாரர்களால் மாற்றப்பெறவில்லை. உள்ளுறை, இறைச்சி போல்வனவற்றிலும் வேறுபாடுகள் காணப்பெறவில்லை. இதற்கு இரண்டு விழுமிய கரணியங்களை ஓதவியலும் (i) பாடல்களின் கீழுள்ள 'கொளுப் பகுதியில் ஒரே ஒரு பின்புலம் மட்டுமே முன்நிறுத்தப்பெறும். வேறுசில அகநூல்களின் கொளுவில் கூற்று நிகழ்த்துநர் மாற்றம் தென்படும். துறையும் வேறாகக் கொள்ளப்பெறும். ஒரே பாடல் 'வாயில் நேர்தல்' 'வாயில் மறுத்தல்' என்ற இருவகை விளக்கத்தையும் பெற்றிருக்கும். இவைபோன்ற மாறுபாடுகளுக்கு ஐங்குறுநூற்றுப் பாடல்களில் களமேதுமில்லை. எனவே பாடலடியில் அமையும் விளக்கக்குறிப்பையே அனைத்து உரைகாரர்களும் பின்பற்ற வேண்டியதானது. (ii) தொடக்ககால உரைகாரர்களுக்குப் 'பழையவுரை'யின் வெளிச்சம் நிறைவைத் தந்தது. அந்தப் பாதையிலேயே பின்வந்த உரைகாரர்கள் பயணித்தனர். மிகச்சிறிய அளவுகூட மாற்றுக் கருத்து ஏற்படும் வாய்ப்பில்லாமற் போனது. ஆரம்பநிலை உரைகாரர்களின் அடிச் சுவட்டிலேயே பின்னர் வந்த உரைகாரர்கள் சென்றனர். ஆனால் பொழிப்புரை, பதவுரை, சொற்பொருள் விளக்கம், சிறப்புக்குறிப்பு, நயவுரை போன்ற பகுதிகளைத் தத்தம் மனவிழைவிற்கேற்ப இணைத்துக் கொண்டனர். எனவே மூலக்கருத்தினை மாற்றியுரைக்கும் உரைவேற்றுமைகளைக் கண்டுணர ஐங்குறுநூற்றின் உரைகள் வாய்ப்பமையவில்லை.

**இருஉரைகளின் வடிவமைப்புகள்**

உரைவழங்குவதில் பத்தியமைப்பில் மாறுபாடுகள் அமையும். ஐங்குறுநூற்றின் முதலாவது திணை மருதம்.

முதற்பத்தின் பெயர், ''வேட்கைப்பத்து'', இதற்கான முதற்பாடலுக்குரிய இருவர்தம் உரையமைப்பு வருமாறு.

| ஔவை துரைசாமிப்பிள்ளை | பொ.வே. சோமசுந்தரனார் |
|---|---|
| 1. வேட்கைப் பத்து-விளக்கம் (21 வரிகள்) | 1. சுருக்கமான விளக்கம் (2 வரிகள்) |
| 2. மூலபாடமும் கொளுவும் | 2. மூலபாடமும் கொளுவும் |
| 3. பழையவுரை | 3. துறைவிளக்கம் |
| 4. உரை | 4. பழையவுரை |
| 5. நிறைவில் 'பயன்' கூறல் | 5. விளக்கம் |
| | 6. நிறைவில் மெய்ப்பாடு, பயன்கூறல் |
| | 7. பாடவேறுபாடுகள் |

உரைவேந்தர் பாடபேதத்தைத் தனியே குறித்துக்காட்டும் முறையை மேற்கொள்ளவில்லையே தவிர தம் உரையினிடையே பாடபேதத்தைச் சுட்டி அப்பாடபேதம் பொருந்துமா பொருந்தாதா என்பதை விளக்குவார். ஏற்புடைய பாடவேறுபாடெனில் அதற்குரிய உரையையும் வழங்குவார். பெருமழைப்புலவர் பழையவுரையை அடைப்புக்குறிக்குள் அடக்குவர். இவைபோல்வன புலப்பாட்டு நெறியில் காணப்பெறும் அமைப்பு வேறுபாடுகள்தாம். உரைகளைப் பொறுத்தவரை பேருருவிலான மாறுபாடுகளைக் காணஇயலவில்லை. பொருள் கொள்ளும் முறைமையில் ஆங்காங்கே மிகமிகச் சின்ன வேறுபாடுகள் தோன்றுகின்றன. திணைக்கொரு பாடலைப் பதச்சோறாகக் கொண்டு இத்தகு சிறுமாற்றங்கள் விளக்கப் பெறுகின்றன.

**மருதத்திணை**

ஓரம்போகியார் தீட்டிய பாடல்கள் நூறு. ஐங்குறுநூற்றின் 11ஆம் பாடலாகவும் வேழப்பத்தின் முதற்பாடலாகவும் அமைவது ''மனைநடுவயலை'' எனத் தொடங்கும் பாடல். நீண்டவுரை எழுதும் ஔவைதுரைசாமி ''இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றாமை. ஏனை மெய்ப்பாடு : மருட்கை. பயன்:வாயில் நேர்தல்'' என்றெழுதுவார்.[2] இப்பாடற்கு உரைவரையும் சோமசுந்தரனார் ''இச்செய்யுளை ஆசிரியர் இளம்பூரணர்'' (தொல்.பொருள்.6) ''கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய களமத்து மிகுதி'' பற்றியெழுந்த தலைவி கூற்றென்று எடுத்துக்காட்டுவர். இதன்கண் மெய்ப்பாடு

மருட்கை; இளிவரலுமாம். பயன்: வாயினேர்தல் என்க. பா(ட)பே(தம்). நெடுவயலை''[3] என்றெழுதிடக் காணலாம்.

பெருமழைப்புலவர் 'மெய்ப்பாடு' பற்றிப் பேசுகையில் 'இளிவரல்' என்ற செல்லைக் கூடுதலாகக் குறிப்பிடக் காணலாம். பாடபேதத்தைக் குறிக்குங்கால் 'நெடுவயலை' என்ற சொல்லாட்சி மட்டுமே இடம்பெறும். ஔவைதுரைசாமியார் பாடவேறுபாட்டைத் தனித்த நிலையில் விளக்கவில்லை. ஆனால் உரையினிடையே ''மனைநெடுவயலை என்பது பாடமாயின், மனையில் வளரும் நீண்ட வயலைக்கொடி என உரைக்க. அதனால் உள்ளுரைப் பொருள் சிறவாமையறிக''[4] என வரையக்காணலாம்.

ஒருவர் கூறிய பொருளுடன் கூடுதலாகச் சிலவற்றை இணைப்பதும், பாடபேதக் குறிப்பினைமட்டும் வெளிப்படுத்துவதும் பெருமழையார் உரை கூறுமுறையென ஓரலாம். பாடவேற்றுமையைத் தனித்துச் சுட்டாது உரையினைப் பின்னி அவற்றிற்குரிய விளக்கமும் தந்து, பொருத்தப்பாட்டையும் மொழிகுவது ஔவையார் உரையமைப்பு எனக் கொள்ளலாம். இவைபோன்ற கட்டமைப்பு வேறுபாடுகள் தென்படுகின்றனவேயன்றிப் பாவின் விளக்கவுரைகளில் எவ்வித வேறுபாடுகளுமில்லை.

**நெய்தல்உரைகள்**

இரண்டாவது திணையாக ஐங்குறுநூறு முன்வைக்கும் நெய்தல் திணைப் பாடல்களில் இரு உரைகாரர்களும் மெய்ப்பொருளில் மாறுபாடு கொள்ளவில்லை. பா.எண். 107. தோழி செவிலிக்கு அறத்தொடு நிலை குறித்துக் கூறும் பாடலிது. உரையினை நிறைவு செய்யும் போழ்தில் ஔவை துரைசாமியார் ''அறத்தொடு நிலைப்பகுதி ஏழனுள் இது செவிலியொடு உசாவுவாள் போலக் கூறுதலின், கூறுதல் உசாவல்''[5] என்று உரைதீட்டுவார்.

தமதுரையில் பெருமழைப்புலவர் அறத்தொடு நிலைவகை ஏழன் இப்பாடல் அமைவுறுதலை ஏற்கிறார். ஆனால் அவர் ''அறத்தொடு நிலைவகை ஏழனுள் இஃது இருவரும் தாமே எதிர்ப்பட்டாற் போலும், யானஃதறியேன் என்பதுபடக் கூறுதலின் ''தலைப்பாடு'' என்பதன் பாற்படும்''[6] என்பர். மூலப்பாடலின் வெளிப்பாடு அறத்தொடு நிற்றல் என்பதில் இருவரும் ஒன்றுவர். முதலுரைகாரர் 'கூறுதல் உசாதல்' என்ற பகுதியைக் கருத, இரண்டாமவர் 'தலைப்பாடு' என்ற பகுதியைக் கருதுவர். இவைபோன்று

தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகளில் வேறுபாடுகள் அமைகின்றன. இப்பான்மையைப் பாடல்கள் பல பகரும்.

**குறிஞ்சியில் பூத்த உரைமலர்கள்**

மூன்றாம் திணை குறிஞ்சி. இந்தத் துறையிலமை பாக்கள் இருவராலும் அலசப் பெற்றுள. இப்பாடற்குப் பழையவுரை கிடைத்திலது. எனவே இருவர்தம் நேரடி உரைகள் தோன்றுகின்றன. 'தலைமகனின் குன்றம்பற்றிப் பாடவில்லை என்றால் அதனால் வெறியாடும் வேலனுக்கு என்ன பயன்' என்பது பாவின் முதன்மைப் பொருள். இப்பாடல் பற்றிய உரையில் ஔவைப் புலவர் வெறியாட்டை விலக்குதல் வேண்டுமென விரைபவள் தோழி எனக் குறிக்கவில்லை. ஆனால் பெருமழையார் ''தோழி, தலைவி கற்புக்கடம் பூண்ட செய்தியைச் செவிலிக்குக் குறிப்பாக உணர்த்தி வெறியாடல் விலக்கும் பொருட்டு அவள் கேட்பத் தலைவிக்குக் கூறுவாளாய்க் கூறியது''[7] என்பார். துறை விளக்கப் பகுதியில் இஃது இடம்பெறும்.

அதைப்போலவே, தலைவனின் குன்று பாடப்பெறும்போது தலைவி மகிழ்ச்சிபெறுவாள் எனபதான குறிப்பெதனையும் ஔவையூரார் குறிப்பிடவில்லை. ஆனால் பெருமழையூர்ரோ ''வெறியாடுங்கால் வேலன் முருகனுறையும் மலைகளையேத்திப் பாடுதல் மரபு. அங்ஙனம் பாடுங்கால் அவற்றுள் நம் பெருமானுக்குரிய மலையும் பாடப்படும் ஆகலான் அவ்வழி நின்நோய் தணியும். . . தலைவனுடைய குன்றத்தைப் பாடுங்கால் தலைவி மகிழ்வாள் என்பதனை,

''அகவன் மகளே அகவன் மகளே
. . . . ''

எனவரும் குறுந்தொகையானும் (23) (ப.364) என்று சித்திரிப்பார். இதனால் முன்னவர் உரையில் இடம்பெறாத சில புதிய பகுதிகளைத் தமதுரையில் பின்னவர் மொழிவதை உணரலாம். தேவைக்கேற்ப உரைகளின் அகலநீளங்கள் அமையுமாற்றை இப்பகுதி இயம்பும்.

உரையின் நிறைவுப் பகுதியில் ''இஃது உறுபெயர்கேட்டல்' என்பது ஔவையார் மொழி. ''மெய்ப்பாடு - அச்சம்; பயன்- வெறிவிலக்கி அறத்தொடுநிற்றல்'' என்பது பெருமழைக்காரர் வழி. இவற்றைப் போல மிகமிகச் சிறிய வேறுபாடுகளைப் பல பாக்களின் உரைப்பகுதிகள் பதிவு செய்துள்ளன.

உடன்வைத்து எண்ணத்தக்க இன்னொரு பகுதியை அடுத்த (245ஆம்) பாடலில் நோக்கலாம். சிறைப்புறத்துத் தலைவனுக்குச்

சிலவற்றைத் தோழி மொழிகுவது என்ற அடிப்படைக் கருத்தில் மாறுபாடில்லை. ''நீ விரைந்து வரைந்து கொள்வாயாக எனச் சிறைப்புறம் நின்ற தலைமகன் கேட்ப வரைவு கடாய வாறாம்'' (ப.78) என ஔவையார் எழுதவும், ''. ..அவன் சிறைப்புறத்தானாக அவன் கேட்பத் தன் நெஞ்சிற்குக் கூறுவாளாய்க் கூறியது'' (ப.364) எனப் பெருமழையார் எழுதுவார். முன்னுரையில் இடம்பெறாத 'நெஞ்சம்' பின்னுரையில் உடன்சேரும். மையக்கருத்துக்கு இதனால் குந்தகமேதுமில்லை எனினும் கூற்று நிகழ்த்துநரின் பணியினை வெவ்வேறாகக் காட்டும் முறைமையினை ஓர்தல் வேண்டும். முன்னவரின் கூற்றில் நெஞ்சம் மறைமுகமாக உணர்த்தப்பெற்றுள்ளது எனக் கொள்ளின் உரையெழுத்துகளில் மட்டும் புலனாகும் சொல்லாடலைக் கணக்கிலெடுக்க வேண்டியதாகாது.

**பாலைப் பாக்களும் உரைகளின் பாங்கும்**

''பல்லிருங்கூந்தல் மெல்லிய லோள்'' எனத் தொடங்கும் பாலைத் திணைப்பாடல் இவண் கவனத்திற் கொள்ளப்பெறுகிறது. ஔவையூராற் இயல்புரை வழங்குவார். இப்பாடலுக்கான தம் உரையில் மேலப்பெருமழையூரார் துறைவிளக்கம் கூறிய பின்னரே ''குறிப்பு : இந்தக் கருத்து விளக்கமில்லாதிருத்தல் கூர்ந்துணர்க' (ப.481) எனப் பேசுவார். செய்தியை விளக்குமிடத்துப் பரிபாடல் செய்யுலொன்றை இடையிட்டு, ''எனவரும் பரிபாடலானும் அதற்கு யாம் வகுத்துள்ள உரையானும் அறிக'' (ப.482) என்ற பகுதியும் கணக்கிலெடுக்கப்பெற வேண்டும். கூடுதலாக ''இங்ஙனம் பொருள் கூறவறியாது பிறரெல்லாம் பொருந்தாவுரை கூறுவராயினர்'' (மேலது) என்பது உற்று நோக்குதற்குரித்து.

பொதுவாகப் பாடவேற்றுமை ஒற்றைச் சொல்லாகவோ தொடராகவோ அமையும். 375ஆம் குறுந்தொகைப்பாடல் பாலையின் 5ஆம் பாடல். ''இதுவென் பாவை பாவையிது'' எனத் தொடங்கும். இதற்குப் பாடவேறுபாடாக ''இதுவென் பாவைக்கினிய நன்பாவை'' எனத் தொடங்கும் ஆறடிப் பாடல் சுட்டப்பெறும். தம் உரையைத் தீட்டியபின் துரைசாமியாற் வேறுபாட்டுப் பாட்டை எழுதிப்பின் சொற்கூட்டலை வகுத்துரைப்பார். சோமசுந்தரனாரும் அவ்வாறே. ஆனால் முதனுரைகாரர் 'பூங்கணோள் நீங்கினளோ' என வினைமுடிப்பார். இரண்டாவதுரைகாரர் ''காண்டொறும் கலங்கினலோ'' என வினைநிறைவுகொள்வார்.

**முல்லைத் திணைப்பாக்களும் இருவர்தம் உரைகளும்**

ஐயங்குறுநூற்றின் நிறைவுத்திணை முல்லைத்திணை. 'விரவுப்பத்து' என்ற பெயரில் 421ஆம் பாடல் முதல் 430ஆம்

பாடல்வரை பத்துப்பாக்கள் அமையும். பெயர்க்காரணம் கூறுழி முன்னவர் ''உணர்ந்தோர் கூற்றும், தலைமகன் கூற்றும், தோழி முதலானோர் கூற்றும் விரவி வருதலின் இப்பெயராயிற்று' (ப.388) என்பார் பின்னவர் ''முல்லைத் திணைக்குட்பட்ட பல்வேறு துறைகளும் விரவிவந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு'' (ப.674) என்பார்.

45ஆம் எண்ணுடை பாவும் குறிக்கத்தக்கது. ஔவைதுரைசாமி ''இது பகைவயிற் பிரிந்தோன் பருவங்கண்டு தலைவியை நினைந்து நெஞ்சொடு புலம்பியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல்.பொருள்.41)'' எனத் தொல்காப்பியப் பொருளதிகாரத் துணையை நாடுவார் (ப.417). பொ.வே. சோமசுந்தரனார் ''இதனை, 'ஒன்றாத்தமரினம்' (தொல்.அகத்.41) என்னும் நூற்பாவின்கண் பாசறைப் புலம்பலும் என்பதன்கண் அமையும்'' (ப.700) என்பார். இங்ஙனம் முன்னோர்தம் உரைகளை மேற்கோளாகக் காட்டலும், காட்டாமையும் இருஉரைகளிலும் இழையக் காணலாம்.

பாணன் பத்து, இஃது ஒரு பத்துப்பாக்களுக்கான தலைப்பு. இத்தலைப்பின் கீழ் எட்டேகால் பக்கங்கள் நீண்ட உரை தீட்டுவார் ஔவையார். (ஏறத்தாழ 262 வரிகள்). இவ்வுரை தனிதுவமானது. தம் மனவருத்தத்தையும் பண்டைத் தமிழர் மாண்பினையும் ஒருசேர நல்கும் பகுதி இது.

> ''தமிழகத்துத் தமிழினத்தவர்களுக்குள்ள பிறவிப் பண்புகளுள் புதுமை காமுறுதல் என்பது சிறந்தஒன்றறாம் . . . . . .''

யாவரேனும் புதியவர் வரக்காணின்றும் புதுக்கருத்தும் புதுமொழியும் எய்தப் பெறினும் அவர்தம் குணம் செயல்களையோ, அவற்றின் நலந்தீங்குகளையோ முன்னுற நோக்காது வரவேற்று மேற்கொண்டு தழீஇச் செல்வது அப்புதுமைக் காமத்தின் செயற்சிறப்பாகும். . .புதுமையால் பெருங்காமம் கொண்டு அதற்குத் தலைதாழ்ந்து மேற்கொண்டொழுகும் மனப்பான்மை தமிழினம் ஒன்றினிடத்தில்தான் சிறந்து காணப்படுகிறது. அதன் விளைவே, இன்று தமிழினம் தாழ்ந்து, பிறர்க்குப் பணியாளாம் சிறுமை எய்தி நிற்பதும், சீனரும் சப்பானியரும் வல்லரசுகளாய் வாழ்வதுமாகும். சங்ககாலத்துக்குப் பின்புதான் தமிழினத்தை இந்தப் புதுமைக்காமவெறி பற்றி அலைக்கத் தொடங்கிற்று. புதுமைக்கு முதன்மையும் தலைமையும் தந்து பேணியதனால், தனக்குரிய தமிழ்க் கருத்துகளையும் தமிழ்மொழியையும் தமிழினம் புறக்கணிக்கத் தலைப்பட்டது.

புதுமைவெறி பற்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கழியினும், இன்னம் 'தமிழ்தானே' எனப் புறம் பழிக்கும் புல்லறிவு, கற்றுவல்ல பெரியோர் முதல் கல்லா இளைஞர் ஈறாக எல்லாருடைய பேச்சிலும் இருந்துவருவது நாடறிந்த உண்மை. ''ஆங்கிலம்தானே'' என எந்த ஆங்கிலேயனும், ''சருமணிதானே'' என எந்தச் சருமானியனும், ''வங்காளம்தானே'' என எந்த வங்காளியும் கூறுதற்கு நாணும் கீழ்மையுரை, கற்ற தமிழன் நாவில் தங்குதடையின்றித் தவழ்ந்து விளையாடுகின்றதென்றால் தமிழினம் கீழ்மக்களினத்திலும் கடைப்பட்ட கீழினமாயிருப்பது இந்தப் புதுமையிற்காமுறும் புன்மைப்பண்பு தந்த பொதுப்பரிசு என்னலாம்'' (பக்.451-452). பாணன் யார் என விளக்கப்போந்த ஔவை துரைசாமியின் அடர்த்தியான இந்தவுரை பொன்மலர் நாற்றம்பெற்றது போலாம். இப்பகுதியை நீக்கிடினும் உரைக்கு இடைஞ்சலில்லை. ஆனால் அவருடைய காலத்துப் பச்சைத் தமிழர்களின் நாடித்துடிப்பாக இதனைக் கருதவேண்டும். எனவே அவரின் உரைக்குக் கூடுதற்பொலிவு கிட்டியுளது என்பதுண்மை. நேரடி உரை என்பதனைத் தம் வரையறையாகக் கொண்டவராகப் பெருமழைப்புலவர் 'பாணன்பத்து' என்ற தலைப்பின்கீழ் ''பாணனுக்குக் கூறும் கூற்றாகவும் பாணன் கூற்றாகவும் வருகின்ற பத்துப்பாடல்களின் தொகுதி என்பதாம்'' (ப.741) என மட்டும் செய்திருப்பார்.

477ஆம் பாடலின் உரையில் ''ஒன்றாத் தமரினும் தொல்.அக.41) என்னும் நூற்பாவின்கண்வரும் 'பாசறைப் புலம்பலும்' என்னும் விதிகொள்க'' (ப.750) எனப் பொதுப்படப் பேசுவார் மேலைப் பெருமழைக்காரர். ஔவையார்குப்பத்தாரோ நூற்பாவை முன்நிறுத்தாதும் தம் பன்னூற்புலமையை முன் நிறுத்தியும் ''இது 'தலைவிமட்டும் பாணனைத் தூதாகவிடும் தலைவன் கூறியது என்பார் நச்சினார்க்கினியர் (தொல்.பொருள்.41) இது தூதுவிடம் தலைமகன் கூறியதென்பர் இளம்பூரணர் (தொல்.பபொருள்.48) (ப.470) என்பார். இவ்வகையான உரைவேறுபாடு காணப்பெறுவதைப் பல பக்கங்கள் பரசும்.

480ஆம் பாடலின் உரையில் கூடுதற்செய்திகளை ஔவை துரைசாமிப்பிள்ளை வரைந்திருக்கவில்லை. பொ.வே. சோமசுந்தரரோ நிகரான புறநானூற்றுப் பாடலொன்றையும் (147ஆம் பாடல்) புறப்பொருள் வெண்பா மாலை நூற்பாவையும் (19ஆம் நூற்பா) கூறுவார். எனவே உரைகாரர்கள் தம் புலமைப் பாட்டிற்கேற்பவும்

தளத்திற்கேற்பவும் உரைப்பரப்பை உருவாக்கிக் கொண்டனரென்பது போதரும்.

## துணைநூல்கள்

1. செவ்விலக்கியக் கருவூலம், ஐங்குறுநூறு-1 (ஔவை. துரைசாமிப் பிள்ளை உரை) ப. (தமிழ்மண் அறக்கட்டளை, 2008)
2. மேலது, ப.68
3. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.)., ஐங்குறுநூறு, கழக வெளியீடு, மறுஅச்சு, ப. 31. 2009
4. ஔவை.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.)., முற்சுட்டப்பெற்ற நூல், ப.68
5. மேலது, ப.300
6. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.) முற்சுட்டப்பெற்ற நூல், ப.162
7. மேலது, ப.363
8. ஔவை துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.) ஐங்குறுநூறு-2, முற்சுட்டப்பெற்ற நூல், ப.76

# அகநானூறு நெய்தல் பாடல்கள்
# (சுவடி வேறுபாடுகளும், தீர்வுகளும்)

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

**அகநானூறு**

ஸ்ரீ உ.வே.ரா. இராகவையங்கார் சுவாமிகள் சோதித்து தந்தன என்ற பதிப்பிற்கு முகவுரை எழுதிய ரா. இராகவையங்கார்

இந்த நூற் பரிசோதனைக்குத் துணையான பிரதிகள் எனக் கீழ்க்கண்டவற்றைத் தருகிறார்.

சென்னை Oriental Manuscript Library பிரதியைப் பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி-மி. (இது செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ உ.வே. திரு. நாராயண ஐயங்கார் சுவாமிகள் தமிழ்ச் சங்கத்திற்குத் தந்துவிய தேவர்பிரான் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியுடன் ஒப்புநோக்கித் திருத்தஞ் செய்யப்பட்டது).

பெரும்பழனை ஏட்டைப் பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி - 1.

திருநெல்வேலி ஸ்ரீமான் நெல்லையப்பக் கவிராயரவர்கள் ஏடு - 1.

காலஞ்சென்ற சென்னை ஸ்ரீமான், தி.த. கனகசுந்திரம் பிள்ளை அவர்கள் ஏடு - 1.

காகிதப் பிரதி - 1.

சென்னை மே:ி ராணியார் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா. நமச்சிவாய முதலியாரவர்களின் பிரதி - 1.

திருமயிலை வித்வான். ஸ்ரீமான் சண்முகம் பிள்ளையவர்கள் ஏடு (இது குறை) - 1.

இங்ஙனம் பொருளானுஞ் செல்வாக்கானும் பிரதிகளானும் இந்நூல் அச்சிடுவதற்கண் உபகரித்த பெரியோர்கட்கும், பொருட் செலவையும் சிரமத்தையும் சிறிதும் பாராட்டாது இதனை வெளியிடுதலிலே கண்ணுங் கருத்துமுடையராய் வேண்டிய

வேலைகளைச் செய்து நிறைவேற்றிய ஐயங்காரவர்கட்கும் இத்தமிழ்நாடு நன்றி பாராட்டுக் கடப்பாடுடையதாகும்.

இங்ஙனம்
ரா. இராகவையங்கார்
ஸேதுஸமஸ்தான வித்துவான்

(செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு - தமிழ்ப் பதிப்பு வரலாற்று ஆவணம் - பதிப்பாசிரியர், கா. அய்யப்பன் - வெளியீடு, காவ்யா - பக். 216).

அகநானூறு - டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையப் பதிப்பில் பதிப்பாசிரியர் வே. சிவசுப்பிரமணியன் அவர்கள் தந்துள்ள குறிப்புகள்.

**ஏட்டுப்பிரதிகள்**

எண்28. மூலம் முழுமையில்லை (1-350 செய்யுள்கள்)

107 மூலம் முழுமையில்லை (5-400 செய்யுள்கள்)

297 அரும்பதவுரை 1 முதல் 90 செய்யுள்களுக்கு (அரும்பதவுரையும் சிற்சில இடங்களில் விளக்கமும்)

292 அரும்பதவுரை 1-155 உள்ள செய்யுள்களில் சிலவற்றிற்கு அரும்பதவுரை உள்ளது.

394 திரட்டு (மூலமும் உரையும்) இதில் தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் முதல் கரு, உரிப்பொருள் என்ற மூன்றாவது நூற்பாவுக்கு நச்சினார்கினியர் மேற்கோளாகக் காட்டிய 1, 4, 40, 46, 218 ஆகிய ஐந்து செய்யுள்களுக்கு உரை எழுதி இலக்கணக் குறிப்புகளும் எழுதப்பெற்றுள்ளன. இவ்வுரையாசிரியர் யார் என்பதுபுலப்படவில்லை.

**கையெழுத்துப் பிரதிகள்**

4 மூலம் முழுமை

5 மூலம் மணிமிடைபவளம் இல்லை

11 மூலம் முழுமை இருபது குருகூர்ப் பிரதி

7 மூலம் முழுமையில்லை (களிற்றியானை நிரை மட்டும்)

6 மூலம் மிகவும் சிதிலமடைந்துள்ளது

8 மூலம் முழுமை மணிமிடை பவளம் மட்டும்

10 மூலம் முழுமை மணிமிடை பவளம் மட்டும்

9 மூலம் முழுமை நித்திலக்கோவை மட்டும்

(அகநானூறு-களிற்றியானை நிரை-மூலமும் உரையும்-பதிப்பாசிரியர், பேராசிரியர், வித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்-மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகர், சென்னை 90, பக். xx).

சுவடியின் பாடவேறுபாட்டிற்கு ஒரு சிறந்த சான்று தரலாம். சிலப்பதிகாரத்தில், இப்பாடல் தி.க. சுப்பராயச் செட்டியார் புகார்க் காண்டம் 1880 முதல் பதிப்பில் இவ்வாறு உள்ளது.

**சொன்மடவன்னஞ் சொன்னடை யொவ்வா**
**ஊர் நீரோத மூழ்கித் திரிவான் முன்**
**சொன் மடவன்னஞ் சொன்னடை யொவ்வாய்**

தி.க. சுப்பராயச் செட்டியார் பதிப்பு
முதல் பதிப்பு, புகார்க்காண்டம் 1880

இப்பாடல் உ.வே.சா. 1892இல் முதற்பதிப்பில் இவ்வாறு உள்ளது.

**சொன்னமடவன்னஞ் சொன்னடை யோவ்வாய்**
**சொன்னவன்னஞ் சொன்னடை யொவ்வாய்**
**ஊர்திரை நீர்வேலி யுழக்கித்திரிவாள் பின்**
**சொன் மடவன்னஞ் சொன்னடை யொவ்வாய்**

உ.வே. சாமிநாதையர் முதல்பதிப்பு 1892
(மறுபடியும் உ.வே.சா. முதற்பதிப்பைப் பார்க்க)

**சேரல் மடஅன்னம் சேரல் நடை ஒவ்வாய்**
**சேரல் மடஅன்னம் சேரல் நடை ஒவ்வாய்**
**ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள் பின்**
**சேரல் மடஅன்னம் சேரல் நடை ஒவ்வாய்**

பதிப்புச் சக்கரவர்த்தியாகிய டாக்டர். உ.வே.சாமிநாதையர் சிலப்பதிகார முதற்பதிப்பில் இப்பாடல் என்ன நிலையில் உள்ளது என்பதை நாம் அறிகிறோம்.

அதற்குக் காரணம் சேரல் என்ற சொல், சொல் என்று உள்ளது. பழங்காலத்தில் குறிலுக்கும், நெடிலுக்கும் உள்ள கொம்பு குறிலாகவே அமையும். அதோடு நெடிலைக் குறிக்கு (ா) காலுக்கும் ரகரத்திற்கும் வேறுபாடின்றி எழுதினர். அதனால் ஏட்டில் சொல் என்றிருப்பதை சேரல் என்று எழுத வேண்டும்.

அகநானூற்று நெய்தல் பாடல்களாக 40 உள்ளன. அதாவது 10, 20, 30, 40... இவ்வாறு பத்தாம் எண்ணில் அமையும் பாடல்கள் அனைத்தும் நெய்தல் பாடல்கள். அகநானூற்றில் 400 பாடல்களில் 40 பாடல்கள் நெய்தல் பாடல்கள்.

அவற்றில் சுவடி வேறுபாடுகளாக உ.வே.ரா. ராகவையங்கார் ஸ்வாமிகள் பதிப்பும் (1923), உ.வே. சாமிநாதையரின் மயிலம்

பேராசிரியர் வித்துவான் வே. சிவசுப்பிரமணியன் அவர்களுடைய பதிப்பையும் (1990) அடிப்படையாக அமைத்து அவர்கள் பிரதிபேதம என்று கூறுவதை, நான் இன்று சுவடி வேறுபாடு என்று கூறுகிறோம். அதைக் கீழே தந்துள்ளோம்.

பாடல் எண் 10. தோழிக் கூற்று

வரி. 5 பைதல கலுழப் பைதலுழப்ப - உ.வே.ரா, பைதல கலிழ - உ.வே.சா.

6 ஆயின் நன்றும் - ஆயின் என்பதூஉம் - உ.வே.சா.

7 அரிதுஉற்றனையால் - அரிதுற்றனை - உ.வே.ரா.

9 குரூஉத்திரைப்-குரூஉக்கிளை- உ.வே.ரா, உ.வே.சா. குழூஉத்திரை

உடைதரும் - அடைதரும் - உ.வே.ரா.

10 திமில்கொன்ற - திமில்சென்ற - உ.வே.ரா.

11 மீன்கெண்டி - மீன்கெண்டை - உ.வே.சா.

பாடல் எண் 20. தோழிக் கூற்று

வரி. 5 ஞாழல் - நாழி - உ.வே.சா.

ஓங்குசினை - ஒடுங்கசினை - உ.வே.ரா.

9 அணித்தகப் - அணித்தகைப் - உ.வே.ரா.

புலவர் பெயர் - உலோச்சனார் - பொருந்தில் இளங்கீரனார்

பாடல் எண் 30. தோழிக் கூற்று

புலவர் பெயர் - முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்

முடங்கிடந்த நெடுஞ்சேரலாதன்

முடக்கிடந்த நெடுஞ்சேரலாதன்

பாடல் எண் 40. தோழிக் கூற்று

வரி. 1 கானல் மாலை கழிப் - கானல் மலரக கழிப் - உ.வே.சா.

6 தூக்கி - தூங்கி - உ.வே.ரா.

8 கையறுபு இனைய - கையறுபு உடைய - உ.வே.சா.

9 துயரம் செய்து - துயரரு செய்து - யாமஞ் செய்து - உ.வே.சா உடைதரும் - அடைதரும் - உ.வே.ரா.

11 அவண்உறை - அவண்உறைவு - உ.வே.ரா.

அவண்உறை முனனஇ - அவண்உறைபு முனைஇ- உ.வே.சா.

பாடல் எண் 50. தோழிக் கூற்று

வரி11 மடிவாய் - மடல்வாய் - உ.வே.ரா,

புலவர் பெயர் - கருவூர்ப் பூதஞ்சாத்தனார் -கருவூர் பூதனார் மகனார் கொற்றனார் - உ.வே.ரா.

பாடல் எண் 60. தோழிக் கூற்று

வரி5 அயிலை - அயிரை - உ.வே.சா.

6 அலர்வாய் - அலைவாய் - உ.வே.ரா.

9 பொன்வீ - பொன்வீழ் - உ.வே.சா.

13 கவுரியர் - கவிரியர் - உ.வே.ரா.

பாடல் எண் 80. தோழிக் கூற்று

வரி5 பரப்பகம் - பாக்கம் - உ.வே.ரா.

பரப்பகம் - பாக்கத்துத் - உ.வே.சா.

6 ஓப்புதும் - ஓப்பு - உ.வே.ரா.

8 ஒண்பன் - ஒண்பொன் - உ.வே.சா.

11 அவிழ்பொற் - வீழ்பெயற் - உ.வே.சா.

12 அவிழ்பொன் தண்நறும் - அவிழதண்ணுறும் -உ.வே.சா.

12 பைந்தாது உறைக்கும் - பைந்தாது உரைக்கும் -உ.வே.சா.

பாடல் எண் 90. தோழிக் கூற்று

வரி2 சிதைக்கும் - சிதைதரும் - உ.வே.சா.

3 தளைஅவிழ் - தழைஅவிழ் - உ.வே.சா.

12 கருங்கட்கோசர் - கருங்கோட்கோசர் - உ.வே.ரா.

பாடல் எண் 100. தோழிக் கூற்று

வரி1 அரையுற்று அமைந்த - அறையற்றமை - உ.வே.ரா.

17 நெய்தல்அம் புதுமலர் - நெய்தற் புதுமலர் - உ.வே.ரா.

நெயத்ல்அம் புதுமலர் என்பது பிந்திய சுவடியாகவும், நெய்தற்புதுமலர் என்பது முந்திய சுவடியாகவும் இருக்கலாம். அம் சாரியை பிற்காலத்தில் தோன்றியிருக்கலாம்.

பாடல் எண் 110. தோழிக் கூற்று

வரி5 நினக்கே கானல் - நினக்கெனக் கானல் - உ.வே.சா.

8 வருந்தியவருத்தம்தீர-வருந்தியவருஞ்சுரம்-உ.வே.சா.

பாடல் எண் 130. தோழிக் கூற்று

வரி3 கொழுமுகை - குறுமுகை - உ.வே.ரா., உ.வே.சா.

5 பேஎய்த் தலைய - பெய்தறலைஇய - உ.வே.ரா., உ.வே.சா.

6 நெடுந்தோடு - நெடுங்கோடு - உ.வே.ரா., உ.வே.சா.

7 வாலிதின் விரீஇ - விரிய விரைஇ - உ.வே.ரா, உ.வே.சா.

8 பொருதுஅழித்த - பொருதிழிந்த - உ.வே.ரா., பொருதழிந்த - உ.வே.சா.

10 கவர்நடை - கவர்பரி - கவர்காற் - உ.வே.ரா., க வர்காற் - உ.வே.சா.

12 திறந்த - திறக்கும் - துறந்த - உ.வே.ரா, உ.வே.சா.

13 புறங்கொடுத்த - புறக்கொடுத்த - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 140. தோழிக் கூற்று**

வரி4 என்றூழ்விடர - என்றூழ் விடாஅக் - உ.வே.ரா., உ.வே.சா.

5 கதழ்கோல் உமணர் - கதர்கோல் உமணர் - உ.வே.ரா., கதழ்கோல் உமணர் - உ.வே.சா.

8 சேரி விலைமாறு கூறலின் - சேரி விலைமாறு கூறி நுவறலின் - உ.வே.சா.

14 கைபூண் பகட்டின் - நையூண் பகட்டின் - உ.வே.ரா, உ.வே.சா.

**பாடல் எண் 150. தோழிக் கூற்று**

வரி2 வம்புவிடக் - வம்புடை - உ.வே.ரா., உ.வே.சா.

4 எல்லினை - எல்லிவள் - உ.வே.ரா., உ.வே.சா.

11 தண்ணென மலரும் - கண்ணென மலரும் -உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 170. தோழிக் கூற்று**

வரி3 ஒருநின் அல்லது - ஒரு நீ அல்லது - உ.வே.ரா., ஒருநின்னை அல்லது - உ.வே.சா.

7 பறைஇ தளரும் - பறவை தளரும் - உ.வே.சா. பறைஇ கிளரும் - உ.வே.ரா.

8 வேண்டுமால் அலவ - வேண்டுமார் அலவ - உ.வே.ரா. வேண்டுமார் அலவ - உ.வே.சா.

10 காக்கை காமர் - காக்கைக் காமர் - உ.வே.சா. (ஒற்று மிகுதி)

11 வேட்டம்மடி - வேட்டுமடி - உ.வே.சா.

**பாடல் எண் 180. தோழிக் கூற்று**

வரி11 முள்ளுடை - முள்ளிடை - உ.வே.ரா., புலவர் பெயர் - கருவூர்க் கண்ணம்பாளனார் - கருவூர்க் கண்ணபரணனார்

**பாடல் எண் 190. தோழிக் கூற்று**

வரி6 ஊலையயல் - னலையயல் - உ.வே.ரா., உ.வே.சா.

உயர்சிமைப் - உயர்மிசைப் - உ.வே.ரா., உ.வே.சா.

10 அலைப்பவும் உ(மு)ழைக்கடல் வழங்கலும் உரியன அலைப்பவும் மழைக்கடல் வழங்கலும் வெய்யன தென்றளை - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 200. தோழிக் கூற்று**

வரி4 இன்னா உறையுட்டு - இன்னா வரையுட்டு - உ.வே.ரா. உ.வே.சா.

7 வளைமெய் பரப்ப - வளையே பாய - உ.வே.சா.

9 சிறைபல - சிறைப்பல - உ.வே.ரா. (ஒற்றுமிகுதி)

13 பெட்குவம் - பெட்குவோமது - உ.வே.சா.

பெட்குவநும்மொப்பது - உ.வே.ரா.

14 உரைத்திசின் - விரித்திசின் - உ.வே.ரா., உ.வே.சா.

வரிதிசின் - உ.வே.சா.

**பாடல் எண் 210. தோழிக் கூற்று**

வரி4 பசும்பிசிர்த் - பசும்பிதிர் - உ.வே.ரா., உ.வே.சா.

6 படர்தரும் துறைவன் - படரும் துறைவன் - உ.வே.ரா.

12 விலங்கச் - விலங்கிச் - உ.வே.சா.

**பாடல் எண் 220. தோழிக் கூற்று**

வரி4 குழூஉச் சமம் - குரூஉச்சமம் - உ.வே.ரா., உ.வே.சா.

11 நிலையினை வருந்தினை - நிலையின் வருந்தினை - உ.வே.ரா.

13 பழம்புல் நெல்லின் - பழம்படு நெல்லின் - உ.வே.சா.

14 இரும்புள் - இருபுள் - உ.வே.ரா., உ.வே.சா.

15 மாறாக் - மாறாஅக் - உ.வே.சா. (அளபெடை மிகுதி)

**பாடல் எண் 230. தோழிக் கூற்று**

வரி3-4 மாத்தழை இருந்த அல்குல் - மாத்தழையருந்த - உ.வே.ரா., உ.வே.சா.

6 உதிர்த்த - உதிர்ந்த - உ.வே.சா.

உதிர்ந்த என்பது பொருத்தமான பாடமாகும்.

9 இம்மனை - இல்லுடை - உ.வே.ரா., உ.வே.சா.

14 அரிவேய் - அரிவை - உ.வே.சா.

**பாடல் எண் 240. தோழிக் கூற்று**

வரி1 செவ்வீ ஞாழல் - செவ்வி ஞாழற் - உ.வே.சா.

கோட்டிருஞ்சினை - கோட்டருஞ்சினை - உ.வே.ரா.

**பாடல் எண் 250. தோழிக் கூற்று**

வரி1 பிசிர் - பிதிர் - உ.வே.ரா.

10 அரும்படர் - அரும்பட - உ.வே.சா.

**பாடல் எண் 260. தோழிக் கூற்று**

வரி2 மலர்பாய்ந்து ஊத, மீமிசைக் - உ.வே.ரா.

மலர்பரந்து ஊத, மிசையக் - உ.வே.ரா.

மலர்பரந்து ஊத மீமிசை - உ.வே.சா.

பாய்ந்து - பரந்து - பா விலுள்ள நெட்டெழுத்துக் குறிப்பு ரகரமாவது இயல்பு.

வரி4-5 மறப்பக்கரை - மறப்பத்தகை - உ.வே.ரா., உ.வே.சா.

வரி11 யாங்கு ஆகுவல்கொல் தானே -

யாங்கு ஆகுவன்கொல் தானே -

யாங்கு ஆகுவள்கொல் தானே - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 270. தோழிக் கூற்று**

வரி1-2 நீலம்புலாஅல் மறுகின் -

நீலங்கயற் புலான் மறுகிற் -

நீலமுண் புலான் மறுகிற் -

நீலமுண் புகாஅர் மறுகிற் - உ.வே.ரா.

5 சேயிறாத் துழந்த - சேயிறா முகந்த - உ.வே.ரா

6 சினைத்தோயும்- சினைத்தொடுத்த - உ.வே.ரா.

10 தொல்நலம் தொலைய - தொல்நலம்சிதைய - உ.வே.ரா.

சிதைய என்பது பொருத்தமான பாடமாகத் தோன்றுகிறது.

14 உயங்கும் - உயவும் - உ.வே.ரா.

15 நும்ஊர் உள்ளுவை - நும் ஊர் உள்ளுதிர் - உ.வே.ரா.

**பாடல் எண் 280 தலைமகன் கூற்று**

வரி4-5 குறுமகள் நலம்சால் விழுப்பொருள் - உ.வே.ரா.

குறுமக ளஞ்சொல் விழுப்பொருள் - உ.வே.சா.

6 ஆயின் அறம்தெரிந்து - ஆயினத்தில் - உ.வே.ரா

10 அடுத்தனம் இருப்பின் - அடுத்தனம் விரும்பிற் - உ.வே.ரா.

13 தேனிமிர் அகன்கரை - தேனிமிர் தண்கரை - உ.வே.ரா.

14 பரதவன் நமக்கே - பரதவன் மகளே - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 290. தலைமகன் கூற்று**

வரி1 பேடை - பெட்டை - உ.வே.சா.

11 மணவா - மன்னவா - உ.வே.சா

15 மணிஞர் மாண்நலம் - அடுத்தனம் விரும்பிற் - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 300. தலைமகன் கூற்று**

வரி9 கலுழ்ந்து - கவிழ்ந்து - உ.வே.ரா.

கவிழ்ந்து - உ.வே.சா.

13 வருநர் - வருவோர் - உ.வே.சா.

பேணா - பேணாப் - உ.வே.ரா. (ஒற்றுமிகுதி)

14 இருங்கலி யாணர் - பெருங்கலியாணர் - உ.வே.ரா.

இருங்கலி யானா - உ.வே.சா.

தோன்றின் - தோன்றின - உ.வே.ரா.

**பாடல் எண் 310. தோழிக் கூற்று**

வரி3 அழிவுமுந் துறுத்து - அறிவுமுந் துறுத்து - உ.வே.சா.

7 தாயுடை நெடுகர் - தாயுறை வியனகர் - உ.வே.ரா., தாயுடை நெடுகர் - உ.வே.சா.

9 உடையரோ சிறிதே - உடையன் சிறிதே - உ.வே.ரா., உ.வே.சா.

11 சென்றப் - சென்றிப் - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 320. தோழிக் கூற்று**

வரி3 செல்வத் தங்கையர் - செல்வர் தங்கையர் - உ.வே.ரா, உ.வே.சா.

7 பகரும் - நுவலும் - உ.வே.ரா., உ.வே.சா. நுவலும் முந்திய வடிவமாகலாம்.

9 அடும்புஅமர் எக்கர் அம்சிறை

அடும்பர் எக்கர் அஞ்சிறை - உ.வே.ரா., உ.வே.சா.அடும்பூர் எக்கர் ஒருசிறை - உ.வே.ரா.

14 கடல்அரி கரியே - கடலறி கடனே - உ.வே.ரா. புலவர் பெயர் - சீத்தலை சாத்தனார் - சீதங்கன் சாத்தன்.

**பாடல் எண் 330. தோழிக் கூற்று**

வரி4 வெளிப்படத்தலறி - வெளிப்பட விறீஇப் - உ.வே.ரா. நும்துயர் - நொந்துயிர் - உ.வே.ரா.

5 அயர்ந்த நெஞ்சமோடு - அயர்ந்தே நெஞ்சமோடு - உ.வே.ரா.

7 இரங்கி - இயங்கி - உ.வே.ரா.

11 உதுவகாண் - உதுக்காண் - உ.வே.ரா.

**பாடல் எண் 340. தோழிக் கூற்று**

வரி2 இன்நிழல் கழிப்பி - இன்நிழ றழீஇ - உ.வே.ரா. பொதும்பின் இன்நிழல் - பொதும்பர் இன்நிழல் - உ.வே.சா.

5 செலவுவிருப்பு - செலவிருப்பு- உ.வே.ரா., உ.வே.சா.

6 பொலம்பூண் - பொலம்பூட் - உ.வே.சா.

7 அன்னஇவள் - அனலிவள் - உ.வே.சா.

8 நல்எழில் இளநலம் - நள்எழில் இன்நலம் - உ.வே.ரா.

நல்எழில் இன்நலம் - உ.வே.சா.

11 சென்றோர் மன்ற மான்றன்று - சென்றோன் மான்றின்று - உ.வே.சா.

15 தயிர்மிதி மிதவை - தயிர்மிதி மாஅவார்குவ - உ.வே.ரா., உ.வே.சா.

16 வான்கேழ் வட்டம் - வான்கேழ் சாந்தம் - உ.வே.ரா.

18 சாந்துஅணிகுவம் - சாந்து அயர்குலம் - உ.வே.ரா.

20 கூர்உளிக் கடுவிசை மாட்டலின் பாய்புஉடன் கூ ரு ளி க் கடுவிசை மண்டலின் பாய்ந்துடன் - உ.வே.ரா.

24 தெண்கடல் பரப்பின் எம்உறைவுஇன் ஊர்க்கே தெண்திரை பரப்பின் எம்உறைவினூரே - உ.வே.ரா.

**பாடல் எண் 350. தோழிக் கூற்று**

வரி4 அலவன் நீப்ப - அலவன் இரப்ப - உ.வே.சா.

6 கொடுநுகம் - கொடுக்குழை - உ.வே.சா.

7 ஏவாது - எவாது - உ.வே.சா.

15 உவக்காண் - உவவுக்காண் - உ.வே.ரா., உ.வே.சா.

**பாடல் எண் 360. தோழிக் கூற்று**

வரி12 துஞ்சுஊர் யாமத்து - துஞ்சா யாமத்து - உ.வே.ரா.

19 புன்னை நறும்பொழில் - புன்னைய நறும்பொழில் - உ.வே.ரா.

**பாடல் எண் 370. தோழிக் கூற்று**

வரி10 கண்ணி நெய்தல் - கண்ணிய நெய்தல் - உ.வே.ரா.

**பாடல் எண் 380. தோழிக் கூற்று**

வரி1 தமியன் வந்து - தமியனின் வந்து - உ.வே.ரா., உ.வே.சா.

2 ஊர்யாது? என்ன, நணிநணி ஒதுங்கி - ஊர்யாதென்றுன்னி நனியொதுங்கி - உ.வே.ரா.

ஊர்யாதென்றுன்னி நீரணியொதுங்கி - உ.வே.சா.

7 நற்பாற்று இதுஎன - நற்பாற்றம்மென - உ.வே.ரா., உ.வே.சா.

9 உதுக்காண் - உவக்காண் - உ.வே.ரா., உ.வே.சா.

13 அம்மதோழி - அம்மா அரிவை - அம்ம வாழி - உ.வே.ரா.

**பாடல் எண் 390. தோழிக் கூற்று**

வரி1 உவர்வினை - உயர்விளை - உ.வே.ரா., உ.வே.சா.

2 அதர்படு பூழிய - அதர்படு வழிய - உ.வே.ரா., உ.வே.சா.

3 பதிபோகு நெடு - நீருநெடு - ரூரு நெடு - உ.வே.ரா., உ.வே.சா.

4 வாழ்க்கைதான் நன்று - வாழ்க்கைகான் நன்ற - உ.வே.ரா., உ.வே.சா.

9 சேரிதொறும் நுவலும் - சேரி தொறியலும் - உ.வே.ரா., உ.வே.சா.

11. விலைஎய் யாம்என - விலையே யாம்என - உ.வே.ரா., உ.வே.சா.

15. பேர்வனள் நின்ற - போவனள் நின்ற - உ.வே.ரா., உ.வே.சா.

சுவடியில் ர் என்ற எழுத்துக்கு புள்ளியில்லாமல் வருவது இயல்பு. அதனால் பேர்வனள் என்பது போவனள் என்றாகும்.

17 பல்மாண் பேதைக்கு - பல்மாண் கோதை - உ.வே.ரா. ஒழிந்தது என் நெஞ்சே - ஒழிந்த நெஞ்சே - உ.வே.ரா. ஒழிந்த நெஞ்சே என்பது முந்திய வடிவம் ஒழிந்தது என் நெஞ்சே என்பது பிந்திய வடிவம்

பாடல் எண் 400. தோழிக் கூற்று

வரி5 நீலஉத்தி - மரபி உந்தி - உ.வே.ரா.,உ.வே.சா.

9 குலவுத்தலை நல்நான்கு - குவவுத்தலை நண்ண- உ.வே.ரா.

10 நுகத்தழீஇ - நுகந்தளரா - நுகந்தனரா - உ.வே.ரா., உ.வே.சா.

23 பொதிஅவிழ் தண்மலர் கண்டும்
பொதிஅவிழ்ந் தலரக் கண்டும் - உ.வே.ரா., உ.வே.சா.

பயன்கொண்ட நூல்கள்


1. அகநானூறு - மூலமும் பழைய உரையும்-ஸ்ரீ உ.வே.ரா. ராகவையங்கார் ஸ்வாமிகள் பதிப்பு - 1923.
2. அகநானூறு மூலமும் உரையும் - 1. களிற்றியானைநிரை, 2. மணிமிடை பவளம், 3. நித்திலக்கோவை- பதிப்பாசிரியர், பேரா. வித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன் - மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகர், சென்னை 600 090, 1990.
3. அகநானூற்றுப் பதிப்பு பின்புலம் - முனைவர் மா. பரமசிவன் - காவ்யா 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024, 2012.
4. சங்கஇலக்கியம் மூலம் முழுவதும் - ச.வே. சுப்பிரமணியம். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2010.
5. செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு - பதிப்பு ஆசிரியர் கா. அய்யப்பன் - காவ்யா - சென்னை - 2009.

# அகநானூற்றில் பாட வேறுபாடு

முனைவர் அ. கந்தசாமி

தமிழிலுள்ள நூல்களுள் மிகப்பழமை வாய்ந்தவை சங்க இலக்கியங்களே ஆகும். ஏறத்தாழ கி.மு.500 முதல் கி.பி.200 வரையில் விளங்கிய கடைச்சங்கப் புலவர்களால் ஆயிரக்கணக்கானப் பாடல்கள் பாடப்பெற்றன. அப்பாடல்கள் முழுவதும் கிடைக்கப் பெறவில்லை. நல்லறிஞர்கள் சிலரால் திரட்டப்பட்ட பாடல்களுள் சிறந்த பாடல்களை மட்டும் பொருள் நோக்கியும் அடிவரையறை கருதியும் பகுத்து வகுத்து அவற்றை எட்டுத்தொகையாகத் தொகுத்தனர்.

அகநானூறு நீண்ட அகவற்பாக்களால் ஆனது. இந்நூல் 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் உடையது. இந்நூலை நெடுந்தொகை எனவும் வழங்குவர். அகம், அகப்பாட்டு என்னும் பெயர்களால் உரைவேந்தர் இத்தொகை நூலைக் குறிப்பர். எட்டுத்தொகை நூல்களுள் அகம் என்னும் பெயரை இந்நூல் பெற்றிருப்பது இதன் சிறப்பு நோக்கியே அகநானூறு எனப்பட்டது.

அகநானூற்றின் பாகுபாடு தனிச் சிறப்பு உடையது.

அ. 1 முதல் 120 பாடல்கள்வரை களிற்றியானைநிரை

ஆ. 121 முதல் 300 பாடல்கள்வரை மணிமிடைபவளம்

இ. 301 முதல் 400 பாடல்கள்வரை நித்திலக்கோவை

என்று பாகுபாடு செய்துள்ளனர்.

ஐந்து திணைகளை எளிதாக அறிய

அ. 1,3,5, .......... என்ற ஒற்றை எண்ணால் முடியும் பாடல்கள் பாலைத்திணைக்கு உரியன.

ஆ. 2, 8, 12, 18, ........ இரண்டு எட்டு என்ற எண்ணால் முடியும் பாடல்கள் குறிஞ்சித்திணைக்கு உரியன.

இ. 4, 14, .... நான்கு என்ற எண்ணால் முடியும் பாடல்கள் முல்லைத்திணைக்கு உரியன.

ஈ. 6, 16, .... ஆறு என்ற எண்ணால் முடியும் பாடல்கள் நெய்தற்திணைக்கு உரியன.

தமிழரின் காதல் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இந்நூல் 400 பாடல்களைக் கொண்டது. இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பெற்ற கடவுள் வாழ்த்து ஒன்றும் உண்டு. இதனையும் சேர்க்க 401 பாடல்கள் ஆகும். இவ்வகநானூற்றுப் பாடல்கள் ஐந்திணை ஒழுக்கங்களை விரிவாக எடுத்தியம்புகின்றன. இவ்விலக்கியத்திற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு. இதன் நானூறு பாடல்களும் 145 புலவர்களால் பாடப் பெற்றவை. அகநானூற்றுப் பாடல்வைப்பு முறையில் பின்வரும் சிறப்பினை பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1,3,5,7,9,............ | பாலைத்திணைப் பாடல்கள் | 200 |
| 2,8,12,18,........ | குறிஞ்சித்திணைப் பாடல்கள் | 80 |
| 4,14,24,............ | முல்லைத்திணைப் பாடல்கள் | 40 |
| 6,16,26,............ | மருதத்திணைப் பாடல்கள் | 40 |
| 10,20,............ | நெய்தல் திணைப் பாடல்கள் | 40 |

எனப் பாடல் எண்ணிக்கையை மையமாக வைத்துத் தொகுக்கப்பட்டுள்ளது.[1]

தமிழில் வேறெந்த நூலுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு தொகுக்கப்பட்ட முறையில் உள்ளது. இது மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அ. 1-120 வரையுள்ள இப்பாடல்கள் நடையும் பிறவும் களிறு போன்று கம்பீரமிக்கது. எனவே, களிற்றியானைநிரை என்று தலைப்பிடப் பட்டுள்ளது.

ஆ. 121-300 வரையுள்ள இப்பாடல்கள் முத்துக் கோத்தாற் போன்று சீரான பொருளும், சரளமான நடையும் உடையதால் நித்திலக்கோவை என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

இ. 301 முதல் 400 வரையிலான பாடல்கள் மணியும் பவளமும் சேர்ந்தார் போன்று மணிமிடைபவளம் என்றும் தலைப்பிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அகம் பாடியப் புலவர்கள் | - | 145 |
| பெயர் தெரிந்தவை | - | 142 |
| பெயர் தெரியாதவை | - | 3 |
| பெண்பாற் புலவர்கள் | - | 8 |

ஆண்பாற் புலவர்கள் - 134

அகம் மட்டும் பாடிய புலவர்கள் - 65

பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களை ஒழுங்குபடுத்தித் தொகுத்துள்ளார். தமிழில் வேறெந்த நூலுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு இதனைத் தொகுக்கப்பட்ட முறையில் அமைந்திருப்பது வியக்கத்தக்கது. பாடலின் எண்களைச் சொன்னாலே அதன் திணை இதுவென்பதை எளிதில் சொல்லிவிடலாம் என்ற ஒழுங்குமுறையில் இந்த நூல் அமைந்துள்ளது.

**சிறப்பு**

அகநானூறு என்பது அகம் சார்ந்த நூலாக இருந்தாலும் காதலை மட்டும் பேசாமல், காதல் வாழ்க்கை, மனிதனின் புறச் சூழ்நிலையினை மேன்மைப்படுத்திய பிற செய்திகளையும் கூறியுள்ளது. அகநானூற்றின் தனிச் சிறப்பாகும்.[2]

**பெண்பாற் புலவர்கள் பாடிய பாலைத்திணைப் பாடல்கள்**

அகநானூற்றில் பாலைத்திணைப் பாடல்களே மிகுதியானவை. 200 பாடல்கள் பாலைத்திணையில் அமைந்துள்ளன. அகநானூற்றில் பாடிய பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை 13. அவர்களுள் பாடிய திணைகளிலும் பாலைத்திணையே அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகவே, பெண்பாற் புலவர்கள் பாடிய பாலைத்திணைப் பாடல்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**பாலை பாடிய பெண்பாற் புலவர்கள்**

பாலைத்திணையில் பாடிய பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை 4

| | |
|---|---|
| ஔவையார் | 4 பாடல்கள் (11,147, 273, 303) |
| கழார்க்கீரன் எயிற்றியார் | 3 பாடல்கள் (163, 217, 235) |
| முள்ளியூர்ப் போதியார் | 1 பாடல் (173) |
| வெள்ளி வீதியார் | 1 பாடல் (45) |

ஒன்பது பாடல்கள் பெண்பாற் புலவர்களால் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் 8 பாடல்கள் தலைவி கூற்றாகவும் அமைந்துள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் தலைவியின் ஆற்றாமையைப் புலப்படுத்துகின்றன. பாலைப் பாடல்கள் இருவகையான பிரிவினைச் சுட்டுகின்றன.

பொருள்வயிற் பிரிவு

வினைவயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவு குறித்து 7 பாடல்களும்(11, 303, 163, 217, 235, 173, 45) வினைவயிற் பிரிவு குறித்து 2 பாடல்களும் (147, 273) அகநானூற்றில் உள்ளன.

## அகநானூறு பதிப்பு வரலாறு

ஒவ்வொரு மொழி வரலாற்றிலும் பதிப்புக்காலம் என்பது மிகமிக முக்கியமான இடத்தைப்பெறுகிறது. ஒரு குறிப்பிட்ட மொழியின் இலக்கண இலக்கியப் பதிப்புகள் வெளிவருகின்றன என்பது அம்மொழியின் மறுமலர்ச்சிக் காலம் என்று குறிப்பிடலாம். அந்த வகையில் நோக்கும் பொழுது சங்க இலக்கியப் பதிப்பு என்பது தமிழ்மொழியின் மறுமலர்ச்சி காலம் எனலாம்.

## அகநானூறு தொகையாக்கம்

இந்நூல் இறையனார் அகப்பொருள் உரையில் நெடுந்தொகை நானூறு என எண்ணளவுடன் குறிப்பிட்டிருப்பது போலவே, அகநானூற்றின் இறுதியிலுள்ள பாயிரச் செய்யுளை அடுத்திருக்கிற உரைப் பகுதியிலும் கூறப்பட்டுள்ளது.

- இத்தொகைப் பாட்டிற்கு அடியளவு சிறுமை பதின்மூன்று பெருமை முப்பத்தொன்று, தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தொகுத்தவர் மதுரை உப்புரிக்குடி கிழார் மகனாகிய உருத்திரசன்மா ஆவர்.
- இவ்வகநானூறு ஒரு திட்டமிடப்பட்டத் தொகுப்பு முயற்சி இருந்தமையை அறியமுடிகிறது. ஆனால் 110. 130, 140, 160, 190 எண்களில் மருதத்திணைப் பாடல்கள் அமையவில்லை. அவை முறையே பாலை, நெய்தல், குறிஞ்சி, பாடல்களாக உள்ளன. மேற்குறிப்பிட்ட முயற்சி பின்னர் கைவிடப்பட்டமையைக் காட்டுகிறது.
- அகநானூறு திட்டமிடப்பட்ட ஒரு தொகுப்பு நூல். இதனை, அதன் பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள நூதனமான எண்ணிக்கை முறையைக் கொண்டு கூறமுடியும். அவை எப்படியானால், 1,3,5,7,9,11 - பாலை 2,8,12,18 - குறிஞ்சி 4,14,24,34 – முல்லை, 6,16,26,36 மருதம் 10,20,30,40 – நெய்தல் எனத் தொகுக்கப்பட்டுள்ளன.

## உ.வே.சா., இராகவையங்கார் பதிப்பு

முதல் முதலாக அகநானூற்றுக்கு என்று எழுந்த் பதிப்பு என்று பார்த்தோமேயானால், அது சேது சமஸ்தான வித்வான் ஸ்ரீ

உ.வே.சா.இராகவையங்கார் சோதித்துத் தந்த, அகநானூற்றுப்பிரதியை, வே.இராஸகோபாலையங்கார் பதிப்பித்தப் பதிப்பு என்று கூறலாம். இப்பதிப்பு வெளிவர அவர் மேற்கொண்ட பணிகள் கடலினும் வானத்தினும் பெரியது என்றே கூற வேண்டும். இப்பதிப்பு எவ்வாறாக அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. அப்பதிப்பிற்குப் பிறகு இன்றைக்கு அகநானூற்றுக்கென்று எழுந்தப்பதிப்புகள் எத்தனை என்பது பற்றி விரிவாக ஆராயப்படுகிறது.

முதல் பதிப்புப் பற்றிய குறிப்புகள்

வே.இராஜகோபாலையங்கார் அகநானூற்றுப் பிரதியைச் சோதித்து உரை எழுதிக் கொண்டிருந்தப்பொழுது நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ.நாராயணசாமி இந்நூலில் உள்ள இன்பப் பகுதியையும், கதைக்குறிப்பினையும் தொகுத்தும் விரித்தும், சிறுபுத்தகமாக எழுதி க.கன்னையநாயுடு அவர்களிடம் கொடுத்து அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அதன்பின்னர் நாராயணசுவாமி, வே.இராஜகோபாலையங்கார் அவர்களைப் பார்த்து தாங்கள் அகநானூற்றை வெளியிட வேண்டும் எனவும் அதில் குறிப்புகள் பலவற்றைச் சேர்த்துப் பதிப்பிடுக.. எனவும் பலகாலமாகக் கூறிக்கொண்டு இருந்ததோடு மட்டுமல்லாமல் அவர் மழமழப்பான காகிதத்தில் காலிகோ பைண்ட் செய்த நோட்டுப் புத்தகங்கள் இருபது தந்து உற்சாகப்படுத்தினார். அவர்களின் தூண்டுகோளின்படி அகநானூறு பதிப்பிக்க வேண்டும் என இராஜகோபாலையங்கார் முயற்சிகளை மேற்கொண்டார். அதன்பிறகு தனது பணியில் தீவிரமான கோபாலையங்கார் செய்த செயல்கள் ஏராளம்.

- அவர் தனது முதல் பணியாக அவர் சென்னை மேரி ராணியார் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா.நமச்சிவாய முதலியார் அவர்களை சந்தித்தார். அவர்பால் உள்ள அகநானூற்றுப் பிரதி ஒன்றைக் கேட்க அவர் அதை அன்போடு கொடுக்க தான் கார்த்திகை 21ஆம் தேதி ஒரு பிரதி செய்து கொண்டார். மேலும், அகநானூற்றுப் பிரதிகள் யார் யாரிடம் உள்ளது எனத்தேடிக் கொண்டு வந்தார். அச்சமயம் தி.கனகசுந்தரம் அவர்கள் பால் அகநானூற்றுப் பிரதி இருப்பதை அறிந்து அவரைச் சந்தித்த அவரிடம் உள்ள இரண்டு பிரதியுடன் தன்னுடைய பிரதியை ஒப்பிட்டுச் சரிபார்த்தார்.

- பிறகு சென்னை இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகச் சாலைக்குச் சென்று அங்குள்ள அகநானூற்றுப் பிரதியுடன்

ஒப்பிட்டுக் கொண்டு, அதில் உள்ள ஆசிரியர் வரலாறு, அரசர் முதலியோர் வரலாறு, அறிதான குறிப்பு முதலிய பல வகைக் குறிப்புகளை எழுதிக் கொண்டார். பிறகு அதைப் பிரதி 336ஆம் பாடலின் கொழு முதலாக 343 ஆம் பாடலின் முதற்பகுதி ஈறாக ஆறு, ஏழு பாடல்கள் முற்றும் குறைந்தும் 91, 106, 107, 108, 111, 162, 223, 311, 460 என்ற பாடல்களில் பல பல அடிகள் குறைந்தும், வேறுபல பாடல்களில் சொற்களும், தொடர்களும் சிதைந்தும், பிறழ்ந்தும், பொருட் பொருந்தமின்றியும், அடிநிரம்புறாதும் காணப்பட்டமையால் இவற்றை எல்லாம் கண்ட அவர் அச்சிடத்தக்கதென்று தோன்றவில்லை எனப் பெரிதும் மனமழிந்து கொண்டு இருந்த சமயம்.

○ அவருக்கு பரம குருவாகவும், அறிவு ஊட்டுபவர்களாகிய சென்னை லெக்ஸிகன் ஆபிஸ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ உ.வே.மு.இராகவையங்கார் அவர்களிடம் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை எல்லாம் கூறினார். அவற்றைக் கண்டு மனமிறங்கிய அவர், தமது அத்தை குமாரராகிய சேது சமஸ்தான வித்துவானாகிய ஸ்ரீ.உ.வே.ரா.இராகவையங்கார் அவர்களிடம இவரை அறிமுகம் செய்த இவருக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கூறினார்.

பின்னர் ஸ்ரீ உ.வே.ரா.இராகவையங்கார் ஆழ்வார் திருநகரில் பிரதி, பெரும்பழனைப் பிரதி, நெல்லையப்பக் கவிராயரவர்கள் வீட்டுப்பிரதி முதலிய பல பிரதிகளைக் கொண்டு சோதித்து வைத்திருந்த அகப்பாட்டின் சுத்தப்பிரதியையும், முதற்றொண்ணூறு பாட்டிற்குள்ள பழைய உரையையும் இவரிடம் தந்து உதவினார். அச்சிறந்த பிரதியோடு தன் பிரதியை ஒப்பிட்டுச் சரி செய்து கொண்டார்.

அதற்கு அடுத்து இவர் இராமநாதபுரத்திற்குச் சென்று அவர் வீட்டில் ஒரு மாதம்வரை தங்கி அவர்களின் நூலின் நானூறு பாடல்களையும் அவர் முன்னிலையில் சோதித்துக் கொண்டு சென்னை வந்தார். இங்கு ஸ்ரீஉ.வே.மு.இராகவையங்கார் சுவாமிகள் முன்பு தான் பரிசோதித்து எடுத்துவந்த பிரதியைக் கொடுத்தார். பின் அந்நூல் அச்சாகும் காலத்துச் செய்ய வேண்டிய சோதனைகளை எல்லாம் செய்துதர தான் ஒவ்வொன்றாக இராமநாதபுரம் அனுப்பினார். அங்கு ஸ்ரீ உ.வே.ரா.இராகவையங்கார் அவற்றைக் கடைசியாகப் பார்வையிட்ட பின்னர் அவற்றை அச்சிட்டார். இவ்வாறாக அவர் இரண்டு வருடத்தில் மூலம் முழுவதும், மு.இராகவையங்கார் அவர்களின் அறிய, இனிய

ஆராய்ச்சியையும் துணையாகக் கொண்டும், பாடினோர் வரலாறு, அரசர் முதலியோர் வரலாறு ஆராய்ச்சிக் குறிப்பு ஆகியவற்றோடு முதன் முதலாக அகநானூறு பதிப்பிக்கப்பட்டது.

அகநானூற்றைக் கற்றவர்கள் பலரும் பன்னெடுங்காலமாகப் பேராவலோடு எதிர்பாத்திருந்த இப்பதிப்பு 1923க்கு கைந்தாண்டுகளுக்கு முன்னரே அச்சாகி முடிந்திருந்தும், இராஜகோபாலையர் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் முழுமையாக வெளியிட முடியவில்லை என வருத்தப்பட்டார். பிறகு அகநானூற்றின் மீது பற்றுக்கொண்ட அன்பர்களின் வேண்டுகோள்படி இவர் இறைப்பு புத்தகமாக முதலில் பதிப்பித்து வெளியிட்டார். பிறகு இறைவனின் அருளால் உடல் நலம் பெற்ற இவரின் அரிய பணியால் மீண்டும் அகநானூறு முழுமையாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

அகநானூறு நித்திலக்கோவை மூலமும் பழைய உரையும், சேது சமஸ்தானம் மகாவித்துவான் பாஷா கவிசேகர் ரா.இராகவையங்கார் வெளியீட்டகம், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சார்யன், கம்பர் விலாசம், மைலாப்பூர், சென்னை, முதற்பதிப்பு 1918. இந்நூலின் இரண்டாம் பதிப்பு முன்னுரையில் இராஜகோபாலாச்சார்யன், அகநானூற்றினை யான் சில வருடங்களுக்கு முன்பு எனக் குறிப்பிட்டிருந்ததாகக் கூறியுள்ளார்.[3]

## அகநானூறு பதிப்புகளும் உரைகளும்

மதுரையில் பாண்டித்துரை தேவர் அவர்கள் முயற்சியால் தொடங்கப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கத்தில் ரா.இராகவையங்கார் பணியில் சேர்ந்தபோது, அவர் பல இடங்களுக்குச் சென்று ஏட்டுப் பிரதிகளைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அதுபற்றி, தாம் ஆசிரியராக இருந்த செந்தமிழ் இதழிலும் எழுதியுள்ளார். அப்பொழுது அவருக்குக் கிடைத்த பிரதிகளை முன்வைத்து, 1904ஆம் ஆண்டு, அகநானூற்றில் 1 மதல் 36 பாடல்களுக்கு மட்டும் உரையுடனும், 37ஆம் பாடல் மூலமும் முதலடிக்கு மட்டும் உரையுடன் கூடிய பதிப்பை மதுரை தமிழ்ச்சங்கத்தின் மூலம் வெளியிட்டார். தற்பொழுது அப்பதிப்புக் கிடைக்கப்பெறவில்லை. 1951இல் மீண்டும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது அதன் வாயிலாகவே மேற்கண்ட பதிப்புக் குறித்த செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.

அகநானூற்றுக்கு இரண்டு பழைய உரைகள் உண்டு. இவை இரண்டும் குறிப்புரைகள் ஆகும். ஓர் உரை, கடவுள் வாழ்த்திற்கும், முதல் 90 பாடல்களுக்கு மட்டும் குறிப்புரை தருகிறது. இவ்வுரையாசிரியர் ஒவ்வொரு செய்யுளிலும், உள்ள அருஞ்சொற்களுக்கும், அரிய

தொடர்களுக்கும் பொருள் எழுதியதுடன் உள்ளுறை, உவமம், இறைச்சி, பொருள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளார். சில இடங்களில் சொல் முடிவு, பொருள் முடிவு தருவதுடன் இலக்கணக் குறிப்புகளையும் வரலாற்று நிகழ்வுகளையும் தந்துள்ளார்.

அகநானூற்றின் மற்றொரு உரை சொற்பொருள் விளக்கம். திணை விளக்கம் ஆங்காங்கே சில பாடல்களுக்கு மட்டும் தருகிறது. இவ்விரு பழைய உரைகளையும் ஆராய்ந்து அதனை அடிப்படையாக வைத்து ரா.இராகவையங்கார் 1918ல் களிற்றுயானை நிரையை மட்டும் கம்பவிலாசம் இராஜகோபால ஐயர் உதவியுடன் பதிப்பித்தார். பின்னர் அவரே 1923இல், அகநானூறு முழுமையும் பதிப்பித்து வெளியிட்டார். 1935இல் இப்பதிப்பு மீண்டும் மறுபதிப்புக் கண்டது.

1926இல் அகநானூறு களிற்றுயானை நிரையை மட்டும் கம்பவிலாசம் இராஜகோபாலயர் தன் உரையுடன் பதிப்பித்தார்.

அகநானூற்றின் வசனத்தை ஈழ அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை பதிப்பித்துள்ளார். 1938இல் களிற்றியானை நிரையையும் 1941இல் மணிமிடை பவளத்தையும், நித்திலக் கோவையையும் பதிப்பித்துள்ளார். இவ்வசன நூல்களைச் சென்னை ஒற்றுமை அலுவலகம் வெளியிட்டது. 1957இல் அதே பதிப்பகம் அகநானூறு மணிமிடை பவளத்திற்கு வே.வடுகநாதன் எழுதிய வசனத்தை வெளியிட்டுள்ளது.

1940இல், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் முயற்சியால், சங்க இலக்கியம் என்ற பெயரில் ஒரு பதிப்பு வெளிவந்தது. இத்தொகுப்பினைச் சைவசித்தாந்த சமாஜம் வெளியிட்டது. இவ்வரிய பதிப்புப் புலவர் வாரியாகத் தொகுக்கப்பட்டு வெளிவந்தது. இத்தொகுப்பில் அகநானூறும் உள்ளடங்கும்.

1943இல் அகநானூற்று களிற்றியானை நிரைக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும் கரந்தை கவியரசு வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் உரையெழுதி, அதைப் பாகனேரி தனவைசிய இளைஞர் சங்கம் வெளியிட்டது. 1944இல், மணிமிடை பவளத்தையும், நித்திலக்கோவையையும் இதே உரையாசிரியர்கள் உரையுடன் தனவைசிய இளைஞர் சங்கம் தமிழ் வெளியீட்டுக் கழகம் என்ற பெயரில் வெளியிட்டது.

1958இல் அகநானூற்று மூலம் மட்டும் மர்ரே அண்டு கம்பெனியால் வெளியிடப்பட்டது. சங்க இலக்கியம் முழுமையும் மூலத்தோடு இவ்வெளியீட்டகம் பதிப்பித்துள்ளது. இவ்வெளியீடுகள் 1981இல் நியூ செஞ்சுரி வெளியீட்டு நிறுவனத்தால் மீண்டும் மறுபதிப்புக் கண்டன.

1960இல் புலியூர்க்கேசிகன் அகநானூறு களிற்றியானைநிரைக்கும் மணிமிடை பவளத்திற்கும் தனித்தனியாக உரை கண்டு வெளியிட்டார். பின்பு நித்திலக்கோவையை 1961இல் உரையுடன் பதிப்பித்தார். புலியூர்க்கேசிகன் எழுதிய அகநானூற்று உரை தெளிவுரை ஆகும். களிற்றியானை நிரை 1963, 1971களில் மறுபதிப்புகள் கண்டன. அதுபோல மணிமிடை பவளம் 1964, 1970களிலும், நித்திலக்கோவை 1971ஆம் ஆண்டும் மறுபதிப்புக் கண்டன. 1970 இல் அகநானூறு முழுமைக்கும் பொ.வே.சோமசுந்தரனார் உரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. இவ்வுரை 1973, 1977, 1982ஆம் ஆண்டுகளில் மறுபதிப்புக் கண்டன. இவ்வுரை 1973, 1977, 1982ஆம் ஆண்டுகளில் மறுபதிப்புக் கண்டன. பெருமழைப்புலவரின் உரை, பதவுரை, விளக்கவுரையுடன் அமைந்திருந்தது.

1999ஆம் ஆண்டு புலவர் அ.மாணிக்கனார் உரையுடன் அகநானூறு மூலமும், உரையும் என்ற பெயரில் வர்த்தமானன் பதிப்பகம் மூன்று தொகுதிகளை வெளியிட்டது. பின்னர், இது இரண்டாம் பதிப்பும் கண்டது.

2004ஆம் ஆண்டில் நியூ செஞ்சுரி வெளியீட்டு நிறுவனம் சங்க இலக்கிய வரிசை வெளியிட்ட பொழுது, அகநானூறு முழுமையும், இரா.செயபால் உரையுடன் வெளியிட்டது. இந்நூல்களைப் பதிப்பித்தவர் அ.ம.பரிமணம், கு.வெ.பாலசுப்பிரமணியன் ஆகியவர்கள் ஆவார்.

2007ஆம் ஆண்டு, தமிழ் மண் அறக்கட்டளை சங்க இலக்கியம் முழுமையையும் உரையுடன் வெளியிட்டபோது அகநானூற்றையும் உரையுடன் வெளியிட்டது. 2008ஆம் ஆண்டு, மாணிக்கவாசகர் பதிப்பகம் சங்க இலக்கியம் முழுமையையும் தெளிவுரையுடன் வெளியிட்டது. இதன் பதிப்பாசிரியர் ச.வே.சுப்பிரமணியன் ஆவார்.

2009இல் அகநானூறு மூலமும், தெளிவுரையும் வ.த.இராமசுப்பிரமணியம் அவர்களால் வெளியிடப்பட்டது.[4]

## அகநானூறு பதிப்புகள்

அகநானூற்றின் முதல்பதிப்பிற்கு முந்தைய பதிப்பு முயற்சிகள், முதல் பதிப்பின் பதிப்பாசிரியர் தொடர்பான கருத்து வேறுபாடு, பிற பதிப்புகள் வெளியீடுகள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

அகநானூற்றிற்கான முதல் பதிப்பு முயற்சி 1897ல் தொடங்குகிறது. அதுமுதல் அகநானூற்றின் முதல் பதிப்பு வெளிவந்த

1918 வரையிலான காலகட்டத்திற்குள் நால்வரின் பதிப்பு முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. அவை

1. சி.வை.தாமோதரம் பிள்ளை பதிப்பு முயற்சி
2. ரா.இராகவையங்கார் பதிப்பு முயற்சி
3. பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் பதிப்பு முயற்சி
4. உ.வே.சாமிநாதய்யர் பதிப்பு முயற்சி

சி.வை.தா.பதிப்பு முயற்சி

இறையனார் களவியலின் இரண்டாம் பதிப்பினை 1899இல் வெளியிட்ட சி.வை.தாமோதரம்பிள்ளை அப்பதிப்பில், தம் அகநானூற்றுப் பதிப்பு முயற்சி பற்றிக் குறிப்பிடுகிறார். தன் உடல் நிலை சரியில்லாதபோதும் சி.வை.தா.அகநானூற்றுப் பதிப்பு முயற்சியைக் கைவிடவில்லை. தமிழாசிரியர் இருவரைத் துணையாகக் கொண்டு அகநானூற்றைப் பரிசோதித்து வந்துள்ளார். அவரின் பதிப்பு முயற்சி 1897ல் நடைபெற்றது என்பதனை அ.பாண்டுரங்கன் (2005:28) செலவிட்டுப் பரிசோதித்து உள்ளார் என்பதனை சி.வை.தா.வின் வாழ்க்கை வரலாறு வழி அறிய முடிகிறது. (1992:78)

அக்காலத்தில் அவர் எழுதிய அகநானூற்றுப் பாடல்களுக்கான உரையுடன் கூடிய கையெழுத்துப் பிரதிகள் உ.வே.சா.விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உ.வே.சா.விடம் கொடுக்கப்பெற்ற, மேற்குறிக்கப் பெற்று ரா.இரா.வின் கையெழுத்துப்பிரதிகள் 1990ல் மயிலம் வே.சிவசுப்பிரமணியன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று உ.வே.சா.நூல் நிலையத்தின் வழி வெளி வந்த அகநானூற்றுப் பதிப்பிற்குப் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

இதற்கிடையில் 1918ல் தம் பதிப்பை வெளியிட்ட ராஜகோபாலார்யன் 1918, 1920களைத் தொடர்ந்து 1923 இல் வெளிவந்த தம் பதிப்பிற்கு ரா.இரா.வைச் சோதித்துத்தரச் சொல்கிறார். இந்நிலையில் 1903ல் ரா.இரா.அகநானூற்றைப் பதிப்பிக்க முயற்றமையினாலும் 1923இல் வெளிவந்த இராஜகோபாலார்யன் பதிப்பைச் சோதித்துத் தந்தமையினாலும் 1918, 1920களில் வந்த கம்பர் விலாசப் பதிப்புகளின் முகப்புப் பக்கங்களில் பதிப்பாசிரியர் குறிப்பு இல்லாமையினாலும் அறிஞர் சிலர் அகநானூற்றின் முதல் பதிப்பாசிரியர் ரா.இராகவையங்கார் எனக் கருதியிருக்கலாம். ஆனால் அவர் அகநானூற்றைப் பதிப்பிக்க முயன்றிருக்கிறாரோ அன்றிப் பதிப்பிக்கவில்லை என்பதை மேற்கண்ட கருத்துக்கள் வழி அறியலாம்.

பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் பதிப்பு முயற்சி

அகநானூற்றின் முதல் பதிப்பாசிரியர் ராஜகோபாலார்யன் முன்னிலையில், அந்நூலுக்கு உரை எழுத முயற்சித்தவர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் ஆவார். பின்னத்தூரரிடம் ராஜகோபாலார்யன் தமிழ் பயின்ற காலத்தில் பின்னத்தூரரின் உரை முயற்சி நிகழ்ந்துள்ளது. இதனை ராஜகோலார்யன் ஸ்ரீ ஒரு விஞ்ஞாபனம் எனும் தம் முகவரையில் குறித்துள்ளார். அம்முகவரைக் கருத்தில் இற்றைக்கு ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் (1923:12) என்று குறிக்கப்பெற்றிருப்பதால் பின்னத்தூராரின் உரை முயற்சி 1908ல் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதனை அறியலாம்.

அவ்வகையில் எழுதப்பெற்ற பின்னத்தூரரின் அகநானூற்று உரைக்குறிப்புகள் தற்பொழுது கிடைக்கப்பெறவில்லை. ராஜகோபாலார்யன், பின்னத்தூரரின் அகநானூற்று உரைக்குறிப்புகள் தற்பொழுது கிடைக்கப் பெறவில்லை. ராஜகோபாலார்யன், பின்னத்தூரரின் மாணவர் என்பதால் அவரின் கையெழுத்துப் பிரதியினை ராகோபாலார்யன் தம் பதிப்பிற்குப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆனால் இராஜகோபாலார்யன் பதிப்பில் அது பற்றியே குறிப்பேதும் இல்லை.

உ.வே.சா.பதிப்பு முயற்சி

உ.வே.சா.வின் அகநானூற்றுப் பதிப்பு முயற்சியை என் சரித்திரத்தின் இறுதியில் உள்ள "மேலே ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, பெருங்கதை என்பனவற்றில் என் கருத்தைச் செலுத்தலானேன்" (2008:762) எனும் குறிப்பு வழி அறிய முடிகிறது.

உ.வே.சா.வின் பதிப்பு முயற்சி ரா.இராவின் பதிப்பு முயற்சிக்குப் பின்னரே தொடங்குகிறது. மதுரைத் தமிழ் சங்க நிறுவனர் பாண்டித்துரைத்தேவர் ரா.இராவிடம் இருந்த குறிப்புகளை வாங்கி உ.வே.சா.விடம் கொடுத்தார் எனும் குறிப்பு இதனை தெளிவுபடுத்துவதாகவும் அது தொடங்கிப் பல்வேறுபட்ட சுவடிகளைச் சேகரிக்கும் உ.வே.சா அகநானூற்றைப் பதிப்பிக்க வில்லை. அவர் சேகரித்து வைத்த சுவடிகள், குறிப்புகளைக் கொண்டு மயிலம் வே.சிவ சுப்பிரமணியன் 1990இல் அகநானூற்றைப் பதிப்பித்துள்ளார். உ.வே.சா.சேகரித்து வைத்தனவான மயிலம் வே.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுவன வருமாறு :

ஏட்டுப்பிரதிகள்

28 மூலம் முழுமையில்லை (1-350 செய்யுள்கள்)

107 மூலம் முழுமையில்லை (5-400 செய்யுள்கள்)

297 அரும்பதவுரை 1 முதல் 90 செய்யுள்களுக்கு அரும்பதவுரை சிற்சில இடங்களில் விளக்கமும்

292 அரும்பதவுரை 1-155 வரை உள்ள செய்யுள்களில் சிலவற்றிற்கு அரும்பதவுரை உள்ளது.

394 திரட்டு (மூலமும் உரையும்)

இதில் தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையில் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றாவது நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் காட்டிய 1,4,40, 46, 128 ஆகிய ஐந்து செய்யுளுக்கு உரை எழுதி இலக்கணக் குறிப்புகளும் எழுதப்பெற்றுள்ளன.

இவ்வுரையாசிரியர் யார் என்பது புலப்படவில்லை.

கையெழுத்துப்பிரதிகள்

5. மூலம் முழுமை

6. மூலம் மணிமிடைபவளம் இல்லை

11. முழுமை இது குருகூர்ப்பிரதி

7. மும் முழுமையில்லை

8. மூலம் முழுமை – மிகவும் சிதிலமடைந்துள்ளது

8. மூலம் முழுமை – நித்திலக்கோவை மட்டும்

10. அரும்பத அகராதி

12,13,14 ஐயரவர்கள் தொகுத்தமைத்து (1990:முகவுரை)

மேற்கண்ட பிரதிகள் மட்டுமின்றி பொழிப்புரையும் குறிப்புரையும் உடையதோர் பிரதியும் உ.வே.சா.விடம் இருந்ததாக மயிலம் வே.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். மேற்கண்ட இப்பிரதிகள் ஓர் அகநானூற்றுப் பதிப்பை வெளியிடப் போதுமானவை. ஆனால் அவர் ஏன் அகநானூற்றைப் பதிப்பித்து வெளியிடவில்லை என்பதனை அறியமுடியவில்லை. ராஜகோபாலையங்காரின் அகநானூற்றைப் பதிப்பிக்க முயற்சிக்கும் போது அவருக்கு ரா.இராகவையங்கார் உதவுகிறாரேயன்றி, இத்தனை பிரதிகள் வைத்திருக்கும் உ.வே.சா.உதவவில்லை. உ.வே.சா.உதவி செய்திருந்தால் ராஜ கோபாலார்யனின் பதிப்பு 1-155 பாடல்கள் வரை பழைய உரையைக் கொண்டும் அதனைத் தொடர்ந்த பகுதிகளுக்கு ராஜகோபாலையங்காரின் குறிப்புரையுடனும் வெளிவந்திருக்க வாய்ப்புண்டு.

இவ்விடத்தில் உ.வே.சா.பற்றிய அ.சதீஷின் கருத்து குறிக்கத்தக்கது. அக்கருத்து வருமாறு.

1904லிலேயே ரா.இராகவையங்கார் அகநானூற்றைச் செந்தமிழில் பதிப்பிக்கும் முயற்சியைத் தொடங்குகிறார். உடல்நலக் குறைவால் அவர் பரிசோதித்த சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகிய பாண்டித்துரைத் தேவரால் திரும்பப் பெறப்பட்டு உ.வே.சாவிடம் ஒப்படைக்கப்படுகின்றன. உ.வே.சா.வும் அகநானூற்றைப் பதிப்பிக்கத் தொடங்குகிறார். ஆனால் வெளிவரவில்லை. சுவடிகளைத் திரும்பத்தரவும் இல்லை. 1918ல் ராஜகோபாலையங்கார் அவர்கள் மு.ராகவையங்கார், ரா.ராகவையங்கார் ஆகியோரின் உதவியுடன் களிற்றுயானை நிரையைப் பதிப்பித்து வெளியிடுகின்றார். 1923ல் அகநானூறு முழுமையும் பதிப்பாகிறது. அகநானூற்றை உ.வே.சா.பதிப்பிக்க வில்லை என்பதைக் காட்டிலும் அப்பதிப்பு வராமலிருக்க அவர் காட்டிய அக்கறையே பெரும் சிக்கலுக்குரியதாக இருக்கிறது. (2009-27)

இக்கருத்து உ.வே.சா.அகநானூற்றைப் பதிக்கவும் இல்லை; பிறரைப் பதிப்பிக்க விடவும் இல்லை என்று குறிப்பிடுகிறது. உ.வே.சா.அகநானூற்றைப் பதிப்பிக்கவில்லை என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் அகநானூற்றைப் பதிப்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி மறுக்க முடியாதது. சுவடிகள் சேகரிப்பு மட்டுமின்றி அரும்பத அகராதி தொகுத்தல் வரை அவர் பணி நிகழ்ந்திருக்கிறது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

உ.வே.சா.அகநானூற்றைப் பிறரைப் பதிப்பிக்க விடவில்லை என்று குறிப்பிடுவதே பொருத்தமானது. சங்க தொகை நூல்களில் ஐந்து நூல்களைப் பதிப்பித்த உ.வே.சா. அகநானூற்றையும் தாமே பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இருந்திருக்க வேண்டும். அதனாலேயே ராஜகோர்னுக்கு அவர் எவ்வித உதவியும் செய்யாதிருந்திருக்கலாம். என் சரித்திரத்தின் இறுதியில் உள்ள அகநானூற்றுப் பதிப்பு முயற்சி தொடர்பான கருத்தை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம்.

அகநானூற்றிற்கான பதிப்புகளில் ராஜகோபாலையரின் பதிப்புகள் அனைத்தும் ஒவ்வொரு நிலையிலும் வளர்ச்சிபெற்றுள்ளன. ஆனால் அவரின் உரைமுயற்சி முழுமையடையவில்லை. 91 முதல் 160 பாடல்களுக்கானதாகவே அது அமைகிறது. உரையுடன் கூடிய பிற பதிப்புகளாகப் பாகனேரி வெ.பெரி.பழ.மு.காசிவிஸ்வநாதன் செட்டியாரால் வெளியிடப் பெற்ற பதிப்பு, மயிலம் வே. சிவசுப்பிரமணியன் பதிப்பு ஆகியன அமைகின்றன.[5]

அகநானூற்றில் பாட வேறுபாடு

அகம் 20 மற்றும் அகம் 306 ஆகிய இரு பாடல்களும் உரை வேறுபாடுகளைக் காணும் பொருட்டு இங்கே எடுத்தாளப்படுகின்றன. இவற்றில் வேங்கடசாமி நாட்டார், மாணிக்கனார், பேரா.ஜெயபால் ஆகியோரின் உரைகள் ஆய்விற்கு இங்கே எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அகம் : பா : 20 – நெய்தல்

"பெருநீர் அழுவத்து எந்தை தந்த
கொழு மீன் உணங்கற் படு புள் ஒப்பி,
எக்கர்ப் புன்னை இன் நிழல் அசைஇ,
செக்கர் ஞெண்டின் குண்டு அளை கெண்டி,
ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங் கழித்
தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி,
கொண்டல் இடு மணல் குரவை முனையின்
வெண் தலைப் புணரி ஆயமொடு ஆடி,
மணிப் பூம் பைந் தழை தைஇ, அணித்தகப்
பல் பூங் கானல் அல்கினம் வருதல்
கவவை நல் அணங்கு உற்ற, இவ் ஊர்,
கொடிது அறி பெண்டிர் சொற்கொண்டு, அன்னை
கடி கொண்டனளே – தோழி! 'பெருந்துறை,
எல்லையும் இரவும் என்னாது, கல்லென
வலவன் ஆய்ந்த வண் பரி
நிலவு மணல் கொட்டும் ஓர் தேர் உண்டு' எனவே"

- உலோச்சனார்.

இரா.ஜெயபால் : (உரை ஆசிரியர்)

கூற்று

பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய், தலைமகன் கேட்கச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியோடு களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் ஒரு நாள் பகற்குறியிடத்து அயலே வந்து நின்றான்; நின்றவனைக் கண்ட தோழி அவன் வரவை அறியாதாள் போன்று, அலர்தூற்றும் ஊர்ப் பெண்டிர் சொற்கேட்டுத் தாய் தலைவியை வீட்டில் காவற்படுத்தியமையைத் தலைவனுக்கு உணர்த்தும் பொருட்டு அவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

உரை

சிவந்த நண்டின் ஆழமான வளைகளை அகழ்ந்து எடுத்தோம்; வளைந்த உப்பங் கழியிலுள்ள தாழையின் விழுதுகளாலான கயிற்றால் ஞாழல் மரத்தினது உயர்ந்த கிளையிற் கட்டிய ஊசலில் ஆடினோம்; கீழ்க் காற்றுக் கொண்டு வந்து குவித்த மணலில் குரவைக் கூத்தாடினோம்; இவையெலாம் வெறுப்பை உண்டாக்கினால் வெண்மையான தலை பொருந்திய திரையையுடைய கடலில் தோழியருடன் விளையாடினோம்; அழகிய மலர்களாலான பசிய தழையாடையை அழகு பொருந்த உடுத்திக் கொண்டோம்; பல பூக்களையும் உடைய கடற்கரைச் சோலையில் நம் தலைவனுடன் தங்கி வந்தோம்.

இவ்வாறு தங்கி வருதலைப் பற்றி நம் ஊரில் அலர் கூறுதல் என்னும் நற்பேய் பிடித்திருக்கும் கொடியனவற்றைக் கூறுவதையே நன்கறிந்த பெண்கள் கூறும் சொற்களை நம் தாய் கேட்பாள்; கேட்டவள், பெரிய நீர்த்துறையிடத்துப் பகல் இரவு என்று பாராது நிலவொளி போன்ற வெண்மணலில், தேர்ப்பாகன் ஆராய்ந்து கொண்ட வளமான குதிரைகள் பூட்டப் பெற்றுக் கல் என்னும் ஓசையுடன் சுழன்று திரியும் தேர் ஒன்று உண்டு என்று எண்ணியவளாய் வீட்டில் காவலை ஏற்படுத்திவிட்டாள்; நாம் என்ன செய்வோம்!

தோழி! நாம் பல் பூங் கானலில் தலைவரோடு புன்னை இன் நிழல் அசைஇ, புள் ஒப்பி, ஞெண்டின் அளை கெண்டி, ஊசல் தூங்கி, ஆயமோடு குரவை ஆடி, பைந்தழை உடுத்தி அல்கினம் வருதல் பற்றி இவ்வூர்க் கொடிது அறியும் பெண்டிர் சொற்கொண்டு, பெருந்துறையிடத்துக் கொட்கும் ஓர் தேர் உண்டு என எண்ணி, அன்னை கடி கொண்டனள். (நாம் என்ன செய்வோம்)

அகம் : பாடல் : 20 : ந.மு.வேங்கடசாமி நாட்டார்
நா.வேங்கடசாமிப் பிள்ளை

கடற்கரை கண மணல் மேட்டிலுள்ள புன்னையின் இனிய நிழலில் தங்கி, கடற்பரப்பினின்று, நம் தந்தை தந்த கொடுமையாகிய மீனின் வற்றலைக் கவரவரும் பறவைகளை அகற்றிலும், சிவந்த நண்டின் ஆழமான வளைகளைத் தோண்டியும் வளைந்த கழியிலுள்ள தாழை விழுதாலாய கயிற்றால் புலிநகக் கொன்றையின் உயர்ந்த கிளையில் கட்டித் தொங்க விட்ட ஊசலில் ஆடியும், கீழ்க் காற்றுக் குவித்த மணலில் சூரையாடி வெறுப்பின் வெள்ளிய தலையையுடைய கடல் நீரில் ஆயத்தாரோடு விளையாடி, அழகிய பூக்களோடு, மேவிய பசிய

தலையுடையினை அழகு பொருந்த உடுத்திக் கொண்டும் பல பூக்களையும் உடைய கடற்கரைச் சோலையில் நாம் தலைவரோடு தங்கி வருதலைப் பற்றி இவ்வூரில் அலர் கூறலாகிய நற்பேய் பிடித்திருக்கும் கொடுமை கூறலை அறியும் பெண்டிர் கூறும் சொல்லைக் கேட்டு நம் அன்ன பெரிய துறையகத்து பகலும் இரவும் என்றில்லாது பாகன் ஆய்ந்து கொண்ட அழகுமிக்க குதிரை பூட்டப்பெற்று நிலாப் போன்ற மணலில் கல்லென்னும் ஒலியுடன் சுழன்று திரியும் ஒரு தேர் உண்டு என்று எண்ணிக் காவல் படுத்தினாள்.

அகம் : பாடல் : 20 மாணிக்கம் (உரை ஆசிரியர்)

மணந்து கொள்வதில் கருத்தின்றிக் கள வொழுக்கமே காமுற்று வருகின்ற தலைவன் ஒருநாள் பகற்குறியிடத்தயலே வந்து நிற்பவனைக் கண்ட தோழி, அவன் வரவு உணராதவளைப் போன்று, தலைவிக்குச் சொல்பவளாய் அலர் மிகுதியுடன் தாய் அறிந்து காவல் மேற்கொண்டலையும் தலைவனுக்கு உணர்த்துவதற்காக அவன் கேட்பச் சொல்லியது.

கருத்து :

தோழி நாம் பல பூங்கானலில் தலைவனுடன் தங்கி மீன் உண்ண வரும் பறவைகளை ஓட்டி நண்டு வளையைத் தோண்டி ஊசல் ஆடி, குரவைக் கூத்தாடி, தழையுடையை உடுத்திக் கடற்கரைச் சோலையில் தங்கி வருதலைப் பற்றி ஊரில் அலர் கூறும் பெண்டிர் கூறும் சொல்லைக் கேட்டுப் பெருந்துறையில் திரியும் தேர் என்று உண்டு என எண்ணி நம் தாய் இல்லத்தில் காவலை ஏற்படுத்தி உள்ளாள். என் செய்வோம் என்று தலைமகன் கேட்பத் தோழி தலைவிக்குக் கூறினாள்.

1. மணந்து கொள்வதில் தலைவன் விருப்பமில்லாது இருந்தான். எனவே அதனைச் சுட்டிக் காட்டுவதற்காக அலரால் தலைவியைத் தாய் வீட்டுக் காவலில் வைத்தாள் என்று மாணிக்கம் தன் உரையில் கூறுகிறாள்.

2. வேங்கடசாமி நாட்டார் தனது உரையில் பெண்கள் அலர் கூறுவதை வழக்கமாகக் கொண்டவர்கள் என்றும் அவர்கள் பேய் பிடித்தவர்களுக்கு ஒப்பானவர் என்றும் கூறுகிறார்.

3. பேராசிரியர் செயபால் உரையில் தெளிவும் எளிமையும் அமைந்திருக்கிறது.

4. செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவான தலைப்புக் கொடுத்துப் பின்பு பொருள் சொல்லும் நெறிக்கு ஏற்ப

முறைப்படுத்திப் பதவுரை கண்டு அதன்மேல் முடியும் விளக்கவுரையும் எழுதி உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி உரிய அடிக்குறிப்புகளுடன் நாட்டார் உரை செல்கின்றது.

5. மாணிக்கனார் எளிய பொருளில், நடையில் உள்ளுறை உவமும், இறைச்சிப் பொருளும் விரவிவரும் வகையில் உரை எழுதியுள்ளார்.

6. பேராசிரியர் ஜெயபால் அவர்கள் பழைய உரைகளைத் தழுவியும், எளிமை செய்தும், சுருங்கக் கூறுமிடத்துச் சுருங்கக் கூறியும், விளக்கம் வேண்டுமிடத்து விளக்கியும், சொற்பிரித்தும் எடுத்துக் காட்டியும் இலக்கண குறிப்புரைத்தும் உரை எழுதியுள்ளார்.

பேரா.இரா.செயபால் (உரை ஆசிரியர்)

மருதம்

பெரும்பெயர் மகிழ்ந! பேணாது அகன்மோ!
பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கொம்பு ஈங்கைத் துய்த்தலைப் புதுவீ
ஈன்ற மாதத்தின் இளந்தளிர் வருட,
வார்குருகு உறங்கும் நீர்சூழ் வளவயல்
கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து,
பழன யாமை பசுவெயில் கொள்ளும்
நெல்லுடை மறுகின் நன்னர் ஊர!
இதுவோ மற்றுநின் செம்மல் மாண்ட
மதிஏர் ஒள்நுதல் வயங்கு இழை ஒருத்தி
இகழ்ந்த சொல்லும் சொல்லி, சிவந்த
ஆய்இதழ் மழைக்கண் நோய்உற நோக்கி,
தண்நறுங் கமழ்தார் பரீஇயினள், நும்மொடு
ஊடினள் - சிறுதுனி செய்துஎம்
மணல்மலி மறுகின் இறந்திசி னோளே (அகம். 306)

- மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

கூற்று விளக்கம்

தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை அறிந்து கொண்ட தலைவி பெரிதும் ஊடியிருந்தாள். அவளை அணுகி ஊடலைத்தீர்க்க அஞ்சிய தலைவன் தோழியை அணுக அது என்னால் இயலாது என்பது பட மறுத்துக் கூறியது.

பரந்தகன்ற பொய்கைக் கரையிடத்துப் பிரப்பங் கொடியுடன் கூடி நீண்டு வளர்ந்த முள்ளையுடைய கொம்பினையுடைய ஈங்கையின் பஞ்சு போன்ற தலைவியினையுடைய புதிய பூவும், மாமரத்தின் இளந்தளிரும் தன்னைத் தடவுதலால், மீனை உண்ட நாரை இனிது துயில் கொள்ளும்; அத்தகைய நீர்சூழ்ந்த வளஞ்சான்ற வயலின்கண், சாய்ந்து கிடக்கும் கழனிக் கரும்பின் மேல் ஊர்ந்து சென்று வயல் ஆமையானது இளம் வெயிலில் காய்தற்கு இடனான நெல்வளம் கொண்ட தெருக்களையுடைய ஊரனே!

மாட்சிமைப்பட்ட மதிபோன்ற ஒளியினையுடைய நெற்றியையும், விளங்குகின்ற ஆபரணங்களையும் உடைய நின்பரத்தை ஒருத்தி, நின்னை இழிவான சொற்கள் கொண்டு இகழ்ந்து பேசினாள்; தன் சிவந்த அழகிய இதழினையுடைய குளிர்ச்சிப் பொருந்திய கண்கள் துன்புறுமாறு நின்னைச் சினந்து நோக்கினாள்; நினது மணங்கமழும் குளிர்ந்த மாலையை அறுத்தெறிந்தாள்; இவ்வாறாக, நின்னோடு ஊடியவளாய் சிறுகலாம் செய்து எமது மணல் மிக்க தெருவழியே நடந்து சென்றாள். பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன், தனது தலைமைப் பண்பு தோன்றப் பரத்தையரை இழித்துரைத்துத் தலைவியைப் பாராட்டினான்; தலைவியின் ஊடலைத் தீர்க்க இயலாதவனாய்த் தோழியிடம் வாயில் வேண்டி, 'நின் பரத்தையருள் ஒருத்தி நின்னை இழிசொற்களால் இகழ்ந்து பேசினாள்; சினந்து நோக்கினாள்; நின் மாலையினை அறுத்து எறிந்தாள்; நின்னோடு புலந்து தெருவழியே சென்றாள்; இதுதான் நின் தலைமைப் பண்போ எம்மைப் புகழ்வதை ஒழிவீராக!' என்று கூறித் தோழி வாயில் மறுத்தாள் என்க.

அகம் : 306 : மாணிக்கம் (உரை ஆசிரியர்)

துறை விளக்கம் :

தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவி நேரடியாகக் கண்டாள். அதனால் பெரிதும் ஊடியிருந்தாள் அவளை அணுகி ஊடலைப் போக்க அஞ்சிய தலைவன் தோழியை அணுக அது தன்னால் இயலாது என்று பொருள் விளங்கத் தோழி கூறியது.

கருத்து :

பெரும் பெயர்த் தலைவி ஒரு பரத்தை உன்னை இகழ்ந்த சொல்லையும் சொல்லித் தன் கண்ணால் வருத்தம் மிக உன்னைப் பார்த்து உனது மார்பில் இருந்த மாலையை அறுத்து உன்னுடன் கலாமும் ஊடி செய்து எம் தெரு வழியே சென்றாள். இதுதான் நின் தலைமையோ! எம்மை போற்றாமல் அகன்று போவாயாக! என்று தோழி தலைவனைப் பார்த்துக் கூறினாள்.

அகம் : 306 : நாவலர் திரு.ந.மு.வேங்கசாமி நாட்டார்

கரந்தை கவியரசு ரா.வேங்கடசலம் பிள்ளை

பெரும் பெயர் மகிழ்ந என்றது இகழ்ச்சி குறிப்பு. பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் தனது தலைமைத் தோன்றப் பரத்தையரை இழித்துரைத்துத் தலைவியைப் பாராட்டி வாயில் வேண்டி நின்றானாக, இன்ன தன்மையள் ஒருத்தி நும்மை இகழ்ந்துரைத்துத் தாரினைப் பரிந்து ஊடிச் சிறு துனி செய்து எம் மறுகின் இறஞ்சினோள் ஆதலின், அதுதான் நும் தலைமையோ, எம்மைப் பேணுதலை ஒழிவீராக என்று கூறித் தோழி வாயில் மறுத்தாள்.

முடிவுரை

சங்க இலக்கியங்களில் இறுதியாகப் புதிப்பிக்கப்பட்ட நூல் அகநானூறு ஆகும். சங்க இலக்கியங்கள் பலவற்றிற்கு உரை கண்ட உ. வே.சா. இந்நூலுக்கு உரையெழுதிப் பதிப்பிக்கவில்லை. சங்க இலக்கியத்தில் அகநானூறு ஒன்றை மட்டும் பதிப்பித்தவர் இரா.இராகவையங்கார். சங்க இலக்கியங்களில் பகுதிபகுதியாகப் பதிப்பிக்கப்பட்ட நூல் இது ஒன்றே ஆகும். அகநானூற்றுக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டாரும், கரந்தை கவியரசு வேங்கடாசலம் பிள்ளையும் எழுதிய உரை பிற்கால உரைகளுக்கு வழிகாட்டியாக உள்ளது. சங்க இலக்கியத்தில் குறைந்த அளவு பதிப்பும் உரையும், ஆய்வும் உடைய நூல் அகநானூறு ஆகும். அகநானூற்றிற்கு அகவற்பாவாலான பழைய உரைகள் இரண்டு இருந்துள்ளன. ஆனால் அவை கிடைக்கப்பெறவில்லை.

உரை வேறுபாடு

1. வேங்கடசாமி நாட்டார் உரையில், துறைவிளக்கம், கூற்று விளக்கம் என்று எதுவுமில்லை. ஆனால் உள்ளுறை பொருளுடன் உரை எழுதியுள்ளார்.

2. வேங்கடசாமி நாட்டார் நகை குறிப்புடன் உரையைத் தொடஙகுகின்றார். செய்யுள் நடையாக உரை உள்ளது.

3. மாணிக்கம் துறை விளக்கத்தில் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவி நேரில் கண்டாள் என்கிறார் பேராசிரியர் ஜெயபால். அறிந்தாள் என்று கூறுகிறார்.

4. தொடக்க கால உரையாசிரியர்கள் செய்யுள் நடையில், அகராதி பொருள் விளக்கம் போன்று பண்டித்துவ நடையில் பாடல் விளக்கம் எழுதியுள்ளனர். பிற்கால உரையாசிரியர்கள் தெளிவுடன் துறை, கூற்று விளக்கம் தந்து எளிய நடையில் பொருள் விளங்கும் வகையில் உரைகண்டுள்ளனர்.

## குறிப்புகள்

1. கோ.கமலக்கண்ணன், அகநானூறு ஆய்வுக்கோவை 2011, தொகுதி 1, ப.396
2. இரா.கவிதா, அகநானூறு ஆய்வுக்கோவை 2011, தொகுதி 1, பக்.438 - 439
3. இரா.தேவகி, அகநானூறு ஆய்வுக்கோவை 2011, தொகுதி 3, பக்.1245, 1249
4. முனைவர் இரா.பிரேமா, அகநானூறு ஆய்வுக்கோவை 2011, தொகுதி 3, பக்.1481 - 1485
5. அ.விஜய்கார்த்திகேயன், அகநானூறு ஆய்வுக்கோவை 2011, தொகுதி 4, பக்.2044 - 2048

# உரைநடை வளர்ச்சியில் புறநானூறு காணும் உரை வேறுபாடு

முனைவர் அ.சிவகுமார்

கற்காலம தொடங்கி தற்காலம்வரை மனிதர் நிலம், நீர்,காற்று, நெருப்பு, வானம் என்னும் ஐம்பூதங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். தாம் வழிவழியாய்ப் பேசி வரும், எழுதிவரும் மொழி வளர்ச்சியை, வளர்ந்து வரும் பண்பாட்டு உரை நடையை "பா"வடிவில் உண்டான எழுத்தோவியம் அடுத்தத் தலைமுறையினர் பின்பற்ற வழிகாட்டுவது இலக்கியங்களே! என்று முழங்கின் வியப்பன்று. அவ்வழியில் ஒரு மொழி இயங்க 30 ஒலிகள் போதும் ஆனால் தமிழில் 500-க்கும் மேற்பட்ட ஒலிகள் இருப்பதால் உலகமொழிகளையே! இயக்கும் ஆற்றல் கொண்டதென்று இன்றைய மொழியியல் வல்லுநர்களும் கூறுகின்றனர். இத்தகைய புகழுக்குரிய தமிழ்மொழியின் இரண்டாம் திருக்குறளாம், புறப்பாட்டு நானூறு எனப் புகழும் புறநானூற்றின் செய்யுள்களுக்கு உரைவளர்ச்சிவழி சிலர் கூறும் வேற்றுமைத் தன்மைகள் இக்கட்டுரையில் பின் இடம்பெறுகின்றன.

**இலக்கியத்தின் பெருமையும் நூலின் தன்மையும்**

*"இலக்கியமின்றி யிலக்கண மின்றே*
*யிலக்கண மின்றி யிலக்கிய மின்றே*
*எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல*
*விலக்கியத் தினின் றெடுபடு மிலக்கணம்"*

என அகத்தியர் கூறுயுள்ளதாகக் கூறுவர். முன்னோர் இத்தகைய நூல் இயற்றும் நூலாசிரியர் தம் நூலில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளைப் பவணந்தியார் கூறும்போது "தன்சொல் பஞ்சாகவும் , செய்யுள் இழையாகவும், செவ்வியல் சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும், குறைவில்லாத வாய் கையாகவும் அறிவு நூற்கும் கதிராகவும், குற்றமில்லாத கல்வியும் அவர்க்கு வேண்டும்" என்று கூறுவதாக சோமஇளவரசு தமது நன்னூல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**நூல் வகையும் நூற்பாவும்**

*"முதல்வழி சார்பென நூல் மூன்றாகும் "* ( நன்.நூற்பா. 5)

*" அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே"*
(நன்.நூற்பா. 10)

என்றும் அதன் நூற்பாக்கள் 1. பிண்டம் 2.தொகை 3. வகை 4. குறி 5. செய்கை 6. புறனடை என்னும் ஆறு நிலைகளைத் தழுவிச் செல்ல வேண்டும் என்பார் பவணந்தி.

**உரையின் தோற்றம்**

செய்யுள் நடை நூல்கள், வசன நடை செய்யுள் நூல்கள் என தமிழில் தோன்றிய நூல்களை இருவகைப்படுத்துவர். இவற்றில் வசன நடையானது உரையாசிரியர் வழி தோன்றியது என்பர். அவ்வசன நடையையே! உரைநடை எனக் கூறுவது வழக்காயிற்று. இதன்வழி உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளும், இறையனார் களவியல் உரையும் தோன்றின என்பர். இவ்வுரைநடை பற்றி தொல்காப்பியம்,

*"பாட்டிடை வைத்த குறிப் பினானும்*
*பாவின் றெழுந்த கிளவி யானும்*
*பொருளொடு புணராப் பொய் மொழியானும்*
*பொருளொடு புணர்ந்த நகை மொழியானுமென்*
*றுரைவகை நடை நான்கென மொழிப"*

என்கிறது. எனவே "ஒரு பாட்டின் இடையிடைக் கொண்டு நிற்கும் கருத்தான் வருவன உரையெனப்படும் என்று (தமிழ்மொழி வரலாறு. உ.த.நி.ப.61.) கூறுகிறது. அத்தகைய உரையின் வகைகளை நன்னூல்,

*"பாடம் , கருத்தே, சொல்வகை, சொற்பொருள்,*
*தொகுத்துரை,உதாரணம் ,வினா விடை, விசேடம்,*
*விரிவு, அதிகாரம், துணிபு, பயனோடு*
*ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே"* *(நூற்பா.21)*

பொதுவாய் உரைத்த இப்பதினான்கு வகைகளை அவரே! காண்டிகைவுரை, விருத்திவுரை என இரண்டு பிரிவுகளுக்குள் உட்படுத்தி கூறுகையில்,

**காண்டிகை உரை**

கருத்துரையும், பதவுரையும், எடுத்துக்காட்டுமாகிய மூன்று வகைகளாலும் கூறலாம். அம்மூன்றுடன் வினா,விடை என்னும் இரண்டையும் கூட்டிச் சொல்லுதாலும் சூத்திரத்தில் அமைந்த பொருளைத் தெளிவாக விளக்குவன காண்டிகை உரை. (சூத்திரத்துட் பொருள் தோற்றுவ காண்டிகை)

**விருத்தியுரை**

சூத்திரத்திலுள்ள பொருளேயன்றி அவ்விடங்களுக்கு அவசியமான பொருள்களெல்லாம் விளங்கும்படி தானுரைக்கும் உரையாலும், ஆசிரிய வசனங்களாலும், மேற்கூறிய காண்டிகையுறுப்பு ஐந்தினாலும், ஐயந்தீரக் குறைவுபடாமல் மெய்ப்பொருளை விரித்துரைப்பது விருத்தியுரை.

*சூத்திரத்துப் பொருள் அன்றியும் ஆண்டைக்கு*
*இன்றியமையா யாவையும் விளங்கத்*
*தன்னுரை யானும் பிறநூலானும்*
*ஐயம் அகல ஐங்காண்டிகை உறுப்பொடு*
*மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி* *(நன்னூல்-23)*

என்று உரைத்துள்ளார் நூலின் உரையாசிரியர் (சோ.ம.இ).

**உரைநடை வளர்ச்சி**

பாட்டியலுடன் அறுவகை இலக்கணமாய்த் திகழும் எனக் கூறும் தமிழ் மொழியில் உள்ள நூல்களுக்கு இளம்பூரணர் எழுத்திற்கும், சேனாவரையர் சொல்லிற்கும், பொருளுக்கு நச்சினார்க்கினியரும், திருக்குறளுக்குப் பதின்மரும் இவர்கள்போலப் பலரும் தம்பெயருடன் உரையெழுதி வந்தனர். பின் பிற்காலச் சோழர்கள், பாண்டியர் காலங்களில் எழுந்த கல்வெட்டு உரைநடை, கி.பி.12ஆம் நூற்றாண்டில் வளர்ந்த மணிபிரவாளநடை, கி.பி.15ஆம் நூற்றாண்டின் சாத்திர உரைநடை, கி.பி.17,18ஆம் நூற்றாண்டுகளில் உண்டான கிருத்துவர்களின் உரைநடை, 19ஆம் நூற்றாண்டின் முதல் வகையான கதையிலக்கிய உரைநடை, 20ஆம் நூற்றாண்டின் புதிய உரைநடை போன்றவை தமிழிலக்கியம் கண்ட வரலாற்று உரைநடைகள்.

**யார் உரையாசிரியர்?**

தமிழ்மொழியில் முதன் முதலாக இலக்கணப் பிழையற்ற தூய, எளிய நடையைக் கையாண்டவர் யாழ்பாணத்து ஆறுமுகநாவலர். எனவே, அவரை ஆங்கில உரைநடையின் டிரடைன் (Dryden) க்கு இணையானவர் என்பர். தமிழ் ஆய்வாளர்கள் எனினும் தமிழ் உரைநடையின் தந்தை என்று வீரமாமுனிவரை மட்டுமே கூறுவர். ஒப்புநோக்கு வகையில் வடமொழியில் நூலாசிரியர்கள் தாமே உரையெழுதி வந்தனர் என்று கூறினும் அதற்கு இணையாகத் தமிழில் இல்லையென்பவருக்கு, திரு.வி.க. அகவற்பா நடையைத் தமிழ் உரைநடையின் முதல் வளர்ச்சியென்று கூறும் அவர் கருத்துடன் இன்றைய நூலறிவாளர்கள் குறிப்பிடுவதும் குறிக்கத்தக்கவையாகும்.

தொல்காப்பியர்,

"தொன்மைதானே
உரையோடு புணர்த்த பழமை மேற்றே"

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை -நூலாசிரியர் சேக்கிழாரை உரையாசிரியர் எனக் கூறும்போது

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்
நன் நூலாசிரியன் ;
நகுபாசுர முதல்உரை செய்தலினால்

நவில் உரையாசிரியன் ;
நீடிய பரசமயக்குழி வீழ்ந்தவர்
நிலையாற் போத காசிரியன் ; இவை
நிகழ்தொறும் நிகழ்தொறும்
ஆடிய ஞானத் திறன் உறலான்
ஞானாசிரியனும் நீ !

கவிமணி

"கண்ணைக் கெடுப்பார் கவிராயர் அக்கண்ணை
எண்ணி உரைக்காரர் ஈவாரே"

என்றும் சுட்டியுள்ளார் என்பர்.

**கவிதை - உரைநடை**

"ஒருவர் குறை அவருக்குத் தெரிவதைவிட மற்றவர்களுக்கே தெளிவாகப் புலப்படும்" (ப.365., மொழிவரலாறு., மு.வ). **காலரிட்ஜ்:** உரைநடை என்பது சொற்களைச் சிறந்த இடத்தில் அமைப்பது என்றும் கவிதை என்பது சிறந்த சொற்களைச் சிறந்த இடத்தில் அமைப்பது" என்றும் விளக்கமளித்துள்ளார். (பக்.355., தமிழ் இலக்கிய வரலாறு.,டாக்டர்.பூவண்ணன்). "Prose is architecture, it is not a interior decoration, and the baroque is over" -Ernest Heming Way,"Always be a poet, even in prose" - Charlesbandelaire (இணையம்).

**அகராதி விளக்கம்**

**உரைநடை(Prose) :** கவிதையிலிருந்து வேறுபடும் இலக்கிய வகை : கவிதையும், உரைநடையும் தம் தொனி, நடை, வேகம், மையப்பொருள் ஆகியவற்றிலும் வேறுபடும். (ப.394., தொகுதி -1., பிரிட்டானிக்கா) **Prose:** Ordinary Written or Spoken Language. (Page No.538, ILLUSTRATED OXFORD DICTIONARY)

**தேவர் - மனிதர்** உலகில் பல்வகை உயிர்களைப் படைத்து,காத்து அழித்து வருவதாயக் கூறும் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள இடைவெளியை ஆண்டுகள் கணக்கில் உரைநூல் கூறுகையில் "மண்ணில் ஓர் ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாள்; மானுட வருடம் 360 தேவர்களுக்கு ஓர் ஆண்டு என்று உலக வாழ்வை 4-ஆகப் பட்டியலிடுகிறது. பன்னிரு திருமுறையின் உரைநூல்.

| யுகம் | தேவ ஆண்டு | மானுட ஆண்டு |
|---|---|---|
| கிரேதா யுகம் | 4,800 | 17,28,000 |
| திரேதா யுகம் | 3,600 | 12,96,000 |
| துவாபர யுகம் | 2,400 | 8,64,000 |

| | | |
|---|---|---|
| கலி யுகம் | 1,200 | 4,32,000 |
| ஆக | 12,000 | 43,20,000 |

(ப.624., 5ஆம் திருமுறை ., வர்த்தமானன் பதிப்பகம்)

இவ்வேற்றுமை எளிமைக்கும் வலிமைக்குமான இடைவெளியென்றும் கூறலாம். மேலும் (மூலநூல் இறைவன் - உரை நூல் - மனிதன்) என்றும் எண்ணத் தோன்றுகிறது.

**உரை- விரி : வகைகள்**

ஒரு செய்யுளுக்கு வேண்டிய இவ்விரண்டையும் "உரையாசிரியர்கள் " என்னும் நூலில் (மு.வை. அரவிந்தன், ப.68இல் ஆறு நிலையாறு நிலைகளில் எழுதலாம் என இயம்புகிறார்.

| நூலுரை | உரைவிரி |
|---|---|
| நூலை ஒக்கும் உரை உரைவிரி | நூலை ஒக்கும் |
| நூற்கு உரை | உரைக்கு விரி |
| நூலது உரை | உரையது விரி |
| நூற்கண் உரை | உரைக்கண் வரி |
| நூலன்ன உரை | உரைக்கும் விரி |
| நூலும் உரை | உரைவிரிவுடையது |

**உரையாசிரியர்கள் திறனாய்வாளர்கள்**

பண்டைய உரையாசிரியர்களைத் திறனாய்வாளர்கள் என்றும் பண்டைய உரைகள் யாவும் திறனாய்வு நூல்கள் என்றும் வி.நா. மருதசலம் "புலமை நூல்" என்னும் ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளதாக மு.வை.அரவிந்தன் தெரிவித்துள்ளார். அத்திறனாய்வின் பாதையில் சிலவகை உரைநடை வேறுபாட்டை அணுகுவது சாலப் பொருந்தும் என்றெண்ணுகிறேன். அவை :

- ❖ விளக்க உரைநடை ( Expository Prose)
- ❖ அளவை உரைநடை ( Argumentative Prose)
- ❖ எடுத்துரை உரைநடை ( Narrative Prose)
- ❖ வருணனை உரைநடை ( Descriptive Prose)
- ❖ சிந்தனை உரைநடை ( Contemplative Prose)
- ❖ பாராட்டு முறை ( Appreciative Prose)
- ❖ முடிவு முறை ( Judicial)
- ❖ விதிமுறை ( Prepcriptive)
- ❖ செலுத்து நிலை (அ) படைப்புவழி ( Induetive) எனப் பலவகைப்படும் என்பர்.

முதன்மை நூல்

(புறநானூறு) பா.ஆசிரியப்பா ; பாடலின் எண்ணிக்கை -1 + 400; புறம் - பாடுப்பொருள் ; புலவர் - 165; அடி - 4 முதல் 40 வரை ; தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் அறியயியலவில்லை; வாழ்த்து - சிவன் ; பழைய உரை - 1 முதல் 266 பாடல்கள் வரை ; மீதமுள்ள 267 முதல் 400 வரை - உவே.சா. பதிப்பித்தவரும் அவரே ! என்று தமிழிலக்கிய வரலாற்றில் ஜெயம் எழுதியுள்ளார். இந்நானூறு பாடலில் 18 - சேரன், 18 - சோழன் , 15 - பாண்டிய அரசர்களைப் பற்றிக் கூறுவதாகவும் கூறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த புறநானூற்கு இன்று பலர் உரையியற்றியிருப்பினும் அவற்றுள் 1947இல் முதல் பதிப்பினைத் தந்த உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரையும், இரண்டாம் பதிப்பு 2001இல் தந்துள்ள புலவர் மாணிக்கனார் உரையும், நவம்பர் 2000இல் முதல் பதிப்பினை வழங்கியுள்ள இரா.சீனிவாசன் உரையும் ஒப்பிட்டு அவர்களின் நடைவேறுபாட்டில் சிலவற்றை மட்டும் மேற்கூறிய வகையில் கூற விழைந்துள்ளேன்.

விளக்க முறை

ஒரு கருத்தை விளக்கிக் காட்டுவதற்காக வினா வாக்கியத்தை எழுப்பி அவ்வினாவிற்கு விடை காணும் முறையை விளக்கமுறை உரைநடை என்பர்.

விளக்க உரை

ஒன்றை விளக்கிக் காட்டுவதுபோல் எழுதப் பெறும் அனைத்தும் விளக்க உரையாகும். இதற்கு அடிப்படைத்தேவை வினா வாக்கியம் (ஏன்,எப்படி,எதனால், யார், போன்றவைகளுக்கு விடை கூறும் பாங்கில் அமையும் முறை என்பா) புறநானூறு வாழ்த்துச் செய்யுளில்,

பாடியவர்

பாரதம் பாடிய பெருந்தேவனார்.

இச்செய்யுள்

சிவனைப் பற்றியது.

*"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்*
*வண்ண மார்பின் தாருங் கொன்றை . . .*
*கறை மிடறனியலு மணிந்தன் றக்கறை* . . .
*பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை*
*பதிணென் கணனு மேத்தவும் படுமே*
*எல்லா உயிர்க்கும் ஏமமாகிய*
*நீரற வறியாக் கரகத்துத்*
*தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே !"*

உரைவேந்தர் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை "கறைமிடறு அணியலும் அணிந்தன்று" இவ்வடிக்கு "நஞ்சினது கறுப்பு திருமிடற்றை அழகு செய்தலும் செய்தது" என உரைவகுத்து அக்கறுப்புத்தான் மறுவாயும் வானோரையுய்யக் கொண்டமையின் வேதத்தைப் பயிலும் - அந்தணராற் புகழவும் படும்! என விளக்கி "உண்ணலு முண்ணேன் (கலி.23)" எனக் கலித்தொகை வரியினையும் மேற்கோளாக்கியுள்ளார். எனவே இந்நடை விளக்க நடையே!

பதினெண்கணங்கள் "தேவரும், அசுரரும், முனிவரும், கின்னரரும், கிம்புருடரும், கருடரும், இயக்கரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், வித்தியாதரரும், நாகரும், வேதாளமும், தாராகணமும், ஆகாசவாசிகளும், போக பூமியோருமென" என்று ஔவை பொருளுரைத்துள்ளார்.

இவர் குறிப்பு : இப்பெரியோனை மனமொழி மெய்களால் வணங்க, அறம் முதல் நான்கும் பயக்கும் என்பது கருத்தாகக் கொள்க எனத் தன் கருத்தையும் எடுத்தோதியுள்ளார். மேலும் "நீர் அறவு அறியாக்கரகத்து" - வாழ்த்துக் செய்யுளின் இவ்வரிக்கு - நீர் தொலைவறியாக் குண்டிகை யானும் என்றுரைத்து நீரறவு அறியாக் கரகம் "கங்கை" யென்பாருமுளர் என்கிறார். (ப.2.3).

புலவர் அ.மாணிக்கனார் மையப்பொருளை மாற்றாமல் சிவபெருமான் எல்லா வகையான உயிர்களுக்கும் காவலாய் உள்ளவன்; சிறந்த தவத்தையுடையவன்; தலைமாலை கார்காலத்தில் பூக்கும் நறுமணமுடைய கொன்றைப்பூ; அழகிய மார்பிலே அணியப்படும் மாலை; ஏறப்படுவது தூய்மையான வெண்மையான காளை; போன்ற சொல்லடைகளைப் பயன்படுத்துவதுடன் சிறந்த பெருமையுடைய அவனது கொடியில் உள்ளதும் அந்தக் காளையே! என உரைப்பர் என்கிறார். மேலும் " கறைமிடறு அணியிலும் அணிந்தன்று" இவ்வடியை "நஞ்சினது கறுமை அப்பெருமானின் திருக்கழுத்தினை அழகு செய்தது. அந்தக் கறுப்போ களங்கமாய் இருந்தும் தேவர்களை உயிர்பிழைக்கச் செய்தமையால் வேதத்தைப் பயிலும் அந்தணர்களால் புகழவும் படும்" என இவரே! வினா எவரும் எழுப்பும் முன்பாக சொல்லடைகள் மூலம் விளக்கிக் கூறுகிறார் எளியத் தமிழ்நடையுடன் (ப.30).

ரா.சீனிவாசன் ஔவையின் முற்கால உரையாசிரியர் நடையையோ,புலவரின் இலக்கியப் பைஞ்சுவை சொல் ஆடை நடையையோ பின்பற்றாமல் செய்யுளுக்குத் தேவையான செய்திகளை காய்தல் உவத்தலின்றி மிகையின்றிக் குறைத்தலன்றி செய்தி வாக்கியத்தில் வினா வாக்கியம் எழுப்பாமல் தம் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். காட்டாகச் சிவபெருமானைப் பற்றிக் கூறும்போது . . . "கங்கையைச் சடைமுடியில் தரித்தவன். அரிய தவத்தினன். அவன் சூடி இருக்கும் தலைமாலை கொன்றைப்பூ; அது கார்காலத்தில் மலர்வது ; நறுமணம் மிக்கது. அதனையே அவன் மார்பிலும் அணிந்துள்ளான்."(ப-24).

இவ்வாறு இவர் இயற்றி இருப்பது எளிய, அழகு, பழகு தமிழில் யார்? எது? போன்ற வினாக்களுக்கு விளக்கமாக, அதில் சுருக்கமாக செய்திவடிவில் விடை கூறியிருப்பது காலத்திற்கேற்ற முற்போக்கு நடையாகும்.

ஔவையின் உரைநடையில் மேற்கோளுடன் கூடிய விளக்க நடையும் புலவரின் நடையில் இலக்கிய சுவையுடன் கூடிய சொல்ஆடை விளக்கநடையும், ரா.சீ அவர்களின் உரைநடையில் எளிய அழகு, பழகு தமிழ் விளக்கநடையும் உள்ளதை உணரமுடிகிறது.

**அளவை உரை**

அளவை உரைநடை என்பது விவாதிக்கும் போக்கில் அமையும். ஓர் உட்கோளைப் படிப்போர் இணங்கி ஏற்றுக்கொள்ளும் வகையில் வலியுறுத்தும் அறிவராய்ச்சியைக் தூண்டும். உணர்ச்சிக்கு விருந்து தரும். சிக்கல்களை நுணுக்கமாய்ப் புரிந்து கொள்ளும் வகையில் சிந்திக்கத் தூண்டும் என்பர்.

*"எருமை அன்ன கருங்கல் இடைதோறு*
*ஆனிற் பறக்கும் யானைய முன்பின்*
*கானக நாடனை நீயோ பெரும*
*நீயோர் ஆகலின் நின்ஒன்று மொழிவல்*
*அருளும் அன்பும் நீக்கு நீங்கா*
*நிரயங் கொள்பவரோடு ஒன்றாது காவல்*
*குழவி கொள்பவரின் ஓம்புறுதி*
*அளிதோ தானே அது பெறல் அருங் குரைத்தே ".*

புறம் -பாடல் எண்.5, திணை- பாடாண் ; துறை - செவியறிவுறூஉ; பொருண்மொழிக் காஞ்சியுமாகும். அரசன் ; சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருங்சேரல் இரும்பொறை பாடியவர் நரி வெரூஉத் தலையார்.

**ஔவை**

எருமைபோலும் வடிவையுடைய கரிய கற்பொருந்திய இடந்தோறும் - பெற்றம்போலப் பரக்கும் யானையையுடைய வாய - வலிமையுடைய காட்டிற்குள்ளாகிய நாட்டினையுடையாய் - நீ; நீ இங்ஙனம் பகைவரான் அணுகப்படாத இயல்பாகிய பெருஞ்செல்வத்தை யுடையனாதலால் ; நினக்கு ஒரு காரியஞ்சொல்லுவேன் அதனைக் கேட்பாயாக ; அருளையும் அன்பையும் நீக்கி ; பாவஞ்செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கு இடமாகக் கொள்பவரோடு பொருந்தாது; நீ காக்கப்படும் தேயத்தை; குழவியை வளர்ப்பவரைப் போலப் பாதுகாப்பாயாக; அளிக்கத்தக்கதொன்று அக் காவல்; அது பெறுதற்குகரிது. (ப-14).

உரைவேந்தன் இவ்வுரையில் கரியகல் நட்டதுயார்? விவாதிக்க இடமுண்டு - காவல் காக்கும் முறையையும் பாவம் பற்றி மன்னனுக்கு அறவுரை

போதிக்கும் மனப்பக்குவமும் பற்றி உரை கூறிய தன்மை அளவை உரைக்குப் பொருந்தியுள்ளது. மேற்கோளும் உண்டு.

புலவர்

தனது குறிப்புரையில் ஒன்றினது துன்பம் கண்டால் அதுவே இரக்கம் என்றும் அன்பு- என்பது தன்னுடன் தொடர்புடையவரிடத்தில் உண்டாவது எனக்கூறி மன்னனுக்கு இவை இரண்டும் அவசியம் என்பதை ஔவையிலிருந்து வேறுபட்டு நுணுக்கமாய் புரியவைக்கிறார் (ப.38).

ஔவை; பெருஞ்சேரலை **'கானக நாடன்'** எனப் பொருள் கொள்வாரமுண்டு என்கிறார். ரா.சீ. மேற்கூரிய அரசனை கானக நாடன்' என்று உன்னைப் பாராட்டுவர் என்கிறார். பாவம் செய்து நீங்காத நரகத்தை அடைபவருடன் பொருந்தாது என மன்னனை நோக்கி ஔவையும் புலவரும் கூறுகின்றனர். இதனை ரா.சீ, ஈவு இரக்கமற்றுக் கொடுமை செய்யும் கீழ்மக்களது தொடர்பு கொள்ளற்க; அவர்கள் நிரயத்துக்கு வழிகாட்டுபவர் .என விரித்துரைக்கிறார். மேலும் ஔவை, நீ காக்கப்படும் தேயத்தைக் குழந்தை வளர்ப்பவரைப் போலப் பாதுகாப்பாயாக என்கிறார். ஆனால் ரா.சீ. உன் நாட்டு மக்களைக் குழந்தைகளைப் போற்றுவதுபோல் காத்து உதவுக. இவையே யான் வேண்டுபவை எனக் கருத்தால் மாற்றிக் கூறுகிறார். (ரா.சீ; ப.29)

எடுத்துரை உரை

ஒரு செயல் பற்றியோ, வாழ்வின் இயக்கம் பற்றியோ விவரிப்பது எடுத்துரை உரைநடை. இக்காலத் தமிழ் உரைநடையில் பேரளவாகத் திகழ்வது எடுத்துரை உரைநடையேயாகும் என்பர்.

*"ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பின்*
*தாள் தோய் தடக்கைத் தகைமான் வழுதி*
*வல்லைமன்ற, நீ நயத்து அளித்தல்*
*தேற்றாய், பெரும! பொய்யே : என்றும்*
*காய்சினம் தவிராது கடல்ஊர்பு எழுதரும்*
*ஞாயிறு அனையை, நின்பகைவர்க்குத்;*
*திங்கள் அனையை, எம்ம னோர்க்கே!"*

(புறம் - பா.எண்.59, திணை - பாடாண்திணை; துறை - பூவை நிலை; அரசன் - பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் -புலவன்; - நன்னூற்புலவன்; தண்டமிழாசான் -மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.

ஔவை

ஆரம் தாழ்ந்த அழகுமிக்க மார்பினையும் - முழந்தாளிலே தோய்ந்த பெரிய கையினையுமுடைய ; அழகு மாட்சியமைப்பட்ட வழுதி; நீ யாவர்க்கும்

உவந்து மெய்யாக; அருளைப் பண்ணுதலைத் தெளிவாக வல்லை மெய்யாக; யாவரிடத்தும் தெளியாய் ; பெரும - பொய்யை - எந்நாளும் சுடும் வெம்மை யொழியாது; கடலிடத்தே கிளர்ந்தெழுகின்ற ஞாயிற்றை யொப்பை ; எம்போல் வார்க்குத் திங்களை யொப்பை (பக் -155 -156).

மன்னன் செய்ய வேண்டிய செயல்பற்றி எடுத்துரைப்பதால் இப்பாடல் எடுத்துரை வகையாகும்.

ஔவையின் நடையைத் தாண்டிப் புலவர் மன்னனை மாட்சியமைப்பட்ட பாண்டியன் என்கிறார். 'பொய்' - என்ற வார்த்தையை எப்போதும் அறியாதவன் என்றும், 'ஆரம்' என்பதை 'வேப்ப மாலை' எனவும் உரையாக்கியுள்ளார் (பக்-142-143).

**ரா.சி**

"ஆரம்" இதற்குப் பொருள்-'பொன்மாலை' உன் மார்புக்கு அழகு செய்கிறது. கால் அடியைத் தொடும் உன் கைகள் உனக்குத் தோற்றத்தைத் தருகின்றன. அழகிய தோற்றம் உடைய வழுதியே! எனக் கூறுவதின்வழி எடுத்துரைத்தல் முறையில் வேறுபட்டுள்ளார் இவர் (ப-91).

**வருணனை உரை**

படிப்போரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஆற்றலுள்ள சொற்களை வருணனை என்பவர். புலன் உணர்வு மூலம் ஏற்படும் அனுபவங்களை வருணித்து காட்டுதலை வருணணை உரை எனவும் கூறுவர்.

புறம்: பாடல்-123, திணை-பாடாண் திணை: துறை-இயன்மொழி:மன்னன்-மலையமான் திருமுடிக்காரி: புலவர்-கபிலர்.

*"நாட்கள் உண்டு நாள்மகிழ் மகிழின்*
*யார்க்கும் எளிதே தேர்ஈ தல்லே*
*தொலை யா நல்லிசை விளங்கு மலையன்*
*மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்*
*பயன் கெழு முள்ளூர் மீமிசைப்*
*பட்ட மாரி உறையினும் பலவே"*

**ஔவை**

நாட் காலையே மதுவை யுண்டு-நாளோலக்கத்து மகிழ்ச்சியை மகிழின்-தேர்வழங்குதல் யாவர்க்கும் எளிது. கேடாத நல்ல புகழ்விளங்கும் மலையன் மது நுகர்ந்து மகிழாது வழங்கிய-பொற் படைகளால் அணியப்பட்ட உயர்ந்த தேர் பயன் பொருந்திய முள்ளூர் மலையுச்சிக்கண் உண்டாகிய மழையினது துளியினும் பல (ப-264).

பாடலில் கொடையாக வழங்கிய தேர்கள் வருணனை செய்யப்பட்டுள்ளன. ஆதலின் உரை வருணனை உரையே!

- ❖ புலவர் : ஐம்பொறி மயக்கும் கள் உண்ணலைக் காலையிலேயே மதுவைக் குடித்து நாளோ லக்கத்தில் மகிழ்ச்சியில் இருப்பின் தேரை அளிப்பது எல்லேருக்கும் எளியது என்கிறார் (ப-242). (இவர் இங்கு உவமைக்கு முக்கியத்துவம் தரவில்லை.)

- ❖ ரா.சீ : அரசர்களை அவர்கள் நாள் ஓலக்கத்தில் குடித்து மகிழ்வுடன் இருக்கும்போது புகழ்ந்து பாடினால் அவர்கள் மனம் குளிர்வர். தனம் குவியும்; வேண்டிய பரிசு பெறுவர் (ப-145). (தனம், பரிசு இவற்றை வருணித்துள்ளார்) .

**சிந்தனை உரை**

எழுதுவோனின் சொந்த ஆளுமை முனைப்பாகத் தெரியும் வகையில் எழுதப்பெறுவது சிந்தனை உரை என்பர்.

பாடல்-124.(புறம்); திணை-பாடாண்: துறை-இயன்மொழி. பாடியவர்-கபிலர். மன்னன்-மலையமான் திருமுடிகாரி.

*"நாளன்று போகிப் புள்ளிடைத் தட்பப்*
*பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்*
*வறிது பெயர்குவர் அல்லர் நெறிகொளப்*
*பாடு அன்று இரங்கும் அருவிப்*
*பீடுகெழு மலையற் பாடியோரே"*

**ஔவை**

நல்ல நாளன்றாகப் போகி-புள் நிமித்தம் இடையே நின்று தடுப்ப-செவ்வியன்றாகச் சென்று கூடி கூறுபாடன்றாக முனியும் வார்த்தைகளைச் சொல்லினும்-வறிதாக மீள் வாரலர்: ஒழுங்குபட-ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவியையுடைய-பெருமை பெருந்திய மலையையுடையோனைப் பாடியவர்கள் (ப-265). உரைவேந்தரும் கபிலரும் சொந்த அனுபங்களைக் கூறுவதாலும் நிமித்தம் போன்றவற்றைச் சாடுவதாலும் இது சிந்தனை உரைநடை.

**புலவர்**

தனக்கே உறிய சிந்தனையோடு பாடலின் பொருளில் மன்னனிடம் "பரிசு பெறச் செல்வோர் நாள் பார்க்க வேண்டியதில்லை. பறவைச் சகுனம் தடை செய்கிறதே என எண்ணவேண்டியதில்லை. இன்னது சொல்ல வேண்டும் என ஆராய வேண்டியதில்லை. எனப் பழகுதமிழில் கூறுவதுடன் 'வெறுங்கை' என்ற சமுதாய, கிராமியச் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார் (ப-243).

**பேரா.ரா.சீ**

இப்பாடலுக்கு 'திறன' என்ற அறிவியல் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். "புலவர்கள் திறன் அற்ற பாடல்களைப் பாடினாலும்

அக்காலத்தில் மலையமான் பொருட்படுத்துவதில்லை" (ப-146). எனக் கூறுவது ஆராயத்தக்கதே!

பாராட்டு முறைவகை உரை

எடுத்துக் கொண்ட பொருளையும், புத்தகத்தையும் (குறை இருப்பினும்) குறைகாணாமல் நிறைவுகளை மட்டும் பேசும் வகை என்பர்.

(புறப்பாடல்-298; திணை-கரந்தை: துறை-நெடுமொழி, பாடியவர்-ஆவியார், அரசன் பெயர் அரிய இயலவில்லை.

*"எமக்கே கலங்கல் தருமே தானே*
*தேறல் உண்ணும் மன்னே நன்றும்*
*இன்னான் மன்ற வேந்தே இனியே*
*நேரார் ஆரெயில் முற்றி*
*வாய் மடித்த உரறிநீ முந்து என்னானே".*

ஔவை

எமக்குக் கலங்கிய கள்ளையே கொடுப்பான். தான் தெளிந்த தேறலையேயுண்பான் பெரும் பான்மையும் முன்பு: இனி இப்பொழுது பெரிதும் அன்பில்லாதவனான் தெளிவாக: நேரார் ஆரெயில் முற்றி பகைவருடைய கொள்ளற்கரிய அரணைச் சூழ்ந்து வாயிதழைக் கடித்து உரப்பி- நீ முற்படச் செல்லென ஏவாதனாதலால் (ப.196).

ஒரு வீரன் கள்ளுக்காக வருத்தப்பட்டாலும் மன்னன் போர் செய்யும் தொழிலை விட்டுவிட்டான் என்பதையே! சுவைபடப் பாடலோ வியமாய் நிற்கிறது. உள்ளுறையாய்
உரைவேந்தர் உரையில் என்றால் தகும்.

புலவர்

"போருக்குச் செல்க" என மன்னன் கூறவில்லை, நாட்டில் போரில்லை. ஆதலால் உறுதியான அன்பு மறவர் மீது அரசனுக்கு இல்லை என இவர் கூறும் கருத்து வழி நோக்கின் போர் அற்ற காலத்தில் மறவரும் மற்றவரும் ஒன்றே என மன்னன் எண்ணியிருக்கலாம் என்றே கூறலாம் (ப.170). எனவே இந்நடை பாராட்டு நடையே !

பேரா.ரா.சீ.

"போர் இல்லாமல் இருப்பது எங்களுக்கு மகிழ்வு தருவதாக இல்லை. எப்பொழுது மறுபடியும் கள்ளைத் தந்து களத்துக்கு அனுப்புவானோ? தெரியவில்லை" இது வியப்பாக உள்ளது என்கிறார்.

இவர் உரைவழி கள்ளுண்பதையும் போரையும் மன்னன் வெறுத்திருக்கலாம். (ப.306) எனவே பாராட்டுரையே !

**முடிவுமுறை உரை**

அடிப்படையான சில வரையறைகளையும் விதிகளையும், தானே வகுத்துக் கொண்ட சில விதிமுறைகளையும் அளவுகோல்களாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட பாடல் அல்லது இலக்கியம் பற்றிய முடிவுகளைக் கூறுவது என்பர்.

(புறப்பாடல் எண்-299, திணை - நொச்சி, துறை - குதிரை மறம், புலவர் - பொன்முடியார், மன்னன் பெயர் அறிய இயலவில்லை)

*"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்*
*உழுத்தர் உண்ட ஒய் நடைப்புரவி*
*கடல் மண்டு தோணியின் , படைமுகம் போழ*
*நெய்ம்மிதி அருந்திய, கொய் சுவல் எருத்தின்*
*தண்ணடை மன்னர், தாருடைப் புரவி*
*அணங்குடை முருகன் கோட்டத்துக்*
*கலம் தொடா மகளிரின், இகழ்ந்து நின்றவே".*

**உரைவேந்தர் ஔவை**

பருத்தியை வேலியாகவுடைய சிறிய ஊர்க்கு மன்னனுடைய; உழுந்தின் சக்கையைத் தின்று வளர்ந்த தளர்ந்த நடையை உடைய குதிரைகள், கடல் நீரைப்பிளந்து கொண்டு செல்லும் தோணிபோலப் பகைவருடைய தானைத்திரளை இடமுண்டாகப் பிளந்து சென்று போரைச் செய்ய ;நெய் பெய்து மிதித்த மைத்த உணவையுண்ட ஒழுங்குறக் கத்திரிக்கப்பட்ட பிடரியினையுடைய-மருத நிலத்தூர்களையுடைய பெருவேந்தர்களுள் தாரணிந்த குதிரைகள்: வகுத்து தலையுடைய முருகன் கோயிலில் கலங்களைத் தொடுதற்கில்லாமல் விலக்குடையராகிய மகளிரைப்போலப் போர்க்கஞ்சி பின்னிட்டு நின்றொழிந்தன (தொகுதி-II) (ப-197).

உணவு முக்கியமல்ல மன வலிமையே முக்கியம் என்னும் வரையறைவழி பேரரசன் தோற்றான் என்பதை அடிப்படையாகக் கொண்டு பொருளும் உரையும் முடிகிறது. எனவே இவை முடிவு முறை உறையாகும்.

**புலவர் மாணிக்கனார்**

"கிண்கிணி மாலை" அணிந்த குதிரைகள் என்று அடைமொழி இவர் கூறுவதிலிருந்து அதிகமாய் அறுசுவை உணவை மட்டும் உண்டு. வாழ்பவர் போருக்கு இயல்பாகவே பயன்படார் எனக் கூறற்கிடமுளது (தொகுப்பு.II, ப.171).

**ரா.சீனிவாசன்**

பருத்தி மரத்தை வேலியாக உடைய சீறூர் மன்னனின் குதிரை, உழுந்தின் சக்கையைத் தின்று தளர்ந்தது. எனினும், அது கடலைப் பிளந்து செல்லும் தோணி போல எதிரிகளின் 'படைமுகம் சென்று பிளவுபடுத்துகிறது ' (ப.306).

இவர் கருத்து வழி, மலைத்தவனோடு செல்வதைவிட இளைத்தவனோடு செல்வது மேல் என்ற பழமொழியை ஊன்றி உணரச் செய்கிறது.

விதிமுறை உரை

வரையறைகளையும் அளவுகோல்களையும் அப்படியே ஒரு பாடலில் அல்லது ஓர் இலக்கியத்தில் பொருத்திக் காண்பது என்பர்.

(பாடல் புறம் - 312 ; திணை-வாகை, துறை-மூதின் முல்லை , பாடியவர்- பொன்முடியார்) (மறக்குடிமகள் ஒருத்தியின் கூற்று - புலவர் மாணிக்கனார்)

*"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கின்*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"*

ஔவை

மகனைப் பெற்று வளர்த்துவிடுதல் என்னிடத்துக் கடமையாகும். அவனை நற்பண்புகளால் நிறைந்தவனாக்குவது தந்தை பால் உள்ள கடமையாகும். அவனுக்கு வேண்டும் வேலை வடித்துக் கூரிதாக்கித் தருவது கொல்லனது கடமையாகும். நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனது கடமையாகும். விளங்குகின்ற வாளைக் கையிலேந்திச் சென்று தடுத்தற்குரிய போரைச் செய்து ; பகைவர் களிற்றயானைகளைக் கொன்று வெற்றியொடு மீளுவது காளையாகிய மகனுக்குக் கடமையாகும் (ப.221) (பகுதி- II).

உரைவேந்தர் விதிமுறைக்கேற்பவும் அன்றைய மேலும் எக்காலத்து இளைஞர், தாய்,தந்தை, கொல்லன்,வேந்தன் அளவுகோல் எத்தகையது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார் இப்பாடலில்

புலவர்

இவர் மையக்கருத்தை மாற்றால் நடையில் மட்டும் வார்த்தைகளின் அளவை நீட்டுகிறார். சான்றாக-ஔவை - என்னிடத்து ; என்கிறார். புலவர் - என்னிடம் உள்ளன என்கிறார். ஔவை- தந்தைபால் உள்ள கடமை. புலவர் - தந்தையின் கடமை ... என்பன போல (ப.189) (தொகுதி - II) இயற்றியுள்ளார்.

ரா.சீ

செய்தி நடையின் அளவை மாற்றாமல் எழுதியுள்ளார். காட்டாக, ஒரு தாய் பேசுவது போல "மகனைப் பெற்று உலகுக்குத் தருவது என் கடமையாகும். அவனை நற்குண நற்செயல்கள் மிக்கவனாக வளர்ப்பது தந்தையின் கடமையாகும்" (ப.315) என்கிறார்.

**செலுத்து நிலை அல்லது படைப்புவழி உரைவகை**

பொதுவிதிகளையோ, வரையரைகளையோ வைத்துக் கொண்டு அவற்றின் வழியாக இலக்கியத்தைப் பார்ப்பதிலுள்ள குறைபாடுகளை மனத்திற் கொண்டு அவற்றைத் தவிர்க்கும் நோக்கில் அந்ததப் படைப்பின் வழியாகவே அதனதற்குரிய விதிகளை வடித்தெடுக்க வேண்டுமென்பர் (எக்கருத்திலும் உயர்வு தாழ்வு கூறாமல் கூறுவதும் என்பர்)

(பாடல் எண்.192 - புறம்; திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக் காஞ்சி; பாடியவர்-கணியின் பூங்குன்றனார்)

*"பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"*

இச்செய்யுளை விளக்கிக் கூறவே புலவர்வழி உரையாசிரியரும் விளக்கம் தரும்போது,

**ஔவை**

எமக்கு எல்லாம் ஊர். எல்லாரும் சுற்றத்தார் கேடும் ஆக்கமும் தாமே வரினல்லாது பிறர்தரதாரா. நோதலும் அது தீர்தலும் அவற்றை யொப்பத் தாமே வருவன. சாதலும் புதிதன்று கருவிற் றோன்றிய நானே றோன்றிய நாளே தொடங்கியுள்ளது- வாழ்தலையினிதென்று உவந்தது மிலம். ஒரு வெறுப்புவந்தவிடத்து இன்னாதென்று இன்னாதென்று இருத்தலும் இலம். மின்னுடனே மழை குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது; கல்பொழுது இரங்கும் மல்லல் பேர்யாற்று; நீரின் வழியே போம் மிதவைபோல்; அரியவுயிர் ஊழியின் வழியே படும் என்பது நன்மைக் கூறு பாடறிவோர் கூறிய நூலானே தெளிந்த மாகலான்; நன்மையான் மிக்கவரை மதித்தலும் இலம்; சிறியோரைப் பழித்தல் அம்மதித்தலினு மிலேம் (ப.416-பகுதி-1).

உரைவேந்தர் தம் கருத்தை நோக்கின் உரையில் பொதுவிதியுள்ளது. வரையறையுள்ளது. படைப்பின் வழி உலகவாழ்வின் விதிகளை எடுத்தியம்பும் தன்மையும் சிறப்பாயுள்ளது.

**புலவர்**

கணியன் பாடலுக்கு உரை தொடங்கும் போது "தீமையும் நன்மையும்" தாமாகவே உண்டாவதல்லால் மற்றவரால் உண்டாக மாட்டா. துன்பம் அடைவதும் அது நீங்குதலும் அத்தீமை நன்மைகளைப் போலவேயாகும். உலகத்தில் தோன்றியவர் இறப்பதும் புதிதாக உண்டாவதன்று. தாயின் கருவில் தோன்றிய நாள் தொடங்கியபோதே உண்டாகி இருப்பதாகும். இவ்வாறு உள்ளமையால் உயிர்வாழ்வை இனியது என்று மகிழ்ச்சி அடைந்ததும் இல்லை. ஒரு வெறுப்பு உண்டானபோது உயிர் வாழ்வதைத் துன்பம் அளிக்கக் கூடியது என்று வெறுத்ததும் இல்லை. மின்னலுடன் மேகம்மேலும் குளிர்ந்த மழைத்துளிகளைப்

பெய்தலால் அமையாது கற்களை மோதி ஒலிக்கின்ற வளமான பெரிய ஆற்றின் நீர் வழியே செல்லுகின்ற தெப்பத்தைப்போல், அரியவுயிர் ஊழியின் வழியே செல்லும் என்பதை நன்மையின் இயல்பை அறிந்தவர் உரைத்த நூலால் யாம் அறிந்தோம். ஆதலால், நன்மையால் சிறந்து விளங்கும் பெரியோரை மதிப்பதும் இல்லை. சிறியவரை அவமதித்தல் பெரியவரை மதித்தலைக் காட்டிலும் அதிகமாக உடையோம் இல்லை என்று காரணம் காட்டி உலகப் பொது வரையறைகளைக் கூறி எனவே அவை,

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* *என்கிறார். (பக்- 371)*

**ரா.சீ**

சான்றாக. . .

எல்லைகள் எம்மைக் கட்டுபடுத்தாது ; எதுவாயினும் யாம் செல்லும் இடம் எல்லாம் எம்முடைய ஊரே யாரும். அங்குள்ளவர் யாவரும் யாம் நேசிக்கும் உறவினர் ஆவர்.

தீமைகள் நன்மைகள் இவற்றைப் பெரும்பாலும் நாமே விளைவித்துக் கொள்கிறோம். பிறர் தருவது மிகுதியாக இல்லை. நம் செயற்பாட்டை ஒட்டியே நன்மைகளும் தீமைகளும் வந்து சேர்கின்றன.

இவ்வாறு பாடலுக்கு உரை தரும்.

ரா.சீ. பாடலின் இறுதியில் தனிமனிதரை உயர்த்திப் பேசுவதும் தாழ்த்திப் பேசுவதும் தக்கது அன்று. அனைவரையும் சமமாக மதிப்பதே தக்கது ஆகும் என்று பாடற் பொருளோடு நில்லாமல் மனிதநேயம் நாம் போற்றத்தக்கது ஆகும் எனச் சிறப்புரையும் கூறியுள்ளார் (பக்-214-215). இவை போல் பகுப்புமுறை, அறிவியல்முறை, நாடகமுறை வகையிலும் வேறுபாடு உண்டு எனலாம்.

**நிறைவுரை**

ஔவை பழைய உரையாசிரியர் கையாண்டுள்ள நடைக்குச் சற்றும் குறைவு ஏற்படா வண்ணம் மேற்கோள் சான்றுகளோடு விளக்குபவராக உள்ளார். புறநானூறு நூலையும் பகுதி-I, பகுதி-II, எனப் பிரித்ததுடன் தன் உரை மதிப்பீட்டை 'உரை'என்றும் 'விளக்கம்'என்றும் இரண்டு நிலையில் தன் உரைவகையினை வெளிப்படுத்தியுள்ளார்.

புலவர் மாணிக்கனார் தற்காலத் தமிழ் நடையில் ஔவையின் பொருளுரையோடு பயணம் செய்துள்ளார். நூலினை முதல் தொகுதி; இரண்டாம் தொகுதி எனக் கூறுவதுடன் நூலின் உரையைத் தெளிவுரை என்றும் குறிப்புரை என்றும் கூறுகின்றார்.

டாக்டர் ரா.சீனிவாசன் தன் உரையை அணியகம் சென்னை -30. பதிப்பகத்தார் வழி வெளியிட்டுள்ளார். ஔவை, புலவர் கூறும் (மூலமும் உரையும்)

முறையை மாற்றி செய்யுளும் செய்திகளும் என இயற்றியுள்ளார். ஒரே நூலாகவும் உள்ளது. மொத்தத்தில்

*"கடிசொல் இல்லை காலத்துப்படினே"* என்னும் கூற்றின் வழியே இவ்வுரை நடைகள் வளர்ந்துள்ளன. இவ்வடிப்படையில் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் உரையினை இலக்கியம் தேடும் துப்பறியும் உரைநோக்கு என்றும் புலவர் மாணிக்கனாரின் உரையினைத் தற்கால இலக்கிய வகை உரைநோக்கு என்றும், டாக்டர் ரா.சீனிவாசனாரின் உரையினை அழகு, பழகு தெளிதமிழ் உரைநோக்கு என்றும் கூறலாம்.

## துணைநூல்கள்


புறநானூறு, கழக வெளியீடு,சென்னை-18. (பகுதி-I, பகுதி-II), உரையாசிரியர், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை.

புறநானூறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17. (தொகுதி-I, தொகுதி -II), புலவர் அ. மாணிக்கனார்.

புறநானூறு, அணியகம் பதிப்பகம், சென்னை -30.

டாக்டர் ரா.சீனிவாசன்

# பதிற்றுப்பத்து-முதற்பத்தின் தலைவன் உதியஞ்சேரலாதன் குறித்த உரைவேறுபாடுகள்

முனைவர் ஆ. தசரதன்

பதிற்றுப்பத்தின் முதல்பத்தின் தலைவனாகக் கருதப்பெறும் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பல புலவர்கள் பாடியுள்ளனர்.

1. முரஞ்சியூர் முடிநாகராயர் (புறம். 2)
2. மாமூலனார் (அகம். 65, அகம். 233)
3. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (அகம். 168)
4. இளங்கீரனார் (நற். 113)
5. இரண்டாம் பத்தின் பதிக ஆசிரியர்
6. இளங்கோவடிகள் (சிலப். வாழ். ஊசல் பாட்டு 10)

இப்புலவர்கள் பாடிய பாடல் கருத்துகள் உதியன் சேரலாதனின் படையெடுப்பு, வெற்றி, ஈகை, விருந்தோம்பல், இறந்தவர்களுக்கு ஈமக் கடன் செய்தல், இறந்த அவர்களின் புதல்வர்களுக்கு நாட்டாட்சி உரிமை கொடுத்துத் தழுவிக் கொள்ளுதலும் பிறவும் ஆகும்.

இந்த அடிப்படையில், பதிற்றுப்பத்தில் உதிரிப் பாடல்கள் உதியன் சேரலாதனின் வீரத்தைப் பற்றியும் தானைகளைப் பற்றியும் இருப்பதால் அவை முதல் பத்திற்குரிய பாக்களே எனத் துணியலாம். அப்பாக்களில் உள்ளவை:

1. உதியன்சேரலாதனின் கடற்போர் (கடம்பருடனாகலாம்)
(விட்டுப்போன பாடல் 1)

நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
நீர் துனைந்தன்ன செலவின்
நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே

2. நான்கு வகைப் படையுடன் பகைவரின் நெடுமதில் அளித்தல் (பாண்டியர்க்கு எதிராக இருக்கலாம்)

(விட்டுப்போன பாடல் 2)

3. பகைப்புலத்துப் பாசறையில் தானையுடன் இருத்தல் (பாண்டியருடனான போராக இருக்கலாம்)

(விட்டுப்போன பாடல் 4)

இப்பாடல்களில், 2ஆம் பாடலில் வரும் கருத்துகளும், பதிற்றுப்பத்து 2ஆம் பத்தில் இமயவரம்பின் நெடுஞ்சேரலாதன் பற்றிய 20ஆம் பாடல் கருத்துகளும் ஒத்திருப்பதை அறியலாம். பகைவரின் 'நெடுமதினி', லைஞாயில், கடிமிளைக் குண்டு கிடங்கின்', 'அம்புடை யாரெயில் உள்ளழித்துண்ட' மேலும் 2ஆம் பத்தின் 20ஆம் பாடலடிகள் இவ்வாறே வருதலால், உதியன்சேரலாதன் பகைவர்மேல் படை நடத்திய காலத்து அவன் மகன் இமயவரம்பனும் உடன் சென்றிருக்கலாம். அதனாலேயே அப்போர் நிகழ்ச்சிகள் மகனுக்கும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன.

**உதியன் சேரலாதனின் நாட்டெல்லைகள்**

உதியனின் நாடு மேற்கே ஞாயிறு அடைதலாகிய கடலை எல்லையாகக் கொண்டது. கிழக்கெல்லையாக ஞாயிறு எழுதலாகிய கிழக்குப் பகுதியைக் கொண்டிருந்து உதியன் மரபனனாலின் குட்ட நாட்டினன் ஆக இருந்துள்ளான். குட்டநாட்டிற்கு அப்பாலுள்ள வடபகுதியை இரும்பொறை மரபினனான அந்துவன் சேரல் இரும்பொறை ஆண்டிருந்திருக்கலாம். வானவரம்பன் என உதியன்சேரல் கூறப்பட்டிருப்பதையும் எல்லையாகக் கருதுவர் சிலர்.

உதியனின் மகனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்திலும் இமவரம்பனின் மக்களான செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்போர் காலங்களிலும் சேரநாட்டுத் தென், வட எல்லைகள் குமரி முதல் இமயம் வரையும், கீழ் மேல் எல்லைகள் குணகடல், குடகடல்களாகவும் இருந்தன எனப் பாடப்பெற்றிருந்தன.

ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே

(பதிற். 11: 23-25)

கடவுணிலைய கல்லோங்கு நெடுவரை
வடதிசை யெல்லை யிமய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததையவார்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தாட்க குட்டுவ
(பதிற். 43:6-11)

. . . பெருந்தெய்வத்து
வளைஞரலும் பனிப்பெளவத்துக்
குணகுட கடலோ டாயிடைமணந்த
பந்தர் (பதிற். 51:13-16)

பனம்பாரனார் காலத் தமிழக மூவேந்தர் நாட்டெல்லைகள் பின்பு சேரர்களால் மீறப்பட்டிருந்ததையே இது காட்டுகின்றது. உதியஞ் சேரலாதனும் எல்லை மீறிப் பாண்டியர் நிலப் பகுதியைக் கொண்டதாலேயே அவர்களுக்குள் போர் மூண்டது. பாண்டியர்களும் சோழர்களும் தம் எல்லைகளை மீறிய நிகழ்ச்சிகளும் உள்ளன.

தொல்காப்பியர், பனம்பாரனார் காலத்திற்குப் பின்பு உதியன் சேரலாதன் வாழ்ந்தவனாகலாம். அதனாலேயே அவனுடைய கிழக்கு, மேற்கு எல்லைகளை முரஞ்சியூர் முடிநாகராயர் கீழ்க்காணுமாறு வரையறுத்துள்ளார்.

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந!
(புறம். 2: 9-11)

பாண்டிய நாட்டின் தென் எல்லையாகக் குமரிப் பகுதி இருந்தது என்பதைப் பல பாடல்கள் உணர்த்துகின்றன. அதனினும் (குமரியின்) மேலைப்பகுதியைத் தென்னெல்லையாகக் கொண்டிருந்தவன் உதியன் சேரலாதன் ஆவான். அதனாலேயே அவனுடைய நாட்டெல்லையில் இன்னும் உதியன் குளம் (பெருமாள் சாமி கதைப்பாடல், கி.பி. 1623), உதியம்பேரூர், உதியஞ்சேரி (ஔவை. துரைசாமிப் பிள்ளை, 2008, பக். 60), தக்கலை அருகில் உள்ள உதயகிரி கோட்டை இவ்வாறான பெயர்கள் கொண்ட ஊர்கள் உள்ளன.

உதியனின் நாடு மலைநாடு என்றும் கல்நாடு என்றும் அழைக்கப்பட்டது. இன்றைய குமரிமாவட்டத்தில் ஒரு பகுதி

உதியன் சேரலுக்கும் ஒரு பகுதி பாண்டியர்க்கும் முதலில் இருந்திருக்கலாம். உதயகிரி மலை சேரனின் தென் எல்லை அரணாக விளங்கியதாகலாம். அது முன்பு உதியன்மலை எனப்பட்டது. தன்னுடைய தென்பகுதியைப் பேணுவதற்காகவே அம்மலை அடிவாரங்களில் கோட்டையை அவன் கட்டியிருக்கலாம். அது பின்பு உதயகிரி என ஆகி, அக்கோட்டை உதயகிரி கோட்டை என்றாகியது.

உதயகிரி கோட்டை மேற்பகுதிக்கும் குட்டநாட்டிற்குத் தென்பகுதியிலும் வேணாடு என்ற பெயரில் வேளிர் நாடு இருந்ததாக ஔவை. துரைசாமிப் பிள்ளை கருதுகிறார் (2008: 58-59). பாண்டியர்க்கு எதிராக உதியன் சேரலாதன் கொண்ட முதற்போர் தென்தமிழ்நாட்டு எல்லைப் பகுதியில் நிகழ்ந்திருக்கலாம் என இவர் கருதுகிறார். ஆனால் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறநானூற்றுப் பாடலில் தென்கடல் பகுதி அவனுக்கு முன்பே ஆகிவிட்டிருந்தது எனத் தெரிகிறது. இப்பாடல் பாடப்பெற்ற காலத்திலேயே அவன் பேரும் புகழும் பெற்றுவிட்டான். அக்காலக் கட்டத்தில்

1. அவன் சிறந்த ஆட்சியாளனாய்த் தெரிகிறான்.
2. அவன் நாட்டெல்லைகள் வரையறுக்கப் பட்டுவிட்டன.
3. அவன் நாட்டில் புதுவருவாய்கள் பெருகிவிட்டன.
4. அவன் பாண்டியருடனான போரில் வென்றுவிட்டிருந்தான்.
5. இறந்த தன் உறவினர்க்கு ஈமக்கடனும் வென்ற வீரர்க்கு விருந்தும் படைத்துப் புகழ்பெற்று விட்டிருந்தான்.
6. திரியாச் சுற்றத்தாருடன் பெருவேந்தன் என்ற நிலையை எட்டியிருந்தான்.

அச்சேர வேந்தனுடைய அரசியலையும் அவன் மேற்கொண்ட போரையும் ஔவை துரைசாமிப் பிள்ளை கீழ்க்காணுமாறு வழங்குகிறார்.

சேரமன்னர்கள் தெற்கில் ஒரு வேணாடு கொண்டது போல வடக்கில் வானவாசி நாட்டிடையே ஒரு வேணாட்டைக் கொண்டனர். அவ்வேணாடு இடைக்காலத்தே வேளகமாயிருந்து இப்போது பெல்காம் (ஙிமீறீரீணீஷீனீ) என வழங்குகிறது. மேலும் மகட்கொடை வழங்கும் வேளிர் தங்கள் நாட்டையடுத்திருந்தது, தமிழ் வேந்தர்க்கு ஒரு சிறந்த

அரணாகவும் விளங்கிற்று... மகட்கொடை புரிந்த வேளிர் தம் மகளது வாழ்வு குறித்து அவர்களை மணந்துகொண்ட முடிவேந்தர்க்குத் தக்க பெருந்துணைவராய் இருந்தனர்.

மகட்கோள் முறையால் வேணாட்டவரோடும், வானவாசி நாட்டவரோடும் வரம்பறுத்துக் கொண்ட வகையில் வானவாசிகளோடு முரண்கெடுத்து இனிது அரசுமுறை நடத்திவந்த சேரவேந்தர்க்குத் தாம் வாழ்ந்த நாட்டிடம் 'சிறிது' என்ற உணர்வுதோன்றி அவர்கள் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருந்தது. உதியஞ்சேரல் காலத்தில் தென்பாண்டி நாட்டையாண்ட வேந்தர், செவ்விய அரசு புரியும் திறமிலராயிருந்தனர். வேணாட்டு வேளிர் தனக்குரியராய் இருந்தமையின், அவர் நாட்டுக்குத் தெற்கிலுள்ள தென்பாண்டி நாட்டைத் தன்னாட்டோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற வேட்கை சேரமானுக்கு உண்டாயிற்று. அதனை நிறைவேற்றிக் கோடற்குரிய செவ்வி தோன்றியதும் உதியஞ்சேரல் தென் குமரியைச் சூழ்ந்திருந்த தென்பாண்டி நாட்டைவென்று, தென் கோடியைத் தன்னாட்டுக்கு எல்லையாகக் கொண்டான். அந் நாட்டுக்கீழ்க் கடற்கரையும் சேரர்க்குரியதாயிற்று.

(ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 2008, பக். 59-60)

இப்பகுதியில் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்களின் ஆய்வு கற்பனையாக அமைந்துள்ளது. முதலில் சேரனின் உறவினர்கள்தாம் பாண்டிய நாட்டின் பகுதிகளைப் பற்றினர். அவர்கள் நூற்றுவரையும் பஞ்சபாண்டியர் கொன்று வெற்றி அடைந்தனர். **பெரும்பாணாற்றுப்படையில்** இப்பஞ்ச பாண்டியர் 'பேரமர் கடந்ததாக'க் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார். இதனால் 'பாண்டியர் திறமிலராய் இருந்தனர்' என ஔவை துரைசாமிப் பிள்ளை கூறுவது முதலில் பொருந்தாது. உதியன் சேரலாதன் பின்பு படை திரட்டி வந்து பாண்டியரை வென்றிருக்கிறான் வெற்றியும் தோல்வியும் பாண்டியர்க்கு ஏற்பட்டன. தோல்வியும் வெற்றியும் சேரனுக்கு ஏற்பட்டன.

### உதியன் சேரலாதன் வேள்குடியில் மணவுறவு கொள்ளுதல்

'சேரநாட்டின் தென்பகுதியிலிருந்த வேணாட்டு வேளிர் தலைவன் வெளியன் என்பவனுடைய மகள் வேண்மாள் நல்லனியை உதியன் சேரலாதன் மணந்து கொண்டான்' என ஔவை துரைசாமிப் பிள்ளை எழுதியுள்ளார் (2008: 59).

**பதிற்றுப்பத்து** இரண்டாம் பத்தின் பதிகம் முதல் மூன்று அடிகளில் உதியன் சேரன் வெளியன் வேண்மாள் நல்லினியை மணந்துகொண்டதாகப் பாடப்பெற்றுள்ளது.

மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரர்க்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்

என இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குறிக்கப்பெற்றுள்ளான். இப்பதிகப் பாடலடிகளில் வரும் வெளியன் வேண்மாள் நல்லினி வேணாட்டைச் சேர்ந்தவள் என ஔவை துரைசாமிப் பிள்ளை குறிப்பிடுவது பொருந்தாது. ஏனெனில் வெளியன் வேள் என்பான். சோழநாட்டினன் ஆதலால் அவன்மகள் வேண்மாள் நல்லினியும் அந்நாட்டவளாகிறாள். வேளிர் சிலர் சோழர் குடியைச் சேர்ந்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

'அம்மாள்' என்பது போல 'வேண்மாள்' என வேளிர் குடிப்பெயர்களை அழைத்தனர். 'வேள்மகள்' என்பது 'வேண்மாள்' என ஆகியுள்ளது. 'வெளியன் வேள் மகள்' என்பது 'வெளியன் வேண்மாள்' ஆயிற்று. வேளிர்குடியில் உள்ள மகனை 'வேண்மாள்' என்றும் மகளை 'வேண்மாள்' என்றும் அழைப்பது அக்கால வழக்கம்.

'வெளியன்' என்பான் பல வேளிர் குடிகளில் ஒரு குடியினன். இக்குடியினர் மிகவும் தொன்மையினர். அதனால் **நற்றிணை** (208) 'தொன்று முதிர்வேளிர்' என்கின்றது. **புறநானூறு** (24) 'பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்' என்கின்றது.

வேளிர் பதினெட்டுக் குடிப்பிறந்தவர் ஆவர். துவரை எனும் நகரிலிருந்து அரசர் பதினெட்டுப் பேரையும் பதினெட்டு வேளிர் குடியினரையும் அகத்தியர் தென்னாடு கொண்டுவந்து ஆங்காங்கே நிலைபெறும்படி செய்தார் எனத் **தொல்காப்பியம்** பாயிரத்துக்கும், அகத்திணையியல் 32ஆம் நூற்பாவுக்கும் எழுதிய உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.

அப்படியான 18 வகை வேளிர் தலைவர்களின் வழியில் வந்த ஒரு வேளிர் குடியில் வந்தவனே வெளியன் வேள் ஆவான். சேரரில் சில அரசர்கள் வேளிர் குடிப் பெண்களை மணந்துள்ளனர். சோழரில் சில அரசர்களும் சில கிளைகள் வேளிர் கிளைகளாகவே இருந்தன. செங்குட்டுவனின் மனைவியும் 'வேண்மாள்' எனக் குடிப்பெயர் கொண்டவ;வ. இவள் சோழ நாட்டினள்.

மையூர் கிழான் வேண்மாள் அத்துவஞ் செள்ளை
(ஒன்பதாம் பத்தின் பதிகம்)

என்பவளும் வேண்மாள் என்ற குடிப்பெயரைப் பெற்றிருக்கிறாள். இதன்மூலம் கிழான் என்ற பட்டப்பெயர் கொண்டவர்களும் வேள் குலத்தவர் ஆகின்றமை தெரிகின்றது. கிழான், கிழார், கிழவன், கிழவர் போன்ற பட்டப்பெயர்கள் கொண்டவர்களும் வேள்குடிகளில் ஒரு பிரிவினர் எனத் தெரிகிறது. இவர்கள் சிற்றரசர்களாயும், ஊர்த்தலைவர்களாயும் இருந்தனர். வேளிர் குடியினரில்

செவ்வேள் - முருகன் - பெருவேள்
மன்மதவேள் - காமவேள் - பொருவேள்
இருங்கோவேள் (புறம். 201) வேளிருள்வேள்
பாரிவேள் (புறம். போன்ற பாடல்கள்)
வேள் நன்னன் (மலைபடுகடாம்)
ஆய்வேளிர்
ஏனாதி வேள்
வேள்புலச் சாளுக்கியர்
செம்பியன் தமிழவேள்

போன்றோரைத் தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறனும் தொல்லியல் ஆய்வாளர் சீ. இராமச்சந்திரனும் பட்டியலிடு கின்றனர். (பார்க்க: க்ஷிமீறீவீக்ஷீவ: ஷ்மீக்ஷீமீ மீ'லீமீஹ க்ஷிமீறீணீறீணீக்ஷீவ ? ஜீணீஜீமீக்ஷீ ஜீக்ஷீமீவமீஸிமீ'மீபீ ணீமீ' மீ'லீமீ ஜ்ஜ்வீஸ், கிஸிஸி஖ூணீறீ சிஷீஸிரீக்ஷீமீவவ ஷீயீ மீ'லீமீ ணிஜீவீரீக்ஷீணீஜீலீவீநீணீறீ ஷிஷீநீவீமீமீ'ஹ ஷீயீ மிஸிபீவீணீ, ஜிக்ஷீவீவவஞூக்ஷீ, ரிமீக்ஷீணீறீணீ, 1998, விணீஹ).

இதனால் வேள் அல்லது வேளிர் குடியினர் பலவகையினர் எனத் தெரிகிறது. வேந்தரைப் போன்று வேள் குலத்தவர்க்கும் முரசு இருந்தது. இதனை மதுரைக்காஞ்சி (128, 129) அடிகள் கூறுகின்றன. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

நெடுநில மன்னர் இருவரும் (சேரன், செம்பியன்)
குறுநில மன்னர் (திதியன், எழினி, எருமையூரன்
இருங்கோ வேளிர்மான், பொருநன்) ஐவரும்
படும்படி போரிலே வென்று அவர் முரசைக் கைக்
கொண்டு களவேள்வி வேட்ட (னன்)

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்கிறார் அவர். முடியினையும் முரசையும் வேளிர் கொண்டிருந்தனர் என்பதைப் பதிற்றுப்பத்து (30)ப் பாடல் கூறும். ஆங்கு வரும் "பணைகெழு வேந்தரும் வேளிரும்" என்ற தொடர்க்கு உரைவரைந்த பழைய உரையாசிரியர் 'முரசினை உடைய முடியுடைய மூவேந்தரும் வேளிரும்' என்கிறார். அதியமான் நெடுமான் அஞ்சி என்பான் 'முரசின் எழுவரொடு முரணி' (புறம். 99) யதாக ஔவையார் பாடியுள்ளார். இவ்வெழுவரும் வேளிர் ஆவர். தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் வேளிர் அனைவருக்கும் 'வேள்வி'யும் தொடர்புடையது என்கிறார்.

மேலே சுட்டிய நச்சினார்க்கினியர் உரையில் 'இருங்கோ வேளிர்மான்' என்பவன் 'வேளிர்மான்' என்ற வேளிர் குடிப் பெயரைக் கொண்டுள்ளான். வேள்குலமகனை 'வேண்மான்' என்றும் வேளிர்மான் என்றும் அழைத்துள்ளனர். இவனுடைய மரபில் வந்த முன்னொருவன் கபிலரால் 'வேளிருள் வேளே' என அழைக்கப்பெற்றுள்ளான் (புறம். 201). இந்த இருங்கோவேளின் முன்னோர் 49 தலைமுறைகளுக்கு முன்பினர். துவராபுரியை ஆண்டனர் எனக் கபிலர் கூறியுள்ளார்.

> நீயே, வடபான் முனிவன் தடவினுள் தோன்றிச்
> செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
> உவரா வீகைத் துவரை யாண்டு
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே! விறற்போர் அண்ணல்! (புறம். 201)

'வடபால் முனிவன்' என்பவர் யார்? அவருடைய 'தடவு' என்பது எது? என அறிஞர்கள் அண்மைக் காலங்களில் சர்ச்சையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னைத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) 'தடவு' என்பதற்கு, 'தடம்', 'தடவு', 'தடாகம்' எனக்கூறி, 'நீர்நிலை' எனப் பொருளுரைக்கிறது. 'தடவு' என்பது குழி, நீர்நிலையின்கீழ் (மீன்கள் படுத்திருக்கும் பள்ளம் - தடவுக் குத்தகை - போன்ற நாட்டுப்புற வழக்கறுகளைக் கூறி, அது குழி அல்லது பள்ளம் எனத் தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் பொருள் காண்கிறார். 'தடவுப் பணியாரம்' (குழிப் பணியாரம்) எனும் உணவு வகையைச் சான்றாக அவர் காட்டுகின்றார். மலைச்சுனை, ஆற்றுச்சுனை, அல்லது மலையில் உள்ள குளம் என்று கி.பி.

1600 இல் பாடப்பெற்ற **வலங்கை மாலை** கூறுகின்றது. சான்றோர் குலத்தினர் வித்தியாதர முனிவரால் தடாகத்தில் (நீர் நிலைக்கருகில்) தோன்றினர் என்கிறது அக்கதைப்பாடல்! 'இச்சான்றோர் குலத்தினரே வலங்கைவேள் எனும் வேளிர் குலத்தவர்' என நெல்லை நெடுமாறனும் இராமச்சந்திரனும் மேற்சுட்டிய கட்டுரையில் கூறுகின்றனர் (ப.6). தடவு என்பது ஏலாசுனை, ஏலாநதி என **வலங்கை மாலையை** மேற்கோள் காட்டி அவர்கள் அவ்வாறு கூறுவர். நாககன்னியர்க்கும் வித்தியாதர முனிவர்க்கும் ஆங்குப் பிறந்தவர்களே வலங்கையர் எனும் சான்றோர் குலத்தினர் என்பது அவர்கள் கருத்து. சான்றோர் குலப் பாடல்களிலும், செப்புப் பட்டயங்களிலும், இவ்வாறே கூறப்பட்டுள்ளது என மேலும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். 'வேளாண்' என்ற சோழர் கால அரசப்பட்டம் சான்றோர்க்குக் குண்டம், கும்பம், பானை என்பன தடாகத்திற்கான குறியீடுகள்.

அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் 'தடவு' என்பதை 'ஜாடி' என்கின்றார். (தமிழியல் 76).

புறநானூற்றின் பழைய உரை தடவு என்பதை 'ஓமகுண்டம்' என்கிறது. இருங்கோவேளை உ.வே.சாமிநாதையர்

> **"விசுவபுராண சாரமென்னும்"** தமிழ் நூலின் பதிகத்தில் 15ஆம் செய்யுளில் "சம்புமா முனிவன்வேள்வித்தழறரு மரபில் வந்தோன்" எனவும், இரட்டையரருளிச் செய்த **ஏகாம்பர நாதர் உலாவில்** "சம்புகுலத்தொருவன்" எனவும் வந்திருத்தலின், இதில் 'வடபான் முனிவன்' என்றது அச்சம்பு முனிவனாக இருத்தல் கூடுமோவென்று ஊகிக்கப்படுகின்றது.

என்கிறார் (புறநானூறு 1965ஆம் ஆண்டும் பதிப்பு, பக். 363).

'வடபால் முனிவனை' அகத்தியர் எனத் திரு. ஐராவதம் மகாதேவன் கருதுவதை ஏற்றுத் திரு. ஆர். பாலகிருஷ்ணன் அவர்களும் எழுதியுள்ளார் (தமிழியல் 77). சங்க இலக்கியங்களில் கூறப்படும் வேளிர்களின் முன்னோர் - அல்லது இருங்கோடுவேளின் முன்னோர் வெகுகாலத்திற்கு முன்பு அரப்பா (Harappa) (தற்காலக் குசராத் மாநிலம்) பகுதிகளிலிருந்தவர்கள் எனத் திரு. பாலகிருஷ்ணன் கருதுகின்றார்.

'தடா' என வரும் கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கொடுமணல் பானைக் குறியீடுகளான தமிழ்ப் பிராமிக்

கல்வெட்டுத் தொடரிலிருந்து சிந்துவெளி 'ஒமேகா' குறியீடு அகத்தியரைக் குறிக்கும் என்றும் தடா என்பது அகத்தியரின் ஜாடியாகிய கும்பம் என்றும், வேளிர் அக்கும்பத்திலிருந்து பிறந்தவர் என்றும், வேளிர் - வெள்ளாளர் தொடர்பு பற்றியும் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் குறிப்பிடுவது திரு. நெல்லை நெடுமாறன், திரு. இராமச் சந்திரன் ஆய்வுக்கு எதிர்மாறானதாகும். **வலங்கை மாலை** மற்றும் திரு. நெல்லை நெடுமாறன், திரு. இராமச்சந்திரன் போன்றோர் 'தடவு' என்பதை நீர்நிலை எனக் கொண்டு வேளிரின் வரலாற்றை ஆய்வு செய்வது பொருத்தமாகவே அமைகிறது. வேள், வேளிர் என்னும் குலத்தவராகப் பெயர் பெறுதல் இத்தடவின் அருகில் எனக் கருதுவது பொருத்தமாகும். கும்பத்தில் பிறந்தவர் என்பது அறிவியலுக்கு ஏற்புடைத்தன்று.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாகிய **சங்ககால மன்னர்களின் காலநிலை** (2000) என்ற நூலில் வேளிர் பற்றி டாக்டர் பத்மஜா ரமேஷ், வி.பி. புருஷோத்தமன் ஆகிய இருவரும் அளித்துள்ள தொகுப்பு வருமாறு:

> சங்ககாலத் தொடக்கத்தில் ஓர் ஊரின் தலைவன் 'கிழான்' என்றும், சில நூறு ஊர்களின் தலைவன் 'வேள்' என்றும், மிகப்பெரிய நிலப்பரப்பின் தலைவன் 'வேந்து' என்றும் அழைக்கப்பட்டான். வேள்பாரி முந்நூறு ஊர்களைக் கொண்ட பறம்பு மலைப் பகுதியை ஆண்டுவந்தான். வேள் எவ்வி மதுரைக்கு வடக்கிலிருந்த பகுதியை ஆட்சி செய்தான். நன்னன் வேள்மான் ஏழில் குன்றம் சூழ்ந்த பாரம் என்ற நாட்டின் தலைவனாக இருந்தான். துவரை என்ற பகுதியை ஆட்சி செய்தவர்கள் இருங்கோவேள் எனப்பட்டனர்.
>
> சோழர்களும் ஆரம்பத்தில் வேள் என்றே அழைக்கப்பட்டனர். உறையூரில் சோழ அரசை நிறுவிய தித்தன் வீரை வேள்மான் என்றும், அவன் மகன் வெளியன் வேள்மான் என்றும் அழைக்கப்பட்டனர்.
>
> .... இவ்வாறு ஒரு வேளின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதி பெருகப்பெருக வேந்தர்கள் உருவானார்கள். சேர சோழ பாண்டியர்கள் வேந்தர்கள் என்றும் மன்னர்கள் என்றும் முடிசூட்டிக் கொண்டார்கள். முதலில் இவ்வேந்தர்களை வேளிர் ஒன்றுகூடி எதிர்த்தார்கள்.

முதலாம் கரிகால் வளவனை பதினோரு வேளிர் ஒன்று கூடி எதிர்த்து வெண்ணியில் போர் செய்தார்கள். காலப்போக்கில் ஒரு வேந்தன் மற்றொரு வேந்தனோடு போர் செய்யும்போது சில வேளிர்களைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டான். மோகூர் மன்னன் சேரன் செங்குட்டுவனோடு போர் செய்தபோது சில வேளிர்களைத் துணையாகக் கொண்டான் (பக். 270-271).

சோழ நாட்டு அரசன் கரிகாலனுக்கு எதிராகப் பல வேளிர்கள் எதிர்த்துத் தோல்வியுற்றனர். கிள்ளிவளவனுக்கு எதிரான போரில் சோழர்குடி மற்றும் வேளிர் குடியைச் சேர்ந்த ஒன்பது பேர் அவனை எதிர்த்தனர். இதிலிருந்து சோழர்குடியிலும் வேளிர்கள் இருந்தனர் எனத் தெளிவாகிறது. வேளிரிலிருந்து சோழ வேந்தர்கள் தோன்றியதற்கு இதுவும் சான்று. வீரை வேள்மான் வெளியன் தித்தன் என்பவன் சோழ அரசை உறையூரில் ஏற்படுத்தியவன் என்பர். அவன் மகன் தித்தன் வெளியன் ஆவான்.

'வெளியன் வேண்மாள் நல்லினி' என்பவள் உதியன் சேரலாதனின் மனைவியாவாள் என அறிவதுபோல் அவள் வெளியன் தித்தன் என்பானுடைய சோழ குடியை சேர்ந்தவள் எனச் சிலர் கருதுகின்றனர். வெளியன் எனும் வேள்குடியினன் சோழகுலத்தினன் ஆவான். சேரன் செங்குட்டுவனும் சோழர்குடியில் மணந்துள்ளான் என்பது **சிலப்பதிகாரத்திலும் பதிற்றுப்பத்துப் பதிகத்தாலும்** உறுதிப்படுகிறது. செங்குட்டுவனுடைய தாய் சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணை ஆவாள்.

'வெளியன் வேண்மான், **ஆஅய் எயினன்**' என்பவன் **அகநானூறு** 208 ஆம் பாடலில் பரணரால் குறிக்கப்படுகிறான். இவனது மனைவியர் 'பல்வேள் மகளிர்' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளனர் (அகம். 208). பல வேளிர் குடியிலுள்ள வேள் பெண்களை இவன் மணந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இவற்றால் பல வேள்குடியினரிலிருந்து மூவேந்தர்கள் மணவுறவு கொண்டிருந்தனர் என அறியலாம்.

வேள் மகன் - வேண்மான் - என்றால் ஆண்

வேள் மகள் - வேண்மாள் - என்றால் பெண்

வேளிர் மகன் - வேளிர் மான் - என்றால் ஆண்

இவை வேள்குல அரசகுடியினருக்குரிய குலப் பெயர்கள்.

சோழகுல வெளியன் வேளின் படைகளும் உதியன் சேரலுக்கு உதவியாயிருந்தன எனக் கொள்வதும் பொருத்தமாகும்.

உதியன் சேரலாதன் மிகத் தொன்மையானதும் உயர்ந்த குடியானதுமான வேள் சான்றோர் குடியிலே மணவுறவு கொண்டான் என்பதிலிருந்து அவனுடைய தொன்மையும் தூய்மையும் அறியக் கிடக்கின்றன. செவ்வியல் வரலாற்றுத் தகுதியும் தூயமணவுறவும் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

பதிற்றுப்பத்துப் பதிகங்களும், வேறு சில சங்கப் பாக்களில் தெரியவரும் வேளிர்களின் வரலாற்றிலிருந்தும் வேளிர் குடியினரின் வேறுவேறு பிரிவுகளைத் தெரிந்து கொள்ள இயலும். பதிற்றுப்பத்தில் கீழ்வரும் வேளிர்குலப் பெண்களும் அவர்களின் தந்தையாரும், தாயாரும், கணவன்மாரும், மகன்களும் தெரியவருகின்றனர்.

1. வெளியன் வேண்மாள் நல்லினி + உதியன் சேரலாதன்
   இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் — பல்யானைச் செல்கெழு குட்டுவன்

2. வேளாவிக்கோமான் + பதுமன்தேவி
   களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் — ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

3. இளங்கோ வேண்மாள் + செங்குட்டுவன்

4. வேளாவிக்கோமான் + செல்வக் கடுங்கோ வாழியாதன்
   பதுமன்தேவி பெருஞ்சேரலிரும்பொறை

5. மையூர்கிழான்வேண்மாள் + குட்டுவன் இரும்பொறை
   இளஞ்சேரலிரும்பொறை

**உதியன்சேரலாதனின் குணநலன்களும் நாட்டுச்சிறப்பும்**

. . .
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்

யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந! (புறம். 6-11)

இப்பாடலடிகளில் முதலில் அமையும் 'பகைவரைப் பொறுத்தல்', 'சூழ்ச்சியதகலம்', 'வலி', 'தெறல்', 'அளி' என்பவற்றுக்கான சான்றாதாரங்கள் விட்டுப்போன பாடல்களில் உள்ளன. அவை:

இருங்கண் யானையொடு அருங்கலம் துறுத்துப்
பணிந்துவழி மொழித லல்லது பகைவர்
வணங்கா ராதல் யாவதோ... (முதற்பாடல் 1-31)

ஒல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவண் வீங்கிய செலவே
(2ஆம் பாடல், 15-16)

மாரி யென்னாய் பனியென மடியாய்
பகைவெம் மையி னசையா வூக்கலை
(4ஆம் பாடல், 4-5)

திருவள்ளுவப் பெருந்தகை கூறும் பேரரசனுக்குரிய குணங்கள் உதியஞ்சேரலாதனிடம் இருந்தன. உரைவேந்தர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை இப்பாடலடிகளுக்கு முரஞ்சியூர் கூறுவது போன்று ஓர் அழகான காட்சியொன்றைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

வேந்தே, நீ பொறையும் சூழ்ச்சியும் வலியுமாகிய எல்லாம் உடையனாய் இருக்கின்றாய். நாட்டின் பரப்புச் சிறிது என்று கருதி மேலைக் கடற்கும் கீழைக் கடற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை வென்றுகொண்டாய். அதனால் நாளும் ஞாயிறு நின்கடலிலே தோன்றி நின் கடலிலே மறைகிறது. நாடுபரப்புவதிலே கருத்தைச் செலுத்தும் வேந்தன், பரப்பு மிகுதற்கேற்ப நாட்டின் வருவாயையும் நாடோறும் பெருகச் செய்தல் அரசியற்கு இன்றியமையாதது என்ற கருத்தையும் நீ மறந்தவனில்லை என்பது நன்கு தெரிகிறது என்று பாராட்டிக் கூறினார்.

என உரைவரைந்துள்ளார். இவ்வுரைக் குறிப்புகளிலிருந்து உதியன் சேரலாதனின் சில செவ்வியல் வரலாற்றுப் பண்புகளைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

உதியன் சேரலாதனின் நாட்டெல்லைகள் பற்றியும், நாட்டின் உட்கட்டமைப்புப் பற்றியும் ஏற்கெனவே முன்பகுதியில்

கூறப்பட்டிருத்தலைக் காண்க. புறநானூற்றுப் பாடல் பெறும்போது உதியன்சேரலாதன் பேரரசனாய் உயர்ந்துவிட்டான். முதலில் அவனுடைய செவ்வியல் பண்புகளை வரையறுத்துவிட்டு, அடுத்ததாக அவனுடைய நாட்டின் கட்டமைப்பை முரஞ்சியூர் முடிநாகராயர் வரையறுக்கின்றார். அக்காலக்கட்டத்தில் அவனுடைய நாடு கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் கடல்களை எல்லையாகக் கொண்டிருந்தது. வடவெல்லையை 'வானவரம்பன்' என வரையறுத்துவிட்டார். இதனால், அவன் பாண்டியநாட்டுப் பகுதிகளையும் தன் நாட்டுக்கு வடக்கே இருந்த பகைவர்கள் (கடம்பராயிருக்கலாம்) நாட்டுப்பகுதிகளையும் வென்றிருக்கலாம். இவ்விடைப்பட்ட நாட்டின் பெருமகன் (பெரும!) ஆகவும், பகைவரை வென்று பெற்ற விரிந்த நாட்டிலிருந்து வந்த புது வருவாய்களை உடைய வேந்தனாகவும் (பொருந!) அவன் ஆகிவிட்டிருந்தான்.

**உதியனின் ஈகை**

இவற்றின் காரணமாகவே அவனை மாமூலனார் 'தன் நாட்டை விரிவுபடுத்திக் கொண்டவன்' என்றும், அதனால் ஏற்பட்ட போர்களில் வெற்றி பெற்றதால் பெற்ற பரிசில்களைப் பெறப் பரிசிலர்கள் அவனிடம் பாடிச் சென்றனர் என்றும் குறிப்பிடுகின்றார் (அகம். 65). அப்பரிசிலர் அவனிடம் பெற்ற பரிசிலால் மகிழ்ச்சியுற்றதும் தெரிகிறது.

நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவஇனி.... (அகம். 65: 5-7)

என்பன அப்பாடலடிகள்.

# கலித்தொகையில் பாடவேறுபாடு

முனைவர் பா. ஜான்சிராணி

## முன்னுரை

பாடவேறுபாடுகளைப் பாட வேதங்கள் என்றும், பிரதிபேதம் என்றும் உரைப்பர். பாடபேதம் என்று குறிப்பது ஒரு சொல்லுக்குப் பிரதியாக வரும் பிறிதொரு சொல்லை பாட போதம் என்று குறிப்பர். உதாரணமாக கோளரி மாதவன் என்பதற்குக் கோளரி வாமணன் என்று பாடபேதங்கள் என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் குறிப்பிடுவர்.

## பாடபேதம்

"பாடலின் கருத்தை மாற்றுவதோ தொடரின் பொருட்போக்கைத் திருப்புவதோ அமைவது பாடவேறுபாடு என்று கூறுகின்றார்'' அ. விநாயக மூர்த்தி

பொருள் மாற்றத்திற்கு இடம் தந்ததும் தராததும் ஒரு சொல்லை அல்லது தொடருக்கு அமையும் எழுத்து மற்றும் சொல் மாற்றங்கள் பாட வேறுபாடு என்று வெ. பழநியப்பன் பூ. சுப்பிரமணியம் கூறுகின்றனர்.

"உண்மைத் தொடர் சொல்வோராலும் படிப்போராலும் எழுதுவோராலும் வேறுபட்டு வழங்கப்படுமாயின் அது பாட வேறுபாடு என்று பெயர் பெறுகிறது" என்பார் பூ.

சுப்பிரமணியம் பாடவேறுபாடு- என்பது பாட்டின் வடிவம் பற்றியதோர் கூறுபாடு என்று பொது நிலையிலும், பாடவேறுபாடு என்பது ஒரு சொல்லுக்கு மாறாக அதே ஓசையுடைய வேற்றுச் சொல் அல்லது அதே பொருளுடைய பிரிதொரு சொல் வழங்குவதாகும்.

## பாடவேறுபாடு தோற்றம்

பாட வேறுபாடுகளும், பிரதிவேறுபாடுகளும் மூல நூலாசிரியர் வாழ்ந்த காலத்தில் இவ்வேறுபாடுகள் தோன்றியுள்ளன. பண்டைய உரையாசிரியர்கள் காலத்திற்கு

முன்னரே நூல்களில் பாடவேறுபாடுகள் தோன்றிவிட்டன. மு. சண்முகப் பிள்ளை குறிப்பிடுகின்றார்.

பாட வேறுபாடுகள் ஏட்டுவழிப் பாடத்திலும் தோன்றலாம், வாய்வழிப் பாடத்திலும் தோன்றலாம், மூல நூல் எந்த காலத்திற்கும், அது வழங்குகின்ற காலத்திற்கும் இடை வெளியில் பாட வேறுபாடுகள் தோன்றி விட்டன. என்று மு. சண்முகப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

**பாடவேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள்**

பாடவேறுபாடுகள் என்பன வடிவ வேறுபாடு, சொல்வேறுபாடு என்று இரு வகைப்படும். வடிவ வேறுபாட்டில் விகுதி மாற்றம், உருபு மாற்றம், சந்தி மாற்றம் என்று சொல் வேறுபாடு என்பதில் பொருள் மாற்றம் செய்வன, பொருள் மாற்றம் செய்யாதவை என இரு உட்பிரிவுகள் அடங்கும் என மு. சண்முகம் கூறுகின்றார்.

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்களில் அமைந்த வேறுபாடுகளை எழுத்து வேறுபாடு, சொல்வேறுபாடு, பொருள்வேறுபாடு, இலக்கண வேறுபாடு ஒப்புமை நிலைவேறுபாடு என ஐந்து வகைப்படும்.

**பாடவேறுபாடு எழுதுவதற்குரிய காரணங்கள்**

18-ஆம் நூற்றாண்டில் சீகன் பால்கு தமிழில் அச்சு முறையை முதன் முதலாகக் கொணர்ந்தார். ஏடுபார்த்து நகல் எடுத்தலாலும், தம் கொள்கைக்குக் கேற்ப பாடங்களைத் திருத்திக் கொள்வதாலும்,

உரிய இடங்களில் பாடலின் நினைவு வராதபோது இடத்திற்கு தக்கவாறு தாமே சொற்களை அமைத்துக் கொள்வதாலும், தாம் கருதம் எதுகை, மோனை அமைப்புக்குக் கேற்பப் பாடங்களைத் திருத்துவதாலும் இருக்கும் பாடலை மட்டமென்று கருதித் தாம் விரும் பியவாறு அமைப்பதாலும், அச்சிடும் காலங்களில் பாடங்களை ஒப்புமை நிலையலும் திரித்திப் பதிப்பிப்பதாலும் பாடவேறுபாட்டில் பாடங்கள் வேறுபடுகின்றன. என்று சொ. முருகப்பா குறிப்பிடுகின்றார்.

**மூலபாட ஆய்வியல்**

மூலபாட ஆய்வில் என்பது, ஆசிரியர் இயற்றியதாக வழங்குகின்ற பாடத்திற்கு இன்னவாறு அது இருத்தல் வேண்டும் எனப் பதிப்பாசிரியர் கருதுகின்ற பாடத்திற்கு உ... யேயுள்ள தொடர்பை ஆராய்வது அதாவது பழைமையான நூல்களில் உள்ள

வாசகங்களுக்கு (Texts) கிடைக்கும் பாடங்களை பலவற்றையும் நுணுகி ஆராய்ந்து,

ஆசிரியருடைய பாடம் எதுவாக இருக்கும் என்று எண்ணி முடிவு செய்வது மூலபாட ஆய்வு ஆகும். மூல பாடத்தை நிறுவ, மனிதன் பின்பற்றுகின்ற நுட்பமான, முறையான பயிற்சியே மூலபாடத்திறனாய்வு என்று அறிஞர் கூறுவர்.

மூல பாடத்திறனாய்வு என்பது ஏடுகளில் அமைந்த பாடங்களை ஆய்வு செய்பவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப் பொது அறிவை பயன்படுத்தும் எளிய வழி என்று எப். டபிள்யூஹால் மொழிவர்.

ஏடுகளில் அமைந்த மூல பாடங்களை கண்டறியும் ஆய்வு தமிழில் உரையாசிரியர்கள் காலத்திலேயே பயிற்சி பெற்றிருந்தது. தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலான அறிஞர்களும் மூலபாட ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் தம் உரைகளில் ஆங்காங்கே இன்னவாறு பொருந்தமை அறிக என்றும் அவர்கள் கூறுமிடங்களை சான்றாகக் கூறலாம்.

ஐரோப்பிய நாடுகளில் 16-17ஆம் நூற்றாண்டிகளில் இக்கலை உருப்பெற்று வளரத் தொடங்கியது. மூல பாட ஆய்வு என்றத் தொடர் (முதன்முதலில் வநஒவரஉட சவைவீஉளைஅ) கி.பி 1748-இல் வெளியிடபட்ட ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதில்தான் ஆசிரியரால் இயற்றப்பட்ட மூலத்தில், பிற்காலத்தில் நிகழ்ந்த மாசுகளை நீக்கி, அம் மூலத்தின் உண்மையான பொருளை நிச்சயித்து மூலத்தை நிலை பெறுதல் என விளக்கம் கூறப்பட்டுள்ளது.

## இலக்கியத்தில் கலித்தொகை

பாட்டுத் தொகையும் என வழங்கப்படும் சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை கற்றறிந்தோர் ஏத்தும் கலி எனப் போற்றப்படுகிறது. சமுதாய வாழ்க்கையை காதல் வாழ்க்கையைச் சுவைபட கலித்தொகை பாடல்கள் சித்தரித்துக் காட்டுகின்றன. இப்பாட்டுக்கள் ஐந்து திணையாகப் பகுக்கப்பட்டுள்ளன. 35,29,35,17,33, கடவுள் வாழ்த்துச் செய்யுயோடு 150 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பா வகையால் மட்டும் அல்லாமல் பொருள் வகையாலும் சொல் வகையாலும் மற்ற தொகை நூல்களுக்கு இல்லாத வேறுபாடு இவற்றிற்கு உண்டு. மொழி வளர்ச்சியில் பிற்காலத்தனவாகக் கருதப்படும் சில.சொற்களும் இதில் உள்ளன.

காலம்

சங்க இலக்கியம் கூறும் அரசர்களும் பாண்டியன் மட்டுமே குறிக்கப்படுவதாலும் காமன் அவன் தம்பிசாமன் ஆகியோர் பற்றிய செய்திகள் அமைவதாலும், பாலில்கள் விகுதி, முன்னிலைப் பன்மைச் சொல் (நீர்), செய்யும் என்றும் வாய்ப்பாடு முற்றுச் சொல் பலர் பாலில் நின்றீத்தை, போசீத்தை, பாடித்தை என்ற அமைப்புகள் முதலியவற்றாலும் இந்நூல் செய்யுட்கள் பெரும்பாலும் கடைச் சங்க காலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் எனக் கொள்வார்''. இத்துணைச் சிறப்பு வாய்ந்த களந்தொகை, பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலியென ஐந்து பகுதிகளை உடையது. இந்நூலில் ஐந்திணைகளைக் காணலாம். இளம்பூரணம், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களின் ஆட்சியையும் பெற்றது இந்நூல். 1887ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இந்நூலினைப் பதித்துள்ளார்.

கலித்தொகைப் பாடவேறுபாடு

1887ஆம் ஆண்டு நூற்றாண்டுப் பிறகு அவருக்குப் பிறகு பதிப்பித்த பதிப்பாசிரியர்களின் பாடவேறுபாடு பின்வருமாறு அமைந்துள்ளது.

கலித்தொகை- கடவுள் வாழ்த்துப் பாடலில் ஆறாவது வரியில் பாடவேறுபாடு உள்ளது. அவை,

"கொடுகொட்டி யாருங்காற் கோடுயர்
ரகல்குறிக்''

என்பது பாடலாகும். இவற்றில் 'ரகல்குறிச்' என சிவை. தாமோதரம்பிள்ளை (1887), வெ.பெரி. பழ. மு. காசிவிசுவ நாதன் செட்டியார் (1938,1949) பதிப்பித்துள்ளனர். 'ரகவல் குறி' என இவை. அனந்தராமையர் (1925, 1938, 1984) பதிப்பித்துள்ளனர்.

'அகலல்குல்' என, தை. ஆ. கனக சபாபதி (1938), புலியூர் கேசிகன்(1958) பதிப்பித்துள்ளார். இதற்கு முன்பாக எஸ். ராஜன் வெளியீட்டாளர் (1957) இல் அகல் அல்குல் எனவும் பதிப்பித்துள்ளனர்.

பாலைக்கலி

பாலைக்கலி நான்காவது பாடலில் ஒன்பதாவது வரியில் பாடல் வேறுபாடு உள்ளது.

"காழ்வரி வகையார மீவரு மிளமுலை"

இப்பாடல் வரியில் 'வகையார' என்பதனை 'கவையார' எனவும் பதிப்பித்துள்ளனர்.

'வகையார' என்று சி.வை. தாமோதரம்பிள்ளை (1887), இ.வை. அனந்தராமையர் (1925, 1934, 1984), தை. ஆ. கனக சபாபதி முதலியார் (1937), எம். அப்துல் அஜீஸ் சாயபு (1943) பதிப்பித்துள்ளனர்.

'கவையார' என்று புலியூர்க்கேசிகன் (1958), மா. இராஜமாணிக்கனார் (1958), அ. மாணிக்கனார் (1999) சுப. அண்ணாமலை (2003), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (2004), இரா. சரவணமுத்து (2008), சக்திதாசன் சுப்பிரமணியன் (2007) பதிப்பித்துள்ளனர்.

பாலைக்கலி, நான்காவது பாடலில் 12 - வரியில்,

'சூழ்வதையெவன்கொ லறியேனென்னும்'

இப்பாடலில் 'சூழ்வதை'என வெ. பெரி. பழ.மு.காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆண்டு) பதிப்பித்துள்ளார்.

'சூழ்வகை' என எஸ் ராஜம் அண்ட்சன்ஸ் (1957) மா. இராசமாணிக்கனார் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978) புலவர் அ. மாணிக்கம் (1999) சு.ப. அண்ணா மலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாலைக்கலி ஐந்தாவது பாடலில் வரியில் 17வது பாடவேறுபாடு காணப்படுகிறது.

"பொய்ந் நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்"

இப்பாடலில், 'புரிந்தனை' என வெ.பெ.ரி.பழழமு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'புரிந்திவளை' என எஸ். ராஜம் அண்ட்சன்ஸ் (1957) மா. இராசமாணிக்கணார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்கேசிகன் (1958, 1978) புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளார்.

**குறிஞ்சிக்கலி**

குறிஞ்சிக்கலி பதினோராவது பாடலில் 8-வரியில் பாடவேறுபாடுள்ளது.

"வீழ்ப்பெயற் கங்குனின் விளியோத்த வொடுக்கத்தால்"

இப்பாடலில், 'கங்குனின்' என வெ.பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'கங்குலின்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958,1978), புலவர் அ. மாணிக்கனார் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

குறிஞ்சிக்கலி 18-பாடலில், 16- வரியில் பாடவேறுபாடள்ளது.

"வலையர் போலக் சோர்பதனொற்றி யென்"

இப்பாடலின் 'வலையர்' என வெ.பெரி.பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார் 1938 ஆக்ஸ் பதிப்பித்துள்ளார்.

'வலைவர்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராச மாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), சு.ப. அண்ணாமலை (2003), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999) பதிப்பித்துள்ளனர்.

குறிஞ்சிக்கலி பாடல் 22-வது பாடலில் 5வது வரியில் வேறுபாடுள்ளது.

"சுடர் விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்"

இப்பாடலில் 'வினைவாய்ந்த' என வெ. பெரி. பழ. மு. காசி விசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

வரிவாய என எஸ். ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் 91958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999) சு.ப. அண்ணாமலை (2003) விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

**முல்லைக்கலி**

முல்லைக்கலி 2-வது பாடலில் 17 வரியில் பாடல் வேறுபாடுள்ளது.

“தகைவகை மிசைமிசைப் பாயியர் ஆர்த்துடன்’’

இப்பாடலில், ‘பாயியர்’ என வெ. பெரி. பழ. மு. காசி விசுவநாதன் செட்டியார் (1938 ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

பாடல் 4- இல், 36வது வரியில் பாடல் வேறுபாடுள்ளது.

“நோனாது குத்தும் இளங்காரித் தோற்றங்காண்’’

இப்பாடலில் ‘நோனாது’ என வெ. பெரி. பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘கோணாது’ என எஸ் ராஜம் அண்ட் சண்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003) விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் 4-இல் 69 வது வரியில் பாடவேறுபாடுள்ளது.

“தொழிஇஇ ஒருக்க நாமாடுங் குரவையுள் நம்மை’’

இப்பாடலில், தொழீஇஇ என வெ.பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

தொழிலீஇஇ என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), புலியூர்க் கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சுப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் எண் 7இல் 34 வரியில்,

“பொய்யில் பொதுவந் கடைசூழ்ந்தார் தந்தையோ’’

இப்பாடலில் ‘கடைசூழ்ந்தார்’ என வெ.பெரி.பழ.மு. காசி விசுவநாதன் செட்டியார் (1938,ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘கொடைசூழ்ந்தார்’ என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), புலியூர்க் கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சுப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

மருதக்கலி

16வது பாடலில் 32வது வரியில் பாடவேறுபாடுள்ளது.

"துன்னுத லோம்பிற் திறவதின் முன்னி நீ''

இப்பாடலில் 'திறவதின்' என வெ. பெரி. பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார். (1938 ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார். துறவன் என எஸ். ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க் கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சுப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

மருதக்கலி 19வது பாடல், 18வது வரியில் பாடவேறுபாடுள்ளது.

"செய்வுறு திண்டேர்க் கொடுஞ் சினைக் கைப்பற்றி''

இப்பாடலில் 'செய்வுறு' என வெ.பெரி.பழ.மு. காசி விசுவநாதன் செட்டியார் (1938,ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'செய்வுறு' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் 22இல் 6-வது வரியில் பாட வேறுபாடுள்ளது.

"வினைக் கெட்டு, வாயல்லா வெண்மை யூரையாது கூறுநின்''

இப்பாடலில் 'கூறுநின்' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'சென்நின்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) பதிப்பித்துள்ளனர்.

பாடல் 24இல் 2வது வரியில்

"கண்டது நோயும் வடுவுங் கரந்து மகிழ் செருக்கிப்''

இப்பாடலில் 'நோயும்' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'நொடியும்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

மருதக்கலி 26வது பாடலில் 35வது வரியில் பாடவேறுபாட்டுள்ளது.

"ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த திலகம்''

இப்பாடலில், 'திலகம்' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'திலதம்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

இதே பாடலில் 37வது வரியில்,

"ஒருத்தி வரியார்' அகல் குநீ காழகம்'

இப்பாடலில், 'அகலல்முற்' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'அரைசெறி' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

மருதக்கலி 26வது பாடலில் 46வது வரியில் பாடல் வேறுபாடுள்ளது.

"மணங்கமழ் கோவீது பரிபு கொண்டோச்சி''

இப்பாடலில், 'பரிபு' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

'பரிவு' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958),

புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் எண் 28 இல், 40- வது வரியில் பட வேறுபாடுள்ளது.

“தண்டாத் தகடுருவ வேறாகக் காவின் கீழ்ப்''

இப்பாடலில், ‘தண்டாத்' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘கண்டாய்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் எண் 30 இல், 17வது வரியில் பாடவேறுபாடுள்ளது.

“வார் பொலங் கிண்கிணி யார்ப்ப இயற்றி நீ''

இப்பாடலில், ‘இயற்றிநீ' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘பயிற்றி நீ' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் எண் 31 இல் 22வது வரியில்,

“எல்லா, கெழி இத் தொடி செறித்த தோளினை தத்தித்''

இப்பாடலில், ‘தத்தித்' என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘தாங்கித்' என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

பாடல் எண் 31 - இல் 16- வது வரியில் பாட வேறுபாடுள்ளது.

“வேய் நலமிழந்த தோள் கவின் வாட உழப்பாளை”

இப்பாடலில், ‘உழப்பாளை’ என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘விழப்பாளை’ என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

**நெய்தற்கலி**

பாடல் எண் 5 இல் 23 வது வரியில் பாடவேறுபாடுள்ளது.

“தானவர் பாற்பட்ட தாயின்”

இப்பாடலில், ‘தானவர்’ என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘தாமவர்’ என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

நெற்தற்கலி பாடல் எண் 20இல் , 12வது வரியில் பாடவேறுபாடுள்ளது.

“வில்லினுங் கடிதவர் சொல்லினுட் பிறந்தநோய்”

இப்பாடலில், ‘கடிதவர்’ என வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் (1938, ஆகஸ்டு) பதிப்பித்துள்ளார்.

‘கொடிதவர்’ என எஸ் ராஜம் அண்ட் சன்ஸ் (1957), மா. இராசமாணிக்கனார் (1958), சக்திதாசன் சுப்பிரமணியன் (1958), புலியூர்க்கேசிகன் (1958, 1978), புலவர் அ. மாணிக்கம் (1999), சு.ப. அண்ணாமலை (2003), விசுவநாதன் (2004) ஆகியோர் பதிப்பித்துள்ளனர்.

**முடிவுரை**

சங்ககாலத் தமிழ் இலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகை குறிப்பிடத்தக்க நூலாகும். பல

புலவர்களின் பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூலான கலித்தொகையில் ஆசை இனிமையும் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளால் அமைந்துள்ள கலித்தொகையில் பாடவேறுபாடு என்பது முக்கியத்துவம் பெறுகிறது. ஐந்து வகை கலிகளிலும் சிலவற்றைக் குறிப்பிட்டு பாடவேறுபாடு காட்டப்பட்டுள்ளது. இக்கட்டுரை ஆராய்ச்சியாளர்களுக்கு பயன் உள்ளதாக அமையும் என நம்புகிறேன்.

## துணைநூல்கள்


1. அண்ணாமலை சுப., முனைவர், கலித்தொகை, கோவிலூர் மடாலயம், கோவிலூர், முதற்பதிப்பு, 2003.
2. அனந்தராமைய்யர் இ.வை., கலித்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.
3. மேலது, கலித்தொகை, நெய்தற்கலி, நோபில் அச்சுக்கூடம், சென்னை,1931.
4. இராசமாணிக்கனார். மா., கலித்தொகை (தெளிவுரை), குறிப்புரை, திணை, துறை, உள்ளுறை, விளக்கம், வள்ளுவர் பண்ணை, சென்னை, முதற்பதிப்பு, 1958.
5. கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு 2004.
6. காசி விசுவநாதன் செட்டியார்,`கலித்தொகை, வெ. பெரி. பழ. மு. (இளவழகனார் ஆராய்ச்சி, முன்னுரையும், உரைவிளக்கம்), சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1958.
7. சி. வை. தாமோதரம் பிள்ளை, கலித்தொகை, நச்சினார்க் கினியர், உரையுடன் பதிப்பு, 1887.
8. மந்ரே. எஸ். ராஜம் சன்ஸ், கலித்தொகை, ஆசிரியர் குழு, சென்னை, 1957.
9. புலவர் அ. மாணிக்கனார், கலித்தொகை மூலமும், தெளிவுரையும், வர்த்தமான் பதிப்பகம், முதற்பதிப்பு, 1999.
10. புலியூர் கேசிகன், கலித்தொகை தெளிவுரை, பாரி நிலையம், சென்னை, 1958.
11. சக்திதாசன் சுப்பிரமணியன், கலித்தொகை, முல்லைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2007.
12. தை. ஆ. கணகசபாபதி, தலியார், கலித்தொகை (பாலைக்கலி), மூலமும் விளக்கவுரையும், தஞ்சாவூர், 1937.

# எழுகுளிறா? எழுகளிறா?

முனைவர் மோ.கோ. கோவைமணி

சங்க எட்டுத்தொகை அக இலக்கியங்களில் ஒன்றாகிய குறுந்தொகை முல்லைத்திணை 24ம் பாடலில் எழுகுளிறு, எழுகளிறு என்ற வேறுபட்ட பாடங்களைக் கொண்டு உரையாசிரியர்கள் உரை கண்டிருக்கின்றனர். படிப்பவர்க்கு இவற்றில் எது சரியான பாடம் என்பதில் ஐயம் தோன்றுகிறது. இங்கு இவ்வையத்தை நீக்கும் பொருட்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பெறுகிறது.

## குறுந்தொகை பதிப்புகளும் சுவடிகளும்

திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கனார் தம்முடைய உரையுடன் குறுந்தொகையை 1915ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி, முத்துரத்தின முதலியார் வருவித்துக் கொடுத்த சுவடி, மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி என மூன்று சுவடிகளைக் கொண்டு இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார்.

குறுந்தொகை மூலம் மட்டும் 1920ஆம் ஆண்டு கா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டுள்ளார்.

இராமரத்ந ஐயரின் குறுந்தொகை புத்துரையைக் கலாநிலையம் வார இதழில் 1930ஆம் ஆண்டு ஏப்ரல் மாதந் தொடங்கி டிசம்பர் மாதம் வரை வெளியிட்டுள்ளது. இவ்வுரை தனிநூலாக வெளிவரவில்லை.

திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கனாரின் குறுந்தொகை அச்சுப் பதிப்பை அடிப்படையாகக் கொண்டு குறுந்தொகை மூலம் மட்டும் புரசைவாக்கம் சோ. அருணாசல தேசிகர் 1933ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் தம்முடைய பதவுரை, விளக்கவுரையுடன் குறுந்தொகையை 1937ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். திருவாவடுதுறை ஆதீனச் சுவடி, திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் சுவடி, மந்தாத்தோப்பு மடத்துச் சுவடி, செங்கோல் மடத்துச் சுவடி, திருமயிலை சண்முகம்

பிள்ளை காகிதச் சுவடி, சோடாசவதானம் சுப்பராய செட்டியார் சுவடி, தொழுவூர் வேலாயுத முதலியார் சுவடி, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக காகிதச் சுவடி, புதுக்கோட்டை ராதாகிருஷ்ணையர் காகிதச் சுவடி, திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை காகிதச் சுவடி எனப் பத்து மூலச் சுவடிகளைக் கொண்டு குறுந்தொகை பதிப்பை உ.வே. சாமிநாதையர் பதிப்பித்திருக்கின்றார். இதன் இரண்டாம் பதிப்பு 1947ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் குறுந்தொகை விளக்கவுரையை (முதல் 112 பாடல்கள்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1946ஆம் ஆண்டு வெளியாட்டுள்ளது.

உ.வே. சாமிநாதையரின் விளக்கவுரைப் பதிப்பை அடியொற்றி பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் எழுதிய குறுந்தொகை விளக்கவுரையைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1955இல் வெளியிட்டுள்ளது.

புலியூர்க்கேசிகனின் குறுந்தொகை தெளிவுரையைப் பாரி நிலையம் 1965ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இது பல பதிப்புகளைக் கண்டுள்ளது.

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையின் குறுந்தொகை 1985ஆம் ஆண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இலண்டனிலிருந்து வரவழைக்கப்பெற்ற காகிதச் சுவடியின் நுண்படம் (எழுதப்பெற்ற ஆண்டு 1894), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் கையெழுத்துப்படி (மதுரையில் 1899இல் எழுதப்பெற்றது), மதுரைப் புலவர் இளங்குமரனிடமிருந்து பெறப்பெற்ற பூண்டியப்பப் புலவரின் ஏட்டுக் குறிப்பு, திரு. அடிகளாசிரியரின் வழியாகக் கிடைத்த 226 பாடல்களுக்கான காகிதச்சுவடி ஆகிய நான்கு சுவடிகளையும், திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாள் அரங்கனாரின் பதிப்பு, புரசைவாக்கம் சோ. அருணாசல தேசிகரின் மூலப்பதிப்பு, கலாநிலையம் இதழில் வெளியான இராமரத்ந ஐயரின் உரை, உ.வே. சாமிநாதையரின் பதிப்பு, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு ஆகிய ஐந்து குறுந்தொகை பதிப்புகளையும் அடியொற்றி பொழிப்புரையாக, ஆய்வுப்பாட நுண்பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாளரங்கனார் பதிப்பும், உ.வே. சாமிநாதையர் பதிப்பும், பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை ஆய்வுப்பாட நுண்பதிப்பும் ஆகும்.

தற்போது குறுந்தொகைச் சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஒன்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றும், சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஒன்றும், திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது. இங்குள்ள சுவடிகளை உ.வே. சாமிநாதையரும், மு. சண்முகம் பிள்ளையும் பயன்படுத்தி உள்ளதால் இனிக் குறுந்தொகைச் சுவடிகள் இருக்காது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பல தமிழறிஞர்கள் வீடுகளில் இருக்கலாம். மாற்றுச் சுவடி கிடைக்கும் நிலையில் குறுந்தொகைக்கு வேறொரு பதிப்பு தேவையாகிறது.

**எழுகுளிறா? எழுகளிறா?**

*"எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்"* (குறுந்.24.4)

என்னும் தொடரில் 'எழுகுளிறு' என்பது உ.வே. சாமிநாதையரும், எஸ். வையாபுரிப்பிள்ளையும் பாடம் கொண்டு 'எழுகளிறு' என்பதைப் பாடவேறுபாடாகக் காட்டியுள்ளனர். ஆனால், சௌரிப்பெருமாளரங்கனார், கலாநிலையம் இராமரத்நம் ஐயர், அருணாசலதேசிகர், மு. சண்முகம் பிள்ளை ஆகியோர் 'எழுகளிறு' என்று கொண்டு உரை கண்டிருக்கின்றனர். சௌரிபெருமாள் அரங்கனார் 'எழுகளிறு' என்பதற்கு உரை கூறும் முகத்தான் 'எழுகின்ற களிறு' என்றும், கலாநிலைய உரைகாரர் இராமரத்ந ஐயர் 'எழுகின்ற களிறு' என்பதையே பாடமாகக் கொண்டு 'ஆற்று நீராடி எழுந்த ஆண்யானை' என்று உரை வரைந்துள்ளார். இத்தொடர் இடம்பெற்ற பாடல் பின்வருமாறு:

*கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்*
*என்னை இன்றியும் கழிவது கொல்லொ*
*ஆற்றுஅயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து*
*எழுகளிறு மிதித்த ஒருபழம் போலக்*
*குழையக் கொடியோர் நாவே*
*காதலர் அகலக் கல்லென் றவ்வே.* (குறுந்.24)

"கரிய அடிமரத்தை உடைய வேப்ப மரத்தினது ஒள்ளியவான பூக்களாகிய புது வருவாயானது என்னுடைய தலைவன் இல்லாமலும் வந்தே செல்லுவதோ? கொடியோர்களாகிய அலர் தூற்றும் மகளிருடைய நாக்கள், என்னுடைய காதலர் என்னை விட்டு நீங்கிச் செல்லவும் ஆற்றின் அருகே கரைக்கண் முளைத்து வளர்ந்த வெண்ணிறமான கொம்புகளையுடைய அத்திமரத்தினது எழுந்து வருகின்ற ஆண்யானையின் காலால் மிதித்து உழக்கப்பெற்ற ஒற்றைப்பழம் குழைவது போலக் குழைந்து நான் வருந்தும்படி அலர் கூறிக் கல்லென்ற ஆரவாரத்துடன் முழங்கின" என்பதாக இப்பாடலின்

பொருளை மு. சண்முகம்பிள்ளை (பக்.28)இல் குறிப்பிட்டுள்ளார்.

உ.வே. சாமிநாதையர் 'எழுகளிறு' என்பதை 'எழுகுளிறு' என்கின்றார். குளிறு என்றால் நண்டு. எழு என்பதை ஏழு எனப் பொருள் கொண்டு ஏழு நண்டுகள் மிதிக்கப்பட்ட அத்திப்பழம் குழைவது போல, தலைவி வருந்தினள் என்பதாகப் பொருள் உணர்த்துகின்றார். மேலும், அவர் தம்முடைய விரிவுரையில் "அத்திப்பழம் மென்மையுடையதாதலின் நண்டுகள் மிதில்லலாற் குழைவதாயிற்று; இங்ஙனம் குழைகின்ற பொருளுக்கு அத்திப் பழத்தை உவமை கூறுதல், "அதம்பழத்துருவுசெய்தா ரவளிவ ணல்லூ ராரே" (திருநா. தேவாரம்) என்பதனாலும் விளங்கும். ஒன்றுக்கு ஏழு கூறுவது மரபு. இங்கே ஏழென்பது பலவென்பதைக் குறிக்க நின்றதொரு வாய்பாடு; 'ஏழென்பது அதற்கு மேலாய மிக்க பன்மை குறித்து நின்றது, ஒருவர் கூறை யெழுவ ருடுத்தென்றாற் போல' (குறள்.1269, பரிமேல்.); இவ்வாய்பாடுகளை அநந்தவாசி என்று கூறுவர் தக்கயாகப் பரணி யுரையாசிரியர்" (பக்.64) என்கின்றார்.

இவ்வுரையாசிரியர்களின் கருத்துக்களை எல்லாம் உற்றுப் பார்க்கும் போது, ஒன்று தெளிவாகத் தெரிகிறது. உ.வே.சாமிநாதையர் 'குளிறு' என்று பாடங்கொண்டு உரை வரைந்துள்ளார். ஏனையோர் 'களிறு' என்று பாடங்கொண்டு உரை வரைந்துள்ளனர். இங்கு நமக்குத் தெளியவேண்டிய பாடம் 'களிறு' அல்லது 'குளிறு' மற்றும் 'எழு' அல்லது 'ஏழு'.

இங்குப் பாடத்தைத் தீர்மானம் செய்வதற்குச் சில நடைமுறைகளைச் சிந்திக்க வேண்டியதாகிறது. இரு வேறு உரைகளிலும் அத்திப்பழம் குழைவது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். குழைதல் என்பது "கலங்குதல், வளைதல்" என்றும், குழைத்தல் என்பது "இளகுவித்தல், தளிர்த்தல்" என்றும் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் தமிழ்மொழி அகராதி (பக்.502) குறிப்பிடுகிறது. ஒன்று இன்னொன்றோடு நெகிழ்ந்து கலத்தலை இச்சொல் உணர்த்துகிறது எனலாம். யானை அத்திப்பழத்தை மிதிக்கின் பழம் குழையுமா? நசுங்குமா? என்று எண்ணிப் பார்க்கும் போது வலிமை கொண்ட யானை அத்திப் பழத்தை தன் காலால் மிதிபடும் போது மெருதுவாய் உள்ள அத்திப்பழமானது யானையின் பாதம் பட்ட இடத்தில் இருந்த இடம் தெரியாமலே போய்விடும். அதுவும் போர்க்குணம் கொண்ட ஆண்யானை மிதித்தல் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுவதால் இக்கூற்று முற்றும் பொருந்துவதாகத் தெரியவில்லை. அதனால் யானை மிதித்து மென்மையான அத்திப்பழம் குழைந்தது என்று ஏற்றுக்கொள்ள முடியாது. மென்மையான அத்திப்பழத்தை ஒன்றுக்கும் மேற்பட்ட

நண்டுகள் கடற்கரையில் உருட்டிச் செல்லும் போது மென்மையான அத்திப்பழத்தின் உண்மை நிலையில் சற்று மாற்றம் ஏற்படும். இளகலாம், வளையலாம், தளிர்வடையலாம். ஆகவே, தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் கொண்ட 'குளிறு' என்ற பாடத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தம்.

*ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்*
*வருநாள்வைத் தேங்கு பவர்க்கு* (குறள்.1269)

என்னும் குறளுக்குப் பரிமேலழகர், "சேணிடைச் சென்ற தம்காதலர் மீண்டு வரக் குறித்த நாளை உட்கொண்டு அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்தும் மகளிர்க்குஒருநாள் பலநாள் போல நெடிதாகக் காட்டும்.

ஏழென்பது அதற்கு மேலாய மிக்க பன்மை குறித்து நின்றது, "ஒருவர் கூறை எழுவர் உடுத்து" என்றாற்போல தலைமகள் வருத்தம் பிறர் மேலிட்டுக் கூறியவாறு. இதனால் இதுவும் தலைமகள் கூற்றாகாமை யறிக. இருநாளென்று பாடமோதுவாருமுளர்" என்கின்றார். இங்கு 'எழு' என்பது 'ஏழு' என்று கொண்டால் ஏழு நண்டுகள் மென்மையான அத்திப்பழத்தை உருட்டிச் செல்லும் போது குழைந்தது என்று கொள்ள நேரிடுகிறது.

இக்கூற்றைத் தலைவியின் நிலையில் வைத்துப் பார்க்கும் போது, தலைவன் பிரிவு நேர்ந்த வழி தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியின் உள்ளம் எத்தன்மையதாக இருக்கிறது என்பதை தலைவி கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவனின் பிரிவை ஊரார் பலவாறாக ஏசுவதை கேட்ட தலைவி, தன்னுடைய மனம் எவ்வாறு இருக்கிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. ஆண்யானையின் காலால் மிதிப்பட்ட பழம் எவ்வாறு ஆகியிருக்குமோ அவ்வாறு நான் இருக்கிறேன் என்று பொருள் கொண்டால் யானையால் மிதிபட்டிருந்தாள் அவள் உயிருடன் இருந்திருக்கமாட்டாள். அவள் இச்செய்தியைக் கூறுவதற்கும் வழியில்லை. எனவே, ஏழு நண்டுகள் மென்மையான அத்திப்பழத்தை உருட்டிச் செல்லும் போது வளைந்து நெகிழ்வதைப் போல மென்மை மனம் கொண்ட தலைவியின் உள்ளம் ஊரார் ஏசும் போது வளைந்து நெகிழ்வதை உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும். எனவே, எழுகுளிறு, ஏழுகுளிறு என்கின்ற பாடமே முற்றிலும் சரி.

இவ்வாறாக குறுந்தொகை முல்லைத்திணைப் பாடல்களில் காணப்படக் கூடிய பாடவேறுபாடுகளை வாழ்க்கையின் உண்மைத் தன்மையோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் பாட மீட்டுருவாக்கம் செய்யலாம். இப்பணி தொடர் பணியாகும்.

# உ.வே.சாமிநாதையரின் சங்க இலக்கியப் பதிப்பின் உரைநயம்

முனைவர்பட்ட ஆய்வாளர் சி.கங்காதரன்

## முன்னுரை

சங்க இலக்கியம் தமிழ்மொழி பெற்ற பெருஞ்செல்வமாகும். தொன்மை இலக்கியத்தின் சுவையை நமக்குக் காட்டி முதிராத இளமை எழிலுடன் திகழும் இவ்விலக்கியக் களஞ்சியம் நமது மொழியின் ஓர் எல்லை; இலக்கிய வளம் மிக்க சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் நமக்கு வந்தெட்டிய இலக்கியச் செல்வங்களின் முதல் எல்லைக்கல். இலக்கியத்தின் மொழிச் செறிவிற்கும் வெளியீட்டு நுட்பத்திற்கும் காரணமாக இதற்கு முன்னர் அமைந்த மாபெரும் இலக்கிய வளத்தைச் சுட்டிக் காட்டும் சிறப்புடைய எல்லைக்கல்லாகும். உ.வே.சா.வின் சங்க இலக்கிய பதிப்பின் உரைநயத்தினை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இலக்கியப் பதிப்புகள்

படைப்பிலக்கியத்தில் உ.வே.சா. அவர்கள் பொறித்து வைத்து தனிமுத்திரை அவரது ‘என் சரித்திரம்’ என்ற நூல் (1950) ஆகும். உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த இலக்கியங்களாகவும் எழுதி வெளியிட்ட உரைநடை நூல்களாகவும் 95 நூல்களை ஆண்டு வாரியாக அட்டவணை செய்துள்ளார். அவர் வாழ்ந்த காலத்தில் வெளியிட்ட நூல்கள் 91, நான்கு நூல்கள் அவர் காலத்திற்கு பிறகு வெளிவந்தது. அவர் பதிப்பித்த நூல்கள் 74, எழுதி வெளியிட்ட உரைநடை நூல்கள் 18, அவர் காலத்திற்குப் பின் பிறர் பதிப்பித்து வெளியிட்ட உரைநடை நூல்கள் 3 ஆகும்.

இலக்கியத்தில் எளிய பதம், எளிய சந்தம் புகுத்திப் பாரதி செய்த புதுமைக்கு ஏற்ற பின்புலமாகத் தமிழின் பழம்பெரும் இலக்கியச் செல்வத்தை புதைபொருளாய்ச் சிலர் கைகளில் அகப்பட்டுக் கிடந்த ஏடுகளினின்று நூல்வடிவாக்கி அவற்றிற்கமைந்த பழைய உரைகளையும் உடன் அமைத்து கற்போர் இவற்றை உணர்ந்து கொள்ளுமாறு குறிப்புரை வழங்கி வெளியிட்ட பதிப்புப்பணி

தமிழிலக்கிய வரலாற்றில் ஏற்படுத்திய மலர்ச்சியும் மாற்றமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

பழந்தமிழ் இலக்கியத்தின் செஞ்சொல் கவிநயத்தைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளுமாறு அமைந்த உ.வே.சா. அவர்களின் பதிப்புப்பணி தனிமனிதனின் சாதனை எவ்வளவு உயர்ந்தோங்கி நிற்கமுடியும் என்பதற்குத் தக்க எடுத்துக்காட்டு: 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற வான்மறைக்கு நடைமுறை இலக்கியம், செயலூக்கம் பெற்ற தனிமனிதனின் ஆற்றலுக்கு எல்லை இல்லை என்ற வெற்றி முழக்கம், பதிப்புத்துறையின் வாகை, தமிழ்த்தாத்தாவின் அயராத உழைப்பும் ஆராய்ச்சிப் திறனும், உண்மை காணுமளவும் நுணுகிக் கற்கும் பொறையும் இன்றைய ஆராய்ச்சித் தலைமுறைக்கு ஓர் அறைகூவல் எனலாம்.

### உ.வே.சா.வின் பதிப்புகள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என அமைந்த சங்கத்தொகை நூல்களில் உ.வே.சா. அவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை ஆறு நூல்கள். அவை,

1. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் - 1889
2. எட்டுத்தொகை நூல்களில்,
    1. ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும் - 1903
    2. குறுந்தொகை மூலமும் உரையும் - 1937
    3. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும் - 1904
    4. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும் - 1918
    5. புறநானூறு மூலமும் பழைய உரையும் - 1894

இவற்றில் குறுந்தொகை தவிர ஏனைய ஐந்து நூல்களையும் ஏட்டிலிருந்து முதலில் நூல் வடிவில் பதிப்பித்து வெளியிட்டவர் உ.வே.சா. அவர்களாகும். அகநானூறு, கலித்தொகை, நற்றிணை என்ற மூன்று நூல்களும் உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பெறவில்லை.

கால வரிசைப்படி உ.வே.சா. அவர்களின் பதிப்புகளை ஒழுங்குப்படுத்தும்போது பதிப்புகளின் முறை இவ்வாறு அமைகிறது.

பத்துப்பாட்டு 1889 (1918, 1931, 1950, 1956, 1961, 1974)

புறநானூறு 1894 (1923, 1935, 1950, 1956, 1963, 1971)

ஐங்குறுநூறு 1903 (1920, 1944, 1949, 1957)

பதிற்றுப்பத்து 1904 (1920, 1941, 1945, 1949)

பரிபாடல் 1918 (1935)

குறுந்தொகை 1937 (1947, 1955, 1962)

உ.வே.சா. அவர்கள் பத்துப்பாட்டின் முதற்பதிப்பை வழங்கிய 1889ஆம் ஆண்டு முதல் அவர் தமது குறுந்தொகை முதற்பதிப்பை வெளியிட்ட 1937ஆம் ஆண்டு வரை அமைந்த சுமார் அரை நூற்றாண்டுக்காலம் சங்க இலக்கியப் பதிப்புகளின் அடிப்படையில் நான்கு நிலைகளைப் பதிப்பு வரலாற்றில் இனங்காண இயலும்.

## முதல் பதிப்பு

யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்களின் கலித்தொகைப் பதிப்பு 1887, சங்க நூல் பதிப்பு வரிசையில் முதலில் அமைகிறது. 1887 முதல் 1920 வரை அமைந்த முதல் காலகட்டத்தைச் “சங்க இலக்கியங்களின் முதல் பதிப்புக் காலகட்டம்” எனக் குறிப்பிடலாம்.

பத்துப்பாட்டின் முதல் பதிப்பு 1889 ஆம் ஆண்டிலும், புறநானூற்றின் முதல் பதிப்பு 1894 ஆம் ஆண்டிலும் உ.வே.சா. அவர்களால் வெளியிடப்பெற்றன. ஐங்குறுநூறு 1903இல் முதல் பதிப்பும், பதிற்றுப்பத்து 1904 இல் முதல் பதிப்பும் உ.வே.சா. அவர்களின் பதிப்புப்பெற்று நூல் வடிவம் பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களின் முதல் பதிப்புக் காலகட்டத்தில் 1914 ஆம் ஆண்டு நற்றிணையின் முதல் பதிப்பு பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் அவர்களாலும், 1915 ஆம் ஆண்டு குறுந்தொகை முதல் பதிப்பு தி.ஸெள.அரங்கனார் அவர்களாலும், அகநானூற்றின் முதல் பதிப்பு 1920 ஆம் ஆண்டு கம்பர் விலாசம் இராஜகோபால் ஐயங்கார் அவர்களாலும் வெளியிடப்பெற்றன. 1918 ஆம் ஆண்டு பரிபாடலின் முதல் பதிப்பு உ.வே.சா. அவர்களால் நூல் வடிவம் பெற்றது. 1887 ஆம் ஆண்டு கலித்தொகை முதல் பதிப்பில் தொடங்கப்பெற்ற சங்க இலக்கிய முதல் பதிப்பு முயற்சி 1920 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற அகநானூற்று முதல் பதிப்புடன் நிறைவெய்துகிறது.

## இரண்டாம் பதிப்பு

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டினை 1918 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பை உ.வே.சா. அவர்கள் வெளியிட்டார்கள். 1920 முதல் இரண்டாம் பதிப்புகள் தொடங்கிய கால கட்டமாகும். முதல் பதிப்புப் பெற்ற ஒரு நூலை அதே பதிப்பாசிரியரோ அல்லது வேறொருவரோ மீண்டும் பதிப்பிக்கும் நிலையே இரண்டாம் பதிப்பு என்று கொள்ளப்படுகிறது.

ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் 1920 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பும், 1923 ஆம் ஆண்டு அகநானூறு மற்றும் புறநானூறு இரண்டாம் பதிப்புகளும் உ.வே.சா. அவர்களால் வெளியிடப்பெற்றுள்ளன.

1915 இல் குறுந்தொகை முதல் பதிப்பும், 1920 ஆம் ஆண்டு ஒரு பதிப்பும் அமைந்து வெளிவரவில்லை. 1930 ஆம் ஆண்டு கலாநிலைய வெளியீடாக குறுந்தொகை பதிப்பிக்கப்பெற்றுள்ளது. கலித்தொகைக்கு இரண்டாம் பதிப்பு இ.வை.அனந்தராமையரால் 1925, 31 ஆண்டுகளில் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பெற்றுள்ளது.

"முதல் பதிப்பில் முன்னும் பின்னும் தனித்தனியே பதிக்கப் பெற்றிருந்த அகராதிகளும் ராவ்பகதூர் வி.வெங்கையரவர்கள் முதலியோர் எழுதியனுப்பிய விசேடக் குறிப்புகளும் ஒன்றுபட்டு 'அரும்பத முதலியவற்றின் அகராதி' என்னும் பெயருடன் இப்பதிப்பில் வெளிவந்துள்ளன. அல்லாமல் சில அரும்பதங்கள், தொடர்மொழிகள், புலவர் பெயர்கள், தலைவர் பெயர்கள், அரிய விஷயங்கள் முதலியனவும் நூதனமாக இவ்வகராதியில் சேர்க்கப்பெற்றுள்ளன. மூலத்திலும் உரையிலும் கண்ட அளவைப் பெயர்கள் முதலியவற்றுள் தெரிந்தவற்றைத் தொகுத்து வகைப்படுத்திய பகுதியொன்று 'விசேடக்குறிப்பு' என்ற பெயருடன் இதிற்காட்டப்பட்டுள்ளது".

### புதிய உரை பதிப்பு

இரண்டாம் பதிப்புகளின் கால கட்டத்திலேயே உடன் கிளைத்த மற்றொரு நெறி நூலுக்குப் புதிய உரை வழங்கி வெளியிடும் நிலை. பழைய உரை அமைந்த சங்க இலக்கியங்களைப் பதிப்பிக்கும்போது அவற்றைப் பழைய உரை அமைந்த சங்க இலக்கியங்களைப் பதிப்பிக்கும்போது அவற்றைப் பழைய உரையுடன் பதிப்பிக்கும் பாங்கே உ.வே.சா. அவர்களிடம் காணப்படுகிறது. இவற்றிற்கு குறிப்புரை மட்டுமே வழங்கியுள்ளார்.

1889 ஆம் ஆண்டு பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் முதன் முதலாக உ.வே.சா. அவர்கள் பதிப்புப் பெற்றதைத் தொடர்ந்து பத்துப்பாட்டின் நூல்களைத் தனித்தனியாக நச்சினார்க்கினியர் உரையோடன்றிப் புதிய உரை வகுத்து வெளியிடும் பாங்கு கிளைத்தது. 1903 ஆம் ஆண்டிலேயே முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை என்ற இரு நூல்களையும் மறைமலை அடிகள் தமது உரையுடன் வெளியிட்டார். முல்லைப்பாட்டு 1929 இல் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரையுடன் வெளிவந்தது.

பழைய உரை குறிப்புரையாக அமைந்த பதிற்றுப்பத்துக்கு யாழ்ப்பாணம் பண்டிதர் சு.அருளம்பலவனார் வகுத்த

ஆராய்ச்சியுரையுடன் அமைந்த பதிப்பு 1960 இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பெற்றது.

## மூலப் பதிப்புகள்

புதிய உரைகள் தழைத்தோங்கிய இக்காலகட்டத்தில் உரையின்றி நூலின் மூலம் மட்டும் அமைந்த பதிப்புகளும் எழுந்துள்ளன. உ.வே.சா. அவர்கள் வழங்கிய பத்துப்பாட்டின் மூலம் (1931), புறநானூற்றின் மூலம் (1936). இவற்றில் கால்கோள்கண்ட "நூலை உரையின்றிப் பதிப்பிக்கும் பாங்கு" 1957 - 1958 ஆண்டுகளில் சங்க நூல்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக உரையின்றிப் பதிப்பித்த எஸ்.ராஜம் அவர்கள் முயற்சியில் மர்ரே பதிப்பு முழுமைபெற்றது.

1940 ஆம் ஆண்டு சமாஜப் பதிப்பாக வெளிவந்த பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என்ற நூல் சங்க இலக்கிய பதிப்பு வரலாற்றில் தெளிவான திருப்பமாக அமைந்தது.

## முடிவுரை

உ.வே.சா. அவர்களைச் சங்க இலக்கியப் பதிப்பு வரலாற்றின் தந்தையாக நாம் பெற்றதன் பயன், சங்க இலக்கியப் பதிப்பு முயற்சியை அவர் வகுத்த நெறியில் மேம்படச் செய்வதேயாகும். உ.வே.சா. அவர்கள் தான் செய்த பதிப்புப் பணியில் இன்பம் கண்டவர், தான் மனம் உவந்து செய்த இப்பணியைக் கற்பூரமாக மணக்கச்செய்தவர் என்ற நினைவே அவரது பதிப்புகளைக் கற்கும்போது நமது நெஞ்சில் நிற்கிறது.

# ஆற்றுப்படை நூல்களில் உரை வேறுபாடுகளும் கருத்து வேறுபாடுகளும்

முனைவர்பட்ட ஆய்வாளர் க. கிரிவாசன்

ஒரு நூலுக்குப் பல உரைகள் தோன்றின், அவ்வுரைகள் வேறுபட்டிருப்பதை உரை வேறுபாடுகள் எனலாம். தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்குப் பல உரைகள் இருப்பதால் அவற்றிற்கு உள்ளவேற்றுமையை ஒப்பிட்டு 'உரைவளம்' தோன்றியுள்ளது. இவ்வாறே ஒரு நூலின் பல உரைகளை ஒப்பிடுவததோடு, ஏதேனும் ஒரு சொல், ஏதேனும் ஓர் இலக்கணக் குறிப்பு, ஏதேனும் ஒரு விளக்கம் ஆகியவை பற்றி வெவ்வேறு காலத்தில் தோன்றிய வெவ்வேறு நூலின் உரைகளைப் ஒப்பிட்டு காண்பது உரை வேறுபாடு ஆகும். ஆற்றுப்படை நூல்கள் பல உள்ளன எல்லை கருதிப் பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**ஓர்தல் என்ற ஒரு சொல்**

இறையனார் களவியல் உரை: ஓர்ப்பு - ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல்.

பரிமேலழகர்: அளவைகளானும் பொருந்துமாற்றானும் தெளிய ஆராய்ந்து (குறள் - 357).

நச்சினார்க்கினியர்: கேள்வி ஓர்க்கும் (முருகு-96) - யாகங்களில்

தீங்கு வராதபடி நினையா நிற்கும்.

ஓர்ப்பனள் (முல்லை - 88) - கருதினள்.

ஓர்க்கும் (பெரும்-183)- செவி கொடுத்துக் கேட்கும்.

திருமுருகாற்றுப்படை பழைய உரை: ஓர்க்கும் (முருகு - 96) - திருவுள்ளத்து அடைக்கும்.

இவ்வாறு ஒரு சொல்லுக்குக் கூடச் சுவடிகளும், பாடவேறுபாடுகளும், ஆசிரியரின் மூலம் எது என்பதைத்

துணிவதில் குழப்பமும், தயக்கமும் மிகும். பாடவேறுபாடுகள் நூல்களின் இலக்கிய, இலக்கணத் தன்மைக்கேற்பவும் மாறுபடுகின்றன. ஆசிரியரின் மூலம் எதுவதாக இருக்கும் என்பதை நுண்ணிதின் ஆய்ந்து தேர்வு செய்வதே பாடத் தெரிவு ஆகும். ஒருவரால் ஒரு காலத்து இயற்றப் பட்ட மூலத்தில் பிற்காலத்தில் நிகழ்ந்த மாசுகளை நீக்கி அம்மூலத்தின் உண்மையான பொருளை நிச்சயித்து மூலத்தை நிலைபெறச் செய்தலையே மூலபாட ஆய்வு(Textual Criticism) என்பர். பாடவேறுபாடுகள் தோன்றுவதற்கு அடிப்படையே மொழியின் ஒலியமைப்புத் தான் என்றால் அது மிகையாகாது

ஒரே நூலின் படிகளாகவுள்ள சுவடிகளுள் காணப்படும் செய்திகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்பர். ஒன்று பாடவேறுபாடு, மற்றொன்று வடிவ வேறுபாடு. இவை இரண்டுக்கும் உள்ள வேற்றுமை நுண்ணிது. பாடலின் கருத்தை மாற்றுவதாகவோ தொடரின் பொருளுக்கு மாற்றுக் கருத்தைத் தருவதாகவோ, ஒரு சொல்லுக்கோ தொடருக்கோ மாற்றுச் சொல்லோ, மாற்றுத் தொடரோ காணப்படுவது பாடவேறுபாடாகும். இது ஓசையமைப்பிலும், யாப்பமைதியிலும்கூடப் பொருந்திக் காணப்படுவதாம்"ஒரு சொல்லுக்குப் பதிலாக வரும் பிறிதொரு சொல்லை, உதாரணமாக, "கோளரி மாதவன்" (556) என்பதற்குக் "கோளரி வாமனன்" என்று வருவது போல்வன பாடபேதம் என்று குறிக்கப்படுகிறது.

**ஆற்றுப்படை**

வீரமாமுனிவர் கூறும் 96 வகை சிற்றிலக்கியங்களில் 53வதாக வருவது ஆற்றுப்படை. இந்த நூல் வகையின் இலக்கணம் தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது.

> கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க்(கு) அறிவுறீ இச்
> சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்
>
> (தொல். பொருள்.புறத் நூ.36)

ஆறு எனும் சொல்லுக்கு வழி அல்லது நெறி என்பது பொருள். ஆற்றுப்படுத்துதல் என்றால் அறிந்தான் ஒருவன் அறியாதான் ஒரு வனை வழிப்படுத்துதலாகும். இவ்வகை நூல்கள் புறம் சார்ந்தவை. ஏனெனில் அகப்பாடல்கள் சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்.

சங்க இலக்கியமாம் பத்துப்பாட்டில் ஐந்து, ஆற்றுப்படை நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை). தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுவதில் விறலியாற்றுப்படை தனி நூலாக இல்லை எனினும் இவ்வகைப் பாட்டு புற நானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் உள்ளது. சேயிழை பெறுகுவை (புறம் 105), மெல்லியல் விறலி (புறம் 133) என்ற செய்யுள்களை உதாரணமாகக் காட்டலாம். கூத்தர், பாணர், பொருநர் இவர்களைப் பற்றிய ஆற்றுப்படைச் செய்யுள்களும் புறநானூற்றில் காணப்படுகின்றன.

## திருமுருகாற்றுப்படை

திருமுருகாற்றுப் படை நக்கீரரால் பாடப் பட்டது. 317 அடிகள் கொண்டது. இதன் பாவகை ஆசிரியப்பா. முருகனின் ஆறுபடை வீடுகளைப் பற்றி புகழ்ந்துரைக்கும் ஆறு பகுதிகளைக் கொண்டது. இந் நூல் காலத்தால் பிற்பட்டது என்றே உ.வே.சா தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளார் எஸ்.வையாபுரிப் பிள்ளை இதனை வழி மொழிந்து கூறியுள்ளார்.

பத்துப்பாட்டில் தனித்தனியாகவும் சில நூல்களை உரையாசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். திருமுருகாற்றுப் படைக்கு மட்டும் நான்கு பழைய உரைகள் கிடைத்து வெளிவந்துள்ளன. 1902இல் திருமுருகாற்றுப்படையினைத் சரவணப்பெருமாளையர் பதிப்பித்து வெளியிட்டார். பின்னர் 1917இல் முதற்பதிப்பாக வெளியிட்ட ஆறுமுக நாவலர் 1947 இல் 16ஆம் பதிப்பாகவும் வெளியிட்டார். "திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும்" என்ற தலைப்பில் 1924 இல் மகாதேவ செட்டியார் பதிப்பித்து வெளியிட்டார். 1927 இல் "திருமுருகாற்றுப்படைச் சிற்றாராய்ச்சி " என்ற பதிப்பு நூலினைத் எம். ஆறுமுகப்பிள்ளை வெளியிட்டார். திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரையினை 1937இல் பண்டிதர் சு.அருணம்பலம் வெளியிட்டார். 1937இல் "திருமுருகாற்றுப்படை மூலமும் பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்" என்ற தலைப்பில் தை.ஆ. கனகசபாபதி முதலியார் பதிப்பித்தார். 1945 இல் வை.மு.கோ. பதிப்பும் வெளிவந்தது. ஏறத்தாழ திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் பதினைந்து உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர்.

**உரை வேற்றுமை**

திருமுருகாற்றுப் படைக்கு ஐந்து பழைய உரைகள் இருப்பதால் அவற்றை ஒப்பிட்டுக் காண்பது அறிவுக்கு விருந்தாய் உள்ளது ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாய் உள்ளது.

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோறு ஆடலும் நின்றதன் பண்பே

என்ற அடிகளில் உள்ள **'தலைத் தந்து'** என்ற தொடர் பலவாறு விளக்கப்பட்டுள்ளது.

நச்: முதற்கை கொடுத்து.
பரிமே: அவ்விடத்து வந்து

உரையா: அவர்கள் (மகளிர்) களவறிந்து அவர்கட்கு இருப்பிடம் கொடுத்து.

கவி: தானும் ஒரு தலையிலே கை கோத்து.
பரிதி: ஒருத்தியை எடுத்து ஒருத்திமேல் போட்டு.

இவ்வுரைகளுள் உரையாசிரியர் உரை மிகவும் பொருத்தமாய் உள்ளது. முற்காலத்து வழக்கத்தை அறிந்து எழுதிய விளக்கமாய் உள்ளது. இந்த அரிய விளக்கம் வேறு உரையாசிரியர்களால் (புறம் - 24, பழைய உரை) கூறப்படவில்லை.

பழமுதிர்சோலை (முருகு - 317) என்பது,
பழம் + உதிர் + சோலை

என்றும்,

பழம் + முதிர் + சோலை

என்றும் இரு வகையாகப் பிரித்துப் பொருள் கொள்ள இடம் தருகின்றது. முற்காலத்து உரையாசிரியர்கள் இரு வகையாகவும் பொருள் கொண்டுள்ளனர்:

நச்: பழம் முற்றின சோலை

பரிமே: பழம் முதிரும் சோலை

உரையா: நற்கனிகள் உதிரப்பட்ட சோலை

கவி: பழங்கள் முற்றப் பெற்ற சோலை

பரிதி: முதிர்ந்த பழங்கள் பொருந்திய சோலை.

திருமுருகாற்றுப்படையைத் தவிர பிற ஆற்றுப்படை நூல்களுக்கு அதிக உரையில்லாத காரணத்தால் அவற்றில் குறிப்பிடத் தகுந்த உரை வேறுபாடுகள் இல்லை. ஆனால் பிறகால உரையாசிரியர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உண்டு.

### பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படைக்கு இரு உரையாசிரியர் உரை எழுதியுள்ளனர். பொருநராற்றுப் படை: 1907-ஆம் ஆண்டு வா. மகாதேவ முதலியார் உரை எழுதியுள்ளார். கா. ஸ்ரீ. கோபாலாச்சாரியார் எழுதியுள்ள விளக்கவுரை சிறப்பாக உள்ளது. 'கருவிலே திருவுடையான்' என்று பெயரிட்டு, மொ.அ.துரையரங்கனார் திறனாய்வு எழுதியுள்ளார்.

### சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாறுப்படைக்கு நான்கு உரையாசிரியர்கள் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர் (வை.மு.கோ., வி. கந்தசாமி முதலியார், மு. பி. பாலசுப்பிரமணியன், பொ. வே. சோமசுந்தரனார்) ஆவர். இதில் சிறுபாணன் சென்ற வழி, ஓய்மான் நாடு, அந் நாட்டில் உள்ள ஊர்கள் ஆகியவை விளக்கம் பெற்றுள்ளன. பாடலின் இலக்கியச் சுவை பழந்தமிழர் நாகரிகச் சிறப்பு ஆகியவை நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பாணர்களின் கலைவாழ்வும், நல்லியக்கோடனின் பண்பும் போற்றப்பட்டுள்ளன.

### பெரும்பாணாற்றுப்படை

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார், ரா. ராகவையங்கார், பொ. வே. சோமசுந்தரனார், சு. அருணம்பலம் முதலான உரையாசிரியப் பெருமக்களும் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர். 4. பெரும்பாணாற்றுப் படை: யாழ்ப்பாணத்து அறிஞர் அருள் அம்பலனார் ஆய்வுரை வழங்கியுள்ளார். இதில் பாணர் வரலாறுவிரிவாக ஆராயப் பட்டுள்ளது. தமிழறிஞர் ரா. இராகவ ஐயங்கார் எழுதியுள்ள விளக்கவுரையில், இளந்திரையன் வரலாறு வடநாட்டு மன்னர்களுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனை அறிஞர் பலர் மறுத்துள்ளனர்.

### மலைபடுகடாம்

மலைபடுகடாத்திற்கு பொ.வே.சோமசுந்தரனார் உரைமட்டும் கழக வெளியீடாக வந்துள்ளது. மலைபடுகடாம்:

தனியாகத் திறனாய்வு நூல் இன்னும் தோன்றவில்லை. வச்சணந்தி மாலை உரை திருமுருகாற்றுப்படையைப் புலவராற்றுப்படை என்றும், மலைபடுகடாம் நூலைக் கூத்தராற்றுப் படை என்றும் குறிப்பிடுகிறார்.

நச்சினார்க்கினியர் மலைபடுகடாம் உரையில், ஆளவந்த பிள்ளை ஆசிரியர் என்று ஓர் உரையாசிரியரைக் குறிப்பிடுகின்றார். மலைபடுகடாத்துள் வரும் 'தீயின் அன்ன ஒண் செங்காந்தள்" என்ற அடிக்குப் (145) பொருள் எழுதியபின், "இதற்கு நன்னன் என்னும் பெயர் தீயோடு ஒத்ததன்மையின், ஆனந்தமாய், பாடினாரும் பாட்டுண்டாரும் இறந்தார் என்று ஆளவந்தபிள்ளையாசிரியர் குற்றங் கூறினார் எனின், அவர் அறியாது கூறினார்" என்று கூறுகின்றார்.

பத்துப்பாட்டு மூலமும் உரையும் என்று முதன்முதலாக 1889ஆம் ஆண்டில் உ.வே. சாமிநாதையரால் அச்சு வடிவில் வெளியிடப்பட்டது.பொ.வே. சோமசுந்தரனார் பத்துப்பாட்டினை இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளார். அவருடைய மறுபதிப்பு விவரம் வருமாறு: முதற்பதிப்பு 1956, 1962, 1966, 1968, 1971.

1961ஆம் ஆண்டில் வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியாருடைய பத்துப்பாட்டுப் பதிப்பு வெளிவந்துள்ளது. மலிவுப்பதிப்பாக மர்ரே பதிப்பு 1957இல் முதற்பதிப்பாகவும், 1981இல் (என்.சி.பி.எச் வெளியீடு) இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது.பத்துப்பாட்டு முழுவதற்கும் உரை எழுதியுள்ள நச்சினார்க்கினியர் உரைத்திறன்களை முன்னர்க் கண்டோம். அவருக்கு முன்னும் பத்துப்பாட்டிற்குச் சில பழைய உரைகள் இருந்தன. அவ்வுரைகளை நச்சினார்க்கினியர், பெயர் குறிப்பிடாமல் சுட்டுகின்றார். அந்த உரையாசிரியர் கொண்ட வேறு வேறு பாடங்களைக் காட்டுகின்றார்.

பத்துப்பாட்டு முழுவதற்கும் பொ. வே. சோமசுந்தரனார் மிக அருமையான உரை எழுதியுள்ளார். இவர்க்குமுன், வை. மு. கோபால கிஷ்ணமாச்சாரியர் பத்துப் பாட்டில் பெரும்பான்மையான பாடல்களுக்கு உரைகண்டுள்ளார். ஐயம்பெருமாள் கோனார் கல்லூரி மாணவர்கட்குப் பாடமாக வைத்த பாடல்களுக்கு உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். ந. சி. கந்தையாபிள்ளை எல்லாப் பாடல்களுக்கும் பொழிப்புரை (வசனம்) தந்துள்ளார். பத்துப் பாட்டுச் சொற்பொழிவு நூலைக் கழகப் பதிப்பு வெளியிட்டுள்ளது.

மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டில் வருகின்ற இடப் பெயர்களை விரிவாக ஆராய்ந்து இன்று அவை எங்கெங்கே உள்ளன என்று தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளார். முற்காலத்து அரசியல் நாகரிகம் மன்னர் வரலாறு மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை நன்கு விளக்கியுள்ளார். இதனைச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. சொற்திரிபுகள், சொற்குறைகள், திரிந்த வழக்குகள், மாறுபட்ட பேச்சு மொழிகள், போலி மரூஉ மொழிகள், கொச்சை வடிவங்கள், கிளை மொழிகள், வட்டார வழக்குகள், பிறமொழிச் சொற்கள் போன்றனவும் வடிவ வேறுபாடுகளாகக் கருதத்தக்கன.

முடிவுரை

காலம் காலமாய் தமிழ் எளிமைபட்டு வருகிறது. தற்காலத்தில் குறிப்புரைகளைப் புரிந்து கொள்ள விளக்க உரைகள் தேவைப்படுகின்றன. புத்துரைகள் தேவைப்படும் இக்காலகட்டத்தில் பல்வேறு உரைகளின் வேற்றுமைகளைக் கண்டு செம்பதிப்பு செய்ய உரைவேறு பாடுகள் உதவும். ஆற்றுப்படைக்கு எனத் தனித்த உரைவளம் செய்ய வேண்டியது தேவையாகும். இலக்கியம் செய்யப்பட்ட பகுதி, அதற்கு உரை செய்தோர் பற்றிய அறிவு, மற்றும் வட்டார வழக்குச் சொற்களோடு உரைகளைப் பொருத்திப்பார்க்கும் திறன் இவற்றைக் கொண்டு பல மேல் ஆய்வுகள் செய்ய வேண்டியதன் அவசியத்தை இக் கட்டுரையின் முடிவாகக் கொள்ள இடம் உண்டு.

துணைநூல்கள்

1. பத்துப்பாட்டு மூலமும் உரையும், நச்சினார்க்கினியார் உரை, உ.வே.சா குறிப்புரையும். கழக வெளியீடு, சென்னை.
2. பொருநராற்றுப்படை மகாதேவ முதலியார் லோகநாதன் & பிரதர்ஸ், 1907
3. பொருநராற்றுப்படை பொ.வே.சோமசுந்தரனார் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1955
4. சிறுபாணாற்றுப்படை விளக்கம் வி.கந்தசுவாமி முதலியார், ஒற்றுமை ஆபீஸ், சென்னை, 1947
5. சிறுபாணாற்றுப்படை விளக்கம் வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார்வை. மு.கோபால கிருஷ்ணமாச் சாரியார், 1932

6. சிறுபாணாற்றுப்படை விளக்கம் பொ.வே.சோமசுந்தரனார் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1955
7. சிறுபாணாற்றுப்படை விளக்கம் மு.பி.பாலசுப்பிரமணியன் முத்து நிலையம், நெல்லை, 1964
8. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி, ரா.இராகவையங்கார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1949
9. பெரும்பாணாற்றுப்படை,அருளம்பலம் ,யாழ்ப்பாணம், 1937
10. பெரும்பாணாற்றுப்படை, பொ.வே.சோமசுந்தரனார் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1955
11. மலைபடுகடாம் பொ.வே. சோமசுந்தரனார் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956
12. திருமுருகாற்றுப்படை உரை வளம் (ஐந்து பழைய உரைகள்: நச்சினார்க்கினியர், பரிமேலழகர், உரையாசிரியர், கவிப்பெருமாள், பரிதி) திருப்பனந்தாள் ஆதீனம் வெளியீடு, 1959

# பதிற்றுப்பத்து-ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரைத்திறன்

முனைவர்பட்ட ஆய்வாளர் ச. கண்ணதாசன்

## முன்னுரை

அவ்வை துரைசாமிப் பிள்ளை அருந்தமிழன்
செவ்வை உரைசாமிப் பிள்ளையன்றோ - இவ்வையம்
எக்களிக்கத் தந்தான் இருந்தமிழ் நூனுரைகள்
சிக்கலின்றித் தந்தான் தெளிந்து.

என உரைவேந்தரைப் பற்றிப் பாவேந்தர் புகழுகின்றார்.

## பதிற்றுப்பத்து உரைப்பதிப்பு

"தொல்காப்பியம் பதிப்பினைப் போன்று பதிற்றுப்பத்திற்கு முதலில் வெளிவந்தது உ.வே.சா. பதிப்பே". 'பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும் என வந்த உ.வே.சா. பதிப்பாகும். இது நூலுக்கும் உரைக்கும் முதலில் வந்த பதிப்பாகும். மூலப் பதிப்புகள் பின்னரே வந்தன. ஔவையின் உரைக்கு முன்னர் மூன்று உரைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. நானக்காவது வரையாக அமையப் பெற்றது உரைவேந்தரின் உரையாகும். தமது உரைக்கு முன்னர் வந்த முதல் உரைப்பதிப்பான உ.வே.சா. உரைப்பதிப்பு, பின்னர் வந்த உரைகளுக்கு அடித்தளமாக அமைந்தது என்று ஔவை குறிப்பிட்டு, உ.வே.சா. உரையை பெரிதும் போற்றியுரைப்பார்.

பல நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த தமிழ் நன்மக்களது நாகரிகப் பண்பாடுகளையுணர்த்தும் நல்விளக்கமாய்த் திகழும் இந்தத் தொகை நூல்களைச் செம்மையுற ஆராய்ந்து இன்றும் என்றும் தமிழ்ப் பயில்வோர் அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டிப் பரவத்தக்க வகையில் வெளியிடுவதாகிய அரிய தமிழ்ப்பணி புரிநத ஐயரவர்கட்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், ப. 6) என முன்னுள்ள உரையாசிரியரைப் பாராட்டி மகிழும் குணம்கொண்டவர்.

### உரை எழுந்த வரலாறு

'சுமார் பதினைந்து ஆண்டுகட்குமுன் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வுக்குச் செல்வோர் சிலருக்கு இப்பதிற்றுப்பத்து நூலினை கற்பிக்க வேண்டிய கடமை எனக்கு உண்டாயிற்று. அக்காலத்தே அவர்கட்கு இதனைக் கற்பித்து வருகையில், இதற்கொரு விரிவுரையிருப்பின் நலமாகுமென்னும் எண்ணமுண்டாக, என் நண்பர் சிலர் வாயிலாகப் பதிற்றுப்பத்தின் ஏடுகள் இரண்டு பெற்ற அச்சுப்படியையும் அவற்றை ஒப்புநோக்குவது முதற்கண் செயற்பாலதென உணர்ந்து செய்ததில் சில பாடவேறுபாடுகளும், சில பாடங்களிற் காணப்பட்ட ஐயங்கட்குத் தெளிவும் கிடைத்தன. பின்னர் இவ்வுரைப் பணியை மேற்கொண்டு செய்து வருங்கால், திருவையாற்று அரசர் கல்லூரிப் பேராசிரியரும் என் வணக்கத்திற்குரிய ஆசிரியருமாகிய கரந்தை கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கள் தாம் எழுதி வைத்திருந்த உரையினையும் தந்து உதவினார்கள். யான் எழுதி வைத்திருந்த உரையை நாவலர் திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் பார்வையிட்டு இப்போது வெளியாகியிருக்கும் இந்த முறையைக் காட்டி இவ்வகையில் இவ்வுரையை அமைக்குமாறு தெரிவித்தார்கள்.

இவ்வுரையின் அமைதியை நேரிற்கண்டு ஊக்கியதோடு விரைய அச்சிடுவது நலமென்று தெருட்டிய எங்கள் அரும்பெறும் ஆசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், இதன் பதிகங்கள் ஆராய்ச்சிக்கு இடமாக உள்ளனவாதலால் அவற்றிற்கு உரையெழுதப்படவில்லை. மேலும் இதன் முதற்பத்து இடைக்காமையான், இதற்கு முன்னணியில் கடவுள் வாழ்த்துச் செசய்யுள் ஒன்று இருந்திருக்குமென்றும், 'எரியெள்ளுவன் நிறத்தன்' எனத் தொடங்கும் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் உரைகாராற் காட்டப்படுவதுமாகிய பாட்டை இப்பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்துச் செய்யுளாகக் கோத்து உரையெழுதுமாறு அவர்கள் உரைத்தார்கள். உரை முழுவதும் அச்சாகி வெளிவரும் இந்நாளில் அவர் இல்லாமை என் மனதை வருத்துகிறது' (ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், பக். 11-12) என உரை வரைந்த வரலாற்றை முன்னுரைப் பகுதியில் எடுத்துரைத்துள்ளார்.

### அமைப்பு

நூலைப் பற்றியும் உரையாசிரியர் உரைநயம் பற்றியுமான தெ.பொ.மீ.யின் ஆங்கில உரை, முன்னுரை, உரையில் எடுத்தாண்ட நூல்கள், க. வெள்ளைவாரனார் தந்த உரைநலம்,

பாடினோர் வரலாறு, தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய, மூலபாட உரை, பின்னிணைப்பில் பதிகங்களின் உரைக்குறிப்பு, இடம் விளங்காத பதிற்றுப்பத்துப் பாட்டுகள், செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை, அருஞ்சொல் அகர வரிசை, உரையில் எடுத்தாண்ட நூல்களின் குறுக்க அட்டவணை என்பன உள்ளன.

**உரைத்திறன்**

உரைவேந்தர் ஔவையின் சங்க இலக்கியப் பதிப்புகள் யாவும் விளக்கவுரைப் பதிப்புகள் என்ற தனித்தன்மையோடு எளிய, இனிய தனித்தமிழ்ப் பதிப்புகள் என்ற பெருமையினைப் பெற்றனவாகும். தமது பதிப்புகளில் ஒவ்வொரு செய்யுளுக்கும முன்னுரை, உரை, உரை விளக்கம் எனினும் மூன்று பகுதிகளை அமைத்து ஒரே சீர்மைக் கட்டமைப்போடு விளக்கவுரையினை அமைக்கின்றார். (ச. சிவகாமி (ப.ஆ.) தொல்காப்பியம் சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் (ப. 20), ஔவை சு. துரைசாமிப் பிள்ளை என்னும் கட்டுரையில் நா. இளங்கோ குறிப்பிடுகின்றார்.

ஔவையில் பதிற்றுப்பத்து உரையின் வாயிலாக அவரது உரைத்திறத்தை பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டலாம். பாடபேதம், இலக்கணக் குறிப்பு, வினைமுடிவு, உவமை, ஒப்புமை, பாடலைத் தொடர்த் தொடராகப் பிரித்து பொருள் கூறல், பெயர் பொருத்தம், மேற்கோள், பண்டையோர் மரபு, வாழ்வியல் செய்திகள், கல்வெட்டுச் செய்திகள் போன்றவற்றை இவரது பதிற்றுப்பத்து உரைக்கான உரைத் திறமாகக் கொள்ளலாம்.

**பாடபேதம்**

நாற்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் பாடபேதத்தைச் சுட்டியுள்ளார்.

| | |
|---|---|
| சாரற்பிறமான் | - சோலைப் பிறமான் |
| ரிளைய வாடுநடை | - ரிழைய வாடுநடை |
| தொறுத்தவய | - தொறுத்தரு நீள் வயல் |
| வூரிய | - ஆறிய |
| குடிப்புறந்தராஅக் | - குடிபுறந்தாரா |
| ஐந்தொருங்கு | - வந்தொருங்கு |
| வரினுமாற்று | - வரினும்பாற்று |
| மெய்ம்மறை | - மேமறை |
| வண்டுபடுகதுப்பின் | - வண்டுபடு துப்பின் |
| கழங்கழி | - குழங்குவழி |

போன்றவற்றை பதிற்றுப்பத்து உரையில் இவர்காட்டும் பாடபேதத்திற்குச் சான்றுகளாகும்.

**இலக்கணக் குறிப்பு**

உரைக்கு விளக்கம் கூறும் பகுதியில், பாடலின் சொற் புணர்ப்புக்களில் அமைந்த வினைமுடிபு காட்டிப் பொருளின் திட்டத்தை வரையறுத்து உணர்த்துவதும், அருஞ்சொற்களுக்குப் பொருளும் இலக்கான அமைதி கூறுவதும் மிக நயம் பொருத்தியுள்ளன (பி.வி. கிரி. (தொ.ஆ) உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, ப. 53) என்று இராதாதியாகராசன் ஔவையின் உரையைப் பாராட்டுகின்றார்.

துளங்குதல் (7) - அசைதல் துளங்குதலை இடையறவின்றியுடைய அலையைத் துளங்கு என்ற ஆகுபெயர்.

பைந்நிலம் (7) பைஞ்ஞிலம் என வந்த மரூஉ.

முடி (4) - முடி பொன்னாலியன்ற ஆரத்துக்காதலின் ஆகுபெயர்

நெடுவய (4) - இது நெடிதாகிய இடத்தையுடைய விசும்பென விரித்தலின் அன்மொழித் தொகையாய் விசும்பிற்குப் பெயராயிற்று.

தடைஇய (54) - தடவென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சக் குறிப்பு.

கழனிய (48) - பெயரெச்சக் குறிப்பு

காண்கு (16) - தன்மை வினைமுற்று

ஆதலால் (16) - குறிப்பெச்சம்

அட்டுமலர் மார்பன் (20) - அட்டெனிறும் வினையெச்சம் மலர்தலென்னும் வினை கொண்டது.

நோகோயானே (26) - ஓகாரம், அசைநிலை, நோரு - தன்மை வினைமுற்று

அம்ம (28) - உரையசை

புகல்யானை (40) - வினைத்தொகை

அம்பு (42) - ஆகுபெயர்

மூய (42) - பெயரெச்சம்

தடை இய (54) - பெயரெச்சக் குறிப்பு

இவ்வாறு உரையின் இடையிடையே இலக்கணக் குறிப்புகளைக் கூறுகின்றார்.

**வினைமுடிபு**

உரை விளக்கத்தில் பாடலின் வினைமுடிவுகளைச் சுட்டுகின்றார்.

உண்மின் கள்ளே! அடுமின்சோறே!
எறிகதிற்றி! ஏற்றுமின் புழுக்கே! (பதிற். )

சேரலாதனிடம் பரிசில் பெற்றுவந்த பாணனொருவன் தன் உடனிருப்பவரைப் பார்த்துச் சொல்லியது.

நீயிர் கள்ளினைப் பருகுங்கள். சோற்றைச் சமையுங்கள் தின்றற்குரிய இறைச்சியை அறுப்பீர்களாக புழுக்குதற்குரிய பிற பருப்பு வகைகளை அடுப்பிலே ஏற்றுங்கள் என்று பாணன் உரைப்பதாக அமைந்துள்ளது.

இப்பாடலுக்கு உரை கூறும் ஔவை, “பாண்மக்கள், கள் உண்மன், அடுமின், எறிக, ஏற்றுமின், கூந்தல் விறலியர் அடுப்பு வழங்குக; பெற்றது உதவுமின்; தப்பன்று, சேரலான், மாரி பொய்குவதாயினும் பின்னம் நசை பொய்யலன் என்று வினை முடிபு செய்க” என்கிறார்.

நெடுஞ்சேரலாதனின் வெற்றிச் சிறப்பினை,

தேஎர் பரந்தபுல பேஎர் பரவா
களிறா டியபுல நாஞ்சி லாடா
மத்து ரறியமனை இன்னிய மிமிழா
ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்
நோகோ யானே நோதக வருமே (பதிற். 26:1-5)

எனும் பாடலில் பாலைக் கௌதமனார் கூறுகிறார்.

இப்பாடலடிகளுக்கு உரை கூறும் ஔவை, “நெடுஞ் சேரலாதன் பகைவர் நாட்டின் மீது போர் செய்தலால் பகைவர் நாட்டின் நிலையானது, சேர் பரந்து சென்ற விளைபுலங்கள் பின் ஏர் பூட்டி உழப்பட்ட வேண்டாதவையாயின. பன்றிகள் தம் கொம்பால் குத்தி கிளறிய விளைநிலங்கள் பின் கலப்பையால் உழ வேண்டாதனவாயின. தயிர் கடையும் மத்துக்கள் ஒலித்த வீடுகளில் இனிய மங்கல வாத்தியங்களின் ஓசைகள் தோன்றலாயின. இந்நாட்டின் பழைய நிலைமையை நன்கு அறியுநர் இன்று இச்செழுமையான வளமையினை நினைத்தாலும் மிகுந்த வருத்தம் உண்டாகும். இவ்வாறு பாழ்பட்ட பகைவர் நாட்டின் செழுவளத்தைப் பண்டு நற்கறியுநர் நினைப்பின் நோதகவரும், நோவேஎ யான் என மாற்றிக் கூட்டி வினைமுடிபு செய்க” (ஔவை.

சு. துரைசாமிப் பிள்ளை, பதிற்றுப்பத்து மூலம் விளக்கவுரையும், ப. 110) என வினைமுடிவினை உரையில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு உரை முழுவதும் வினை முடிபு கூறுவதை உத்தியாகக் கொண்டுள்ளார்.

**உவமைக் கூறுதல்**

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை தம் உரையில் பல உவமைகளை எடுத்தாண்டுள்ளார். அவ்வுவமைகள் கூறக் கருதியப் பொருளை இனிது விளக்குகின்றன. உரையாசிரியரின் புலமைத் திறத்தை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாகவும் உவமை அமைகிறது.

பொம்பூந் தும்பைப் பொறிகளர் தூணிப்
புற்றடங் கரவி னொடுங்கிய வம்பின்
நொசிவுடை வில்லினொசியா நெஞ்சிற்
களிறெறிந்து முறிந்தா கதுவா யொஃகின்
(பதிற். 45: 1-4)

செங்குட்டுவனின் தோற்றத்தையும் வெற்றிச் சிறப்பையும் விளக்கும்போது, "பொரும் வீரரணியும் தும்பைப்பூ பொன்னாற் செய்யப்படுதலால், 'பொலம்பூந்தும்பை'யென்றார். பொறி, பூத்தொழில் வேலைப்பாடு, தீப்பொறி கக்கும் அம்புகளையுடைமையின், பொறிகிளர் தூணியெனப்பட்ட தென்றுமாம். பாம்புபோற் சீறிச் சோறல் பற்றி, அம்பிற்குப் பாம்பும், தூணிக்குப் பாம்புறையும் புற்றும் உவமையாயின" (மேற்படி, ப. 809) என்கிறார்.

செங்குட்டுவனின் வெற்றிச் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் எடுத்துரைக்கும் பரணர், தம் பாடலொன்றில்,

இரும் பனம்புடையால், ஈகைவான் கழல்,
மீன் தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல் பெய்ந்தன்ன நெடுவெள் ஊசி (பதிற். 42:1-5)

எனக் குறிப்பிடுகின்றார்.

உரையெழுதும் உரையாசிரியர், செங்குட்டுவனின் படை வீரர்கள் போர்க்களத்தில், போரினால் ஏற்பட்ட விழுப்புண்களை வெள்ளிய ஊசி கொண்டு தைத்தார்களாம். இக்காட்சி, "மீன் பிடிக்கும் கிச்சிலிப்பறவை தன் அலகைக் கீழ் நாட்டிக் கொண்டு நீர்குட் பாய்ந்து மூழ்கி மறைந்து அலகை மேனோக்கி நிறுத்தி வெளியேறுபது, வீரர் மார்பிற் கிழித்த புண்ணைத் தைக்கும் ஊசிக்கு

உவமம்" (மேற்படி. ப. 189) எனச் செய்யுள் ஆசிரியர் கருத்துக்கு இணங்க விளக்கம் தருகிறார்.

பாடலை தொடர் தொடராகப் பிரித்து பொருள் தருதல்

"பாடலுக்கு உரை காண்பதிலும் ஔவை படிப்போர்க்கு சுமையேற்றாத எளிய இனிய நடையினைக் கையாளுகின்றார். கரும்பைக்க கணுக்கணுவாகத் தறித்துச் சுவைப்பது போலப் பாடலைத் தொடர் தொடராகப் பிரித்துப் பொருள் உரைக்கும் முறையினைப் பின்பற்றுகின்றார். இவ்வுத்தி பழைய உரைகாரர்களில், பரிமேலழகர், நச்சினார்க்கினியோர் முதலியோர் கையாண்ட உத்தியாகும். இவ்வுத்திக்குப் பாடலில் கண்ணழித்துப் பொருள் கூறுதல் என்று பெயர். பழையவுரையுள்ள பாடலுக்கு உரை கூறுமிடத்திலும் நீண்ட பழைய பொழிப்புரைகளை இம்முறைக்கேற்ப மாற்றி அமைக்கின்றார். அதாவது பாடலைத் தொடராகப் பிரித்து, அத்தொடருக்குரிய பழையவுரையைத் தக்க இடத்தில் பொருத்தி, பாடற்பொருள் எளிதாக விளங்கும் வகையில் உரை அமைக்கின்றார்."

1. பாடலைத் தொடர் தொடராகப் பிரித்துப் பொருள் காண்பதற்குச் சான்றுப் பாடலொன்று இவண் காணலாம்.

கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி
நாடுகண் டன்ன கணைத்துஞ்சு விலங்கல்
துஞ்சு மரக்குழாந் துவன்றிப் புனிற்று மகள்
பூணா வையவி தூக்கிய மதில
நல்லெழி னெடும்பதவு முருக்கிக் கொல்லுபு
ஏனமாகிய நுனைமுரி மருப்பின்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி

(பதிற். 16: 1-7)

| | | |
|---|---|---|
| துறை | : | செந்துறைப் பாடாண்பாட்டு |
| வண்ணம் | : | ஒழுகு வண்ணம் |
| தூக்கு | : | செந்தூக்கு |
| பெயர் | : | துயிலின் பாயல் |

| | | |
|---|---|---|
| கோடு உறழ்ந்து எடுத்த | - | மலைச் சிகரங்களுடன் மாறாட எடுத்த |
| கொடுங்கண் இஞ்சி | - | வளைந்த இடத்தையுடைய புறமதிலும் |

| | | |
|---|---|---|
| நாடுகண் டன்ன | - | அகன்ற நாட்டைக் கண்டற் போல பேரிடத்தை அகத்தே கொண்ட |
| கணை துஞ்சு விலங்கல்- | | அம்புக்கட்டுகள் பொருந்திய இடை மதிலும் |
| துஞ்சு மரக்குழாம் துவன்றி- | | கதவிடத்தே கிடக்கும் கணையை மரங்கள் பல செறிந்து |
| புனிற்றுமகள் பூணா ஐயவி - | | இளமகள் அரைத்துப் பூசிக் கொள்ளும் ஐயவியாகிய வெண்சிறு கடுகல்லாத ஐயவித் துலாமரங்கள் |

என அனைத்துப் பாடலடிகளை தொடர் தொடராகப் பிரித்து விளக்கவுரைத் தருகிறார். இவ்வாறு உரையெழுதுவது உரையை வாசிப்போருக்குப் பொருள் எளிதில் விளங்கும்படி உள்ளது.

### பெயர் பொருத்தம் காட்டுதல்

பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பாடலும், பாடலடியில் இடம்பெறும் சிறப்பானத் தொடர்களைக் கொண்டு தலைப்பிடப் பட்டிருக்கிறது. இத்தலைப்பிற்கு அமைந்த பெயர் பொருத்தத்தையும் பாடலடிகளில் பயிலும் பிற தொடர்களையும் ஒளவை பொருத்தமுற விளக்கியுரைக்கின்றார்.

பதிற்றுப்பத்தின் 16ஆம் பாடல் 'துயிலின் பாயல்' எனும் பெயருடையதாகும். இப்பாடலில் நெடுஞ்சேரலாதனது மார்பினை, அவனை விரும்பிய மகளிர்க்கும் பாயலெனச் சிறப்பித்தமையால் இதற்குத் துயிலின் பாயலென்று பெயராயிற்று எனப் பழைய உரையாசிரியர் கூறினார். 'திருஞெமரகலத்துத் துயிலின் பாயல்' என்பதற்குத் துரைசாமிப் பிள்ளை கூறிய மற்றொரு நயம் சுவை தருவதென்றாகும். நெடுஞ்சேரலாதனது மார்பு திருமகள் வீற்றிருக்கும் சிறப்புடையதென்பது 'திருஞெமரகலம்' என்பதனால் விளக்கப் பெற்றது. அங்ஙனம் திருமகள் விரும்பி வீற்றிருக்கும் சேரலாதனது மார்பினை அவன் காதல் மகளிர்க்குப் பாயல் எனப் புலவர் சிறப்பிக்கின்றார். பிறளொருத்தி தன் கணவன் மார்பினைத் தோய்ந்த வழி அதனை வெறுத்துப் புறந்தள்ளுதலே குலமகளிர் இயல்பு. சேரலாதனை விரும்பிய மகளிர், அவள் மார்பில் திருமகள் என்றும் மற்றொருத்தி பிரியதுறைதலைக் கண்டும் அவனுடன் புலவரது அத்திருமகளின் இருப்பு ஆள்

வினையிற் சிறந்த தம் கணவனாகிய சேரலாதனுக்கு அழகென்று தெளிந்த தம்முடைய சார்பினால் திருவீற்றிருக்கும் அவன் மார்பிற் சார்ந்து பெறும் துயிலினையே மேன்மேலும் விரும்புகின்றார்கள். அவர்தம் காதற் சிறப்பினைக் கூறுதல் பற்றி இப்பாடல் துயின் பாயல் எனப் பெயர் பெறுவதாயிற்று.

**பண்டையோர் மரபு எடுத்துரைத்தல்**

உரையாசிரியர்கள் தாம் எழுதுகின்ற படைப்பில் உவமையாகவோ உதாரணமாகவோ அல்லது இன்னபிற காரணங்களுக்காகவோ பண்டைய மரபினை கூறிச் செல்வார். கால வளர்ச்சியில் அப்பழமரபு மறையும் பொழுது இலக்கியத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி வாசகர்களுக்கு விளங்காமல் போகும் சாத்தியங்கள் உண்டு. உரையாசிரியர்கள் இதனைக் கருத்தில் கொண்டு அந்நிகழ்ச்சியில் பின்புலத்தினை விளக்கிச் செல்வர். துரைசாமிப் பிள்ளை பதிற்றுப்பத்து உரையில் பண்டைய மரபு குறித்த செய்திகளை எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.

**முதுமக்கள் தாழி**

'இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் மிகப் பழங்காலத் திலிருந்தே காணப்படுகிறது. இறந்தவர்களைப் புதைக்கப் பல முறைகள் கையாளப்பட்டன. அவற்றுள் ஒன்று தாழியில் வைத்துப் புதைப்பதாகும். இந்த முறை இந்தியாவில் பரவலாகக் காணப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் இறந்தவர்களை மண்ணில் புதைக்கும் பழக்கம் பற்றிய குறிப்புகள் உள்ளன. மணிமேகலையில் சவக்குழிகளைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'சுடுவோர் இடுவோர் தொடு குழிப்படுவோர், தாழ்வயின் அடைப்போர், தாழியிற் கவிப்போர்' எனவே மணிமேகலையின் காலத்திற்கு முன்பிருந்தே தாழியில் வைத்துப் புதைக்கும் முறை காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இத்தாழியை முதுமக்கள் தாழி என்றும் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் தரைமட்டத்திற்கு மேல் எவ்வித அடையாளமும் இன்றி நிலத்துக்குக் கீழே தாழியைப் பழங்கால மக்கள் புதைத்துள்ளனர் (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி பத்து, பக். 210-211).

துளங்குநீர் வியலக மாண்டினிது கழிந்த
மன்னர் மறைந்த தாழி (பதிற். 44:21-22)

என்ற பாடலடிகளில் தாழி என்னும் சொல்லுக்குப் பொருள் கூறும் உரையாசிரியர், 'தாழி மன்னர் இறந்த வழி அவர் உடலை மண்ணாற்

செய்த பனைக்குள் வைத்துப் புதைப்பது பண்டையோர் மரபு. இதனை முதுமக்கட்தாழி என்றும் வழங்குவர். 'வளவன் தேவருலக மெய்தினானாதலின், அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி' (புறம். 228) என வருதல் காண்க" (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் விளக்கவுரையும், பக். 207, 208) என உரைவழி பண்டைய மரபுச் செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

"புகழ்பாடும் பாணர்களுக்கும் விறலியருக்கும் வேந்தரும் பிற செல்வரும் முறையே பொற்றாமரையும் பொன்னரி மாலையும் வழங்குவது பண்டையோர் மரபு" (மேற்படி, ப. 219).

"கோட்டை வாயிலில் பகைவரை மகளிராக்கி அவர் அணிந்து கோடற்குச் சிலம்பு தழையும் பந்தும் கட்டித் தொங்கவிடுதல் பண்டையோர் மரபு" (மேற்படி. ப. 255).

"பாணற்குக் களிறும் விறலிக்கும் பிடியும் கொடுத்தல் மரபு" (மேற்படி, ப. 198) என உரையில் ஆங்காங்குப் பண்டைய மரபு சார்ந்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

### வாழ்வியல் செய்திகள்

24ஆம் பாடலில் செங்குட்டுவனின் பெருமையையும் கொடைச் சிறப்பையும் கூறி வாழ்த்துகிறார் குமட்டூர் கண்ணனார்.

குரைத்தொடி மழுகிய உலக்கை வயின்தோறு
அடைச்சேம்பு எழுந்த ஆடுறும் மடாவின்
(பதிற். 24: 19-20)

என்பது பாடலாகும். இவ்வடிகளுக்கு உரை கூறும் உரையாசிரியரின் உரையுள், வாழ்வியல் சார்ந்த கருத்துகள் பயின்று வருகிறது. மேற்கண்ட செய்யளடிகளின் விளக்கமாவது, "இடையற வின்றிச் சமைத்தற்கு வேண்டும் அரிசியைக் குற்றிக் குற்றித் தேய்ந்தொழிந்தமைத் தோன்றத் தொடி மழுகிய உலக்கை" எனக் கூறப்பட்டுள்ளது. குற்றுந்தோறும் ஓசையெழுப்பது பற்றித் தொடி, குரைத் தொடி எனப்பட்டது. இலையோடு கூடிய சேம்புபோல அகன்ற வாயுடைய சோறு சமைக்கும் மடாவினை 'அடைச் சேம்பெழுந்த ஆடுறுமடா' வென்றார். சேம்பின் அடி மடாவின் அடிப்பகுதிக்கும் அதன் இலை அகன்ற வாய்க்கும் உவமம். இதுபோலும் வடிவில் இக்காலத்தும் சோறு சமைக்கும் பாண்மாடாக்கள் நாட்டுப்புறங்களில் காணப்படுகின்றன. இம்மடாக்களை நேரிற் கண்டறியாதார் தம் தமக்கு வேண்டியவாறு உரைப்பர். மடா, மிடா வெனவும் வரும். இக்காலத்தவர் முடா வென வழங்குவர். (மேற்படி. ப. 101).

கடியேர் பூட்டுதல் *(43)* எனும் சொல்லிற்கான விளக்கமாக, "ஆண்டின் விளைவு குறித்து முதற்கட் பூட்டும் ஏராதல் பற்றி, கடியேர் பூட்டுநர்" என்றார். இதனைப் பொன்னேர் பூட்டுதல் என்று இக்காலத்து வழங்குவர் *(மேற்படி. ப. 197).*

பாண்டில் விளக்கு *(47)* "மாடங்களின் செல்வ மிகுதியும் இதனால் குறித்தாயிற்று. அகல் போல் இடம்விரிந்து ஒரு பக்கத்தே குவிந்து சுரைப்புடைத்தாய் ஒன்ளே திரி செறிக்கப்பட்ட கல்விளக்கினை 'பாண்டிய விளக்கு' என்கிறார். திரியெரியுங்கால், அதனால் நெய் கவரப்படுதலால், சொரிசுரை கவரும்நெய் என்றார். கூத்தாடு களரிக்கு வேண்டும் ஒளியின் பொருட்டுப் பருத்த திரியிட்டு எரிப்ப வாதலின், பாண்டில் விளக்கம் பரூஉச் சுட ரழல என்றார். இவ்விளக்கு சேலம் ஜில்லாவிலும் வடார்க்காடு ஜில்லாவிலும் இக்காலத்து மண்ணெண்ணெயெரிக்கும் பேரொளி விளக்கெள் வருவதற்கு முன் வழக்கிலிருந்தன *(மேற்படி. ப. 217).* இதன்வழி அவ்வவ் கால மக்களின் வாழ்வியல் செய்திகளை உரைகள் உணர்த்துவது உரைமூலம் அறிந்து கொள்ளும் பிறிதொரு பயனமாகும்.

**கல்வெட்டுச் செய்திகள்**

"பண்டைய வரலாற்றை அறிய உதவும் தொல்லியல் சானறுகளுள் கல்வெட்டும் ஒன்றாகும். பண்டைக்கால கல்வெட்டு எழுத்துக்களை அறிந்து அவற்றின் பொருளை விளக்கும் கலையே கல்வெட்டியில் எனப்படும். கல்வெட்டுக்களைப் படித்தறிய பன்மொழிப் புலமையும், பண்டைய எழுத்துக்களைப் படிப்பதில் சிறந்த தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும். வழக்கற்றுப் போன எழுத்துமுறை, மொழி ஆகியவற்றை அறிந்திருப்பதோடு இக்கால இலக்கண வழிகளையும் அகராதி சொற்களையும் அறிந்திருத்தல் வேண்டும். கல்லில் பொறிக்கப்படும் செய்திகள் கல்வெட்டுகள் என்று குறிப்பிடப்படும். கல்லில் மட்டுமின்றி, களிமண், பட்டிகைகள், உலோகம், தந்தம், சங்கு, மட்கலன்கள், சுடுமண் பொம்மைகள், மரம், கோரைத் தாள் ஆகியவற்றின் மீது தொன்மைக் காலத்தில் எழுதப்பட்டன.

கல்வெட்டுகள் முதன்நிலைச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. பண்டைய மனிதனின் வரலாற்று அறிவைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. கிரேக்கம், மெசப்பட்டோமியா, சைல் நதிக்கரை, சீனா, இந்தியா போன்றப் பகுதிகளிலிருந்த நாகரிகங்களை அறியக் கல்வெட்டுக்கள் பேருதவி புரிகின்றன. இந்தியாவில்தான் கல்வெட்டுக்கள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன *(வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 6, ப. 820-821).*

பதிற்றுப்பத்து நான்காம் பத்தினை காப்பியாற்றுக் காப்பியனார், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரனின் வெற்றிச் சிறப்புப் பற்றி 38ஆம் பாடலில் பதிவு செய்கிறார். அதில் சேரலாதன் நன்னால் என்பானை வெற்றிக் கொண்டது பற்றியும், அந்நன்னன் குறித்துக் கல்வெட்டு குறிப்பதையும் உரையில் சுட்டிச் செல்கிறார்.

'சேரலாதன் இளையயானாய் முடிசூட்டிக் கொண்ட காலத்தே தாமே சேர வாரிசுக்குரியோரெனச் சிலர் நன்னன் என்பான் துணையால் சேர வேந்தராயிருந்தனர். அவர்க்குத் துணையாம் வகையபபல் சேரநாட்டின் ஒரு பகுதி நன்னன் வசமிருந்தது, அதனால் அக்காலத்துச் செய்துகொண்ட சூளுறவுக்கேற்பக் களங்காய்க் கண்ணியும் நார்முடியும் கொண்டான் என்று கோடல் நேரிதாம். வாகைப் பெருந்துறை யென்னுமிடத்து இவன் அந்த நன்னனை வென்றுதான் பண்டிழந்திருந்த நாட்டைவென்று கொண்ட செய்தியை, ஆசிரியர் கல்லாடனார். "குடாஅது இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற், பொலம்பூணன்னன் பொருதுகளத் தொழிய, வலம்படு கொற்றத் தந்த வாய்வாட், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், இழந்த நாடு தந்தன்ன, வளம்" *(அகம். 199)* என்று கூறுவர். இப்பத்திற்குரிய ஆசிரியரான காப்பியாற்றுக் காப்பியனாரும், இச்சேரமான் நன்னனை வென்றதை, "பொன்னங்கண்ணிப் பொலந்தேர் நன்னன்" *(பதிற். 40)* குறிப்பிடுகிறார்.

இந்த நன்னன் வசமிருந்த சேரநாட்டுப் பகுதி இப்போதுள்ள பொள்ளாச்சி தாலுகாவாகும். இதன்கண் ஆனைமலை யென்னும் ஊர் பண்டை நாளில் நன்னனூர் என்ற பெயர் கொண்டிருந்ததென ஆனைமலைக் கல்வெட்டுக் *(கிஸி.ழிஷீ.214 ஷீயீ 1927-28; வீர கேரள வளநாட்டு நன்னனூர்)* கூறுகின்றது. இவனொடு களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் போருடற்றி வென்றி யெய்திய வாகைப் பெருந்துறை, இப்போது ஈரோட்டுக்கருகிலுள்ள பெருந்துறையாகலாம் *(ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் விளக்கவுரையும் பக். 161-163)* என்று கல்வெட்டுச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கல்வெட்டுச் செய்திகளை எடுத்துரைத்து தம் தொல்லியல் அறிவுத்திறத்தை வெளிப்படுத்துகின்றார். இதிலிருந்து ஔவை ஒரு கல்வெட்டு அறிஞர் என்பதும் அறியலாகிறது.

முடிவுரை

வரிக்கு வரி பொருளுரைத்து விளக்கம் கூறுகின்றார். இவ்வாறு விளக்கியுரைத்து உரையை எளிமைப்படுத்துகின்றார்.

பாடபேதம் சுட்டுதல், இலக்கண இலக்கியச் செய்திகள், உரையாசிரியர் கருத்துரைகள் போன்றவை உரை மூலம் அறியலாகின்றன.

மேலும் உரையை எளிமைப்படுத்தும் விதமாக, பண்டைய மரபு, பண்டைத் தமிழர் பற்றிய குறிப்புகள், அரிய சொற்களுக்கான பொருள் விளக்கம், கல்வெட்டுச் செய்திகள், இக்கால வழக்குகள் போன்றவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

## துணைநூல்கள்


1. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் விளக்கவுரையும், கழக வெளியீடு, சென்னை, பதிப்பு, 2007.
2. இரா. வேனிலா, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை நற்றிணை உரைநலம், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1985.
3. ச. சிவகாமி (ப.ஆ.), தொல்காப்பியம், சங்க இலக்கியப் பதிப்பும் பதிப்பாளரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 2009.
4. பி.வி.கிரி (தொ.ஆ.), உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு, மணிவாசகர் பதிப்பு, சென்னை, பதிப்பு 2003.
5. பாலுசாமி (ப.ஆ.), வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 6, 10, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.

# கி.வா.ஜகந்நாதன் - திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு

முனைவர் ச. சிவகாமி

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்த் தொண்டர்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவர் கி.வா.ஜ. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையரின் தலைமாணாக்கர் என்ற பெருமையை, பதிப்பாசிரியர், உரையாசிரியர், படைப்பாளர், இதழாளர், சொற்பொழிவாளர் எனத் தம் பன்முகத்திறனால் நிலைநிறுத்தியவர். இதன் காரணமாகத் தமிழக அரசின் கலைமாமணி, மைய அரசின் பத்மஸ்ரீ முதலான பல பட்டங்களுக்குச் சொந்தமானவர். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள இவரின் 'திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு' இவண் ஆய்வுக் களமாகிறது.

## நூலறிமுகம்

1812இல் முதன்முதல் பதிப்புக்கண்ட திருக்குறளுக்கு இன்று வரை எண்ணற்ற பதிப்புகள் பலவகைமைகளில், பல நோக்கங்களில் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. காலத்தின் தேவைக்கேற்பவும், பதிப்பாளரின் நோக்கதிற்கேற்பவும் இவை தோன்றுகின்றன. அவ்வகையில் 1963இல் ஆராய்ச்சிப் பதிப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது.

தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப, கி.வா.ஜ. அவர்களால் இப்பணி தொடங்கப்பட்டது. தம் குருநாதாரின், "திருக்குறளுக்குக் கிடைக்கும் பழைய உரைகளையெல்லாம் தொகுத்து ஒவ்வொரு குறளின் பின்னும் அமைத்து, இலக்கண இலக்கிய உரைகளில் குறளை மேற்கோள் காட்டும் இடங்களை ஆங்காங்கே காட்டி, தொல்காப்பியம் முதல் இக்கால இலக்கியம் வரையில் குறளின் சொற்பொருள்களை எடுத்தாண்ட ஒப்புமைப் பகுதிகளையும் இணைத்து, வேண்டிய அடிக்குறிப்புகளும் அகராதிகளும் ஆராய்ச்சியுரையும் சேர்த்து

வெளியிட வேண்டும்" (ப.2) என்ற எண்ணத்தின் செயற்பாடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

பன்முறைகூடிய பதிப்புக்குழு மற்றும் பதிப்புப் பற்றிய வேண்டுகோள் அளித்தப் பரிந்துரைகள் இப்பதிப்பிற்கு வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது(ப.2). இப்பதிப்புப்பணியை 1950இல் அப்போதைய குடியரசுத்தலைவர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் தொடங்கிவைத்தார். பதிப்பாசிரியரின் பல்லாண்டு காலக்கடும் முயற்சி மற்றும் உழைப்பின் பயனாக, சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா வெளியீடாக 1963 மார்ச்சுத் திங்கள் அப்போதைய குடியரசுத்தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களால் வெளியிடப்பட்ட பெருமை கொண்டது.

திருக்குறளின் பரிமேலழகர் உரையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, பிற பழைய உரையாசிரியர் அவ்வுரையில் வேறுபடுகின்ற இடங்கள் மட்டும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. தருமபுர ஆதீனத்தின் வழி ச. தண்டபாணி தேசிகர் இவ்வுரைகள் அனைத்தையும் இணைத்து உரைவளமாக வெளியிட்டதன் காரணமாக இங்கு வேறுபடும் இடங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளன(ப.2).

நூலுக்குப் பதிப்பாசிரியர் மிக நீண்ட ஆராய்ச்சியுரை(பக்.15-104) வழங்கியுள்ளார். திருக்குறள் வாழ்க்கைத் தத்துவம் (தி.சு.அவினாசிலிங்கம்); வள்ளுவரின் உளநூல் தத்துவம் (க.ச. அருள்நந்தி); திருக்குறளின் தத்துவம் (டி.எம்.பி. மகாதேவன்); திருவள்ளுவர் நீதி(டி.எஸ். கந்தசாமி முதலியார்); கவிதைப் பண்பு (அ.ச. ஞானசம்பந்தன்); திருக்குறளில் காதல்(மு. வரதராசனார்); திருவள்ளுவர் காலம்(மா. இராசமாணிக்கனார்) என்பனவும் நூலுக்கு அணி சேர்த்துள்ளன. திருவள்ளுவர், பரிமேலழகர் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் உண்டு.

180 955 என 1135 பக்கங்களைக் கலைக்களஞ்சிய அளவில் கொண்ட விரிந்த பெரிய அளவிலான இந்நூல் தன் பெருமையிலும் பிற பதிப்புகளினும் உயர்ந்தது. கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தால் முதலில் 1963இலும் பின் இரண்டாம் பதிப்பாக 2004இலும் வெளிவந்துள்ளது. இதன் விலை ரூ400 ஆகும்.

தி.சு. அவினாசிலிங்கத்தின் முகவுரை, ஒளவை நடராசன், பொற்கோ, சுவாமி கமலாத்மானந்தர் ஆகியோரின் அணிந்துரைகளும் நூலை அறிமுகப்படுத்தியுள்ளன. திருக்குறளுக்குப் பின் திருவள்ளுவமாலையையும் அதன் உரையையும் இணைத்திருப்பது கூடுதல் பயனாகும். நூலுக்குத் தேவையான செய்யுள்

முதற்குறிப்பகராதி; திருக்குறள் சொற்பொருளகராதி; பொது அகராதி என்பனவும் விரிவாக இடம்பெற்றுள்ளன.

**நூலமைப்பு**

திருக்குறள் மூலம், பரிமேலழகர் உரை, உரைவேறுபாடு, ஒப்புமை, மேற்கோள் விளக்கம் என்ற வரிசையில் நூல் அமைந்துள்ளது. உரைவேறுபாடு எனும் பகுதி பரிமேலழகர் உரையினின்றும் வேறுபடும் மணக்குடவர், பரிதியார், பரிப்பெருமாள், காளிங்கர், கவிராஜபண்டிதர், எல்லிஸ்துரை ஆகியோர் உரைகளைக் காணலாம். பின்னிருவர் இணைப்பிற்கான காரணத்தைப் பதிப்பாசிரியர் சுட்டவில்லை.

திருக்குறள் மூலம் தளைதட்டாத வகையில் சந்திபிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சொல்லாலும், பொருளாலும், திருக்குறட்பாக்களோடு ஒத்து நிற்கும் நூற்பகுதிகள் 'ஒப்புமை'ப்பகுதியுள் தரப்பட்டுள்ளன. தொல்காப்பியம் முதல் கம்பராமாயணம் வரையிலான படைப்புகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனைத் தொடரும் மேற்கோள் விளக்கம் பகுதியில் பழைய உரையாசிரியர்கள் தம் உரைகளில் திருக்குறளை மேற்கோளாகக் கொண்டனவற்றில் திருக்குறள் பொருளை விளக்கும் பகுதிகள் மட்டும் இணைக்கப்பட்டுள்ளன.

இடையிடையே இணைந்துள்ள குறிப்புகளும் அடிக்குறிப்புகளும் நூலிலும் உரைகளிலும் உள்ள சொல்லையும் பொருளையும் விளக்குவதோடு மேற்கோள் செய்யுள் இடம்பெறும் இடத்தையும் காட்டுகின்றன. பதிப்பாசிரியரின் தமிழ்ப்புலமைக்கு இது பெருஞ்சான்றாகிறது. உரைவேறுபாடு தரும் இடங்களிலும் அடிக்குறிப்பிலும் பாடவேறுபாடு சுட்டப்பட்டுள்ளது.

**பதிப்புச் சிறப்பு**

இந்த ஆராய்ச்சிப் பதிப்பினைப் பெருமைப்படுத்தும் கூறுகள் இங்கே காட்டப்படுகின்றன.

**1. உரைக்குமேல் விளக்கம்**

உரையாசிரியரின் உரைகளுக்குப் பின்னும் பலவான மேல்விளக்கங்களைத் தருகிறார். அ) பிறநூல் வழி விளக்குதலை, பழி அஞ்சிப் பாத்தூண் என்பதில் (குறள் 44) "பாத்து என்பது பாத்து என நின்றது. தொகுப்பு என்பது தோப்பு எனவும், மிகுத்து என்பது மீத்து எனவும் ஆயினாற்போல: "பாத்தரும் பசும்பொன்" (சீவக.87) என்பதில் பாத்து என்பது பகுத்து என்ற பொருளில் வந்தது காண்க"(ப.40) என்பதில் பெறலாம். ஆ) பிறநூல்களின் உரையாசிரியர் குறளை

மேற்கோளாகவும் குறள் விளக்கங்களாகவும் தருவனவற்றை எடுத்துரைத்தல் பாராட்டத்தக்கது.

இளம்பூரணர்: ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தனவாமோ எனின், அவை அன்புடையார் பலர் கூடி நிகழ்த்துபவை ஆதலின் அன்பொடு புணர்ந்தனவாம். "அறத்திற்கே ....துணை"(குறள் 76) என்பதனாலும் (தொல்.பொருள்.89) என்று இளம்பூரணர் எழுதுவர். மறம் என்பதற்கு வீரம் என்று அவர் பொருள் கொண்டார் போலும்.(ப.61)

நச்சினார்க்கினியர்: பிழைத்தோர் தாங்கும் காவல் என்னும் துறைக்கு இதனை (குறள் 151) உதாரணம் காட்டி, காவலாவது இம்மையும் மறுமையும் அவர்க்கு ஏதம் வாராமல் காத்தலாதலால் இஃது ஏனையோரின் வெற்றி ஆயிற்று(தொல்.புறத்.21)என்பர் (ப.104).

சங்கரநமச்சிவாயர்: பதடி எனல் என்பதை (குறள் 196) வியங்கோள் என்றும், மகன் எனல் என்பதை எதிர்மறை ஒருமை ஏவலென்றும் கூறுவர்(நன்.338) (ப. 125).

இவைபோன்றே சேனாவரையர், அரும்பதவுரையாசிரியர் (ப.115), அடியார்க்கு நல்லார் (ப.12,146), திருக்கோவையார் உரையாசிரியர்(ப.46), வீரசோழிய உரையாசிரியர் (ப.39) என இப்பட்டியல் நீளும்.

இ) தன் கருத்தினை அளித்தலும் பரவலாகக் காணப்படுகிறது. அது, குறிப்பிட்ட குறள் பற்றிய தன் எண்ணத்தை, "சீர்மை என்பது இயற்கையில் உள்ள பண்புகளினால் அமைந்த நலம், சிறப்பு என்பது பிறரால் பெற்ற மதிப்பு" எனப் புலப்படுத்துதல் (ப.125); உரையாசிரியரின் சுருக்கக் குறிப்பிற்கு, " மாசற்றார் கேண்மையால் மறுமைப்பயனும் துப்பாயர் நட்பினால் இம்மைப் பயனும் பெறப்படும் என்பது இவர் கருத்து" என விரித்துரைத்தல் (ப.78); உரையாசிரியரிடமிருந்து வேறுபடுமிடங்களில், 'இம்மையில் பெரிய சிறப்பையும் மறுமையில் புத்தேளிர் வாழும் உலகையும் பெறுவர் என்று பொருளுரைப்பது சிறக்கும்' என எடுத்துக்காட்டல் (ப. 49); கூடுதல் தரவுகளை, "அந்தணரையும் துறந்தாரையும் முனிவர் என்று கூறும் பழைய வழக்கு நினைத்தற்குரியது" என இணைத்தல் (ப. 30) உரையாசிரியர் கருத்தை, 'புகழுக்கு ஏதுவாகிய குணத்துக்கு ஆயினமையின் காரியவாகுபெயர். பிறக்கும் பொழுதே புகழொடு தோன்றுதல் இயலாதாதலின் இவ்வாறு பொருள் கொண்டார்' என விமர்சித்தல் (ப.149); குறளுக்குப் பொருள் கொள்ளும் முறைமைக்கு, "ஊர்ந்தானிடை உணரப்படும்" (குறள் 37) என்று வருவித்துப் பொருள் உரைக்க" என வழிகாட்டுதல் (ப.35) என்பனவாகப் பலவகைமைகளைக் காட்டுவது அறிந்து இன்புறத்தக்கது.

## 2. முன்பின் தொடர்பு காட்டல்

உரையின் தெளிவு, எளிமை, செறிவு இவறிற்காகவும் நூலாசிரியரின் கருத்து மேலும் விளக்கம் பெறுவதற்காகவும், குறிப்பிட்ட கருத்திற்கு முன்பின் தொடர்பு காட்டுதலையும் தன் வழக்கமாகக் கொண்டுள்ளார். சான்றுகளாக,

பல்லாற்றால் தேரினும் (குறள் 242) என்னுமிடத்தும் 'ஒன்றை ஒன்று ஒவ்வாத சமய நெறிகள் எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் என்று உரை கூறினார்.(ப. 22). துவ்வாதவர் - உண்ணாதவர்: இங்கே வறியர்க்கு ஆயிற்று "துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும்" (குறள் 94) என்று பின்னும் வறுமையைத் துவ்வாமை என்பர் (ப.38) என்பனவற்றைச் சுட்டலாம்.

## 3. பாடவேறுபாடு சுட்டல்

திருக்குறளுக்கு மட்டுமின்றிப் பரிமேலழகர் உரைக்கும் இவர் பாடவேறுபாடு காட்டியிருப்பது குறிக்கத்தக்கது.

குறள் பா. வே: நல்லாறு (கு.282), பாரதியார்: நல்லார் (ப. 139)

ஆண்டும் (கு.363), காளிங்கர்: யாண்டும் (ப.220)

அன்றறிவாம் (கு. 36), கவிராஜபண்டிதர்; அன்றறிவோம் (ப.34)

உரை பா. வே: குறள் 475இதற்கான பரிமேலழகர் உரையில் 'வளச்சிறப்பே' என்பது வலச்சிறப்பேயும் என்றும், 'ஒருவன் தொகுவார் பலரோடு' என்பது ஒருவன் பலரோடும் என்றும் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. இவை பதிப்பாசிரியாரின் ஆழங்கால்பட்ட நுண்ணறிவைக் காட்டுவன.

## 4. இடஞ்சுட்டல்

உரையாசிரியர் தம் உரையில் மேற்கோளாக எடுத்தாளும் பகுதி இடம்பெற்றுள்ள மூலத்தை, கற்பார் பயன் கொள்ளும் பொருட்டு எடுத்துரைத்தல் இதன் பாற்படும்.

பரிமேலழகர்: சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படும் தோற்றமும் போல என்றார் பிறரும் (அறன் வலியுறுத்தல் முன்னுரை)

பதிப்பாசிரியர்: புறநா. 31: 1-2 (ப.30)

மணக்குடவர்: "அவலக் கவலை கையாற்றின்" நீங்கிப்(குறள் 7)

பதி : அவலக்கவலை கையாறழுங்கல் (மணிமேகலை 4: 119)

காளிங்கர் : கற்பென்னும் திறமை - (குறள்)

பதி : தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்னும் (சிலப் 1:27) ப. 45 என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

5. **ஒப்புமை காட்டல்**

தன் தோற்றகாலம் முதல் தன் ஈடு இணையற்ற பெருமையால் பின்தோன்றல்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற தனிச்சிறப்புடையது திருக்குறள். தன் முன்னோர்களையும் பொன்னே போல் போற்றிய இயல்புடையது. எனவே திருக்குறள் கூறும் சொல்லுக்கும் பொருளுக்கும் கூடுதல் பணியாகத் தேவைப்படுகிறது. இது இப்பதிப்பில் செவ்வனே நிறைவேறியுள்ளது. சான்று:

சொல் ஒப்புமை: (குறள் 45)

அன்பிலரின் அறனிலன் எனப்படான் (கலி. 74:6)

பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும் (நற். 160: 2)

குறள் 167: அவ்வித் தழுக்காறு ரையாமை முன்னிதே (இனியவை: 37)

பொருள் (கருத்து) ஒப்புமை: குறள் 267

கொள்ளைக் கட்டழல் உள்ளுறமூட்டி

மாசுவினை கழித்த மாதவர் போலத்

தீயகத்தில் இலங்கித் திறல்விடு கதிரொளி

சேடுறக் கிடந்த செம்பொன் (பெருங் 2: 19:625)

ஆரழல் முளரியன்ன அருந்தவம் (சீவக. 2632)

இங்குக் குறட்பாவிற்குக் குறட்பாவையே ஒப்புமை காட்டியமைதலும் கூறத்தக்கது

இல்லவள் மாண்பு: குறள் 51, 52 (ப. 45)

அனிச்சத்தின் மென்மை: குறள் 1120 (ப. 69)

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்

தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றல் (குறள் 322, 1104) ப. 143

என்பன சில சான்றுகள்.

## 6. அரிய சொற்பொருள்

உரையாசிரியர் பயன்படுத்தும் அரிய சொற்களுக்குப் பொருள் அளித்து, கற்பார் தெளிவு பெற வழிவகுத்துள்ளார்.

உவர்த்துவிடுதல் - வெறுத்துவிடுதல் (ப.22)

விகதை - தீயகதை

காவுவான் - சுமப்பவன் (ப. 35)

உய்தி - பரிகாரம் (ப.75)

வாசி - வேற்றுமை (ப. 85)

அருளாகிய அறம் - துறவறம் (ப. 116)

என இக்கூறும் பெருக உள்ளது.

## 7. இலக்கண விளக்கம்/ குறிப்பு காட்டல்

பொதுவாக உரையாசிரியர் மூலத்திற்கு இலக்கணக் குறிப்பும் தேவைப்படும் இடங்களில் விளக்கமும் அளித்தல் இயல்பு. உ.வே. சா. போன்ற பெரும் பதிப்பாசிரியரிடையேயும் இதனைக் காணலாம். இங்குப் பதிப்பாசிரியர் தாமும் தன்னாசிரியரைப் பின்பற்றியுள்ளார்.

பருவா என்பது பகுதி. இதன் அடியாகப் பிறந்ததே

பருவந்து (குறள் 83) என்னும் சொல் (ப. 64)

ஆதல் என்பதை (குறள் 34) வியங்கோளாகக் கொண்டனர் பரிமேலழகரும் பரிதியாரும்: ஏனையோர் தொழிற்பெயராகக் கொண்டனர் (ப. 33).

யாவும் என்னும் முற்றும்மை (ப.90)

ஒல்லா (குறள்.139) என்ற பன்மை முற்றை நினைந்து சொன்னது(ப.97).

என இக்கூறும் நூல் முழுமையும் பரவியுள்ளது.

## 8. வழக்குகள், பழமொழிகள் எடுத்துக்காட்டல்

உரையாசிரியர் பயன் கொண்ட வழக்குச் சொற்களை விளக்குதலும் ஆங்காங்கே காணப்படுகிறது. 'மனைவியை உரிமை என்னும் வழக்கு இங்கே நினைத்தற்குரியது' (ப. 98); பறித்தல், சைனத் துறவியர் செயல் (ப. 171); பேடியான - அஞ்சின: மலநாட்டு வழக்கு (ப. 309) என்பன சான்றுகள்.

தினைவிதைப்பார் தினை அறுப்பார்; வினை விதைப்பார்
வினை அறுப்பார் (ப. 128)

கரும்பு தின்னக் கூலி கொடுத்தது போல (ப. 242)

பலதுளி பெருவெள்ளம் (ப. 251)

எனப் பழமொழிகளையும் உரிய இடங்களில் சுட்டியுள்ளார்.

**9. வடநூலார் கருத்துரைத்தல்**

குறள் கருத்துகளோடு இணைந்து செல்லும் வடநூலார் சிந்தனைகளையும் பரவலாகக் காட்டியுள்ளார். மூவகைத் துன்பங்களைத் தாபத்திரயம் என்பர் வடநூலார். அவை முறையே ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் எனப்படும் (ப. 6).

இவற்றை வடமொழியில் பிரத்தியட்சம், அநுமானம், சாப்தம், திருஷ்டாந்தம், அருத்தாபத்தி, அநுபலத்தி என்பர்(152).

இவற்றை முறையே சந்தி, விக்கிரகம், யானம், அசனம், துவைதம், ஆசிரியம் என்பர் வடநூலார் (ப. 284), என்பனவற்றைச் சான்றாக்கலாம்.

**நூற்பயன்**

கி.வா.ஜ. வின் 'திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு' நூல் தரும் பயன்கள் இங்கு எண்ணத்தக்கன. ஒரு செயலின் வெற்றி அதன் பயன்பாட்டில் அடங்குகிறது; வெளிப்படுகிறது. அவ்வகையில் இந்நூல்,

1. திருக்குறளுக்கு முழுமையான உரைவேறுபாடுகளுடன் கூடிய ஆராய்ச்சிப் பதிப்பு தேவை என்பதை நிறைவேற்றியுள்ளது.

2. தொல்காப்பியம் முதல் கம்பன் வரையிலாக இலக்கிய, இலக்கண, உரைகள் அனைத்திலும் திருக்குறள் காட்டும் ஒப்புமைகளும், திருக்குறளைப் பிற கையாண்டுள்ள விதமும் மிக விரிவாக இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவை தனியே ஒப்பியல் ஆய்வு மேற்கொள்ளும் அளவிற்குத் துணையாகின்றன.

3. உரைவேறுபாடுகளைத் தனியே தொகுத்து அதன் தோற்றக் காரணிகளையும், இயல்பையும் ஆராயும் பொழுது உரையாசிரியர் பெருமையுடன், திருக்குறள் பெருமையும் ஒளிரும், இது கற்பாருக்குச் சிந்தனை விரிவையும் தெளிவையும் கொடுக்கும்.

4. திருக்குறளில் ஆய்வுமேற்கொள்ளும் ஆய்வாளர் இப்பதிப்பைக் களமாகக் கொண்டால் அவரது ஆய்வு மேலும் மேன்மை பெறும் என்பது உறுதி.

இன்றைய பதிப்பாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியுமாகும்.

5. நூற்பதிப்பின் முன்பகுதியில் அமையும் பதிப்பாசிரியரின் ஆழ்ந்த

அகன்ற ஆராய்ச்சியுரைகளும் (நூல், வள்ளுவர், பரிமேலழகர்) அறிஞர் பலரின் பல்வேறு பார்வைகளில் அமைந்த ஆய்வுக் கட்டுரைகளும் நூலுக்குக் கூடுதல் வளம் சேர்க்கின்றன. பதிப்பாசிரியரின் ஆய்வுரைகள் தனிநூலாக வெளியிடற்குரிய சிறப்பினவாகும்.

**பதிப்புக்கொள்கை**

இப்பதிப்பினை உற்று நோக்கும் போது பதிப்பாசிரியரின் பதிப்புக் கொள்கை புலப்படக் காணலாம்.

1. பாடலின் ஒவ்வொரு கூறும் முழுமையாக, தெளிவாக விளக்கம் பெறவேண்டும் (சொல்லாய்வு, இலக்கண விளக்கம், குறிப்பு முதலியன).
2. மேலாய்விற்குப் பயன்படும் வகையில் தேவையான பகுதிகள் (மேற்கோள், ஒப்புமைப் பகுதிகள், பிறமொழிச் சிந்தனைகள் போல்வன) இணைக்கப்பட வேண்டும்.
3. முன்பின் தொடர்பு காட்டுதலால், கற்பார் நூல் பற்றிய முழுமையறிவும் தெளிவும் பெறுதல் எளிதாகும்.
4. இணைக்கப்படும் பல்வேறு அகராதிகள் ஆய்வாளர் தம் காலத்தைப் பொன்னே போல் போற்றப் பெருந்துணையாகும்.
5. பதிப்பு எந்நோக்கின் அடிப்படையில் எழுந்ததோ அதனை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.
6. கற்பாருக்கு எளிமையாக்கித்தரல் பொருட்டு, சந்தி பிரித்துப் பதிப்பித்தல் தேவையானதே; அதில் தவறில்லை.
7. பதிப்பு நூல் மட்டுமின்றிப் பரந்துபட்ட பிற இலக்கண இலக்கிய அறிவும் ஒரு பதிப்பாசிரியருக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பதிப்பாசிரியரின் இவ்எண்ணங்கள், திருக்குறளுக்கு மட்டுமின்றி எவ்வகை இலக்கியத்திற்கும் பொருந்துவனவாகும். எனவே இவற்றைப் பதிப்பு இலக்கணமாகவும் பதிவு செய்யலாம்.

**நிறைவுரை**

பழுத்த தமிழறிஞர் என்பதற்கு மிகச் சரியான சான்றாய், கி.வா.ஜ. திகழ்வதை இவ் ஆராய்ச்சிப் பதிப்பு மிக எளிதாய்ப் புலப்படுத்துகிறது. தமிழ்த் தாத்தா அவர்களிடம் பெற்ற பயிற்சியும் அவரது பதிப்புப் பணிகளில் உறுதுணையாக நின்றதன் வழி பெற்ற பட்டறிவும் இந்நூலாக்கத்தின் ஒவ்வொரு பக்கமும் வெளிப்படுகின்றன. குறிப்பாக ஒப்புமைப்பகுதியும், உரையாசிரியர் இடஞ்சுட்டாத மேற்கோள்களுக்கு

இடஞ்சுட்டியுள்ளமையும் பாராட்டுதல்களுக்கு அப்பாற்பட்ட பெருஞ்சிறப்புடையன.

முதல் 500 குறட்பாக்களுக்கான பதிப்பில் கண்ட செய்திகள் இக்கட்டுரையுள் இடம் பெற்றுள்ளன. முழுமையும் நோக்கின் மற்றும் பல புதிய சிறப்புகளும் வெளிப்பட வாய்ப்புண்டு.

திருக்குறள் பதிப்புகளில் இது ஓர் மணிமகுடம். இனிமேல் திருக்குறளுக்கு இப்படி ஓர் பதிப்பு வர இயலுமா என்ற ஐயமே இதன் வெற்றிக்கு ஊன்றுகோல்.

## துணைநூல்

திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு; கி.வா. ஜகந்நாதன்(பதி); ராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம்; கோயம்புத்தூர்;மு.ப. 1963, இ.ப. 2004.

## திருக்குறள் பாடவேறுபாட்டின் சிறப்புகள்

முனைவர் கை. சங்கர்

பாடவேறுபாட்டினை முன்வைத்து மூலத்தை ஆராயும்போதும் மூலத்தின் பொருளுக்கு மிக அருகில் செல்லமுடியும். வேறுபாட்டினை ஆராய்வதன்மூலம் இலக்கியத்தின் பன்மைத்தன்மையை அறியமுடியும். ஒருவகையில் பாடவேறுபாட்டு ஆய்வு என்பது படிப்பவரின் இலக்கண, தருக்க, தத்துவ அறிவைக் கூர்தீட்ட உதவுகிறது எனலாம். இப்பாடவேறுபாட்டினைக் குறித்து அறிஞர்கள் பலர் தங்கள் ஆய்வுகளையும் எண்ணங்களையும் பதிவுசெய்திருக்கிறார்கள். அவர்களின் வழித்தடத்தில் சென்று இன்னும் சில புதையல்களை வெளிக்கொணரும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

### திருக்குறள் பாடவேறுபாடுகள் - சில முந்து ஆய்வுகள்

திருக்குறள் பாடவேறுபாட்டினை ஆராய்ந்த முதல்வனாகப் பரிமேலழகரை அடையாளப்படுத்த முடியும். தன் காலத்தில் இருந்த பல்வேறு உரைகளை ஆராய்ந்து அதில் தாம் உடன்படும் இடங்களையும் மறுக்கும் இடங்களையும் மறைக்காமல் பதிவு செய்தவர் பரிமேலழகர். திருக்குறளைத் தவிர வேறு எந்த இலக்கியத்திற்கும் இப்படியான சிறந்த பாடவேறுபாட்டுடன்கூடிய உரை கிடைக்கவில்லை என்பதை வைத்தே பரிமேலழகரின் சிறப்பை உணரமுடிகிறது. இது தவிர, சென்ற நூற்றாண்டில், சென்னைப் பல்கலைக் கழக மேனாள் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும் என்ற நூலைத் தந்துள்ளார். திருக்குறள் பாடவேறுபாட்டினை ஆராயும் மிகச் சிறந்த நூல் இது எனலாம். கி.வா. ஜகந்நாதன் (திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு), வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் (திருக்குறள் உரைவளம்; உரைக்களஞ்சியம்), இரா. சாரங்கபாணி (திருக்குறள் உரைவேற்றுமை), முனைவர் ச. வே. சுப்பிரமணியன் (சுவடிப் பாடவேறுபாடுகளுடன் கூடிய திருக்குறள் நயவுரை) போன்ற

முதுபெரும் அறிஞர்கள் திருக்குறள் உரைவேறுபாட்டினைக் குறித்த கருத்துகளை மிக கவனமாகப் பதிவு செய்துள்ளனர். மேற்கண்ட அறிஞர்கள் தங்கள் பட்டறிவையும் உழைப்பையும் திருக்குறள் பாடவேறுபாட்டினை விளக்குமிடத்து வெளிப்படுத்தியுள்ள திறன் வணங்கத்தக்கது. இவை திருக்குறளுக்குக் கிடைத்த பேறு என்றே சொல்ல வேண்டும். அதிலும் தண்டபாணிதேசிகர் பாடவேறுபாடுகள் உள்ள இடங்களிலும், இலக்கண நுட்பங்கள் இருக்குமிடங்களிலும் நுணுகி ஆராய்ந்து பல்வேறு தருக்க, இலக்கண கருத்துகளை வெளிப்படுத்தும் விதம் வியந்து போற்றுவதற்குரியதாகும்.

எனினும் இவற்றால் திருக்குறள் பாடவேறுபாட்டு ஆய்வு முற்றுப்பெற்றதாகிவிடாது. சான்றாக, மு. சண்முகம் பிள்ளை திருக்குறள் பரிமேலழகர் உரையிலிருந்து மணக்குடவரும் காளிங்கரும் வேறுபடும் குறள்களாக *500,539,660,809,821,979,1040,1058* ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். ஆனால் இவற்றில் *500,539,660,809,821,* ஆகிய குறள்களுக்குப் பரிப்பெருமாளும் பாடவேறுபாட்டைத் தருகிறார் என்பதை அவரே பின்னரும் குறித்துள்ளார். குறள் *1013*இல் மணக்குடவர் காளிங்கர் உரைவேறுபாடுகள் உள்ளன. அதனை குறிக்கத் தவறியிருக்கிறார். அதேபோன்று காளிங்கர் மட்டும் வேறுபடும் இடங்களாகப் பதினைந்து இடங்களைக் குறித்துள்ளார். அவை: குறள்கள் *420,437,501,639,710,953,958,1012,1013,1052,1056,1081,1122,1161,1178*. இதில் குறள் *437* க்குப் பரிதியும் பரிப்பெருமாளும் உரைவேறுபாடு தந்துள்ளனர். அதேபோல குறள்கள் *958, 1081* ஆகியவற்றிற்குப் பரிப்பெருமாளும், *1013,1052,* ஆகிய குறள்களுக்கு மணக்குடவரும் உரைவேறுபாடுகள் தருவதை அவர் குறிக்கவில்லை. குறள் *1058*இல் எந்தவுரையிலும் இல்லாத பாடவேறுபாடு உள்ளதாகக் கூறுகிறார். அவ்வேறுபாடு மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள் ஆகியோரது உரைகளில் காணப்படுகின்றன.

உரைக்களஞ்சியத்தில் தண்டபாணிதேசிகர், *1058*-வது குறளில் மணக்குடவர் 'இரப்பவரில்லையாயின்' எனப் பாடவேறுபாடு தருவதாகக் கூறுவர். இவ்வேறுபாடு மணக்குடவர் உரைப் பதிப்பிலும் இல்லை. ச.வே.சு. சுவடி வேறுபாட்டுப் நயவுரையிலும் குறிக்கப்படவில்லை. எனில் தண்டபாணி தேசிகர் எந்நூலைப் பார்த்து உரைவேறுபாடு வழங்கியுள்ளார் என்பது

அறியக்கூடவில்லை. எவ்வுரையிலும் இல்லாத குறள்களை சண்முகம்பிள்ளை வரிசைப்படுத்துமிடத்து 1208 -வது குறளினையும் கூறுகிறார். அக்குறளுக்கு,

காதலர் நம்மாட்டு அருள்- மணக்குடவர்

காதலர் செய்யும் அருள்- பரிப்பெருமாள்

காதலர் செய்யும் குணம்- பரிதி

ஆகிய மூன்று பேரின் பாடவேறுபாடுகள் உள்ளன. இதில் சொல்லாத பாடவேட்டினை சண்முகம்பிள்ளை சொல்கிறாரா அல்லது மேற்கண்ட பாடவேறுபாட்டினைக் கவனிக்கத் தவறினாரா என்பது தெரியவில்லை.

பாடவேறுபாடுகள் 305க்கு மேல் என்பர் சண்முகம் பிள்ளை. 516 பாடவேறுபாடுகளைச் ச.வே.சு. தனது நயவுரையில் தருகிறார். முனைப்போடு செயல்பட்டால் இன்னும் சில பாடவேறுபாடுகளைக் கண்டறியமுடியும். எனவே, பாடவேறு குறித்த ஆய்வும் ( சண்முகம் பிள்ளை ) பாடவேறுபாட்டினைச் சொல்லும் உரைகளும் இன்னும் முழுமைபெறவில்லை என்பதையே இவையெல்லாம் உணர்த்துகின்றன. திருக்குறளுக்கு உரைவேறுபாடுகளையும், பாடவேறுபாடுகளையும் உள்ளடக்கிய விரிவான உரையொன்று இன்னும் தேவைப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

## பாடவேறுபாட்டின் தன்மைகள்

திருக்குறள் பாடவேறுபாட்டின் பல்வேறு தன்மைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று: பொருளை மிகப் பெரிய அளவில் வேறுபடுத்தாத பாடவேறுபாடுகள். அவை

ஒருமை பன்மை வேறுபாடுகளாகவோ,

எடு. ஒருவற்கு- ஒருவர்க்கு (400)

ஆள்பவர்கு- ஆள்பவர்க்கு (383)

உருபு வேற்றுமைகளாகவோ,

எடு. ஒப்புரவினான் - ஒப்புரவினால் (220)

நான்கும்- நான்கின் (953)

சிறு பொருள் மாறுபாடு கொண்ட பாடங்களாகவோ,

எடு. வாயுணர்வு- வாயுணவு (420)

கோடியுறும் - கோடி தலை (639)

தன்வினை பிறவினை குறித்த சில இலக்கண வேறுபாடு கொண்ட பாடங்களாகவோ,

எடு. இரந்தவை - இரந்தவர் (1052)

செய்யாதார்- செய்யாமை (101)

இருக்கும். பொருளை மிகப் பெரிய அளவில் வேறுபடுத்தாத பாடங்களே திருக்குறளில் அதிகம்.

இரண்டாவதாக திருக்குறள் மூலப்பொருளை முற்றிலும் மாற்றும் பாடவேறுபாடுகள். இவை கவனத்துடன் ஆராய வேண்டிய பகுதியாகும். அவை அடுத்து விளக்கப்படுகின்றன.

பாடவேறுபாட்டின் சிறப்புகள்

பொருளை மிக அதிகமாக மாற்றும் பாடங்களைச் சிக்கல் என்பவர் உண்டு. ஆனால் அவற்றைச் சிக்கலாகக் கொள்ளவேண்டியதில்லை. ஒரு குறளை இருவேறு பார்வையில் பார்க்கும் பன்முகத் தன்மையைப் பாடவேறுபாடுகள் வழங்குகின்றன எனலாம். இவண், சில பாடவேறுபாடுகளின் சிறப்புகள் எடுத்துக்கூறப்படுகின்றன.

*1. உயிரச்சம்- உயிரெச்சம்*

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும் (குறள். 505)

இதற்கு உயிரெச்சம் என்ற பாடவேட்டினைக் காளிங்கரும் பரிதியும் வழங்குவர். சில ஏட்டுப் பாடங்களிலும் உயிரெச்சம் என இருந்தது என்பதனை மு.இராகவையங்காரது செந்தமிழ்க் கட்டுரையின்மூலம் உணரமுடிகிறது.

இக்குறள் தெளிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் வருகிறது. அரசன் தனக்குக்கீழ் உற்றத்துணையாக ஒரு அமைச்சனைத் தேர்ந்துகொள்ளும் வழி முறைகளை இக்குறள் கூறுகிறது. இதற்கு உபதை என்று பரிமேலழகர் பெயர் சூட்டுவர். உரியவனைத் தேர்ந்தெடுக்கும் தந்திரம் எனப் பொருள் கொள்ளலாம். உயிரச்சம், உயிரெச்சம் இதில் எந்தப் பாடம்

சரியானது எனத் தேர்வது கடினமானது. ஆனால் பரிமேலழகர் உயிரெச்சம் எனப் பாடம்கொண்டவர்களைக் கண்டித்துள்ளார். அதற்கான காரணமாக அவர் சொல்லுவது, இது வடநூல் பொருண்மை. அங்கு அரசனுக்குச் சொல்லப்பட்ட நால்வகை உபதை என்பது அவர்கருத்து. நான்காவன:

1. அற உபதை- 'இவ்வரசன் அறவோன் அல்லன், அறனும் உரிமையும்(சுதந்திரம்) உள்ள ஒருவனைத் தேர்வோம்' எனப் பேசி ஒருவன் மனத்தை ஆராய்தல்

2. பொருள் உபதை- 'இவ்வரசன் கருமி, இவனுக்குப் பதிலாக கொடையும் உரிமையும் உள்ள ஒருவனைத் தேர்வோம்' எனப் பேசி ஒருவன் மனத்தை ஆராய்தல்

3. இன்ப உபதை- அழகும் இளமையும் உள்ள ஒரு பெண்ணை வைத்து ஒருவன் மனத்தை மாற்ற முயலுதல்

4. அச்ச உபதை- 'இவ்வரசனால் நம் உயிருக்கு அச்சம் வரும்' எனக்கூறி அதன் காரணமாக ஒருவன் மனத்தை மாற்ற முயலுதல்

மேற்கண்ட நான்கினையும் அரசனே தந்திரமாகச் செய்து ஒருவனை ஆராயவேண்டும் என்பது பரிமேலழகருரையின் மூலம் அறியவரும் புரிதல். உயிரெச்சம் எனக்கொண்டு வீடுபேறு கருத்தை உணர்த்தும் உரையாசிரியர்களை, "இவ்வட நூற்பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம்' எனப்பாடம் திரித்துக் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்" என்பர். பெரும்பாலும் உரை இரண்டு கருத்துகளையும் ஏற்கக் கூடியதாயின் அதனை இயல்பாகச் சுட்டிக்காட்டிச் செல்லும் பரிமேலழகர், இவ்விடத்தில் 'திரித்துக் கூறியுள்ளனர்' என மறுத்துக் கூறும் காரணத்தை ஆராய வேண்டும்.

> 'அறம் பொருள் இன்பம் வீடுபேறு ஆகியவற்றில் சிறந்த ஒருவனை அரசன் தேர்ந்து கொள்ளவேண்டும் என்னும் கருத்தில் வள்ளுவர் கூறியுள்ளார்' என்பர் சிலர். தண்டபாணி தேசிகரும், "அச்சம் உடல்கொள் உயிர்க்குணமேயன்றி ஒருக்காலும் பொருளாகாது. இது கருதியே உயிரெச்சமெனக் கொண்டு வீட்டைக் கருதினர்போலும் காளிங்கரும் பரிதியும்" என்பர்.

இங்குக் கவனிக்க வேண்டியது அச்சம் உடல்கொள்

உயிர்க்குணமாயினும் அதனை அரசன் சோதிக்க வேண்டுமா இல்லையா என்பது. சோதித்தே தேறுதல் வேண்டும். பரிமேலழகரைப் பொருத்தவரையில் "திரித்துக் கூறியுள்ளனர்" என்ற முடிவுக்கு வருதற்குமுன் தன்காலத்திய பல சுவடிப் பாடங்களை ஆராய்ந்தே அதனைக் கூறியிருப்பர் என எண்ணத் தோன்றுகிறது. அதன்படி, பல சுவடிகளில் உயிரச்சம் என இருக்க சில சுவடிகளில் மட்டும் உயிரெச்சம் என உள்ளதைக் கண்டு எது சரியானது என ஆய்ந்து அதற்கான காரணத்தைக் கண்டுள்ளார். எனினும், வட நூல் எனக் கூறியுள்ள அவர், எந்நூல் எனக் கூறாது விடுத்துள்ளார். இதற்கு விடையாக மு.இராகவையங்கார் செந்தமிழ் இதழில் ஒரு கருத்தைக் கூறுகிறார். அவர், பரிமேலழகர் பல இடங்களில் கீழ்க்காணுமாறு கூறியுள்ளதை ஒப்புநோக்குவர்.

வடநூலார் மதம் பற்றி (குறள் **434**)

வடநூலார் தானமும் சாமமும் என்ப (குறள் **525**)

வடநூலார் ஆததாயிகள் என்பர் (குறள் **550**)

வடநூலார் ஈதிகள் என்பர் (குறள் **732**)

வடநூலார் மௌலம் என்பர் (குறள் **762**)

இவற்றை எடுத்துக்காட்டி, இத்தகைய வடநூல் கருத்துகளையெல்லாம் கூறியவர் பிகஸ்பதியும், சுக்கிரபகவானும் ஆவர். இவர்களது கருத்துகளைப் பின்னாளில் தொகுத்துக் கூறியவர்கள் சாணக்கியரும், காமாந்தகரும் ஆவர். என்பதை விளக்கி பின்வரும் முடிவைக் கூறுகிறார்.

இவருள் சாணக்கியர் பற்றிய அர்த்தசாஸ்த்திரம் இதுகாறும் வெளிவந்ததில்லை யாயினும், இப்போது சிலகாலமாக, அது: மைசூர்ரெவ்யூ என்னும் ஆங்கில மாஸிக பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. இதனில் எத்தனையோ அரிய விஷயங்கள் வெளியாகின்றன. திருக்குறள் தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில்,-

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்

என்னும் குறளில் பரிமேலழகர் உபதைகளைப் பற்றிக் கூறிய உரைமுழுவதும் காமாந்தத்திலின்றேனும், சாணக்கிய அர்த்தசாஸ்திரத்துப் பத்தாவத்தியாயத்துக் காணப்படுகிறது. இவ்வுரையினீற்றில்,

> இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவரோதியதறியாது பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம்' எனப் பாடந்திரித்துக் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்
>
> எனப் பரிமேலழகர், பிறர்கொண்ட பாடத்தின் பிழைகாட்டித் திருவள்ளுவருண்மைக் கருத்தைச் சாணக்கியத்தைக் கொண்டு தெளிவுபடுத்தியிருத்தல் காண்க

என உறுதிபடுத்துவதைக் காணலாம். பரிமேலழகரைப் போலவே மணக்குடவரும் உயிரச்சம் எனக் கூறியிருப்பதைக் கொண்டு பழைய மூலபாடம் உயிரச்சம் என்றுதான் இருந்ததோ என்ற எண்ணம் உருவாகிறது. பொருள் எவ்வாறு இருந்தாலும் இருவேறு வகையில் சிந்திக்க உயிரச்சம்- உயிரெச்சம் என்ற பாடவேறுபாடு இடந்தருவதைக் காணமுடிகிறது.

**2. அளக்கும் கோல்- அலைக்கும் கோல்**

> நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
> கண்ணல்லது இல்லை பிற. (குறள் 710)

இக்குறளுக்குப் பரிமேலழகர்,

> யாம் நுண்ணறிவுடையேம் என்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை அளக்கும் கோலாவது, ஆராயுமிடத்து அவர் கண்ணல்லது பிற இல்லை.

என்று உரை கூறுவர். மேலும்

> அறிவின் நுண்மை அஃதுடையார்மேல் ஏற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பன முதலாகப் பிறர் கருத்தளக்கும் அளவைகள் பல; அவையெல்லாம் முன்னறிந்தவை அவரான் மறைக்கப்படும் நோக்கம் மனத்தொடு கலத்தலான் ஆண்டு மறைக்கப்படாது என்பதுபற்றி அதனையே பிரித்துக் கூறினார். இனி அலைக்குங் கோலாவது கண் என உரைத்து, தன் வெகுளிநோக்கால் அவர் வெகுடற் குறிப்பறிக என்பது கருத்தாக்குவாரும் உளர். இவை இரண்டு பாட்டானும் நுண்கருவி நோக்கு என்பது கூறப்பட்டது.

என்று விளக்கவுரை தருவர். இதில் அலைக்குங் கோல் எனப்

பாடந்தருபவர் காளிங்கர் என்பர் பலர். (சண்முகம் பிள்ளை, ச.வே.சு.) பரிமேலழகர் வேறுபடுத்திச் சொல்லும் பொருள் காளிங்கரின் உரையோடு பொருந்தவில்லை என்பர் தண்டபாணி தேசிகர். ஆனாலும், பெரும்பாலும் காளிங்கர் பாடம் அலைக்குங்கோல் எனக் கூறப்படுகிறது. யாருடைய பாடமாக இருந்தாலும் அலைங்குங்கோல் என்ற சொல் தரும் பொருள் கவனிப்பதற்குரியதாகிறது.

பரிமேலழகர் கூற்றில் இவ்வுரை அமைச்சர் அரசர் கருத்தை கூர்மையாகக் குறிப்பறிந்து செயல்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. கண்ணால் அளக்கவேண்டியன பல. ஒரு மனிதனின் இங்கிதம், வடிவு, தொழில் சொல் முதலானவற்றை நுட்பமாகக் கண் என்ற அளவுகோலால் அளந்தரிந்து அமைச்சன் செயல்படவேண்டும் என்பது பரிமேலழகர் கூறும் உரைக்கருத்தாகும்.

காளிங்கர் உரையின்படி அரசர் அமைச்சரைத் தன் கண்களால் அளப்பதைக் குறிக்கிறது. ஓர் அமைச்சர் தன்னை நுட்பமானவராகக் கருதி செயல்பட்டால் அவர் நுட்பத்தை அரசன் தன் கண்களால் அளந்தறிய வேண்டும் என்பது அவரது உரைப்பொருளாகும்.

ஓர் எடையின் நுட்பமான வேறுபாட்டை தராசு என்னும் அளவுகோலில் உள்ள முள் தெளிவாகக் காட்டும். அதுபோல நுட்பமாக உள்ள அமைச்சரையும் துல்லியமாக வேறுபடுத்தி அளக்கும் அளவுகோல் ஒன்று உள்ளது. அது கண் என்பது இவர் பொருளாகும்.

காளிங்கரின் உரையின்படி, நுண்ணியம் என்பார் அலைக்குங் கோல் என்பது- நுண்ணியம் என்பாரை அலைக்குங் கோல் என இரண்டாம் வேற்றுமை விரியும். பரிமேலழகர் சொல்லும் இங்கிதம், வடிவு, தொழில், சொல் என ஒரு மனிதனிடத்தில் காணும் தனித் தன்மைகளைக் கண்களால் அளந்து காண்பது என்ற பொருள் விளக்கத்தில் சுவை இருக்கிறது. அதைவிட காளிங்கரின் உரைப்பொருளில் ஒரு காட்சிச்சுவை இருப்பதைக் காண முடிகிறது. ஒரு மனிதனின் வேறுபாட்டை கண் மட்டுமே துல்லியமாக அளந்து அறியமுடியும். தராசுத் தட்டுகளின் எடை வேறுபாட்டை முள் துல்லியமாகக் காட்டுவதுபோல மனித மன வேறுபாட்டைக் காணும் ஒருவனின் கண் துல்லியமாக அளக்கும் என்பதில் உரைநுட்பமும்

பொருள்சிறப்பும் இருப்பதைக் காணமுடிகிறது. இரண்டு உரைகளுமே சிறப்பானவைதான். ஒரு குறள் இருவேறு பார்வைகளை வழங்குவதற்குப் பாடவேறுபாடே காரணமாக அமைந்தது.

*3. அச்சம்- எச்சம்*

ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு (1012)

நாணுடைமையில் வரும் சிறந்த குறள் இது.

> ஊணும் உடையும் அவை ஒழிந்தனவும் மக்களுயிர்க்கு எல்லாம் பொது: நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே அவையல்ல.

எனப் பரிமேலழகர் உரைகூறுவர். அதனோடு,

> ஒழிந்தன- உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு- அவ்வுயிர்களின் வேறுபாடு அச்சம் என்று பாடம் ஓதுவாரும் உளர்

என்று சொல்பொருள் விளக்கமும் பாடவேறுபாட்டையும் கூறுவர். ஊனுடை அச்சம் எனக் காளிங்கர் பாடவேறுபாடு கூறுவர். ஊண், உடை, உறக்கம், அச்சம், காமம் எல்லாம் உலக உயிர்களுக்குப் பொது என்றும் நாணம் நன்மக்களுக்குச் சிறப்பு என்ற பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் கூறும்பொருள் மிகச் சிறந்ததே. ஆனால் இவர்கள் கூறாத சிறப்பை ஊனுடை அச்சம் என்ற பாடவேறுபாட்டைக் கொண்ட காளிங்கர் உரையில் இருக்கிறது. காளிங்கர்,

> உணவின் உடையது அச்சம் உலகத்து உயிர்கட்கு எல்லாம் வேறுபாடு உடைய அல்ல; எனவே, உணவின் குறைபாட்டுக்கு அஞ்சுவது ஓர் அச்சம் எவ்வுயிர்க்கும் ஒக்கும்: மற்று யாதோ மக்கள் வேற்றுமை எனின் தமது முறைமைக் குறைபாட்டிற்கு உள் அஞ்சி நாணுவது ஓர் நாணம் உடைமையே மக்கட் பிறந்தார்க்குச் சிறந்தது.

என்பர். ஊண் உடை என வரிசைப்படுத்துவதைவிட ஊணைக் குறித்த அச்சம் உலக உயிர்களுக்கு எல்லாம் பொது, நாணைக் குறித்த அச்சம் நன்மக்களுக்கு மட்டுமே உரிய சிறப்பு எனப் பொருள்தரும் காளிங்கரின் உரை ஆராய்ந்து இன்புறத்தக்கதாக உள்ளது.

இதுபோன்று பல பாடவேறுபாட்டுச் சிறப்புகளைக் குறித்து ஆராய்ந்து இன்பம் பெறமுடியும் எனவே, பழைய மரபான உரையாசிரியர்களின் பாடவேறுபாடுகள் உண்மையில் போற்றுவதற்குரியனவே. அனால், தற்காலத்திற்கும் இந்த எண்ணத்தைக் கொண்டுவந்து, புதிதாகச் சில காரணங்களை முன்வைத்து புதிய பாடங்களைக் கூறும்போக்கை ஆதரிக்கக் கூடாது. இதுவரை உள்ள பாடவேறுபாடுகளே போதுமானது. அவற்றிலும் பல ஆராயாமல் உள்ளன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

# நாலடியார் - பதிப்பும் உரையும்

முனைவர்பட்ட ஆய்வாளர் ச. பிரியா

## முன்னுரை

ஓலைச்சுவடிகளிலுள்ள செய்திகள் இலக்கியமாயினும், இலக்கணமாயினும் அல்லது மருத்தும், சோதிடம், ஆவணம் போன்ற பிற பொருள்களாயினும் வடிவில் ஒன்று போலவே எழுதப்பட்ட அமைப்பைக் காட்டுவன. செய்யுள் நூல் என்பதால் யாப்பு வடிவுடன் அச்சுவடி காணப்படுவதில்லை. ஆவணம் என்பதால் முறையாக பத்தி வடிவைக் காட்டுவதுமில்லை. பாட்டாயினும், உரையாயினும் அல்லது குறிப்பாயினும் எல்லாம் ஒன்று போலவே தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும் சுவடிகளை என்று பதிப்பித்தல் என்பது எளிய பணியல்ல.ஓலையிலுள்ளவற்றை எவ்வெவ்வாறு வெளிப்படுத்தினால் அது சிறப்புடையதாக இருக்கும். அறமாகக் கருதப்பெறும், நம்பிக்கைக்குரியதாக உணரப்பெறும் என்பனவற்றையெல்லாம் வகுத்தும் தொகுத்தும் விளக்குவதே சுவடிப் பதிப்பின் நெறிமுறைகளாகக் கொள்ளப்படுகின்றன. இலக்கியமரபு, இலக்கண மரபு, மொழிமரபு, பொருளுணர்ந்து யாப்பு வடிவம் கெடாதவாறு இலக்கிய நூல்களை, பதிப்பித்துள்ளமையால்தான் பல உரை நூல்களும் தோன்றி தமிழ் இலக்கியங்களின் சிறப்பை மேலும் வளப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

இலக்கியத் துறையில் உ.வே.சாமிநாதய்யர், சி.வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், எஸ். வையாபுரிப் பிள்ளை, போன்றோர் தமிழ்த் துறையில் பதிப்புப் பணியில் முன்னோடிகளாக திகழ்ந்தவர்கள். இவர்களின் உடல் மண்ணை விட்டு நீங்கினாலும், இவர்கள் ஒவ்வொருவரும் உயிரைக் கொடுத்து காப்பாற்றிய பதிப்புப் பணி இன்றும் தொடர்ந்து நடைபெற்று கொண்டே தான் இருக்கின்றது. சான்றாக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், முனைவர் பூ. சுப்பிரமணியம், முனைவர் ஆ. தசரதன், முனைவர் சு. நிர்மலா தேவி, முனைவர். தி. மகாலட்சுமி, முனைவர் பூமிநாகநாதன் ஆகியோரின் கடின உழைப்பில் பல ஓலைச்சுவடிகள் உயிர்பெற்று, பதிக்கப் பெற்று நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்பதிப்பு பணியை மெருகூட்டும் வகையில் பல பயிலரங்குகளும், கருத்தரங்குகளும்,

பயிற்சி பட்டறைகளும் அவ்வப்போது நடைபெற்று, பல புதிய பதிப்பாசிரியர்களை உருவாக்க இந்நிறுவனம் முனைகின்றது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரின் பதிப்பு பணி குறித்தும், உரைகுறித்தும் விளக்குவதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகின்றது.

**பழைய உரைகள்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்கு உரை வகுக்கும் பணியைப் பழைய புலவர்கள் பலர் மேற்கொண்டிருந்தனர். திருக்குறளுக்குத் தருமர் முதலிய பதின்மர் உரை செய்தனர். அவற்றுள் இறந்துபட்டன போக, மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள், பரிதியார், பரிமேலழகர் ஆகியோரது உரைகள் அச்சில் கிடைக்கின்றன. நாலடியாருக்குத் தருமர், பதுமனார் முதலியோரின் உரைகள் கிடைக்கின்றன. இவ்வாறே நான்மணிக்கடிகை, திரிகடுகம் முதலிய நூல்களுக்கும் பழைய உரைகள் கிடைக்கின்றன. ஆனால், அவ்வுரையாசிரியர்களைப் பற்றிய விவரங்களை அறிய இயலவில்லை. இப்பழைய உரைகள் எல்லாம் சுருக்கமும் தெளிவும் கொண்டு, பண்டைய மரபுகளுக்கு ஏற்ப அமைந்த செம்மையான உரைகளாகும். இவை நூலோடு ஒத்த சிறப்புடையன எனினும் அவை இன்று முழுமையாக அனைவருக்கும் கிடைப்பது அரிது. மூலம் மட்டும், மூலமும் பழைய உரையும், மூலமும் புத்துரையும் எனப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. பிற்பதிப்புகள் பலவும் முற்பதிப்புகளைப் பின்பற்றியே அச்சிடப் பெற்றுள்ளன. இவற்றுள் ஏடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டுப் பதிக்கப் பெற்றவை ஒரு சிலவே என்ற செய்தியை கட்டுரையின் பொருண்மை பகுதியான 'பதிப்பு வரலாற்றில்' அறியலாம்.

**நாலடியாரின் அமைப்பும் சிறப்பும்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கு அடுத்தப்படியாகப் போற்றப்படும் பழைய நீதி நூல் நாலடியார். இந்நூலிலுள்ள நானூறு பாடல்களும் வெண்பா யாப்பினைச் சார்ந்தது. நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா என வெண்பா யாப்பிலேயே பாடல்கள் அமைந்துள்ளன. எதையும் தெளிவாகக் கூறுவதே இந்நூல் வெண்பாக்களின் தனிச்சிறப்பாகும். இந்நூலினை இரண்டு அடிகளால் ஆன ஒப்பற்ற திருக்குறளோடு ஒருங்கே வைத்து போற்றும் பழமொழியும் ஒன்றுள்ளது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்பதே அப்பழமொழி.

“சொல்லாய்ந்த நாலடி நானூறும் நன்கு இனிது'' என்பதாலும்,

“பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'' என்பதாலும்,

இந்நூலின் சிறப்பை அறியலாம். மேலும் இந்நூலின் சிறப்பினை அறிய நாலடியார் பாடல் ஒன்றினை விளக்குவது தேவையாகிறது.

“நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னை
தலையாகச் செய்வானும் தான்'' (நாலடி - 248)

என்னும் பாடல், ஒருவன் தன்னை நல்ல நிலையிலேயே நிறுவத்துவதும், தன்னை நிலைகுலையுமாறு செய்து தாழ்த்துவதும் தன் நிலைமையைக் காட்டிலும் தன்னை மேன்மேலும் உயர்த்தி நிலைநிறுவத்துபவனும், தன்னை முதன்மையாகச் செய்பவனும் (ஆகிய அனைத்திற்கும்) தானேதான் காரணமாவான். தன்னுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் தாமே தான் காரணமே தவிர, பிறர் காரணமல்ல என்ற உயர்ந்த கருத்தைப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே விளக்கிய நாலடியாரின் சிறப்பைத் திருக்குறளோடு ஒப்புமைபடுத்துவதில் வியப்பேதுமில்லை. இவ்வாறே தனிமனித ஒழுக்கம், இல்லறத்தானுக்குரிய கடமைகள், அரசாள்வோருக்குரிய கடமைகள், நிலையாமைப் பற்றிய செய்திகள் உணர்ந்து வாழ்க்கையை அறச்செயல்களின் வழியே உயர்த்தும் உன்னதமான செய்யுட்களும், சமணக் கொள்கைகளும், (நிலையாமை, புலால் உண்ணாமை, தவநெறி, பெண்மறுப்பு செய்திகள்) இப்பாடல்களின் வழியே அறிய முடிகின்றது. தமிழர்தம் கொள்கைகள், நம்பிக்கைகள் பலவற்றையும் இந்நூல் முழுமையும் காணலாம். தமிழர்தம் தலைமை நீதி நூலான திருக்குறளின் கருத்துக்கள் பலவற்றை நாலடியாரில் விளக்கமாகக் காணலாம். யாப்பின் வகையறிந்து வெண்பா வகையில் செய்யுள்களை இயற்றி வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்து வாழ வழிகாட்டும் இவ்வாறான நீதி நூல்கள் கிடைப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் பதிப்பாசிரியரும் உரையாசிரியருமே ஆவர்.

**நாலடியார் - உரைகள்**

“இந்நூலுக்கு காலந்தோறும் பலப்பல உரைகள் தேன்றியுள்ளன. நாலடியாருக்குப் பழைய உரைகள் மூன்று உள்ளன. ஒன்று பதுமனார் இயற்றியது. மற்றொன்று தருமர் செய்தது, இன்னொன்று பெயர் அறியப்படாத ஒருவர் செய்தது'' (உரையாசிரியள். மு.வை. அரவிந்தன், ப.332)

**பதுமனார்**

நாலடியாருக்கு முதன் முதலில் உரை கண்டவர் பதுமனார் என்பவராவார். நாலடியாரின் நானூறு வெண்பாக்களையும் பொருள் அறிந்து ஓதி உணர்ந்து, திருக்குறளைப் பின்பற்றி அதிகாரம் தோறும் பத்துப் பாடல்களாக அமைத்து அதிகாரங்களுக்கு ஏற்பப் பெயரிட்டவர் பதுமனாரே ஆவார். மேலும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பெரும் பகுதியாக்கி, அவற்றில் பல இயல்களை அமைத்து உரை இயற்றியவரும் இவரே யாவார். பதுமனார் நாலடியாருக்கு அதிகாரம் வகுத்த செய்தியைத் தருமர் தம் உரைச் சிறப்புப் பாயிரத்தில்,

“மதுமலர்த் தண்டார்ப் பதுமன் தெரிந்த
ஐயமில் பொருண்மை அதிகாரம் தாம்
மெய்யா நலத்த எண்ணைந்து அவற்றுள்''

என்றும், பழையவுரையாசிரியர் முகவுரையில், “இப்படி நாற்பது அதிகாரமும் பதுமனார் அடைவு செய்த இந்த அறம் பொருள் இன்பம் மூன்றும் வழுவாமல் நடாத்தி'' என்று கூறுகின்றார்கள்.

உ. வே. சாமிநாதஐயர் “நாலடியார்க்கு உரை இயற்றிய பதுமனார் நாலடியாரில் திருக்குறளிற்போல அதிகாரம் வகுத்தவர். குடத்துக்குள் யானையைப் புகுத்துவதுபோல், பல பாடல்களைச் சில அதிகாரங்களில் அவர் புகுத்தி இருக்கின்றார்'' என்று தன்னுடைய “சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்'' (பக். 159, 160) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பதுமனாரின் உரைப்பாயிரம் நாலடியாரைப் பின்வருமாறு பகுத்துக்காட்டுகின்றது.

“அறிவியல் இருவகைத் தாம்; அவை தம்முள்
துறவு ஏழ்; இல்லறம் இரு மூன்று என்ப;
பொருளியல் வகை ஏழ்; புலப்படக் கிளப்பின்
அரசியல் ஏழதிகாரம் ஆகும்;
நட்பியல் நான்கதி காரம்; இன்பம்
மூன்றே; துன்ப இயல் அதி காரம்
நான்கே; ஒன்றே பொதுவியல்; பகையியல்
கூறு அதிகாரம் நான்கே; பன்னெறி
வகைதான் இருவகை; அவற்றுள் இன்ப
துன்பத்து அதிகாரம் ஒன்றே- ஏனை
இன்பம் கூறுஅதி காரம் இரண்டே''

உரையில் இவை விரித்து அதிகாரங்களின் பெயர்களோடு விளக்கப்படுகின்றன.

"பதுமனார் உரை முதலில் தோன்றிய உரையாக இருந்தும் சிறப்பாக அமைந்துள்ளது. பழம்பெருமை வாய்ந்த இவ்வுரை பல ஆண்டுகளாக வெளிப்படாமலிருந்து 1953 ஆம் ஆண்டில்தான், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக (59-ணீ) "உரைவளம்'' என்ற பெயருடன் இருபகுதியாக வெளிவந்தது. உரை வளத்தில் தருமர் உரையும் பழையவுரையும் இடம்பெற்றுள்ளன.

பதுமனாருடைய உரை, பொழிப்புரையாக உள்ளது. தேவையான இடங்களில் பொருள் விளக்கத்திற்காகப் பல சொற்களை வருவித்துக் கூறுகின்றது. பொழிப்புரையின் கீழ் அருஞ்சொற் பொருளும், மிகக் குறைவாக இலக்கணக் குறிப்பும் உள்ளன. கருத்துச் செறிவும் இலக்கண வழுவற்ற நடையும், தனித்தமிழ் சொல்லாட்சியும், பதுமனாரிடம் காணலாம். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில், இவர் வல்லவராக விளங்குகின்றார்.'' (உரையாசிரியர்கள். மு.வை. அரவிந்தன் (பக்-333-334).

**தருமர் உரை**

பதுமனார் உரைக்கு விரிவுரையாகத் தருமர் உரை உள்ளது. பாடலுக்குப் பொழிப்புரை இயற்றிய பின் மிகவிரிவாக நயமும் பொருளும் கூறுகின்றார். "திருக்குறளுக்கு உரையெழுதிய தருமரும் இவரும் ஒருவரா அல்லது வேறுபட்டவரா என்று அறிய திருக்குறள் தருமர் உரை கிடைக்கவில்லை'' (உரையாசிரியர்கள் மு.வை. அரவிந்தன் (ப.334).

தருமர் உரைப்பாயிரம் நாலடியாரைப் பற்றியும், பதுமனாரைப் பற்றியும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றது. நாலடியார் பாடல்கள் இயற்றிய முனிவர்களை, 'எண்பெருங் குன்றத்து இருந்தவ முனிவர்' என்று பாயிரம் குறிப்பிடுகின்றது. சமண முனிவர்கள் தவம் புரிந்து கொண்டு எண்பெருங்குன்றத்து இருந்ததைக் கூறுகின்றது. அம்முனிவர்கள் எண்ணாயிரம் வெண்பாக்கள் இயற்றியதாய்ப் பாயிரம் கூறுகின்றது.

"அறம்பொருள் இன்பம் வீடுஎனும் அவற்றின்
திறம்பிறர் அறியும் திறத்தை நாடிப்
பண்புற எடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியல் எண்ணாயிரம்''

இவ் எண்ணாயிரம் பாடல்களில், பல பாடல்கள் மறைந்து காலப்போக்கில் நானூறு பாடல்களே எஞ்சி நின்று வாழ்வு பெற்றன என்பதைப் பாயிரம் விளக்குகின்றது. தருமர் நாற்பது அதிகாரங்களையும் பாகுபடுத்தியதை,

"பொருளியல் இருபத்து ஒருநான்கு, இன்பம்
ஆன்ற வகையை மூன்றுஎன மொழிந்தனன்
சான்றோர் ஏத்தும் தருமத் தலைவனே''

என்று கூறி முடிக்கின்றது பாயிரம்.

**விளக்கவுரை**

பதுமனார், தருமர் உரைகளேயன்றி நாலடியாருக்குப் பெயர் அறியப்படாத வேறொரு உரையும் உள்ளது.

அவ்வுரையை 'விளக்கவுரை' என்ற பெயரில் சரசுவதி மகால் வெளியிட்டுள்ளது. இவ் விளக்கவுரை, பதுமனார், தருமர் ஆகிய இருவர் உரைகளையும் தழுவி எழுதப்பட்டுள்ளது. இவர் மற்ற இரு உரையாசிரியர்கள் கருத்திலிருந்து வேறுபட்டு அதிகாரங்களைப் பிரித்துள்ளார். அறத்துப்பாலில் பதின்மூன்று அதிகாரமும், பொருட்பாலில் இருபத்து ஆறு அதிகாரமும், காமத்துப் பாலில் ஓர் அதிகாரமும் அமைக்கின்றார்.

**பிற்கால உரைகள்**

19-ஆம் நூற்றாண்டில் பாட நூலாக வைத்த பின்னர் அவற்றிற்கு உரைகள் பல தோன்றின. உரையும் விளக்கமும் நாடெங்கும் பரவின. அவற்றுள் சிலவற்றை உரையாசிரியர் பெயரோடும், ஆண்டு வாரியாகவும் காண்போம்.

- புதுவை நயனப்ப முதலியார் (1812)
- புதுவை அ. வேதகிரி முதலியார் (1812)
- திருமயிலை முருகேச முதலியார் (1874)
- கோமளபுரம் ராசகோபால பிள்ளை (1904)
- வேதகிரி முதலியார் (1908)
- களத்தூர் வேதகிரி முதலியார் (1913)
- வை.மு. சடகோப ராமானுசாச்சாரியார் (1921)
- வே. நாராயண ஐயர் (1924)

மேற்கண்ட பதிவுகள் யாவும் "உரையாசிரியர்கள்'' என்ற நூலில் மு. வை. அரவிந்தனால் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்குப் பின்னரும் நாலடியாருக்குப் பல உரைகள் வந்து கொண்டேதான் இருக்கின்றன. இந்நூலின் சிறப்பை அறிய இவ் உரைகளும் பதிப்புகளும் உதவுகின்றன.

## நாலடியார் பதிப்புகள்

நாலடியாரின் பதிப்பு முயற்சிகள் குறித்த செய்திகளைத் தொல்லியல் ஆராய்ச்சியாளர் ச. கிருஷ்ணமூர்த்தி எழுதிய "நாலடியார் மூலமும் பதிக்கப்படாத பழைய உரையும்'' என்ற நூலின் வாயிலாக அறிய முடிகின்றது.

- திருக்குறள் மூலம், நாலடியார் மூலம், திருவள்ளுவமாலை மூலம் என்ற மூன்று நூல்களும் ஒரே நூலாக 1812 இல் சென்னையில் பதிக்கப்பட்டது. இந்நூல் தஞ்சாவூர் கிறித்தவரான ஞானப் பிரகாசன் என்பவரே பதிப்பித்துள்ளார். இந்நூல்கள் பதிப்பிடுவதற்குமுன் திருவாவடுதுறை தருமபுர ஆதினங்களின் சுவடிகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. திருவாவடுதுறை அம்பலவாணத் தம்பிரான் என்பவர் கையெழுத்துப் பிரதியைத் திருத்தம் செய்துள்ளார். முதன்முதலாக நாலடியாரும் திருக்குறளும் ஒரே நூலாக வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
- நாலடியாருக்கு ஓர் உரையுடன் கூடிய பதிப்பைச் சென்னையில் வாழ்ந்த தாண்டவராய முதலியார் பதிப்பிட ஏற்பாடு செய்தார். இவருடைய நண்பர் புதுவை நயனப்ப முதலியார் 1844 ஆம் ஆண்டில் நாலடியார் நூலை வெளியிட்டார். உரையுடன் கூடிய இந்நூல் 1924இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்தது.
- 1831இல் தாண்டவராய முதலியார் நாலடியார் மூலத்தை மட்டும் பதிப்பித்தார். 1851இல் களத்தூர் வேதகிரி முதலியார் நாலடியாருக்கு விரிவாக உரை எழுதி வெளியிட்டார். மீண்டும் 1855 இல் இரண்டாம் பதிப்பும், 1863இல் மூன்றாம் பதிப்பும் வந்துள்ளது. இந்நூலுக்கு 20 பதிப்புகள் வெளிவந்துள்ளன.
- 1885இல் ஊ.புட்பரதச் செட்டியார் என்பவர் நாலடியாரைப் பதிப்பித்துள்ளார். 1892ல் மறுபதிப்பாக வெளிவந்த இந்நூலும் பல பதிப்புகளைக் கொண்டுள்ளது.
- 1924இல் கிருஷ்ணசாமி ஐயங்காரும், துரைசாமி ஐயங்காரும் நாலடியாரைப் பதிப்பித்தனர்.
- வேதகிரி முதலியாருக்குப் பின் 1896இல் கலாரத் நாகர் அச்சுக் கூடத்தில் நாலடியார் மூலம் மட்டும் அச்சிடப்பட்டது.
- 1873இல் திருமயிலை முருகேச முதலியார் உரையுடன் நாலடியாரை வெளியிட்டார்.
- பழனி வி. மௌனகுரு ருத்ரமூர்த்தி என்பவரின் துணையுடன் உரையுடன் கூடிய நாலடியாரைப் பதிப்பித்துள்ளார்.
- திருத்தணிகைப் புலவர் விசாகப் பெருமாள் ஐயர் பதவுரை கருத்துரையுடன் 1892இல் நாலடியாரை வெளியிட்டார். இதன் இரண்டாம் பதிப்பு 1903இல் வந்துள்ளது. வேதகிரி முதலியாரின் உரையை ஒட்டியே இவ்வுரை அமைந்துள்ளது.

- 1866இல் கோயிலூர் மடாதிபதி சிதம்பர சுவாமிகளின் சீடர் ஏ.ஏ. இராமசாமிகள், நாலடியார் மூலம் மட்டும் அச்சிட்டார்.
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர். ஜி.யு.போப் அவர் 1893 ல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். விரிவான ஆராய்ச்சி முன்னுரை, மேற்கோள்கள், பாட்டு, முதற்குறிப்பகராதியுடன் பதிப்பித்தார். வடமொழி மேற்கோள்கள் மட்டும் 59 இந்நூலில் இடம்பெறுகின்றன. இப்பதிப்பை மீண்டும் சைவ சித்தாந்த நூறபதிப்புக் கழகம் 1958இல் பதிப்பித்துள்ளது. 1984 இல் போப்பையர் பதிப்பித்த நாலடியார் நூல் மூன்றாம் பதிப்பாக வந்தது.
- எப். டபிள்யூ எல்லீசு துரை 64 பாடல்களை மொழி பெயர்த்துள்ளார். அதுவும் கழகப் பதிப்பில் இடம்பெற்றுள்ளது.
- 1903இல் இராச கோபால் பிள்ளை நாலடியாருக்கு எழுதிய உரையும், அனவரதம் விநாயகம் பிள்ளையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இதனுடன் சேர்த்து அச்சிடப்பட்டது. இதுவும் பல பதிப்புகளைக் கொண்டது. இறுதியாக 2000ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டது.
- 1914 இல் வை.மு.சடகோப. ராமாநுசச்சாரியார் எழுதிய உரையும் பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இலக்கண அணிவகைகள், வடமொழி மேற்கோள்கள் இதில் சுட்டப்படுகின்றன.
- 1907 இல் பின்னத்தூர் நாராயணசாமி நாலடியாரை உரையுடன் பதிப்பித்தார்.
- 1915 ல் பு.க. சீனிவாச ஆச்சாரியார் என்பவர் நாலடியார் மூலம் மட்டும் அச்சிட்டார்.
- கிருஷ்ணசாமி ஐயங்காரும், துரைசாமி ஐயங்காரும் 1924இல் நாலடியாரை வெளியிட்டுள்ளனர். அரும்பத அகராதி, மேற்கோள் விளக்கம் இதில் உள்ளன.
- 1924 இல் அரும்பொருள் விளக்கத்துடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நாலடியாரைப் பதிப்பித்துள்ளது.
- 1925 இல் வே. இராச கோபாலையங்கார் உரையுடன் மிக விரிவான ஆராய்ச்சியுரை எழுதி இந்நூலைப் பதிப்பித்துள்ளார். குறிப்பகராதி மட்டும் 50 பக்கமுள்ளது. 1927இல் மறுபதிப்பும் வெளிவந்தது.
- 1932 இல் செம்பூர் வித்துவான் ஆறுமுகம் சேர்வையின் நாலடியார் விரிவுரை வெளிவந்தது நா. முனுசாமி முதலியார் பதிப்பித்தார்.
- தீன தயாளு 1943இல் உரை எழுதி நாலடியாரை வெளியிட்டார்.

- மர்ரே எஸ். ராஜம் 1959இல் நாலடியாரை வெளியிட்டார் இது மூலம் மட்டுமே கொண்டது.
- 1953 இல் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்ட நாலடியார் உரை வளம் 1050 பக்கங்களைக் கொண்டது. எஸ். முத்துரத்தின முதலியாரும் கந்தசாமி பிள்ளையும் பதிப்பித்தனர். இதுவும் மறுபதிப்பு கண்டுள்ளது.
- 20ஆம் நூற்றாண்டில் அறிஞர்கள் எளிய நடையில் உரைகளை எழுதி நாலடியாரைப் பதிப்பித்துள்ளார்கள்.
- வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் நாலடியாருக்குத் தெரிபொருள் விளக்கம் எழுதி வெளியிட்டார்.
- தி.சு. சுந்தரம் பிள்ளை, மீ.பொன், இராமநாதன் செட்டியார், இளங்குமரனார், சாமி. சிதம்பரனார், சுந்தர சண்முகனார், சிலம்பொலி செல்லப்பன், புலியூர் கேசிகன், மதுரை முதலியார், ஸ்ரீ சந்திரன், இறையரசன், முத்துக்குமாரசாமி, புலவர் குழந்தை ஆகியோர் எளிய நடையில் எழுதி நாலடியாரைப் பதிப்பித்தனர். தற்போதும் நாலடியாருக்குச் சிலர் புத்துரை எழுதி வருகின்றனர்.
- 1982 இல் தமிழ்ச்சங்கம் நாலடியாரைத் தெளியுரையுடன் வெளியிட்டது. சொற்பிரிப்பு இல்லாத மூலமும் சொற்பிரிப்பு வடிவமும் இணைந்த இப்பதிப்பில் பொழிப்புரை மற்றும் விளக்கவுரையும் உள்ளது. இ.சுந்தரமூர்த்தி, 'பதிப்பியல் சிந்தனைகள்' என்ற நூலில் நாலடியார் பதிப்புகள் என்ற கட்டுரையையும் எழுதியுள்ளார்.
- நாலடியார் பதிப்பு வரலாறு குறித்து அ. தட்சிணாமூர்த்தி அரிய கட்டுரையைக் காலச்சுவடு (ஜனவரி - 2007) இதழில் வெளியிட்டார். ச.கிருஷ்ணமூர்த்தி (தொல்லியல் அலுவலர்) என்பவரும் காலச்சுவடு (மார்ச் 2007) இதழில் நாலடியார் குறித்து எழுதியுள்ளார்.
- 1990இல் ஸ்ரீராமதேசிகன் நாலடியார் மூலம், பொழிப்புரை ஆங்கில மொழி பெயர்ப்புடன் வெளியிட்டுள்ளார். ஆங்கிலேயர் ஆட்சியில் கல்வி நிலையங்களில் நாலடியார் பாட நூலாக இடம் பெற்று வந்துள்ளது. எனவே உரையுடனோ, உரையின்றி மூலம் மட்டுமோ பதிக்கப்பட்டது பல முறை எனலாம். தற்போது சில அதிகாரங்கள் அல்லது பாடல்கள் பதிக்கப்பட்டுக் கல்விக் கூடங்களில் கற்பிக்கப்படுகிறது.

➢ அச்சில் வராத நாலடியார் பதவுரையை ச.கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வெளியிட்டுள்ளார். இந்நூலுக்காக இரண்டு நாலடியார் ஓலைச்சுவடிகள் முழுமையாக இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் பிறர் உரைகள், பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. நாலடியார் பாடல்களின் பாட வேறுபாடுகளும் உரை வேறுபாடுகளும் நாட்டு நடப்புகளும் பிற நூல்களின் மேற்கோள்களும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், முப்பாலாகிய திருக்குறளுடன் ஒப்பீடும் செய்யப்பட்டுள்ளது.

“பொழிப்பகலம் நுட்பநூல் எச்சமென்று ஆற்றக்
கொழித்தலம் காட்டாதார் சொற்கள்- பழிப்பின்
நிரையாமா சேக்கும் நெடுங்குன்ற நாட
உரையாமோ? நூலிற்கு நன்று’’ (நாலடியார்- 319)

என்ற நாலடியார் பாடலுக்கு ஏற்ப இந்த நூல் பதிக்கப்படுவதாக, இந்நூலின் முன்னுரையில் ச. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். பொழிப்புரைக்குப் பதிலாகப் பதவுரை இடம் பெற்றாலும் ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் இதுவரை கண்ட விரிவான ஆராய்ச்சி உரையும் இடம்பெறுவதாக இந்நூலின் ஆசிரியர் கூறுகின்றார். 1953இல் தஞ்சை சரசவதி மகால் நூலகம் வெளியிட்ட நாலடியார் ‘உரைவளம்’ தன் ஆய்வுக்குப் பெரிதும் உதவியதாக ச.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். ‘உரையாசிரியர்கள்’ என்ற நூலில் மு.வை.அரவிந்தனால் கொடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து சில மாறுபாட்டு நிலைகளை அதாவது பதிப்பாண்டு பற்றிய விவரங்கள் ச. கிருஷ்ணமூர்த்தியின் தரவுகள் சில மாறுபட்டு உள்ளதை அறியமுடிகின்றது. பதிப்பு பணிகள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர், தொல்லியலாளர், ஆய்வாளர்கள் பலரால் நடந்து நடைப்பெற்றுக் கொண்டுதான் வருகின்றது. இவ்வாய்வுகளால் தமிழ் இலக்கியத்தின் பெருமையும், வளர்ச்சியும் உயரும்.

## முடிவுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களுக்கு வெளிவந்துள்ள உரைநூல்கள், ஆய்வுகள், திறனாய்வு நூல்கள் போன்று பிற நூல்களுக்கு அவ்வளவாக ஆய்வு நூல்கள் வெளிவரவில்லை. மாணவர்கள் சமுதாயம் முயன்றால் இக்குறை நீங்கும். இப்பயிலரங்கு அக்குறையைப் போக்கி, பல ஆய்வு நூல்களை வெளியிட வாய்ப்பாக அமையும்.

## துணைநூல்கள்

1. உரையாசிரியர்கள், மு. வை. அரவிந்தன், இரண்டாம் பதிப்பு, 2008, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், த.கோ. பரமசிவம் (பதிப்பாசிரியர்) முதற்பதிப்பு, 1989, தஞ்சைப் பல்கலைக் கழகம் வெளியீடு, தஞ்சாவூர்.

3. நாலடியாரும் பதிக்கப்படாத பழைய உரையும், ச. கிருஷ்ணமூர்த்தி, முதற்பதிப்பு, 2007, மெய்யப்பன் பதிப், 53, புதுத்தெரு, சிதம்பரம்.

4. நாலடியார்- மூலமும் உரையும், கவிஞர் . பத்மதேவன் (உரை), முதற்பதிப்பு, 2005, கற்பகம் புத்தகலாயம், சென்னை.

# சிலம்பு - பாடவேறுபாடு

**முனைவர் இரா. காசிராசன்**

சிலப்பதிகாரம் புகார்க்காண்டம் மட்டும் 1872, 1876இல் ஸ்ரீநிவாசாச்சாரியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் அவர் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம் எனக் குறிப்பிடுகிறார். 1880இல் சோடசா வதானம் சுப்பராயச் செட்டியாரின் புகார்க்காண்டப் பதிப்பு வெளியானது. இவை இரண்டுமே பாடநூல்கள் வந்தன; இவ்விரு பதிப்புகளும் பிழையுடையன; செட்டியார் கடின நடையை எளிய நடையாக்கியும் சுருக்கியும் பதிப்பித்தார் எனக் குறிப்பிடும் உ.வே.சா. 1892இல் தம் முதற்பதிப்பை, சிலப்பதிகார முழுமைக்கும் அடியார்க்கு நல்லார், அரும்பதவுரையார் உரையுடன் பதிப்பித்தார். இதற்கு அவர் தேடி எடுத்துக் கொண்ட உரைப்பிரதிகள் 14; மூலப்பிரதிகள் 8; 2ஆம் பதிப்பிற்குப் புதிதாகக் கண்டறிந்த பிரதிகள் 3; ஆக 25 பிரதிகளைக் கொண்டு உ.வே.சா. சிலப்பதிகாரப் பதிப்பை வெளியிட்டுள்ளார். பின் 1920, 1927இல் இரண்டாம் மூன்றாம் பதிப்புகளை வெளியிட்டுள்ளார். இதில் 1276 பாடவேறுபாடுகளைப் ‘பிரதிபேதம்’ என்ற தலைப்பில் அடிக்குறிப்பில் சுட்டிச் செல்கிறார்.

இங்கு முதற்பதிப்பின் மூலம் திரும்பவும் அடுத்த பதிப்பில் பிரதிபேதமாகவும், மூன்றாம் பதிப்பில் திரும்பவும் அதுவே மூலபாடமாகவும் சுட்டப் பெறுதல் குறிப்பிடத்தக்கது திருத்தம் பெற்ற முதல் பதிப்பின் பாடம் 2ஆம் , 3ஆம் பதிப்புகளில் இடம் பெறாமல் போனதும் உண்டு. ஏடுகளைப் படித்துப் பிரதி செய்யுங்கால் தன்னால் பிழைபட உணரப்பட்டவை என்பதால் இவற்றை விட்டுவிட்டார் எனலாம்.

பாடவேறுபாடுகள் மிகுதியாக அமையக் காரணம் ஏடு எழுதுவோர் செய்த பிழை, இலக்கியச் சிறப்பிற்காகச் சில புதிய சொற்களைச் சேர்த்தல், நீக்கல், ஏடு எழுதுவோரின் இலக்கண அறிவு முதலான காரணமாகும். இப்பாடவேறுபாடுகளில் அடியார்க்கு நல்லார் காட்டும் பாடவேறுபாடுகள் 37; அடியார்க்கு

நல்லார்க்கும் அரும்பதவுரையார்க்கும் இடையே காணப்படும் பாடவேறுபாடுகள் 95. இங்கு ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ள பாடபேதம் தவிரச் சில புதிய பாடவேறுபாடுகளும் சுட்டப்பெறுகின்றன. மங்கல வாழ்த்துப் பாடலில், 'மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிட' (1:52) என்பதை மாமுது குரவர் மறைவழி காட்டிட எனப் பாடங்கொள்வாரும் உண்டு. அடியார்க்கு நல்லார் அரும்பத உரையார்க்கு இடையிலான பாடவேறுபாடுகள் 95ஐ மூன்று வகையாகப் பிரித்துக் காண்பர். ச.வே.சு. (அடியார்க்கு நல்லார் உரைத்திறன் ப.454). ஒன்று உரைவேறுபடாதவை; இவ்வகையில் 47; இரண்டு உரை வேறுபடுவன 29. இவற்றில் இருவர் பாடங்களும் சிறப்பாகக் கொள்ளத் தக்கன 14; அரும்பதவுரையார் பாடம் சிறப்பன 3; நல்லார் உரை சிறப்பாக அமைவன 12; மூன்றாவது பாடவேறுபாடு சுட்டாது, உரைவழிப் பாடவேறுபாடு என உ.வே.சா. சுட்டுவன 23. இவற்றில் பல பாடவேறுபாடு எனக் கொள்ள முடியாதவாறு, உரைவேறுபாடு மட்டுமே அமைவதாகக் கொள்ள முடிகின்றது.

சிலப்பதிகாரப் பாடவேறுபாடுகள் அனைத்தும் முறையாக ஆராயப்பட்டு மூல பாடத்தைக் கண்டறியும் மூல பாட ஆய்வுப் பணி முழுமையாக மேற்றகொள்ளப்படவேண்டும். அது ஒரு நூலாக வெளியிடும் அளவு, பரந்து பட்டது. இங்கு ஒரு சில செய்திகள் மட்டுமே சுட்டப் பெறுகின்றன. உ.வே.சா. பண்டைய இலக்கண, இலக்கிய உரைநூல் வழியும் வடமொழி வழக்கு உலக வழக்கு சமயமரபு முதலான பல துறைப் பயிற்சி கொண்டும் கிடைத்த பல ஏடுகளில் ஒன்றை மூலமாக எடுத்துக் கொண்டும், பல அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டும், தம் பதிப்புப் பணியை மேற்கொண்டுள்ளார். எனினும் சில இடங்களில் ஐயர் கொண்ட மூலபாடத்திலும், பிரதி பேதமாகத் தந்தவை, வரலாறு, மொழியியல் அடிப்படையில் பொருள் நோக்கில் சிறப்புடையதாக அமைதல் குறிப்பிடத்தக்கது.

காட்டு : 1. அரைசாள் செல்வத்து நிரைதார்வேந்தர்
உரைசால் செல்வத்து நிரைதார்வேந்தர் -23:142

2. வெற்றிவேல் மன்னர்க்குக் காட்டிக் கொல்வுழிக்
வெற்றிவேல் மன்னர்க்குக் காட்டிக் கொல்வுழீஇக்
-23:157

3. அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை
அங்கண் விசும்பின் அருந்ததி அன்னாளை -1:63

4. தாழிக் குவளை சூழ்செக் கழுநீர்
தாழிக் குவளை தன்செங் கழுநீர் -5:152

இப்படி பலசான்றுகளைக் காட்டலாம். இவை ஓசை, பொருள் அடிப்படையில் மாற்றம் பெற்றுள்ளன. பின்னாளில் பதிப்பித்தவர்கள் இப்பாடவேறுபாடுகளைக் கவனிக்காது உ.வே.சா. கொண்ட பாடத்தையே கொண்டு பதிப்பித்துள்ளார்.

இவையன்றி ஒலிமாறுபடுவன. சொல்லும் அதன் பகுதியும் மாறுபடுவன. தொடர் அல்லது வரி மாறுபடுவன. புணர்ச்சியில் ஒற்றுமிகல்/மிகாமை அடிப்படையில் மாறுபடுவன. உருபுகள் (வேற்றுமை) அடிப்படையில் மாறுபடுவன என இப்பாடபேதங்கள் அமைவதைக் காணமுடிகிறது. இவற்றை ஒலிமாற்றம், சொல் மாற்றம், தொடர்மாற்றம் என்ற முறையிலும் பாடபேதங்களை வகைப்படுத்தலாம்.

**ஒலிமாற்றம்**

இந்நிலையில் உயிர்ஒலிவேறுபாடு, மெய்ஒலிபேறுபாடு, உயிர் ஒலி நீட்சி, ஒற்றுமெய் கெடுதல்/தோன்றல், அளபெடை, விகாரம் பேச்சு மாற்றம், பிழையான வாசிப்பு, எழுத்துக்கள் முன் பின் மாறி அமைதல் என அமையும்.

**உயிர்நீட்சி** பாடுதும் > பாடுகோ (17:17)
கொல்வழிக் > கொல்வுழீஇக் (23:15)
படத்துட் > படாத்துட் (7:1)
சரிய > சரியா (ப.74)
வழாமை > வழாஅது (3:160)
அ > இ ஈட்ட > ஈட்டி (2:7)
ஏத்த > ஏத்தி (3:106)

**உயிர்ஒலிமாற்றம்** யானறிகுவனது > யானறிகுவனிது (பதி.11)

அ > இ அ > உ அருந்ததி > அருந்துதி (1:63)
ஏ > எ கேற்றிய > கெற்றிய (3:59)
ஏத்த > ஏத்தி (3:106)

ஐ > இ எல்லை > எல்லி

ஆ > ஓ பூண்டாள் >பூண்டோள் (17:33)

உ > இ அறுபொருள் > அறிபொருள் (17:33)

**மெய் எழுத்து மாற்றம்**

மைந்நிண > மன்னிண 5:26

ந > ன கோநகர் > கோனகர் (6:8)

ச் > ன் கோச்சேரன் > கோன்சேரன் (17:31)

ந் > த் முறை நிரம்பா > முறைதிறம்பா (17:35)

ண > ன நண்பகல் > நன்பகல் (பதி.78)

பசந்து > பயந்து (4:5)

கெழீஇய > தழீஇய (1:15)

உருட்டுவோன் > உருட்டுகோன் (1:58)

செகிலை > செதிலை (17:7)

**மெய் கெடுதல் / தோன்றல்**

சீருளார் > சீருள்ளார் (17:15)

வந்தமுறையின் > முறைமையின் (3:146)

ஆராய்ந்து > ஆய்ந்து (ப.4)

பேரிய > பெயரிய (3:158)

பெயரிடுவாள் > பேரிடுவாள் (17:13)

ஈகை > ஈய்கை (1:24)

ஐது > ஐந்து (3:152)

பரதவர் > பரதர் (5:25)

பெறாஅன் > பொறாஅ (6:58)

பரப்பில் > பரப்பி (6:168)

கொங்கலர்தார்ச் > கொங்கலரார்ச் (1:2)

**புணர்ச்சி இலக்கணம்**

அரங்கேற்றுகாதை >அரங்கேற்றுக்காதை (பதி)

கடலாடு காதை > கடலாட்டுக் காதை (பதி.68)

நூறுபத்து >நூற்றுப்பத்து (3:164)
பிறைதோன்றி > பிறைத்தோன்றி (4:23)
புகார்காண்டம் > புகார் காண்டம் (பதி.1)

**விகாரம்**

முத்தைக்கு > முந்தைக்கு (17:15)
கொங்கலர்தார்ச் > கொங்கலரார்ச் (1:2)
விலக்கியதிப் > பிலங்கியதிப் (5:96)
தாள்செறிந்த > தாள்செறித்த (7:2)

**அளபடை மிகல் /குறுகல்**

மகிழ்ந்துழி > மகிழ்ந்துழீஇ (1:42)
மன்றந்தாங்கு > மறைஇ (6:162)
கொல்வுழிக் > கொல்வுழீஇக் (23:157)

**சொல்லியல் மாற்றம்**

பாடவேறுபாடுகளில் சொல்நிலையில் மாற்றங்கள் பல காணப்படுகின்றன. இவ்வகையில் சொல்லே மாறுதல், சொல்லின் பகுதிகளான பகுதி, விகுதி, கால இடைநிலைகள் சாரியை, எச்சம், முற்று, வேற்றுமை உருபு, இடைச்சொல், சுட்டு முதலான மாறி அமைவதுண்டு. இவை பொருள் நிலையில் வேறுபட்டும், வேறுபடாமலும் அமைதல் உண்டு.

**சொல்வேறுபாடு**

தெரிய > தெளிய (உரைச்சிறப்புப்பாயிரம்)
செய்த > சொன்ன (காப்பு)
கோதைகள் > மேனியர் (1:56)
புகல் ஏக்கற்று > பூவில் ஏக்கற்று (2:20)
சேர்த்தி > செலுத்தி (3:52)
அரங்கின் பலகை > ஓங்கின பலகை (3:103)
யாண்டுளன் > பாங்குளன் (4:4)
துறந்தோர் > இழந்தோர் (4:13)
தொழில் பல > கழிபல (5:13)
செறிந்து > அமைத்து (6:86)

வலிய > மெலிய (3:92)
யானறிகுவனது > யானறிகுவனிது (பதி:11)
போதில் ஆர் > போதில்வாழ் (1:26)
நிலைகொழு > நிலைகிளர் (பதி:35)
முதிர் வினை > முதுவினை (பதி:45)
விரவுமலர் > விரைமலர் (24:20)
உருகும் > மருகி (17:3)
நறுமலரே > திருமலரே (7:15)
சிறங்கணிக்க > புறங்கணிக்க (7:7)
பொதியவிழ்க்கும் > மலரும் (7:5)
விடுதல் அறியா > விடுதல்ஈயா (3:160)
கோதையாள் > குழலாள் (17:6)

**சொல் நீக்கம் /சேர்க்கை**

அஃதறிந்தருள் > அறிந்தருள் (பதி:9)
எட்டுவனப்பும் > எட்டும் (2:பா)
மஞ்சைநின் > மஞ்ஞை (2:53)
சிலம்பு > பொற்சிலம்பு (பதி:18)
காரிகதனஞ்சான் > ஆங்கு காரிகதளஞ்சான் (17:16)
குடத்துப்பால் > ஆங்கு குடத்துப்பால் (17:6)
மிகுத்தாங்கு > மிகுத்து (3:48)

**சொல்அடை / பெயர் வினை அடை சேர்க்கை / மாற்றம்**

சினவே > நெடுவேல் (1:67)
நிறைநிலை > நெடுநிலை (2:26)
மாமுது முதல்வன் > மாமறை முதல்வன் (5:174)
பூவுதிர்ந்து நுண்தாது > பூவுதிர்நுண்தாது (7:8) காலம்
உகுத்து > உகுப்ப (பதி: 32)
வீற்றிருக்கும் > வீற்றிருந்த (17:2914)
திருவாயும் > கனிவாயும் (17:36:3) - அடை
பெருங்கலம் > அருங்கலம் (பதி:8)
திறத்துக் குற்றம் > திறத்த குற்றம் (7:1:4) (எச்சம்)

**விகுதி நீக்கம் / சேர்க்கை / மாற்றம்**

வடிவின் > வடிவினள் (பதி:52) அன்

ஈக்க > ஈய்த்தனன் (2:45)

ஈத்தது > ஈத்தனன் (2:52)

மகளிரும் > மகளும் (3:154) உம் விகுதி நீக்கல்

வடிவின் > வடிவினன் (பதி:41)

மன்றப் பொதியிவில் > மன்றப் பொதியில் (பதி:40)

பெரும்பான்மையும் > பெரும்பான்மையுமாய் (பதி:7)

**திணைபால் விகுதி சேர்தல் / நீக்கம்**

ஆள்- பூங்குழல்தான் > பூங்குலாள் (17:8)

அன்- வடிவின் > விடிவினன் (பதி:52)

ஆர்- காவியங் கண்ணால் > காவியங்கண்ணார் (4:52)

ஆர்- எட்டுக்கு >எடுக்குநர் (14:138)

அர்-பராரையர் > பராரை (14:208)

அன் ஈக்க > ஈய்த்தனன் (2:52)

**உருபு, சாரியை, இடைச்சொல் நீக்கம் / சேர்த்தல்**

உம் அன்றியும் > அன்றி (6:71)

இன் உரிது நின்னோடு > உரிதினி னின்னோடு (2:40)

இன் மலர்க்கையின் > மலர்க்கை (2:60)

இன் பெற்றியின் நீங்காது > பெற்றிநீங்காது (3:83)

ஒடு > உடன் தன்னொடு > தன்னுடன் (23:148)

உம் : வைகி > வைகியும் அலவுற்று > அலவுற்றும் (24:1.2)

உள்- இல் நின்ற எல்லையுள் > நின்ற எல்லையில் (24:8)

அத்து கு : நல்குலக்கோர் > நங்குலத்துக்கோர் (14:10)

உம் இன்றாம் என்று > இன்றாகும் என்று (17:7)

தன் ஐயைதன் மகளை ஐயை மகளை (17:8)

இல் கோயிலில் கோயில் (17:5)

இல் > இன் ஆயர் பாடியிலொரு > ஆயர் பாடியினொரு (17:5)

இன் > கு குறங்கினிற் செறித்து > குறங்கினுகமைத்து (6:80)

என வகுத்தென > வகுத்து (3:157)

ஆங்கு மிகுத்தாங்கு > மிகுத்து (4:48)

**தொடர் வேற்றுமை**

1. வண்ணமும் சாந்தும் மலரும் சுண்ணமும் - 6:134
   வண்ணமும் சுண்ணமும் தண்ணருச் சாந்தமும்
2. நுண்வினைக் கம்மியர் செய்வினை விளக்கமும் (6:130)
3. கலந்திருந் துறையும் விலங்குநீர் வைப்பின் (6:144) . . .புதிதாக இடம்பெறல்
4. மன்னர் ஏவல் கேட்பப் பாரர சாண்ட (17:5)
   மன்னரொடு ஏவல்கேட்ப அரசாண்ட
5. . . . . .சோர
   ஆய்வளைச் சீர்க் கடிபெயர்த்திட் டசோதையா (17:283)
6. தந்நிலையே யாடற்சீ ராய்ந்துளாள் (17:17:2)
   தந்திலையா ராடியசீ ராய்ந்துளார்
7. பட்டவகைதன் செவியின் ஓர்ந்து (7:15:2)
   பட்டைவகை செவியோர்ந்த
8. நிறைமதி வாள் முகத்து நேர்கயற்கண் செய்த (7:8)
   நிறைமலி வாள்முகத்து நீள்கயற்கண் செய்த

இவ்வாறு பாடவேறுபாடுகளில் பல்வேறு மாற்றங்கள் காணப்படுகின்றன; இவற்றில் இசைப்பாடலாக வரும் கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலானவற்றில் பாடவேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன. இவை தவிர, பதிக உரையில் சில பெயர் மாற்றங்களும் காணப்படுகின்றன. 'மதுரையாசிரியன் மாறனாரும்' என்பதற்குப் பதில் மதுரைப் பன்மாறனாரும் என்பது தரப்படுகிறது (ப.8). தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்பதற்குப் பதில் 'தொடக்கத்தரான பதின்மருள்ளிட்ட' என்பது தரப்படுகிறது.

இப்பாடவேறுபாடுகளை எல்லாம் ஆராய்ந்து முறையான செம்பதிப்பு வெளியிடப்படவேண்டும். சிலம்பிற்கு எத்தனையோ பதிப்புகள் வந்தும், அவை அனைத்தும் உ.வே.சா. குறித்துள்ள பாடவேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாது, ஐயரவர்கள் கொண்ட பாடத்தை அப்படியே ஏற்றுப் பதிப்பித்துள்ளனர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமாவது இதிலே கவனம் செலுத்தி, சிலப்பதிகார ஆய்வு அறிஞர்களைக் கலந்துரையாடி புதிய - திருத்தப்பதிப்பினைக் கொண்டு வர முயற்சி செய்தால், அதுவே தமிழுக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

# சிலப்பதிகார உரைவேறுபாடுகள்

முனைவர் தி. மகாலட்சுமி

## முன்னுரை

சிலப்பதிகார உரைகள் என்னும் இக்கட்டுரை பொதுவான சிலப்பதிகாரத்திற்கு எழுந்துள்ள உரைகளைப் பற்றிக் கூறாமல், சிறப்பு நிலையில் அரும்பத உரையையும், அடியார்க்கு நல்லார் உரையையும் ஆழ் நோக்காய்விற்கு உட்படுத்துகின்றது எனலாம். காலத்தால் முற்பட்டதாகிய அரும்பத உரையின் சிறப்புகளை அடியார்க்கு நல்லார் உரை மரபோடு முரணச்செய்து சில புதிய புள்ளிகளை இக்கட்டுரை முன்வைக்க முனைகின்றது.

பதப்பொருள் அமைப்பால் அரும்பதஉரை காணப்படினும் அதன் சொல்லாழம், நயமுணர்தல், புதிய பொருட்கோடல் ஆகியன நின்று விவாதிக்கப்படக் கூடியவையாக அமைகின்றன.

உரைமரபு என்பது ஒரு குழுவின் பயிற்று முறையென விரிந்த தளத்தில் புரிந்து கொள்ள வேண்டும் இதனை ஆங்கிலத்தில் கூறப்படும் சிந்தனைப் பள்ளி என்னும் பதத்தோடு வைத்துப் புரிந்து கொள்ளுதல் தமிழ்ச் சூழலில் மிகுந்த நலனுடைத்தாகும். அவ்வகையில் அரும்பத பொருட்கோடற் பள்ளியின் போக்கை, அடியார்க்கு நல்லாரின் உரை மரபோடு வைத்து விளக்க இக்கட்டுரை முற்படுகின்றது.

## சிலப்பதிகாரமும் உரைமரபும்

சிலப்பதிகாரம் என்னும் பழந்தமிழ்க் காப்பியத்திற்கு மரபான இருபெரும் உரைகள் உள்ளன. ஒன்று, அடியார்க்கு நல்லார் வரைந்தது, மற்றொன்று குறிப்புரையாகவே நடைபயிலும் அரும்பத உரை. இவ்விரு உரைகளையும் தொகுத்து ஒருங்கே வைத்து உ.வே.சா. சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்தார். இவ்விருவரின் உரைகள் அற்ற பகுதிகளுக்கு உ.வே.சா. வின் குறிப்புரை அன்னவர் பதிப்பிலேயே காணக்கிடைக்கின்றது.

சிலப்பதிகாரத்திற்கு எழுந்த இருபதாம்நூற்றாண்டு உரைகளில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய உரை பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தர நாவலரின் உரையாகும். இவருரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது.

இம்மூன்று உரைகளை முதன்மையாக வைத்தும், தெ. பொ. மீ, ப. அருணாசலம் போன்றோரது ஆராய்ச்சிப் பகுதிகளைக் கொண்டும் (தெ.பொ.மீ- கானல்வரி, சிலப்பதிகார ஆராய்ச்சி, ப. அருணாசலம்) இக்கட்டுரை சிலஉரை வேற்றுமைகளையும், உரையின் ஆழ அகலங்களையும் திறனாய்வு செய்ய முற்படுகின்றது.

### அடியார்க்கு நல்லார் உரைஇயல்பு

அடியார்க்கு நல்லாரின் காலம் பற்றிய கருத்துகள் வலிமையாக அறியப் பெறவில்லை, எனினும் நச்சினார்க்கினியர் பத்துப் பாட்டினுள்ளும், சீவக சிந்தாமணியினுள்ளும் சில இடங்களில் இவருடைய உரையை மறுத்துரைப்பதன் காரணமாக இவர் நச்சினார்க்கினியரின் காலத்திற்கும் பிற்பட்டவராக இருக்கலாம் எனக் கணிக்கப்படுகின்றது. (உ.வே.சா., சிலப்பதிகார முன்னுரை, ப.i.xix).

அடியார்க்கு நல்லாரின் உரை இயல்புகளைத் தொகுத்துக் கீழ்வருமாறு எழுதலாம்.

- மேற்கோள்கள் காட்டப்பெறும் நூல்களின் பெயர்களைத் தெளிவாகத் தெளிவுறுத்தல்.
- உரிய பாட்டுக்குரிய அணியையும், தொல்காப்பியத்தின் வழிப்பட்டதாகிய மெய்ப்பாடுகளையும் காட்டிச் செல்லுதல்.
- ஐந்திணைக்கும் உரிய முதற், கரு, உரி பொருட்களைத் தக்க காட்டு கூறி விளக்குதல்.
- உரிய வட்டார வழக்குகளை வட்டார மொழிகளோடு பொருத்தி விளக்குதல்
- இலக்கணத்திற்தும் பொருந்திவருமாறு தக்க உரைவரைதல்
- மற்றைய இலக்கண, இலக்கிய நூல்களைக் குறிப்பிடுதல்.

இவையாவும் அடியார்க்க நல்லார் உரையில் காணக் கிடைக்கும் தகுந்த இயல்புகள். இனி, இவற்றுள் சிலவற்றைத் தெளிவாகவும் ஆழமாகவும் விளக்க இக்கட்டுரை முனைகிறது.

## அடியார்க்கு நல்லாரின் இலக்கணம் புலமை

உரையாசிரியர்களுக்கு அமைந்திருக்க வேண்டியனவற்றுள் முதன்மையான ஒன்று இலக்கணப் புலமை. தொல்சொற்களின் பயன்பாடு அவன் அறிந்திருக்க வேண்டும். பழம் நூல்களையும் அறிந்திருக்க வேண்டும். பரிமேலழகர் ஏரகம் என்னும் கணித நூலைத் தம் உரையிலேயே காட்டுவார். இத்தகைய நூலறிவு நிரம்பப் பெற்றவரே சிறந்த உரையாசிரியராவார்.

அடியார்க்கு நல்லார், போற்றி என்னும் சொல்லிற்குப் பொருள் கூறும் பாங்கினைக் காண்போம்.

"பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'' (13:92)

என்ற அடிக்கு அடியார்க்கு நல்லார்,

"வடிமொழி உணர்ந்து குற்றந்தீர்ந்த நற்காட்சியை
உடைய உயர்ந்தோனே நினைக்கு ஒரு
குறைபாடு இன்றாகப் போற்றுவாயாக'' (சிலப்.ப.345)

என்று எழுதுகின்றார். இதில் போற்றி என்பது (உம்மை போற்றி உரைக்கின்றோம்' அதாவது உன்னை புகழ்ந்து பேசுகின்றோம் என்றே பலர் உரை எழுதுகின்றனர். குறிப்பாக, ந.மு. வேங்கடசாமி நாட்டார், பெருமழைப் புலவர் இவ்விருவுரைகளும் இவ்வாறே அமைகின்றன. ஆனால், அடியார்க்கு நல்லார் மட்டும், போற்றி என்னும் சொல்லிற்கு இகரவீற்று வியங்கோள் வினை முற்றாகக் கொண்டு போற்றுவாயாக அதாவது இத்தகு வினையைத் தவிர்ப்பாயாக எனப் பொருள் கூறுகின்றார்.

இத்தகு உரை கூறலுக்கு இவரே முன் வழியை உருவாக்கிச் சென்றவர். இவருக்குப்பின் வந்த (உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் இவர்தம் வழிமுறையைப் பின்பற்றியே காட்டி என்பதை இகரவீற்று வியங்கோள் வினைமுற்றாகப் பயன்படுத்துவதைக் காணஇயலும். (சீவக.பா.466ஆவது பாடலுக்கான நச்சினார்க்கினியார் உரையைக் காண்க) அடியார்க்கு நல்லார் கானல்வரிக்கும் உரைவரைந்துள்ளார் என்பதை அவரின் பிற உரைப்பகுதிகள் தெளிவாகவே விளக்குகின்றன.

'கானல் வரியில் விரியக் கூறுவம்' (பக்.88,100)

### ஒப்புமை காட்டல்

சிலப்பதிகாரத்துள் பலவிடத்தும் அடியார்க்கு நல்லார் உரை ஒப்புமை காட்டும் பகுதியாக அமைகின்றது. சிலவிடத்து இலக்கண மேற்கோள்களையும் அடியார்க்கு நல்லார் காட்டுகின்றார்.

'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என்னும் வரியினுக்கு, 'தாது பரத்தல் செய்த மாலையையுடைய சென்னியையுடைய குளிர்ச்சியையுடைய வெண்குடை போன்று பொதுவற இவ்வுலகிற்கு அளிசெய்தான் என்க. இது பண்பும் பயனும் கூடின உவமம்' (சிலப்பதிகாரம்.உ.வே.சா.பதிப்பு.ப.37)

இவற்றுள் திங்களைப் போன்று அரசனதுகுடையின் இயல்பு காணப்படுகின்றது. ஆகவே, அதனைப் பண்பு என்றும் நிலவினைப் போன்று குளிர்ச்சியை நிலவு தரும் காரணத்தால் அதனைப் பயன் என்றும் சேர்த்து, பண்பும் பயனும் கூடின உவமம் என்று பொருள் காட்டுகின்றார்.

### அடியார்க்கு நல்லாரின் நயவுரை

செய்யுளில் நயம் பொதிந்த பகுதிகளை எடுத்து விளக்கும் செயற்பாட்டையே நயவுரை காட்டல் என்பர். அடியார்க்கு நல்லார் பலவிடத்து நயவுரையை அமைத்துச் செல்கின்றார்.

'மண்தேய்த்த புகழினான்'

என்பது கோவலனைப் பற்றிய இளங்கோவடிகளின் புகழ்மொழி. இதற்கு அடியார்க்கு நல்லார்,

"மண்தேய்த்த என்றார், புகழ்வளரப் பூமி
சிறுகலான், மண் இடத்தில் சிறியது என்றார்.
வள்ளுவனாரும்
வேள் இருவர் ஊராகலின் முகவேளைச் செவ்வேள் என்றது"
(சிலப்.ப.39)

என்று பொருள் காட்டுகின்றார். இவற்றுள் வேள் இருவகை என்பதன் மூலம் மன்மத வேளையும், முருக வேளையும் குறிப்பதால் வேறுபடுத்திக் காண்பிக்க வேண்டி 'செவ்வேள்' எனக் குறிப்பிட்டுள்ளது என்னும் விளக்கவுரை நயமும் கருத்தாழமும் மிக்கதாகும்.

கோவலன் கண்ணகியின் திருமண முறையைக் கூறிய பின்னர், இத்திருமணமுறை 'பிரசாபத்தியம்' என்று அடியார்க்கு நல்லார்

குறிப்புரை வரைகின்றார். பிரசாபத்தியம் என்பது எண்வகை மணமுறைகளில் ஒன்று என்பதைத் தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை களவியலிலே தெரிவிக்கின்றது. அதில் பிரசாபத்தியம் (சிலம்பு.ப.41) என்பது குரவர் தம் மகளைக் கொடுக்கப் பெறுவோர் தக்க இயல்புடன் ஏற்றுக் கொள்ளுதலாகும்.

இத்தகைய திருமண முறையைக் கோவலன் கண்ணகி திருமணத்திற்குள் அடக்கி அடியார்க்கு நல்லார் உரை காணுகிறார்.

சிலசொற்களுக்கான வினையடிகளையும் அடியார்க்கு நல்லார் உரை துல்லிதமாகச் சுட்டிச்செல்கின்றது. காட்டாக,

"பல பண்டங்களையும் பொதிந்தனவற்றைப்
பொதியென்றது ஆகுபெயர்''

என்னும் காட்டைக் கூறலாம்.

## அரும்பத உரை மரபு

அரும்பதங்களுக்கு விளக்கம் கூறுவதன் வழியே தன் உரைகூறலைத் தேர்ந்து கொண்ட காரணத்தான் இவர் அரும்பத உரையாளர் எனக் குறிப்பிடப் பெறுகின்றார். இந்த அரும்பத உரையே காலத்தால் முந்தியது. இதனைப் பற்றுக் கோடாகக் கொண்டே அடியார்க்கு நல்லார் பலவிடத்தும் உரை கூறியுள்ளார். எனினும், இவ்விரு உரையாசிரியர்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க பாட வேறுபாடுகளும் காணக்கிடைக்கின்றன.

"அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படாத பல மேற்கோள்களும், சில நூற்பெயர்களும் அரும்பத உரையில் காணப்படுவதாக'' மு.வை. அரவிந்தன் கூறுகின்றார். (மு.வை. அரவிந்தன், உரையாசிரியர். ப.27).

இவ்வுரையாசிரியருடைய கொள்கையானது வாக்கியங்களின் முதலையோ, இறுதியையோ முதலை மட்டுமோ வைத்தும் பொருளெழுதுதலாகும். இதனைக் குறித்து, உ.வே.சா. கூறும் கருத்துகளைக் கொள்ளத்தக்கது.

"வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும்,
முதலை மட்டுமேனும், சொற்களை யேனும் எழுதிப்
பொருளெழுதுவதும், ஒன்றையுமெழுதாது
பொருளை மட்டும் எழுதிக் கொண்டு போவதும்
இவ்வுரையாசிரியருடைய கொள்கையாக
இருக்கின்றன'' (சிலப். பதிப்பரை.xix)

இவ்வாறான சிறப்புகள் சான்ற இவ்வுரைகாட்டும் சில செய்திகளை இனிக் காண்போம்.

கண்ணகியைப் பற்றி அறிமுகப்படுத்தும் காட்சியினுக்குக் கீழே அரும்பத உரை எழுப்பிக்கூறும் வினாவும் பதிலும் மிகப் பொருத்தமான ஒன்று.

"இவளை முன்கூறிற்று, கதைக்கு நாயகியாதலின்"

(சிலப்.ப.34)

என்று உரை கூறுகின்றார்.

'போதிலார் என்பதற்கு அடியார்க்கு நல்லார் போதிற்பொருந்திய திருமகளுடைய புகழுடைய வடிவு' என எழுதும் உரையை விடவும் வலிமையும், சுருக்கமும் நிறைந்த தாக அரும்பத உரை அமைகின்றது.

"போதிலார் திரு; போதில் நிறைந்த திரு இவள் வடிவென வருவிக்க" (சிலப்.ப.34)

'ஆர்', என்னும் வினைச்சொல்லிற்கு நிறைந்து என்னும் பொருள் என்பது நினைவு கூரத்தக்கதாகும். இதுபோலவே, மாசத்துவான் என்பதை அரும்பத உரை குடிப்பெயராகச் சுட்டுகின்றது.

## அரும்பத உரைகாட்டும் வழக்குகள் சில

அரும்பத உரை அக்கால வழக்கங்கள் (Habitation) சிலவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றது. அவை போன்றனவற்றை ஈண்டு தொகுத்துக் காணலாம்.

- ❖ யானை யெருத்தத்தின்மேல் அணியிழையாழை இருத்தி மாநகர்க்கு அறிவித்தல் (ப.35)
- ❖ சூழ்கழன் மன்னன் என்பது சோழன் கரிகாற் பெருவளத்தான் (ப.57)
- ❖ கோலங்கோடல்-முயக்கத்தால் குலைந்த ஒப்பனையைத் திருத்துதல் (ப.124)
- ❖ வெள்ளயிர்-புகைக்கும் கண்டு சர்க்கரை, கண்டு சர்க்கரையொடு அகிலைப் புகைத்தல் மரபு (ப.124)
- ❖ காழியர்-பிட்டு விற்பார், வண்ணாருமாம்,
- ❖ கூவியர்-அப்பம் சுடுவார், பாசவர்-வெற்றிலை கட்டுவோர் (ப.137)

இவ்வாறான புதிய தம்காலத்து மரபுகளையும் வழக்கங்களையும் கலந்து நடைபயிலும் உரையாக அரும்பத உரை விளங்குகின்றது. இத்தகு சிறப்புகளில் அடியார்க்கு நல்லாரின் உரையிலும் சிறந்த ஆழ்ந்த கூறுகளை இவ்வுரை கொண்டுள்ளது எனலாம்.

**சொற்பொருள் கூறும் திறம்**

அரும்பத உரை சொற்பொருள் கூறும் திறன் படிப்போரை ஆழ்ந்து சிந்திக்கச் செய்வதாக அமைவன. அவற்றுள் சிலவற்றைக் ஈண்டு காட்டலாம்.

| | | |
|---|---|---|
| கடைகழி மகளிர் | - | பரத்தையர் |
| நீர்மாடம் | - | பள்ளியோடம் |
| இளை | - | அரண் காவல் |
| வல்லாடாயம் | - | சூதாடு தாயம் |
| பரப்பு | - | கடல் |
| துகில் | - | பங்குவர்க்கம் |
| குரல் | - | கொத்து |
| கோடை | - | மேல்காற்று |

இவையனைத்தும் பெரும் பான்மையும் தமிழ்பொது வழக்கில் இடம் பெறாத இலக்கிய நுண் தகைசால் வழக்காறுகளாகும். இதனை அரும்பத உரை மிக ஆழ்ந்த புரிதலோடு பதிவு செய்துள்ளது.

அரும்பத உரையின் மற்றுமொரு சிறப்பு அடியார்க்கு நல்லார் உரைகிடைக்கப் பெறாத பகுதிகளாகிய கானல் வரி, முதலானவற்றிற்குப் பதிப்பாசிரியருக்குப் பொருள் விளங்க முதன்மையான காரணமாக இது அமைந்திருந்தது என்பதே ஆகும். இதனைப் பதிப்பாசிரியர் என்னும் நோக்கில் உ.வே.சா. உருக்கத்தோடு பதிவு செய்துள்ளார்.

அரும்பத உரை சில கதைமாந்தர்களை அனைவருடைய அடைமொழியை வைத்தே அடையாளப்படுத்தும் பாங்கு உணரத்தக்க ஒன்று. இது இல்லை எனின் மிகுந்த பொருட் மயக்கம் ஏற்படும்.

காட்டாக,

❖ மாதவத்தாட்டி என்றது கவுந்தியை (ப.413)

❖ அடிகளென்றது கோவலனை (ப.413)

❖ நாத்துணங்கை (மாதிரிமகள்)

என்று வரும் பகுதிகள் கருதத்தக்கன.

சிலம்பிற்கு எழுந்துள்ள உரைகளின் ஆழ அகலங்களையும், உரைவேற்றுமைகளையும் நுணுகி ஆராயின் பல புதிய தெளிவுகள் கிடைக்கும் என்பதை உணர்த்துவதாய் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## துணைநூல்கள்


1. உ.வே.சாமிநாதையர் (ப.ஆ), சிலப்பதிகாரம், உ.வே.சா நூல்நிலையம், 2001.
2. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர், மணிவாசகர் பதிப்பகம்-2000.
3. கணேசையர், தொல்காப்பிய பொருளதிகாரம், உ.த.நி, 2005.
4. ச.வே.சுப்பிரமணியர், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், உ.த.நி, 1990.
5. சோமசுந்தர நாவலர்(உ.ஆ), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1992.

# சிலப்பதிகார அழற்படுகாதையில் இடைச்செருகல்

முனைவர்பட்ட ஆய்வாளர் ப. வித்தியாவதி

## முன்னுரை

மனித வாழ்வியலின் உணர்வுக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவன சங்க இலக்கியங்கள். அவை, காதல், வீரம், புகழ், கொடை, வெற்றி போன்ற நிகழ்வுகளில் சிலவற்றை மட்டுமே மையப்படுத்தி அமைந்தன. இந்தக் கட்டமைப்பினின்று சற்று விலகி திருமணம் தொடங்கி இறுதி நிலை வரையிலான உள்ள வாழ்வியலை முதன் முதலில் தொடர்நிலைச் செய்யுளாகக் காப்பிய வடிவில் தருவது சிலப்பதிகாரம். மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உள்ளடக்கியது. முப்பது காதைகளில் இருபத்திரண்டாவது காதையாக 'அழற்படுகாதை' உள்ளது. சிலப்பதிகாரப் பதிப்புகளில் 'அழற்படுகாதை' யில் சிலவரிகள் அடைப்புக் குறியிட்டுத் தரப்பட்டுள்ளன. அவை இடைச்செருகல் என்பதைச் சான்றுகளுடன் விளக்குவன இக்கட்டுரையின் நோக்கம்.

## சிலப்பதிகாரப் பதிப்புகள்

1870 களில் ஸ்ரீநிவாசராகவாச்சாரியார் மற்றும் தி.க.சுப்புராகச் செட்டியார் போன்றவர்களால் சிலப்பதிகாரப் பதிப்புகள் வெளிவந்தன.

1892இல் பல்சுவடிகளை ஒப்புநோக்கிப் பாடவேறுபாடுகளுடன் உ.வே.சா முதற்பதிப்பாகச் சிலப்பதிகாரம் வெளிவந்தது. 1920இல் இரண்டாம் பதிப்பும் 1927இல் மூன்றாம் பதிப்பும் வெளிவந்தன. முதற்பதிப்பினின்று மற்ற இரண்டு பதிப்புகளும் பாடவேறுபாடுகளும் செம்பதிப்பாக வெளிவந்தன. இப்பதிப்பே பிற்காலச் சிலப்பதிகாரப் பதிப்பாசிரியர்களுக்கு மூலநூலாகத் திகழ்ந்தது எனலாம்.

1942இல் ந.மு. வேங்கடசாமிநாட்டாரின் சிலப்பதிகாரம் முதற்பதிப்பு வெளிவந்தது.

### இடைச்செருகல்-விளக்கம்

சுவடிகளைப் படி எடுத்து எழுதுவோர் தமது கருத்துகளைச் சேர்த்து எழுதுவது, தமது விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டு செய்திகளை உட்புகுத்துவது, நுண் அரசியலை மூலவடிவம் சிதையாமல் கதைப்போக்கோடு ஒத்தமையுமாறு பதிந்து வைத்திருப்பதனையே இடைச்செருகல் என வரையறுக்கலாம்.

இலக்கியங்களில் இடைச்செருகல்கள் எண்ணிலா வண்ணம் கலந்துள்ளன. அவற்றைப் பிரித்துச் சரியான மூலபாடத்தைத் தெரிவு செய்தல் வேண்டும்.

### அழற்படுகாதை விளக்கம்

சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டத்தில் பத்துக் காதைகளும் மதுரைக் காண்டத்தில் பதிமூன்று காதைகளும், வஞ்சிக் காண்டத்தில் ஏழு காதைகளும் என முப்பது காதைகள் உள்ளன.

அழற்படுகாதை மதுரைக்காண்டத்தின் இறுதிக் காதையான கட்டுரை காதைக்கு முன்னர் இருபத்திரண்டாவது காதையாக உள்ளது.

கண்ணகியின் சிலம்பை விற்றுத் தமது புதுவாழ்வினைத் தொடங்க எண்ணிக் கோவலன் மதுரையை அடைகிறான். பொற்கொல்லனிடம் தனது சிலம்பை விற்க முற்படுகையில் அரசாக்குச் சொந்தமான பாண்டிமாதேவியின் சிலம்பு எனத் தவறாகப் பழி சுமத்தப்பட்டுக் கொல்லப்படுகிறான். கோவலன் தன்கணவன் மீதான பழியைப் போக்கிய கண்ணகி ஆறாத சினத்தால் தனது இடது கொங்கையினைத் திருகி எறிந்து மதுரையைத் தீக்கிரையாக்குகிறாள். தீக்கடவுள் கண்ணகி முன்தோன்றித் தான் பற்றிக் கொள்ளும் இடம் ஏது எனப் பணிகிறது.

கண்ணகி தீத்திறத்தார் பக்கம் சாதற்க எனக் கூறுகிறாள். நெருப்பு மதுரையை ஆட்கொண்டு பற்றி எரியும் வேளையில் அதன் சூழல் மாற்றங்களை எடுத்தியம்புவதாக அமைவது அழற்படுகாதை.

### அழற்படுகாதையும் - அடைப்புக்குறியிட்ட பகுதிகளும்

நால்வகைப் பூதங்களின் தன்மை விளக்குவனவாய் மதுரை மாநகரை விட்டு அவை பெயர்ந்து சென்ற நிலையைக் குறிப்பிடும் பாடலின் சில வரிகள் அடைப்புக்குறிகளுள் இடம்பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

அவை

பிராமண பூதம் - நிறம் - வெண்மை

நித்திலப் பைம்பூ ணிலாத்திக ழவிரொளித்

தண்கதிர் மதியத் தன்ன மேனியன்
ஒண்கதிர் நித்திலம் பூணொடு புனைந்து (22:16-33) ,

அரச பூதம் நிறம் பவளம்
வென்றி வெங்கதிர் புரையு மேனியன்
குன்றா மணிபுனை பூணினன் பூணொடு
வெம்மையிற் கொள்ளும் மடையினன் செம்மையிற்
(22:37-50)

**வணிக பூதம் - நிறம் - பொன்**

உரைசால் பொன்னிறங் கொண்ட வுடையினன்
வெட்சி தாழை கட்கம ழாம்பல்
சேட னெய்தல் பூளை மருதம்
...... ........ ......... .........
விலைய வாக வேண்டுநர்க் களித்தாங்கு (22:67-84)

வேளாண் பூதம்: நிறம் - நீலம்
கருவிளை புரையு மேனிய னறியொடு
வெள்ளி புனைந்த பூணினன் காழகிற்
சாந்துபுலர்ந் தகன்ற மார்பின னேந்திய
செம்மையின் வரூஉஞ் சிறப்புப் பொருந்தி (22:89-96)

**உரவோன்**

உரக்குரங் குயர்த்த வொண்சிலை யுரவோன் (22:11)

**நால்வகைப் பூதங்கள்**

மதுரை மாநகர் தீப்பற்றி எரியத் தொடங்கியதுமே அந்நகரைக் காவல் புரிந்து வந்த தெய்வங்கள், பத்தினியின் சீற்றத்தைக் கண்டு அஞ்சி வெளியேறிச் சென்று விட்டனவாம். பாண்டியன் கோன் முறை பிறழாதிருத்த காலம் வரை நால்வருணப் பூதங்கள் அந்தப் பதியைக் காத்து வந்தனவாம். இப்போது அவை மதுரையைவிட்டு அகன்றனவாம்.

சிலப்பதிகார ஆய்வுரை என்னும் நூலில் ம. பொ. சி அவர்கள் இந்நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடுகையில் அடிகள் அந்தணவருணம், அரச வருணம், வணிக வருணம், வேளாண்வருணம் ஆகிய நான்கு வருணங்களையும் நான்கு பூதங்களாகக் கற்பித்துக் கொண்டு அவை நகரிலிருந்து வெளியேறிவிட்டன என்கிறார். மன்னன் செங்கோன்மை தவறியதும் தருமங்களும் அவனைக் கைவிடும்'' என்பதை உணர்த்தவே அவற்றைப் பூதமாக்கிக் காட்டுகிறார்.

**பதிப்பாசிரியர் உரையாசிரியர் கருத்துகள்**

1. சிலம்பைப் பதிப்பித்த உ.வே.சா அடைப்புக் குறியிட்டு எழுதப்பட்ட வரிகள் சில ஏட்டுப்பிரதிகளில் இடம் பெறாதவை என்பதைத் தமது 1927இல் வெளியிடப்பட்ட மூன்றாம் பதிப்பில் பதிவு செய்கிறார்.
2. அரும்பத உரைகாரரின் உரையாகக் குறிப்பிடப்படும் இடங்களிலும் மேலே எடுத்துக்காட்டிய வரிகளுக்கு நிகரான பதவுரைகள் கொடுக்கப்படவில்லை.
3. அழற்படுகாதைக்கு அடியார்க்கு நல்லார் உரை கிடைக்கப் பெறவில்லை.
4. ந.மு.வேங்கடசாமியும் அரும்பத உரைகாரரின் விளக்கத்தையே முன்வைக்கிறார். மேலும் அவர் தமது உரைவிளக்கத்தில், இக்காதையுள் இக்குறியீட்டினுட்பட்ட பகுதிகள் கந்தியார் போலும் ஒருவரால் பாடி இடைமடுக்கப்பட்டன. ஆதலின் அவற்றிற்கு உரையெழுதப்பட வில்லை. அப்பகுதிகள் சில சுவடிகளில் காணப்பட்டமையாலும் அடைப்புக் குறியிட்ட பகுதிகளில் ஒரு சொற்கேனும் அரும்பதவுரைகாரரின் பொருள் காணப்படாமையாலும் அவை இளங்கோவடிகள் இயற்றின அல்ல என்பதும், பின்னுள்ள யாரோ ஒருவரால் இயற்றிப் புகுத்தப்பட்டன ஆகுமென்பதும் நன்கு துணியப்படும் என்றுரைக்கிறார்.

**கூறியது கூறல் மரபன்று**

தெளிந்த ஆசிரியர் மரபாகத் தொல்காப்பியர் சுருங்கக் கூறி விளங்க வைத்தல் ஒழியக் கூறிய பொருளையே அதே கருத்துடை வேறு சொற்களைக் கொண்டு மீண்டும் குறிப்பிடமாட்டார் எனத் தெளிவுபடுத்துகிறார்.

**அரச பூதம் - வெண்மை**

"வென்றி வெங்கதிர் புரையு மேனியன்'' (22:37)

"பொங்கொளி யரத்தப் பூம்பட் டுடையினன்'' (22:46)

"வெம்மையிற் கொள்ளும் மடையினள் செம்மையிற்''(22:50)

போன்றவரிகள் ஒரே நிறத்தைப் பல சொற்களால் விரித்துரைப்பனவாய் அமைந்துள்ளன.

**வணிக பூதம்:பொன்**

"உரைசால் பொன்னிறங் கொண்ட வுடையினன்''(22:67)

"பொன்னென விரிந்த நன்னிறச் சாந்தம்" (22:7)

போன்ற அடிகள் ஒரே பண்டியல்பை உணர்த்துவனவாய் பல்வேறு சொற்களில் வருகின்றன.

இளங்கோவின் சிலப்பதிகாரப் பாவடிவம் சிதையாமல் அவற்றுள் இடைபுகுந்து உள்ள இவ்வரிகள் 'கந்தியார்' எனும் பிற்காலப் புலவரால் சேர்க்கப்பட்டன என்று நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் தமது நூலில் பதிவு செய்கிறார்.

இளங்கோவடிகள் **'நடுப்பகலை - நண்பகல்'** எனும் சொல்லாடலால் குறிப்பிட இவ்வடைப்புக் குறியிட்ட பகுதியில் வரும் 'நடுப்பகல் நண்பகல்' எனும் சொல்லால் இடம்பெற்றுள்ளது.

இவற்றைக் கொண்டு பார்க்கும்போது அழற்படுகாதையின் அடைப்புக்குறியிட்ட பகுதிகளை இடைச்செருகலே எனத் துணிய முடிகிறது.

**முடிவுரை**

பதிப்பாசிரியர்கள் பல இன்னல்களுக்கு நடுவே தமது முழுத்திறனையும் பயன்படுத்திப் பல்வேறு ஏடுகளை ஒப்பிட்டு எண்ணிலா இலக்கியங்களைத் தந்துள்ளனர். இன்று தொழில்நுட்பம் வளர்ந்து வருகின்ற நிலையில் இலக்கியங்களை மீள்வாசிப்பிற்குட்படுத்தி அவற்றின் மூலபாடத்தை ஆய்வு செய்தால் புதிய, சிறந்த கருத்துடைய பாடப்பகுதி கிடைக்கக் கூடும். பாடவேறுபாடு, இடைச் செருகல் போன்ற குறைகளைக் களைந்து சிறந்த பாடத்தைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது கடமையாகிறது.

## துணைநூல்கள்


1. சிலப்பதிகாரம் (அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையுடன்) உ.வே.சாமிநாதையர், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 11ஆம் பதி. 2008.
2. சிலப்பதிகாரம் (மதுரைக் காண்டம்) பதி- நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், முல்லைநிலையம்,சென்னை,2003
3. சிலப்பதிகாரத் திறனாய்வு - ம. பெ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை,2007.
4. சிலப்பதிகார ஆய்வுரை - ம. பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை-04, மூன்றாம் பதிப்பு, டிச. 2001.

# மணிமேகலை உரை வேறுபாடுகள்

முனைவர் மு. சற்குணவதி

தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியங்களுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. காப்பியம் என்பது கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுளைக் குறிக்கும். இத்தகைய கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுள்களை கி.பி 9 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஐம்பெருங்காப்பியங்கள் ஐஞ்சிறுகாப்பியங்கள் என்று பாகுபடுத்தினர். தண்டியலங்காரத்தில் உள்ள காப்பிய இலக்கணப்படி இந்தப் பாகுபாடு செய்யப் பெற்றுள்ளது. தண்டியலங்கார இலக்கணம் வருவதற்கு முன்பாகவே இந்த இலக்கணம் அனைத்தும் பொருந்திய நிலையில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இயற்றப் பெற்றன.

தமிழில் தோன்றிய முதற்காப்பியங்கள் இரண்டு. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற அவ்விரண்டையும் காப்பியங்கள் என்று கூறும் வழக்கு, காலத்தால் பிற்பட்டது. பிற்காலத்தில், கதை பொதிந்த நீண்ட பொருள் - தொடர்நிலைச் செய்யுளைக் காப்பியம் என்று வழங்கத் தொடங்கிய போதே இவையும் காப்பியம் எனப்பட்டன. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது மணிமேகலை. சிலப்பதிகாரத்தின் இறுதியில் "மணிமேகலை மேல் உரைபொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்" எனக் கூறப்படுவதால் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இந்நூல் அமைந்துள்ளது என்பது பெறப்படுகின்றது. இதன்காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு. மணிமேகலை காப்பியம் பற்றிய அறிமுகத்துடன், அக்காப்பிய உரைவேறுபாடுகள் குறித்த ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

**மணிமேகலை அறிமுகம்**

சம்பாபதி என்ற தெய்வத்தின் பெயரைப் பெற்றிருந்த புகார் நகரம், அகத்திய முனிவரின் கரகத்து நீரைக் காகம் கவிழ்க்க ஓடிய காவிரியால் காவிரிப் பூம்பட்டினம் எனப் பெயர் பெற்றது. இம்

மூதூரில் கோவலன் என்ற வணிகனுக்கும் மாதவி என்ற கணிகைக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வரலாற்றை, ‘விழாவறை காதை’ முதலாக ‘பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை” ஈறாக முப்பது காதைகளில் இளங்கோவடிகள் கேட்க, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ‘மணிமேகலை துறவு’ என்ற பெயரில் பாடினார். (இது பதிகம் ஆகிய முன்னுரை கூறும் செய்தி)

சாத்தனார் மதுரையில் கூலவாணிகம் செய்தவர். சீத்தலை என்பது அவரது ஊர் என்பார் சிலர். நூல்களில் பிழைகாணும் போது, குற்றம் கூறத் துணியாராய், ‘இந்தப் பிழைகளைக் கேட்கும்படி நேரிட்டதே’ என்று மனம் வருந்தி இவர் தமது தலையைக் குத்திக் கொள்வார் என்பார் சிலர். எவ்வாறேனும் சீத்தலைச் சாத்தனார் என்ற வழக்கு பழமையானது என்பது தெளிவாகின்றது. நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், அகநானூற்றில் ஐந்தும், புறநானூற்றில் ஒன்றுமாகப் பத்துச்செய்யுள்கள் இவர் பெயரில் எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. அதனால் சாத்தனாரை இளங்கோவுக்குச் சமகாலத்தவராகக் கருதுவர் சிலர். எனினும் மணிமேகலையில் காணப்படும் சமயக் கொள்கைகளையும், சமுதாயக் கொள்கைகளையும் சொல் வழக்குகளையும் சீர்தூக்கி ஆராயுங்கால் சாத்தனார் காலம் கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டு ஆதல் வேண்டும்.

தமிழில் தோன்றிய முதற் சமயக் காப்பியம் கதைத் தலைவியின் பெயரால் பெயர் பெற்ற முதற்காப்பியம். பரத்தமைத் தொழிலில் ஈடுப்பட்டிருந்த சித்ராபதியின் மகள் மாதவிக்குப் பிறந்த மணிமேகலை காவியத் தலைவியாக உயர்வு பெறுகிறாள். பரத்தையர் குலத்தில் பிறந்தவளாயினும்,

> மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
> அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
> திருந்தாச் செய்கை தீத்தொழில் படாள்
>
> (மணிமேகலை காதை: 2,55 - 57)

என்று பத்தினியின் மகளாகவே உயர்த்தப்படுகிறாள்.

இந்நூல் பல கிளைக் கதைகளையுடையதாய், அழகிய வருணனைகளைப் பெற்று நடை எளிமை காட்டி மக்களின் மனத்தை ஈர்க்கின்றது. வ. சுப. மாணிக்கம் அவர்கள், இந்நூல் பரத்தையொழிப்போடு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு என்றினைய

சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியம் என்று குறிப்பிடுகின்றார். புத்தமதக் கருத்துகள் அழகிய தமிழில் மொழிபெயர்த்துத் தரப்பெற்றுள்ளன. எனவே இக்காப்பியத்தில் வடமொழி , பாலிமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்து வந்துள்ளன. இதில் சிறந்த பல அனுபவ உரைகளும், அறிவுரைகளும் இடம்பெற்றுள்ளன. இதில் உவவன வருணனை, புகார் நகர வருணனை, அந்திப் பொழுது வருணனை என்று பற்பல வருணனைகளும், அழகிய உவமைகளும் இடம்பெற்றுக் காப்பிய நலன் சிறக்கச் செய்கின்றன.

அகவற்பாவில் அமைந்த பௌத்த சமயக்காப்பியமான மணிமேகலை காதைகளைக் கொண்டுள்ளது. இதன் ஒவ்வொரு காதையும் கதையும் கதையைத் தழுவிப் பெயரிடப்பட்டு, ஒவ்வோர் இயல்போல் அமைந்துள்ளது. மணிமேகலை இருபத்தாறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. எட்டு கதைச்சுருக்கங்கள் வெளிவந்துள்ளன.மணிமேகலைப் பற்றிய நூல்கள் முப்பதிற்கும் மேற்பட்டு வந்துள்ளன. நாடக வடிவிலான மணிமேகலை நூல்கள், ஐந்து வெளிவந்துள்ளன. நாவல் வடிவிலும் மணிமேகலை வெளிவந்துள்ளது. ஆங்கில மொழிப்பெயர்ப்பு நூல்களும், எம்ஃபில் ஆய்வேடுகளும், முனைவர்பட்ட ஆய்வேடுகளும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

இத்தகைய சிறப்புமிக்க மணிமேகலைக் காப்பியத்தின் 'உரைவேறுபாடுகள்' குறித்து இனிக் காண்போம். மூன்று உரைகள் மட்டும் இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## மணிமேகலை உரைவேறுபாடுகள்

உ.வே.சாமிநாதையர்உரை, துரை. தண்டபாணி உரை, புலியூர்க் கேசிகன் உரை ஆகிய மூவர் உரைப் பற்றிய செய்திகள் மட்டும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. மணிமேகலைக்கு முதன் முதலில் உரை எழுதியவர் அந்நூலின் பதிப்பாசிரியராகிய உ.வே.சாமிநாதையர்ஆவர். இந்நூலைப் பதிப்பிக்கும்முன் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து அரும்பதவுரையுடனும் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் இந்நூலை உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ளார். இந்நூலின் முதல்பகுதியில் பதிப்பாளர் குறிப்பு அமைந்துள்ளது. உ.வே.சா. மணிமேகலை பதிப்பிக்கும் போது, இந்நூல் எந்தச் சமயத்தைச் சார்ந்து என்று விளங்கவில்லை. உ.வே.சா. வுடன் கும்பகோணம் கல்லூரியில் வேலை செய்த அரங்காச்சாரியார் அவர்கள் மணிமேகலை பௌத்த

மதத்தைச் சார்ந்து என்று கூறி, ஆங்கில நூல்களைப் படித்து, உ.வே.சா.வுக்குப் பௌத்தமதக் கருத்துகளை அளித்து உதவினார்கள்.

உ.வே.சா. அவர்கள் 1891 ஆம் ஆண்டு மணிமேகலை ஆராய்ச்சியைத் தொடங்கி 1898 ஆம் ஆண்டு சூலை மாதம் தமிழ் உலகத்திற்கு அளித்தார்கள். உ.வே.சா அவர்களுக்குப் பிடித்தமான வரிகள்,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

என்று இந்நூல் முகப்பால் அறிய முடிகிறது. பதிப்பாசிரியர் பற்றிய செய்திகளின் கருத்து இந்நூலில் எடுத்தாளப்பட்ட நூல்களின் முதற்குறிப்பகராதி கொடுக்கப்பட்டுள்ளது. முகவுரையும் மணிமேகலை எழுதிய ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் வரலாறும் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்நூலால் தெரிந்த அரசர்களின் பெயர்கள் முதலியன தரப்பட்டுள்ளன. அத்திபதி, இராகுலன் முதலான அரசர்கள், ஆறுகள், உலகம், ஊர்கள், குலங்கள், கோயில்கள், நாடுகள், நோய், புலவர்கள், முனிவர்கள், விழாக்கள் முதலானவை பற்றிய செய்திகள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்த நிலையில் மணிமேகலைக் கதைச் சுருக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக முப்பது காதைகளின் மூலம் தரப்பட்டுள்ளது. பாடலடிகளுக்குக் கீழே பதவுரை கொடுக்கப்பட்டுள்ளது.

சான்று

"உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்"

உலகம் - நன் மக்களுடைய ஒழுக்கம்.

திரியா - வேறுபாடாத

ஓங்குயர் விழுச்சீர் - மிகவுமுயர்ந்த சீரிய புகழ்

பதவுரையின் யிடையிடையே முக்கியமான செய்திகளுக்குப் பிறநூல் சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

சான்று

"பலர் புகழ் மூதூர் - பல தேசத்தாரும் கொண்டாடும் பழமையாகிய நகரம் என்றது காவிரிப்பூம்பட்டினத்தை"

பலரும் புகழ்தலை,

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் (சிலப். 1: 10) என்பவற்றாலும் பிறவற்றாலும் அறியலாம் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.

உ.வே.சா. உரையில் செய்தி ஒப்புமைகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

சான்று

கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக கோள்கள் நிற்கும் நிலை குலையாமைக்குக் காரணமாகிய செங்கோலை யுடையோனாகுக.

கோணிலை திரிந்து......... அரசுகோல் கோடினென்றால் (255) எனச் சீவக சிந்தாமணியுள்ளும் வருதல் காண்க என்று தொடர்புப்படுத்தப்பட்டுள்ளது. உ.வே. சா. உரையில் நிறைவாக மணிமேகலைப் பாட்டு முதற்குறிப்பு அகராதி தரப்பட்டுள்ளது. மணிமேகலையில் வந்துள்ள வேறு கதைகள் பதிகம் பற்றி வந்துள்ளது. புத்த தேவனுடைய பெயர்கள் பல கொடுக்கப்பட்டுள்ளன.

சான்று

அகளங்க மூர்த்தி, கௌதமன் , சாக்கியன், போதிபகவன், புனிதன், பெரியவன் முதலியன உ.வே.சா. உரையில் பிற சமய மறுப்புகள் பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. நிறைவாக அரும்பதம் முதலியவற்றின் அகராதி அகரவரிசைப்படுத்தப் பெற்று தொகுத்து அளிக்கப் பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு நுட்பங்களுடன் உ.வே.சா. உரை அமைந்துள்ளது.

இராம லட்சுமணன் பதிப்பிற்கு துரை. தண்டபாணி உரை எழுதியுள்ளார்கள். நூலின் முதல் பகுதியிலேயே மணிமேகலை பற்றிய சிறப்புச் செய்திகள் தரப்பட்டுள்ளன. மணிமேகலையில் வந்துள்ள நாடும் நகரமும் இடமும் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன. அடுத்த நிலையில் பதிகம் முதல் கொண்டு, முப்பது காதைகளுக்கும் பாடல் அடிகள் அதனைத் தொடர்ந்து விளக்க உரை கொடுககப்பட்டுள்ளன. இந்த உரை தொடர் அமைப்புடன் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

**சான்றாக,**

"இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்கு ஒளிமேனி; விரிசடை யாட்டி;
பொன்திகழ் நெடுவரை உச்சித் தோன்றி"

என்ற பாடல் அடிகளுக்கு, பொன்னொளி திகழும் உயர்ந்த மலை இமயமலை. அதன் உச்சியில் சம்பு என்னும் தேவதை தோன்றினாள். அவள் இளங்கதிர் ஞாயிற்றின் ஒளியை இகழும் தோற்றப் பொலிவும், ஒளிச்சுடர் வீசும் திருமேனியும் விரிந்த கூந்தலும் உடையாள் என்று உரை கொடுக்கப்பட்டுள்ளது. நூலின் நிறைவாக அருஞ்சொற்பொருள் அகரவரிசை அமைந்துள்ளது.

மணிமேகலையின் புதிய பதிப்பில் புலியூர்க்கேசிகன் உரைஎழுதியுள்ளார். இவர் மணிமேகலைக்குத் தெளிவுரை தந்துள்ளார். பதிகம் முதற்கொண்டு முப்பது காதைகளுக்கும் பத்து பாடல் அடிகள் கொடுத்து அதன் கீழே உரை எழுதியுள்ளார். அதற்கு முன்பாக ஒவ்வொரு காதைக்கும் ஒரு முன்னுரை தந்துள்ளார்.

**சான்றாக,**

விழாவறை காதைக்கு,'விழா அறைத்த பாட்டு' என்று குறுந்தலைப்பிட்டு புகார் நகரிலே இந்திர விழா எழுந்த வரலாறும், அதனை நிகழ்த்த ஆன்றோர் கொண்ட முடிபும், அந்த முடிபு நகருக்கு முரசறைந்து தெரிவிக்கப் பெற்றதும் கூறும் பகுதி இது என்ற முன்னுரை அமைந்துள்ளது. இவரது தெளிவுரை எளிய நடையில் அமைந்துள்ளது.

**சான்றாக,**

"உலகம் திரியா ஓங்குயர் விழுச்சீர்ப்
பலர் புகழ் மூதூர்ப் பண்பு மேம் படீஇய"

என்ற வரிகளுக்கு, தத்தம் ஒழுக்கங்களினின்றும் மக்கள் வேறுபட்டுத் திரியாத மிகவுயர்ந்த பெருஞ்சிறப்பினை உடையதாகப் பலரும் போற்றும் புகார் நகரமானது விளங்கும் என்று உரை தரப்பட்டுள்ளது நூலின் நிறைவுப்பகுதியில் மணிமேகலையில் வந்துள்ள நாடும் நகரமும் இடமும் பற்றிய பெயரும் அதன் விளக்கமும் தரப்பட்டுள்ளன. சான்றாக, இடவயம் காந்தார நாட்டுப் பூருவதேயத்துள் ஒரு நகரம் ; அத்திபதிக்கு உரிமையுடையது என்று கொடுக்கப்பட்டுள்ளது.

## உரைவேறுபாடுகள்

உ.வே.சாமிநாதையர் மணிமேகலைக்கு அரும்பதவுரையும், உரையில் சான்றுகளும் ஒப்புமைச் செய்திகளும் தந்துள்ளார். துரை. தண்டபாணி விளக்கவுரையாகக் கொடுத்துள்ளார். புலியூர்க்கேசிகன் தெளிவுரை தந்துள்ளார். மூவர் உரைகளையும் நோக்கும்போது உ.வே.சா. உரை பல்வேறு செய்திகளை வெளிப்படுத்துகின்றன. ஆனால் கற்றோர் மட்டுமே எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் உரை உள்ளது. துரை. தண்டபாணியின் உரை விளக்கவுரையாக உள்ளதால் ஓரளவிற்குப் புரியும் வகையில் மட்டுமே அமைந்துள்ளது. ஓரளவிற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாலும் படித்தறியும் வகையில் புலியூர்க்கேசிகனின் தெளிவுரை அமைந்துள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப இம்மூவர் உரைகளுமே முறையே மணிமேகலையைப் படித்தறியும் ஆய்வாளர், கல்வியாளர், ஆர்வலர்களுக்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

# சீவக சிந்தாமணியில் உரை வேறுபாடு

முனைவர் க. சங்கர்

## முன்னுரை

தமிழ்மொழி இலக்கிய வளம் மிகுந்தது. இலக்கண வரம்புடன் வளர்ந்து வரும் வேந்தர்களும், கால வெள்ளத்தை எதிர்த்து நீந்தி என்றும் வாழும் இலக்கியச் செல்வங்களைப் படைத்து வழங்கிய புலவர்களும காலம்தோறும் தோன்றி தமிழ் மொழியைக் காத்து வளர்த்தனர். இத்தகைய சிறப்பு இயல்களைக் கொண்ட தமிழ் மொழியை

பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே வளர்ந்து, சங்கத் (து)
இருப்பிலே இருந்து வையை
ஏட்டிலே தவந்த பேதை
நெருப்பிலே நின்று, கற்றோர்
நினைவிலே நடந்(து) உர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்

என்று புலவர் பெருமக்கள் வாயாரப் போற்றிப் புகழ்ந்தனர்.

இலக்கண வரம்புடன் வளர்ந்துவரும் தமிழ்மொழியின் செம்மையை,

கண்ணு தற்பெருங் கடவுளும்
கழகமோ(டு) அமர்ந்து
பண்ணு றத்தொந்(து) ஆய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ [2]

என்று போற்றினர்.

முன்னோர் எழுதிய குறிப்பை மேற்கொண்டு புதிய கருத்துகளை அவற்றுடன் சேர்த்துப் பின்வந்தோர் தருவதற்கு, வாய்ப்பு ஏற்படுத்துவது இயற்கையே ஆகும். பின் தோன்றியவர்களுக்குப் பல்வேறு உரைகளைக் காணும் வாய்ப்பு ஏற்படவே, பலரிடம் இருந்த நல்ல கருத்தைத் தொகுத்துக் காணும் ஆற்றலைப் பெற்றனர். எல்லா உரைகளிலிருந்தும் நல்லனவற்றை மேற்கொண்டு மாறுபட்டவற்றையும் தேவை இல்லாதையும் விலக்கித் தாமும் பல நல்ல கருத்தை எழுதும் வாய்ப்பு, பின் வந்தவர்க்கே கிடைத்தது. இதனால், அவர்கள் எழுதிய விளக்கவுரைகள் செல்வாக்குப் பெற்றன. காலம் கடந்து நின்றன. நிலைத்த வாழ்வு பெற்றன. இந்தக் காரணங்களால் இளம்பூரணருக்குப்பின் தோன்றிய தொல்காப்பிய உரைகள் வாழ்வு பெற்றன. திருவாய் மொழிக்கு 600 படி, 9000படி, 24000 படி ஆகிய வியாக்கியானங்களுக்குப்பின் தோன்றிய 36000 படி ஈடு என்ற சிறப்புப் பெற்றது.

ஒன்பது உரைகளுக்குப்பின் தோன்றிய பரிமேலழகர் உரை நிலைபெற்றது. மயிலை நாதருக்கும், சங்கர நமசிவாயருக்கும் பின் தோன்றிய சிவஞான முனிவரின் நன்னூல் உரை செவாக்குப் பெற்றது. பல உரைகள் சிவஞான போதத்திற்குத் தோன்றியபின் எழுந்த சிவஞான பாடியம் சிறப்புப் பெற்றது.

உரையாசிரியர்கள் எழுதிய உரைவிளக்கங்கள் காலப்போக்கில் விளங்காத நிலையை அடைந்தன. அதனால், உரைக்கு உரை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன் விளைவாக உரைக்கு உரை பல தோன்றின. இவ்வாறாக உரைகளின் வரலாறும் உரை ஆசிரியர்களின் வரலாறும் நீண்டுகொண்டே செல்லும். அந்த வகையில், இந்தக் கட்டுரை சீவக சிந்தாமணியில் உள்ள உரை வேறுபாட்டினை ஆராய்வதாக அமைகிறது.

**சீவக சிந்தாமணி**

நச்சினார்க்கினியர் தம் புலமைகொண்டு உழுது பயன் கண்ட விளைநிலங்களில் சீவக சிந்தாமணியும் ஒன்று. சீவக சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் இயற்றியுள்ள உரையின் திறத்தை உரைச் சிறப்புப் பாயிரம்,

திருத்தகு முனிவன் கருத்துஇது என்னப்
பருப்பொருள் கடிந்து பொருள்தொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்

என்று போற்றுகின்றது.

திருத்தக்கதேவர் தந்த காப்பியச் சிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாய்- கலைத்திறன் மிக்க காப்பியமாய்க் கண்டு மகிழ்ந்த நச்சினார்க்கினியரின் உரைத்திறன் பலமுறை கற்றுப் போற்றத்தக்கதாகும். சீவக சிந்தாமணி, நச்சினார்க்கினியரால் பட்டை தீட்டப்பெற்று வண்ணச் சுடர் ஒளியைப் பலவகையாய் வீசி மகிழ்விக்கின்றது. இவ்வுரை விளக்கம் திருத்தக்கதேவரின் புலமை மாண்பை நன்றாக வெளிப்படுத்துகின்றது. திருத்தக்க தேவரின் வளத்தை அளந்து காணும் திறன் நச்சினார்க்கினியரிடம் உள்ளது.

**சைவம்-சமணம்**

சைவ சமயத்தைச் சேர்ந்த அந்தணரான நச்சினார்க்கினியர், சமண சமயக் காப்பியமாகிய சீவகசிந்தாமணிக்கு நடுநிலையோடு, சமயக் காழ்ப்பு இன்றி உரை எழுதும் பணியை மேற்கொண்டு செம்மையாகச் செய்து முடித்துள்ளார். முதலில் இவர் சீவக சிந்தாமணிக்கு ஓர் உரை இயற்றி, சமண சமயச் சான்றோர்களிடம் காட்டியபோது அந்த உரை நன்றாக அமையவில்லை என்று மறுத்தனர். பின்னர் சமண சமயக் கருத்துகளை நன்றாக ஆராய்ந்து, தெளிவு அடைந்து மீண்டும் புதிய உரை விளக்கம் எழுதி அந்தச் சான்றோர்களிடம் காட்டிப் பாராட்டினைப் பெற்றார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

சிந்தாமணி உரை அரங்கேறியதைப் பற்றிப் புலவர் பெருமக்களிடையே ஒரு கதை வழங்கி வருகின்றது. "சமணர்களின் காப்பியமாகிய சீவக சிந்தாமணிக்கு முதன் முறை உரை இயற்றிய நச்சினார்க்கினியர், சமணப் பெரியவர்களிடம் சென்றபோது, அவர்கள் அந்த உரையினை வாங்கிப் படித்துப் பார்த்துக் கோபம் அடைந்து, நச்சினார்க்கினியர் என்னும் கள் எருமை, சிந்தாமணி என்னும் தாமரைத் தடாகத்தினுள் புகுந்து குடைந்து, தாமரை மலர்களைக் கசக்கி எறிந்து பாழ்படுத்தி விட்டது என்று சமணச் சான்றோர்கள் கோபம் அடைந்தனர் என்ற வரலாறு உள்ளது.

நச்சினார்க்கினியர் மறுமுறை வேறு உரை திருத்தமாக எழுதிச் சென்று சமணச் சான்றோர்களிடம் காட்டியபோது பெரிய

மகிழ்ச்சி அடைந்து, நச்சினார்க்கினியர் என்னும் வெள்ளையானை சீவக சிந்தாமணி என்னும் தாமரைப் பொய்கையினுள் நுழைந்து அழகிய மலர்களைத் தன் கையால் பறித்துத் தலைமீது வைத்துக் கரைக்கு இனிதாக வந்து சேர்ந்தது''[3] என்று கூறியுள்ளனர்.

நச்சினார்க்கினியர் இருமுறை சீவகசிந்தாமணிக்கு உரை எழுதினார் என்ற கருத்தை உ.வே.சாமிநாதர் உடன்படுகின்றார். தமக்கு இருவகையான உரை விளக்கங்கள் அமைந்த ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன என்று கூறி, உரை இருவகையாக அமைந்திருப்பதற்குரிய காரணத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்.

> ஜைன அன்பர்களுடைய பழக்கத்தால் ஏட்டுப் பிரதிகள் இரண்டு வகையாக இருந்ததற்குக் காரணம் தெரிந்து கொண்டேன். நச்சினார்க்கினியர் முதலில் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினாராம். பிறகு அதை ஜைனர்களிடம் படித்துக்காட்டியபோது சம்பிரதாய விரோதமாகச் சில பகுதிகள் உள்ளன என்று சொன்னார்களாம். அதனால் அவர் தம்மை ஒரு ஜைனராகச் சொல்லிக் கொண்டு சிற்றாம்பூர் என்னும் இடத்திலுள்ள ஜைன மடத்திற்கு வந்து சில காலம் தங்கி ஜைன நூல்களையும் ஜைன சம்பிரதாயங்களையும் கற்றுச் சென்று மீண்டும் புதிய உரையை எழுதினாராம். விசேஷ உரையுடன் இருக்கும் பிரதியிலுள்ளது பின்பு எழுதிய உரை என்று தெரிய வந்தது.[4]

நச்சினார்க்கினியர் அரிதின்முயன்று எழுதிய சிந்தாமணி உரையைக் காலம் தோறும் அறிஞர்கள் போற்றி வருகின்றனர்.

### உரை வேறுபாடு

நச்சினார்க்கினியர், சீவகசிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாகக் கருதிப் போற்றியுள்ளார். நூலின் தொடக்கத்தில் முதல் பாட்டு உரையில், 'யாமும் இவ்விலக்கியமும் இனிது முடித்தற் பொருட்டு அவன் திருவடிகளை வணங்குவோம் என்றார் என்க' என்றும் நூலின் இறுதியில் இவ்விலக்கியம் இடுக்கண் இன்றி இனிது முடிந்த மகிழ்ச்சியான், மீண்டும் வணங்குகின்றார் என்றும் கூறியுள்ளார்.

சீவக சிந்தாமணியை ஆழ்ந்து கற்று, கலையழகில் ஈடுபட்டு, இலக்கியச் சுவையில் தம்மை மறந்து ஈடுபட்டவர்

நச்சினார்க்கினியர். அதனால், சொல்களுக்குப் பொருத்தமான பொருளை உரைக்கின்றார். பாட்டில் அமைந்துள்ள நுணுக்கமான கருத்துகளை வெளிப்படுத்துகின்றார். உவமைகளின் பொருத்தத்தை விளக்குகின்றார். இலக்கிய மரபுகளைப் பேணிக்காக்கின்றார்.

**சொல் பொருள்**

சிநதாமணியில் உள்ள சொல்களும் சொற்றொடர்களும் நச்சினார்க்கினியர் விளக்கத்தால் சிறந்த பொருளை உணர்த்துகின்றன.

''உயர்மிக்க தந்தை''[5] - பிள்ளை உயர்ச்சி மிகுதற்குக் காரணமான தந்தை.

''மன்னுடை வேல்''[6] - அரசன் கெடுதற்குக் காரணமான வேல். பாட்டில் கிடக்கும் நுண்ணிய கருத்துகளை வெளிப்படுத்துவது நச்சினார்க்கினியர் இயல்பு.

''அம்மி மிதந்து ஆழ்ந்து சுரை வீழ்ந்தது''[7] என்பதற்கு ஆழ்தற்குரிய அம்மி மிதந்து மிதத்தற்குரிய சுரை ஆழ்ந்து வீழ்ந்தது என்றது- உயர்ந்தோர் வாழாதே தாழ்ந்தோர் வாழ்ந்ததனை என்று விளக்குகிறார்.

சச்சந்த மன்னனைக் ''களிறு அனான்''[8] என்று சிறிய உவமையால் குறிப்பிடுகிறார்- தேவர்

நச்சினார்க்கினியர் - மதச் செருக்கால் (யானை), பாகன் தோட்டியை நீவுமாறுபோலக் காமக்களிப்பால், தன் அமைச்சர் கூற்றைக் கடத்தல் நோக்கி, களிறு அனான் என்றார் என்று விளக்கம் தருகின்றார்.

தேவர் - கட்டியங்காரன் வயப்பட்ட சச்சந்தன் படையை,

''உப்புடைய முந்நீர் உடன்று கரை கொல்வது
ஒப்புடைய தானை''[9]

என்று உவமையுடன் விளக்குகின்றார்.

நச்சினார்க்கினியர் - தனக்குக் காவலாகிய அரசனைப் படைதாமே கொல்லுகின்றது என்றார்.

தேவர்-தனக்கு வேலியாகிய கரையைக் கடல்தானே கொல்லுகின்றாற்போல என்கிறார்.

''கந்துக்கடன் மாரி போலவும் கற்பகம் போலவும்
கொடை தந்தான்'' [10]

என்று திருத்தக்கதேவர் கூறிய உவமைகள் - கார் வேண்டாமைக் கொடுத்தாலும், கற்பகம் வேண்டக் கொடுத்தாலும் இயல் என்ற விளக்கத்தால் சிறப்படைகின்றன.

''சீவகனை ''ஈயின்றி இருந்த தேன்''

என்று தேவர் குறிப்பிடுகின்றார்.

உரை ஆசிரியர் - இதற்கு முன்பு ஒரு மகளிரும் இவனை நுகராது இருந்தமை உணர்ந்து, அங்ஙனம் கூறியதாகக் குறிப்பிடுகின்றார்.

**காப்பியத்தின் நோக்கம்**

நச்சினார்க்கினியர் - சிந்தாமணியைக் காப்பியமாக நோக்கி, உரைகண்டுள்ளார். காப்பியத்தைத் தொடர் நிலைச்செய்யுள் என்ற பெயரால் வழங்கி, அதன் இயல்புகளை,

மெல்லென்ற சொல்லான் அறம் பொருள்
இன்பம் வீடு என்னும் விழுமிய பொருள்
பயப்பப் பழையதொரு கதைமேல்
கொச்சகத்தால் கூறின், அது தோல் என்று
(தொல்) கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனம்
கூறிய தோலாம் என்று உணர்க.

காப்பியத்தின் கதைக்குரிய தலைவனைச் சீவகனை முன் கூறினார்.

திருத்தக்க தேவர் - சீவகனைத் தன்னேரில்லாதத் தலைவனாய்ப் படைத்துள்ளார். அவன் இசைப்போட்டியில் காந்தருவதத்தையை வெல்கின்றான். தன்னேரில்லாத தலைவனாகிய சீவகன் ஒரு பெண்ணை வென்றான் என்று கூறுவதைத் திருத்தக்க தேவர் விரும்பவில்லை. அதனால், அவர் சீவகனுக்குக் காந்தருவதத்தை தோற்றாள் என்று மிகவும் நயம்படக் கூறுகின்றார்.

''விஞ்சைக்கு இறைவன் மகள்
வினையில் தோற்றவாறும்'' [12]

''தோற்றனள் மடந்தை நல்யாழ்
தோன்றலுக்கு'' [13]

''மாதர் இசை தோற்று இருந்தனனே'' [14]

என்று மூன்று இடங்களிலும் மறவாமல் தேவர், காந்தருவ

தத்தையைத் தோற்றாள் என்றே கூறுகிறார். நச்சினார்க்கினியர்- ஒரு மகளை வென்றான் என்றல் இவள் தலைமைக்கு இழிவு என்று அவள் செய்தியாகக் கூறுகின்றார்.

## முடிவுரை

சீவக சிந்தாமணி தமிழ்மொழியில் விளங்கும் காவியங்களில், காவியத் துறையில் தலைமை பெற்றது. பெருங்காவியங்களில் முதல் காப்பியமாக அறிஞர்களால் போற்றப்படுவது. இந்தச் சிறப்புமிக்க காப்பியத்தில் உரைவேறுபாடு என்பது மிகுந்த ஆராய்ச்சிக்குரியது. சீவக சிந்தாமணியில் சில பாடல்களையே முதன்மையாகக் கொள்ளப்பட்டு மேற்கண்ட விளக்கங்களை, உரைவேறுபாடுகளைத் (திருத்தக்க தேவர் நச்சினாகினியர்) காணமுடிந்தது. இந்த ஆய்வு காப்பியம் தொடர்பான ஆய்வாளர்களுக்குப் பயன்தரும்.

## துணைநூல்கள்


1. வில்லிபாரதம்
2. திருவிளையாடற்புராணம்
3. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள்
4. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம்
5. சீவக சிந்தாமணி, பா.எண். 473.
6. மேலது, பா.எண்.1200
7. மேலது, பா.எண்.495
8. மேலது, பா.எண்.
9. மேலது, பா.எண். 280.
10. மேலது, பா.எண். 865.
11. மேலது, பா.எண். 712.
12. மேலது, பா.எண். 11.
13. மேலது, பா.எண். 702.
14. மேலது, பா.எண். 735..

# காப்பியங்களில் காணப்படும் பாடவேறுபாடுகள்

*முனைவர் மூ.கருணாநிதி*

பாடம் வேறுபடுவது பாடவேறுபாடு எனப்படுகிறது. பாட ஆசிரியர் கூறிய உண்மைத் தொடர் மூலபாடம் எனப்பெறுகிறது. நூலாசிரியர் உரை சுவடியியல் பற்றிய ஆய்வுமுறையில் மூலபாட ஆய்வும் அதன் வழி பாடவேறுபாடுகளை அறிதலும் உண்மைப் பாடத்தை நிறுவவும்; எனவே ஒவ்வொரு இலக்கியத்திற்கும் பாடவேறுபாடுகளையும் அதன் மூலபாடத்தையும் கண்டறிவது சுவடியியல் ஆய்வில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் தமிழ்க் காப்பியங்களுக்கென்று தனி இடமுண்டு. காப்பியங்களில் சீவக சிந்தாமணி மற்றும் கம்பராமாயணத்திலும் பல பதிப்புகள் வந்த வண்ணம் உள்ளன. சீவக சிந்தாமணி தோன்றிய காலக்கட்டத்தில் அன்றைய பெருவாரியான மக்களால் மிகவும் விரும்பிப் படிக்கப்பெற்றது என்பதை பெரிய புராணம் கூறும் செவி வழிக் கதையால் முடிகிறது. கம்பராமாயணம் தோன்றிய அற்றை நாள் முதல் இற்றை நாள் வரை பலராலும் வாசிக்கப்படுகிறது. காப்பியச் சுவை ததும்பும் இவ்விரண்டு இலக்கியங்களையும் சுவைஞர்கள் அன்றும் இன்றும் வாசிப்பிற்கு உட்படுத்திக் கொண்டிருப்பதால் பாடவேறுபாடுகள் தோன்றுவது தவிர்க்க இயலாதது. மேற்குறித்த இரண்டு இலக்கியங்களில் காணப்படும் பாடவேறுபாடுகள் சிலவற்றை எடுத்துக்காட்டி, அவற்றினூடாக சில மூலபாடங்களைக் கண்டறிந்து விளக்குகிற வகையிலும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## தொடக்க நிலையில் உருவான பாடவேறுபாடுகள்

தொடக்கக் காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் வாய்மொழி வழியாகவே ஆசிரியர்களிடமிருந்து மாணவர்கள் கல்வியைக் கற்றனர். "ஏடா யிரங்கோடி எழுதாது தம்மனத்து

எழுதிப் படித்த வரகன்" *(தமிழ்ப் புலவர் வரிசை, பகுதி – 3, பக். 38)* என்னும் கூற்றும் இதனை உறுதிபடுத்தும்.

சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் அங்காங்கே அந்நூற் செய்யுட் பகுதிகளை மேற்கோளாகக் காட்டி இருக்கிறார். உ.வே.சா அவர்கள் அச்செய்யுட்பகுதிகளைச் சொன்னவுடன் சந்திரநாத செட்டியா என்பவர் அவை, இன்ன இன்ன இடத்தில் உள்ளன என்று சொல்லி முழுப்பாட்டையும் சொல்லுவார் *(உ.வே.சாமிநாதையர் 1950 : 740-741)* என்பது மனனம் செய்து அக்கால மாணவர்கள் கல்வி கற்றனர் என்பது புலனாகிறது. வாய்மொழிவழியாகக் குறிப்பிட்ட ஒரு சில நூல்களை மட்டும் கற்க முடிந்தது. மேலும் பல நூல்களையும் கற்க வெண்டிய நிலையில் அவற்றை எழுதி வைத்துக் கொண்டு பாடங்கேட்க வேண்டியவராயினர். ஆசிரியரிடமிருந்தோ பிறரிடமிருந்தோ அந்நூல்களுக்கான சுவடிகளைப் பெற்று எழுதிக் கொண்டனர். அவ்வாறு கிடைத்த சுவடிகள் ஒரே மாதிரியாக இருந்ததில்லை.

வாய்மொழியாகவே பாடங்கேட்டு நூல்களை முழுமையாக மனப்பாடம் செய்த கற்றவருள் யாரோ ஒருவர், ஏதோ ஒரு காலத்தில் தாம் மனப்பாடம் செய்து வைத்திருக்கும் நூல்களுள் ஒன்றிற்கு எழுத்து வடிவம் தருகிறார். இச்செயலையே பல்வேறு இடங்களில் உள்ளவர்கள் மேற்கொள்ளுகின்றனர். வாய்மொழியாக வளர்ந்த அந்நூலகள் எழுத்து வடிவம் பெறும்போது, எழுத்து வடிவம் தருவோரின் கல்வித்திறன், கேள்வியறிவு, நினைவாற்றல், கற்பனைத்திறன், எழுத்துப் போக்கு ஆகியவற்றிற்கு ஏற்ப வடிவெடுத்து விடுகின்றன.

"தரு *வனத்துள் யானி*யற்றும் *தகை*வேள்ளிக்
கிடையூறாத் தவம செய் *வோர்கள்*
வெருவரச் *சென் றடை* காம வெகுளியென
*நிருதரிடை விலக்கா* வண்ணம்
செரு *முகத்துக் காத்தியென நின் சிறுவர்*
*நால்வரினும்* கரிய செம்மல்
ஒருவனைத் *தந் தீதியென* உயிர் *இரக்கும்*
*கொடுங்கூற்றின்* உளையச் சொன்னான்"

*(கம்ப. பால. 6:10)*

வேறுபாடுகள் : *வனத்தில், யாமியற்றும், தழல், தவ, தனி, செய்வொரை, சென்றடர், விலங்கா, முகத்தில்,*

***கார்த்தியெனை, உன், புதல்வர், அனைவரினும், தந்திடுதியென, ஈர்க்கும், கடுங்கூற்றின்.***

ஆசிரியர் ஒருவரால் இயற்றப் பெற்ற இப்பாடல் பல சுவடிகளில் இவ்வாறான பல வேறுபாடுகளுடன் எழுதப் பெற்றுள்ளது. இந்நிலை மனப்பாடம் செய்யப்பட்ட பாடல்கள் எழுத்து வடிவம் பெற்றபோது ஏற்பட்ட முதல் நிலையாகும். இதில் பொருள் மாற்றம் பெறாத வடிவ வேறுபாடுகளே காணப்படுகின்றன. பிறகு படி எடுத்தவர்களால் ஏற்பட்ட பாட வேறுபாடுகளும் பிழைகளும் இவ்வடிவ வேறுபாடுகளிலும் வேறுப்பட்டவையாகும்.

**பாடவேறுபாடுகளின் வகைபாடுகள்**

இடம், பொருள், காலம், வடிவம், தன்மை, எண் என ஆறு நிலையில் பாடவேறுபாடுகள் தோன்றுகின்றன *(பூ.சுப்பரமணியம், 1991 : 101)*. மேற்குறித்த பாடவேறுபாடுகளின் வகைகளின் அடிப்படையிலும் வேறு சில காரணங்களினால் தோன்றும் பாடவேறுபாடுகளின் அடிப்படையிலும் கம்பராமாயணம், சீவக சிந்தாமணியில் அறியத்தகும் பாடவேறுபாடுகள் இங்கு விளக்கப்படுகின்றன.

**இடம்**

நூலின் தலைப்புகளாகவும் உட்தலைப்புகளாகவும் காணப்பெறும் தொடர்களிலும், பிறபாடல் அமைப்புகளிலும் உள்ள வேறுபாடுகள் இடத்தால் அடையும் வேறுபாடுகள் எனப்பகுத்துக் கொள்ளப்படுகின்றன.

**நூல் தலைப்பு - இராமகாதை**

“நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி உத்திரத்தில்”

*(கம்ப. பால, காப்பு - 12)*

“இத்த லத்தி நிராமாவதாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்”

*(கம்ப. பால, காப்பு - 20)*

என்பனவாகிய இராமாயணப் பாடலடிகள், நூலுக்கு இராமகாதை, இராமாவதாரம் என்னும் பெயர்களே சூட்டப் பெற்றன என்பதை உணர்த்துகின்றன. ஆனால் முதல் நூலின் அடிப்படையில்

இராமாயணம் என்று வேறுபடுத்தப்பட்டு விட்டது. கம்பனை மகா சக்கரவர்த்தி எனத் தமிழ் நல்லுலகம் கொண்டாடியதின் விளைவு இராமாயணம் என்றால் கம்பராமாயணம் என்றே இன்று அறியப்படுகிறது; போற்றப்படுகிறது.

உட்தலைப்பு - கம்பராமாயணம் யுத்தகாண்டம்

வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார் பதிப்பு

வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சார்யர் பதிப்பு

5. இலங்கை அளவறிபடலம் - இலங்கை கேள்விப் படலம்

6. வருணனை அடைக்கலப்படலம் - வருணனை வழிவேண்டு படலம்

14. இராவணன் முதல் நாளையில் - முதற்போர்புரி படலம்
தோற்றபடலம்

29. மூலபெல வரவுகாண்படலம் - படைக் காட்சிப் படலம்

மேற்கண்ட பதிப்புகளில் இவ்வகைப் படல வேறுபாடுகள் காணப்பெறுவதோடு மண்டோதரி புலம்புறுபடலம், வீடணன் முடிசூட்டு படலம் போன்ற பல படலங்கள் ஸ்ரீநிவாஸையங்கார் பதிப்பில் தனித்தனிப் படலங்களாகக் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் அனைத்தும் நூலின் உட்தலைப்புகளில் காணப்பெறுவனவற்றிற்குச் சான்றுகளாகின்றன.

பொருள்

ஆசிரியரின் உண்மைத் தொடர்களில் வேறுபட்டனவெல்லாம் பாடவேறுபாடுகளே. ஆயினும் அவை அமையும் பொருட்தன்மையால் வடிவ வேறுபாடுகளும் பிழைகளுமாகிய இரண்டு வகையும் பாடவேறுபாடுகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன.

பொருள் வேறுபடத் திரிதல்

"*கேட்பது* விரும்பி நாய்கன் கிளைக்கெலா முணர்த்தி யார்க்கும்" *(சீவக சிந்தாமணி, 2078)*

வேறு :"*கேட்டலும்* விரும்பி நாய்கன்..."

*கேட்பது – கேட்டலும்* என்ற வேறுபாட்டில் - கேட்கத் தகுவதாகிய அதனை விரும்பி, சுற்றத்திற்கு உணர்த்தினான் என்ற பொருளில் திரிந்தது.

காலம்

தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் அனைத்திற்கும் அவற்றின் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. கம்பராமாயணத்திற்கும் சீவக சிந்தாமணிக்கும் காலம் குறித்த சர்ச்சைகளும் உண்டு.

கம்பராமாயணம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு நூல் என்பது சிலர் கொள்கை; “கி.பி. 1178-இல் கம்பர் ராமாயணத்தை எழுதி முடித்தார் என்பது எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து” *(எஸ்.சௌந்தரபாண்டியன், பக்.32).* இவ்வாறே சீவக சிந்தாமணி கி.பி. 9-ஆம் நூற்றாண்டு நூலாகும்; “கி.பி. 10-ஆம் நூற்றாண்டு என்பது எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து” *(மேற்சுட்டிய நூல், பக். 232).*

நூல் காலம் குறித்த வேறுபாடு மட்டுமின்றி காலம் தொடர்பான பாடவேறுபாடுகளை ஆசிரியர் காலத்தில் தோன்றியவை, உரையாசிரியருக்கு முன் தோன்றியவை, பிற்காலத்துத் தோன்றியவை என்று காலத்தால் மூன்று வகைப்படுகின்றன.

ஆசிரியர் காலத்தில் தோன்றிய வேறுபாட்டினை சிந்தாமணி உரை தெளிவுபடுத்துகிறது. சீவக சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதிய ஏட்டுச் சுவடிகள் இரண்டு வகையாகக் காணப்பட்டன. “ஜைன அன்பர்களுடைய பழக்கத்தால் ஏட்டுப்பிரதி இரண்டு வகையாக இருந்ததற்குக் காரணம் தெரிந்து கொண்டேன். நச்சினார்க்கினியர் முதலில் சிந்தாமணிக்கு உரை எழுதினாராம். பிறகு அதை ஜைனர்களிடம் படித்துக் காட்டிய பொழுது சம்பிரதாய விரோதமாகச் சில பகுதிகள் உள்ளனவென்று சொன்னார்களாம். அதனால் அவர் சிற்றாம்பூர் ஜைனமடத்திற்கு வந்து சில காலம் தங்கி ஜைன நூல்களையும், ஜைன சம்பிரதாயங்களையும் கற்றுச் சென்று மீண்டும் புதிய உரையை எழுதினாராம். விசேஷ உரையுடன் இருக்கும் பிரதியிலுள்ளது பின்பு எழுதிய உரை என்று தெரிய வந்தது” *(உ.வே.சாமிநாதையர் 1950 : 741).* என்னும் செய்தி உரையாசிரியர் காலத்திலேயே உரையாசிரியராலே வேறுபாடு தோன்றிவிட்டது என்பதை மெய்ப்பிக்கிறது.

**எண் வேறுபாடு**

பாடல் எண், அதிகார எண்களில் சுவடிகளிலும் பதிப்புகளிலும் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. இவ்வாறே இயல், நூல் ஆகியவற்றின் மொத்தப் பாடல் எண்ணிக்கையாலும் வேறுபாடுகள் உள்ளன. இவற்றை முறையே எண்வேறுபாடு, எண்ணிக்கை வேறுபாடு என தெளிவுப்படுத்திக் கொண்டு சான்றுகள் காட்டி நிறுவலாம்.

கம்பராமாயணம் பாலகாண்டம் திருஅவதாரப் படலத்தில் *'அரசர்தம் பெருமகன் அகிலம் யாவையும்'* என்று தொடங்கும் பாடல் வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சார்யர் பதிப்பில் 137ஆம் எண்ணில் காணப்படுகிறது. உ.வே.சா நூலகப் பதிப்பில் கையடைப் படலத்தின் முதற்பாடலாகக் காணப்படுகிறது. இப்பாடலின் வரிசை எண் முன்னவர் பதிப்பில் 317; பின்பதிப்பில் 315.

**எண்ணிக்கை வேறுபாடு**

பாலகாண்டம் முதற்படலம் முதல் பரசுராமப் படலம் ஈறாக உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை –

உ.வே.சா. நூலகப் பதிப்பு . - 1389.
வை.மு.கோ. பதிப்பு - 1397.
அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு - 1398.

**யுத்த காண்டம் -**

**ஆழ்வார் திருநகரி சுவடி கொண்டு பதிப்பித்த நூல் வை.மு.கோ. பதிப்பு**

படலங்களின் தொகை - 46
படலங்கள் - 39

பாடல்களின் தொகை – 4336
பாடல்கள் - 4358

**சிந்தாமணிப் பாடல் எண்ணிக்கை வேறுபாடு**

"மெய்ந்நீர்த் திருமுத்து இருபத்தேழ் கோத்துமிழ்ந்து திருவில் வீசும்

செந்நீர்த் திரள்வடம்போல் சிந்தா மணியோதி யுணர்ந்தார் கேட்டார்"

உரை : “இருபத்தேழ் என்றார் ஒன்றைப் பத்தாற் பெருக்கின இருநூற்று எழுபதைப் பத்தாற் பெருக்கின இரண்டாயிரத்து எழுநூற்றை” *(சீவக சிந்தாமணி, 3143. நச்சர்உரை)*

இந்தச் சிந்தாமணிச் செய்தி திருத்தக்க தேவரால் செய்யப் பெற்ற பாடல் இரண்டாயிரத்து எழுநூறே என்பதைப் புலப்படுத்துகிறது. ஆனால் சுவடிகளிலும், பல்வேறு பதிப்புகளிலும் மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து பாடல்கள் வரை எண்ணிக்கையால் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

## மனப்பாடமுறையால் பாடவேறுபாடுகள்

நூல்களை மனப்பாடமாக வைத்திருந்தவர்கள் அந்நூல்களைப் பிறருக்குப் பாடம் நடத்தும்போது சுவடிகளின் உதவியின்றியே நடத்தினார்கள். வாய்மொழியாகவே சொல்லி மாணாக்கரை எழுதிக்கொள்ளவும் செய்தார்கள். அவ்வாறு சொல்லும்போது பல வேறுபாடுகள் தோன்றிவிட்டன. மிகப்பல பாடல்களை மனப்பாடம் செய்திருந்த அவர்கள் பாடல்களைச் சொல்லும்போது சில சொற்களை, தொடர்களை மறந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நூலின் ஆழ்ந்த பொருளை உணர்ந்திருந்த காரணத்தாலும் பல நூல்களை மனப்பாடம் செய்திருந்த காரணத்தினாலும் அத்தொடர்கள் அவர்களுக்கு மறதியாகத் தோன்றவில்லை. ஆற்றொழுக்காக வேறு தொடர்களைக்கூறி அவ்விடத்தை நிரப்பியிருக்கிறார்கள். அவர்களின் கல்வித் திறத்தால் கருத்து அமைதி சீரின் அளவு எதுகை மோனைப் பொருத்தம் ஓசை நயம் ஆகியவற்றிற்கு ஏற்ப அத்தொடர்கள் அவர்கள் வாயினின்றும் தோன்றியிருக்கின்றன. இப்பாடவேறுபாடுகள் மனப்பாடப் பழக்கத்தால் தோன்றியவையாகின்றன.

இவ்வாறு மனப்பாடப் பழக்கத்தால் ஏற்பட்ட வேறுபாடுகளை,

1. ஆசிரியர் சொல்லுவதில் (அல்லது) அவரே எழுதுவதில் ஏற்படும் வேறுபாடு
2. ஆசிரியர் சொல்லிப் பிறரை எழுதச் செய்வதில் ஏற்படும் வேறுபாடுகள்

என இருவகையாகப் பிரிக்கலாம். இந்த வகைகளின் அடிப்படையில்

1. சொல் வேறுபடுதல், 2. சொல் இடம் மாறுதல், 3. சொல் திரிதல், 4. தொடர்; அடி வேறுபட்டு அமைதல் ஆகிய நிலைகளில் வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

### சொல் வேறுபாடு

"தண்டலை மயில்க *ளாடத்* தாமரை விளக்கந் *தாங்கக்*

*கொண்டல்கண்* முழவி *னேங்கக் குவகளைகண்* விழித்து நோக்கத்

தெண்டிரை யெழினி காட்டத் *தேம்பிழி மகர* யாழின்

வண்டுக ளினிது பாட மருதம்வீற் *றிருக்கு மாதோ*"

*(கம்ப. பால, 2-4)*

வேறு : "தண்டலை மயில்க ளாலத் தாமரை விளக்க *மேந்தக்*

*கொண்டலை* முழுவி *னோங்கக் குவளைகள்* விழித்து நோக்கத்

தெண்டிரை யெழினி காட்டத் *தேம்பொழி மதுர* யாழின்

வண்டுக ளினிது பாட மருதம்வீற் *றிருந்த மன்னோ*"

*'ஆல, ஏந்த, கொண்டலை, ஓங்க, குவளைகள், தேம்பொழி, மதுர, யாழின் வீற்றிருந்த, மன்னோ'* என்பனவாகிய சொற்கள் அனைத்தும் மனப்பாட நிலையிலிருந்து இடத்திற்கும் ஓசை நயத்திற்கும் ஏற்ப, வாய்மொழியாகச் சொல்லப்பட்டு, வடிவம் பெற்றவையாகும். இவற்றில் வடிவவேறுபாடாகவும் சில சொற்கள் அமைகின்றன.

### சொல்ல சொல்ல எழுதுவதால் வேறுபாடுகள்

மனப்பாடமாக உள்ள நூலையோ புதிதாகத் தாம் இயற்றிய நூலையோ ஆசிரியர் பாடம் நடத்தும் முறையில் அல்லது எழுதி வைக்கவேண்டும் என்ற நிலையில் தாம் சொல்ல வேறு ஒருவரை - மாணாக்கரை – எழுதச் செய்து நூல்வடிவாக்குவது வழக்காற்றில் இருந்துள்ளது. அந்த நூல் ஆசிரியருக்காக அல்லது மாணாக்கர் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பெறும். இவ்வாறு உருவாக்கும் பொழுது ஆசிரியர் கூறுகிற ஒலிப்பு முறையிலும் பாடவேறுபாடுகள் தோன்றுகின்றன.

**உயிர் ஒலி ஒப்புமை.**

"சேலுண்ட *வொண்க* ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்" *(கம்ப. பால, 2-13)*

**வேறு** : "சேலுண்ட *உண்க* ணாரிற் றிரிகின்ற..."

இவ்வேறுபாடு உரையாசிரியர்கள் காலத்துக்கு முன்பே ஏற்பட்டுப் பொருளும் வெவ்வேறு கண்டுள்ளனர். ஒண்கண் - உண்கண் என்பது உயிர் ஒலி ஒப்புமையால் ஏற்பட்டதேயாகும்.

**ழ, ள – ஒலி ஒப்புமை**

"ஆசினி மென்பழம் *அளிந்தவை* உதிரா" *(கம்ப. பால, 1-3)*

"ஆசினி மென்பழம் *அழிந்தவை* உதிரா"

*அளிந்தவை – அழிந்தவை*யாக வேறுபட்டுள்ள இவ்வேறுபாடு ழகர, ளகர ஒலிகளின் மயக்கத்தால் நிகழ்ந்தவையாகும். இதனைச் சில வட்டார வழக்கு எனவும் கொள்ளலாம்.

**ண, ந, ன – ஒலி ஒப்புமை**

"தள்ளாத சும்மைமிகு *தக்கந நாடு*நண்ணி"

*(சீவக சிந்தாமணி-20)*

தக்கநல் நாடு – தக்கணநாடு என்றாயிற்று. இது ண, ந, ன என்னும் ஒலி ஒப்புமையால் எழுதப் பெற்ற வேறுபாடாகும்.

**குழப்பங்களில் பாடவேறுபாடுகள்**

சுவடிகளைப் பிரதி செய்து வந்தவர்கள் ஒரெழுத்தை மற்றோரெழுத்தாகக் கொண்டு எழுதி விட்டதனாலும், தெரியாத இடங்களில் தாமே வாசித்துப் புதியனவாக எழுதிச் சேர்த்துவிட்டமையாலும் உண்டான வேறுபாடுகள் அளவல்லாதன. இதே போன்று சுவடிகளில் காணப்படும் புள்ளியில்லா நிலை, கால், கொம்பு ஆகிய எழுத்துத்தன்மை, பிறவாகிய கையெழுத்து வேறுபாடுகள் ஆகியவற்றால் பலவகைக் குழப்பங்கள் தோன்றி, எழுதுவதில் பல வேறுபாடுகளை உண்டாக்கியுள்ளன என்பதைப் புலப்படுத்துகின்றன. இவ்வாறான குழப்பங்களால் நிகழ்ந்துள்ள வேறுபாடுகளுக்குச் சில சான்றுகளைக் காட்டலாம்.

**அகர இகர குழப்பம்.**

நாட்டின் எழில்*காட்ட* – நாட்டின் எழில்*காட்டி*
*(கம்ப. பால, 10-22)*

**ன, நக்களில் குழப்பம்**

தந்நேரில்லா - தன்னேரில்லா *(கம்ப. பால, 10-30)*

**தகர, ககர குழப்பம்**

"யானை *நாதத்தில்* தோற்றுதலின் அதற்கு வணங்குதல் இயல்பு" *(சீவக சிந்தாமணி, 743, உரை)*

என்னும் வாக்கியம் பல சுவடிகளில் நாகத்தில் என்று காணப்பட்டதால் நாகமா, நரகமா என்று பலவாறு சிந்திக்க நேர்ந்தது என்னும் வரலாறு சுவடிகளில் குழப்பம் நிகழ்தற்குச் சிறந்த சான்றாகும் *(சீவக சிந்தாமணி, பக்.768).*

**இடைச் செருகல்களால் பாடவேறுபாடுகள்**

மூலச் சுவடியிலிருந்து படியெடுக்கும் போது பலவகை வேறுபாடுகள் தோன்றியுள்ளன. அவற்றுள் சில புதிய சேர்க்கைகளும் திருத்தங்களும் படியெடுப்போரால் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறின்றி படியெடுப்போர் பல பாடல்களை எழுதி நூலின் பொருண்மை மாறாமல் சேர்த்து விடுவதுமுண்டு. இவ்வாறு தோன்றிய இடைச் செருகல்கள் கம்பனிலும் சிந்தாமணியிலும் நிறைய உண்டு.

*கம்பராமாயணம்* அயோத்தியா காண்டம் மந்திரப்படலத்தில்

"மூவெழு முறைமையெங் குலங்கண் முற்றுறல்
பூவெழு மழுவினாற் பொருது போக்கிய
சேவகன் சேவகம் செருத்த சேவகர்
காவதிவ் வுலகமீ தறனென் றாரரோ.."

என்ற பாடலுக்கு பின்னும் வேறு சில பிரதிகளில் 1478ஆம் பாடலின் பின்னும் 14 கவிகள் இடைச் செருகல்களாக காணப்படுகின்றன என்பதை அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பின் வழி கூறமுடிகிறது. இவ்வாறு கம்பராமாயணத்தில் பாடல்கள் கொத்துக் கொத்தாக இடைச் செருகல்கள் ஏற்பட்டு பாடவேறுபாடுகளும் மிகுதியாகிவிட்டன.

சீவக சிந்தாமணியில் இடைச் செருகல்

சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம் 34-ஆம் பாடலின்பின் 'என்றவனுரைப்பக் கேட்டே' எனவும் 'சேட்டிளம் பரிதிபோம்' எனவும் தொடங்கும் இருபாடல்கள் இருந்துள்ளன. அவை பயிலவழங்கா என்று உரை கூறாது விடுத்துள்ளார் நச்சினார்க்கினியர். இச்செய்திகள் சுவடிகளுள் இடைச் செருகல்கள் பல நிகழ்ந்துள்ளன என்பதை உணர்த்துகின்றன. இவ்விடைச் செருகல்கள் மூலநூலில் உள்ள சுருங்கிய செய்திகளுக்கு மேலும் விளக்கம் தரும் நோக்கத்தோடு நிகழ்ந்துள்ளன என்பதையும் உரையாசிரியர் கூற்று புலப்படுத்துகிறது. சான்றாக, 'கைகட்டி யிவனையுய்த்தால்' (சீவகசிந்தாமணி -1089) என்னும் தொடரிலுள்ள 'கைகட்டி' என்பதை விளக்க, காட்டி என்று தொடங்கும் பாடலைக் கந்தியார் செய்துள்ளதாகக் குறிப்பிடும் நச்சினார்க்கினியரின் விளக்கத்தைக் கூறலாம் (சீவக சிந்தாமணி – 1089 – உரை).

பாடவேறுபாடுகளும் மூலபாட ஆய்வும்

நூலாசிரியர், உரையாசிரியர்களின் கூற்றுகளும் தொடர்களும், படிப்போரால் காலந்தோறும் வேறுபட்டுவிடுகின்றன. ஒரே நூலுக்குக் கிடைக்கும் பல சுவடிகளிலும் மூலத் தொடர்கள் வெவ்வேறாக அமைந்து பாடவேறுபாடுகள் மிகுந்து விடுகின்றன. அவற்றில் காணப்பெறும் பலவகைத் தொடர்களையும் ஒப்பிட்டு ஆய்ந்து ஆசிரியரின் மூலபாடம் இதுதான் என்று காண முயற்சி செய்வது மூலபாட ஆய்வு எனப்பெறுகிறது. எனவே இதனைப் பின்வரும் சான்றுகள் தெரிவுப்படுத்துகின்றன.

"ஆசிரியரால் இயற்றப்பெற்ற மூலப்பாடத்தில் பிற்காலத்துப் பிழைகள் உண்டாயின. அவற்றை நீக்கி உண்மை வடிவை நிறுத்துதலே மூலபாட ஆய்வாகிறது" *(Chambers Twentieth Century dictionary p.1 396 B and The Random house Dictionary p.1468 c).*

"நூலாசிரியர், காலம், படியெழுந்த காலம், காலத்தால் உண்டான வேறுபாடுகள் ஆகியவற்றால் உண்டான மூலத்தின் நிலைபேறு தகுநிலை எனப்படும்" *(Encyclopaedia Britannica Vol. 21 p. 918 – B).*

"மூலநூலில் ஏற்பட்ட பிழைகளைக் காணும் கண்டுபிடிப்பும், அவற்றை நீக்கும் கலையுமாகிய அறிவியலே மூலபாட ஆய்வு ஆகும்" *(Art and Error p. 2).*

என்பன மூலபாட ஆய்வு என்பதற்கு சிறந்த விளக்கங்களாக அமைகின்றன.

நூல், நூலாசிரியர், நூலின் காலம், நூல் இடம், பொருள்மைதி, தொடரமைதி, நடையமைதி, யாப்பமைதி ஆகியவற்றின் பொருத்தத்திற்கு ஏற்ப, ஆசிரியரின் மூலபாடம் இது தான் என்று முடிவு செய்வது அவ்வாய்வின் முடிவாகிறது. அம்முடிவால் நூல் தெளிவான முழுமை பெறுகிறது. அம்முழுமையே அவ்வாய்வின் பயனாகிறது.

**கம்பனில் மூலபாடம்**

"வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம்மாநீர்...
கரம்பெலாம் செந்தேன் சந்தக் காவெலாம் களிவண்டீட்டம்"
*(கம்ப. பால, நாட்டுப் - 2)*

இப்பாடலில் '*கரம்பெலாம்*' என்னும் சொல் பல சுவடிகளிலும் பதிப்புகளிலும் '*கரும்பெலாம்*' என்றே காணப்பெறுகிறது. 'வரம்பு, குரம்பு, பரம்பு' என்னும் முதல் மூன்று அடிகளின் முதற் சீர்களை நோக்க, எதுகை நடையமைதியாகக் கரம்பெலாம் என்பதே சிறந்த பாடமாகிறது. இப்பாடமும் சில சுவடிகளிலும் பதிப்புகளிலும் காணப்பெறுகின்றது. மேலும் 'வரம்பு, மடை, குரம்பு, மேதிக்குழி பரம்பு, சாலிப்பரப்பு, சந்தக்கா' ஆகிய இடப்பெயர்களினிடையே 'கரும்பு' என்னும் பொருட்பெயர் அமைவதிலும் 'கரம்பு' என்னும் இடப்பெயரே பொருத்தமுடையதாகிறது. 'வரம்பெலாம் முத்தம்' முதலான உயர்வு நவிற்சிப் பொருள்களுக்கேற்பக் 'கரம்பெலாம் செந்தேன்' என்பதும் உயர்வு நவிற்சியாகப் பொருந்த 'கரும்பெலாம் செந்தேன்' என்பது தன்மை நவிற்சியாகவே அமைந்து பிறவற்றோடு பொருந்தாத் தன்மையைப் பெற்றுவிடுகிறது. எனவே சொல் தோன்றும் இடம், பொருள், பாநடை அணிநலம் ஆகிய பொருத்தங்களுக்கு ஏற்ப ஆசிரியரின் பாடம் இதுவே எனத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

"மாதர்கள் *கற்பின்* மிக்கார் கோசலை மனத்தையொத்தார்"

"மாதர்கள் *வயதின்* மிக்கார் கோசலை
மனத்தையொத்தார்" *(கம்ப. பால, நாட்டுப் - 12)*

இவற்றில் கற்பின், வயதின் என்னும் சொற்களுள் நூலாசிரியர் காலம், நூல் மாந்தர் ஆகிய சிறப்புகளுக்கு ஏற்பக் கற்பின் மிக்கார் என்பதே ஆசிரியரின் பாடமாகக் கொள்ளப்பெறுகிறது. இவை மூலப்பாட ஆய்வின் வழி அறியப்படும் உண்மை வடிவங்களாகும்.

**வேறுபாடுகளைக் குறித்தல்** : கிடைத்துள்ள வேறுபாடுகளைக் குறிக்கும் முறையில் ஒருவித ஒழுங்குமுறையைக் கடைபிடித்தல் வேண்டும். சான்று :

"*கூற்றுண் டோசொலாய்* கூற்றுறழ் வேலினாய்"
*(கம்ப. பால, 7-63)*

**வேறு** : 1. கூற்றுண்டோ சொல்க
2. கூற்றுண்டோ சொலும்
3. கூற்றுண்டோ சொலை
4. கூற்றுண்டோ உரை
5. கூற்றுண்டோ சொலக் கூற்றுறழ்.

"*சூல மற்றன துண்டங்கள்* கண்டனர்"
*(கம்ப. பால, 7-69)*

**வேறு** : 1. சூலம் அற்றுறுதுண்டங்கள்
2. சூலம் அற்றிரு துண்டங்கள்
3. சூலம் அற்றதன் துண்டங்கள்
4. சூலம் இற்றதன் துண்டங்கள்

பல சுவடிகளிலிருந்து வேறுபாடுகளைக் குறிக்கும்போது இவ்வாறு முழுத் தொடராகக் குறிப்பது ஆய்ந்து பொருளறிய எளிமையாக இருக்கும். மீண்டும் சுவடியைப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படாது. ஆய்வு விரைந்து நடைபெறும்.

**எலிப்படை – எலிப்பகை**

பாடவேறுபாடுகளிலிருந்து மூலபாடத்தை பிறநூல் தொடர்கள், மேற்கோள்கள் ஆகிய இருவகைப் புறச்சான்றுகளின் துணைகொண்டும் மூலபாடங்களை உறுதிபடுத்தலாம்.

"ஒலித்தக்கால் என்னாம் *உவரி எலிப்படை*
நாகம் உயிர்ப்பக் கெடும்" *(குறள். 763)*

வேறு : "ஒலித்தக்கால் என்னாம் *உவரி எலிப்பகை*
நாகம் உயிர்ப்பக் கெடும்"

எலிப்படை, எலிப்பகை என்பன பாடங்கள். *படைமாட்சி* என்னும் அதிகாரத்தில் வருவது இக்குறட்பா.

'ஊறு அஞ்சா வெல்*படை*' *(குறள். 761)*

'தொலைவிடத்துத் தொல்*படை*' *(குறள். 762)*

'வன்கண் அதுவெ *படை*' *(குறள். 764)*

'ஆற்றல் அதுவே *படை*' *(குறள். 765)*

'எனநான்கே ஏமம் *படைக்கு*' *(குறள். 766)*

'*படைத்*தகையால் பாடு பெறும்' *(குறள். 768)*

'இல்ஆயின் வெல்லும் *படை*' *(குறள். 769)*

என்பன அவ்வதிகாரத்துள் ஆளப்பட்டுள்ள தொடர்முறை. மேலும் குகனது கூற்றாகப் பேசும் கம்பரின் வாக்காகிய

'*எலிஎலாம் இப்படை* அரவம் யான் என'
*(கம்ப. அயோத்தியா, 11:10)*

என்னும் அடியும் இக்குறட்பாவின் தொடரையே எடுத்தாளுகிறது. எனவே 'எலிப்படை' என்பது சிறந்த பாடமாதல் வேண்டும்.

இலக்கண மரபு

பழந்தமிழ் இலக்கியங்கள், காப்பியங்களின் செய்யுள்கள் இலக்கண மரபிற்கேற்பவே சொற்கள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் இலக்கண மரபின் துணைக் கொண்டும் மூலபாடத்தை உறுதி செய்யலாம்.

"*இளையவற்* பயந்தனள் இளைய மென்கொடி"
*(கம்ப. பால, 5:105)*

வேறு : "*இளையவள்* பயந்தனள் இளைய மெனகொடி"

இளையவன் - பயந்தனள் என்னும் புணர்ச்சியில்

"னகர விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே"
*(தொல். எழுத்து, 333)*

என்னும் விதிப்படி னகரம் றகரமாகத் திரிந்தது. இளைய மென் கொடியாகிய சுமித்திரை இளையவனாகிய இலக்குவனைப் பெற்றெடுத்தாள் என்பது இவ்வடி தரும் பொருள். 'இளையவள் பயந்தனள்' என்பதைப் பாடமாகக் கொண்டால் 'இளையமென் கொடி இளையவள் பயந்தனள்' என்றாகி பெண்பாற் குழந்தையைச் சுட்டுவதாகிவிடும். எனவே 'இளையவற் பயந்தனள்' என்பதையே பாடமாக ஏற்கமுடிகிறது.

**ஒருமை - பன்மை ஆண்பாலுள்**

"வந்த நம்பியைத் தம்பி தன்னோடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தை நீதனித் தாயு *நீயிவர்க்கு*" *(கம்ப. பால, 6:17)*

வேறு : "தந்தை நீதனித் தாயு *நீயிவற்கு*"

இவர் + கு - இவர்க்கு; இவன் + கு - இவற்கு என்பன பெயர்ச் சொல்லோடு கு உருபு புணர்ந்து நிற்கும் சொற்களாகும். இவர்க்கு என்பது பன்மைச் சொல்; இவற்கு என்பது ஆண்பால் ஒருமைச் சொல். இரண்டும் கு உருபு ஏற்று வந்தன. கம்பர் பாடலுள் அங்கு வந்த நம்பியாகிய இராமனை அவன் இளவல் இலக்குவனோடு சேர்த்துக் கௌசிக முனிவனிடம் காட்டிய தசரதன், முனிவரை நோக்கி இவர்களுக்குத் (இவர்கள் இருவருக்கும்) 'தந்தையும் தாயும் நீயே யாவாய்' என்று கூறினான் என்பது இவ்வடிகளின் பொருள். இதில் அமைந்த பாடம் இவர்க்கு என்பதாகும். இவற்கு என்பதைப் பாடமாகக் கொண்டால், இருவரையும் காட்டி, இவனுக்கு தந்தையும் தாயும் நீயே என்று கூறினான் தசரதன் என்பதே பொருளாகிவிடும். ஒருமை பன்மைத் தொடர்கள் மயங்கி இலக்கணப்பிழை ஏற்படுகிறது எனவே 'இவர்க்கு' என்பதே பிழையற்ற பாடமாகிறது.

**சிந்தாமணியில் மூலபாடம்**

"இதன்பின் என்றவன் சேட்டிளம் என இருகவி கூறுவாருமுளர். அவை பயில வழங்கா" (சீவக சிந்தாமணி, 442, உரை) என்னும் நச்சினார்க்கினியர் கூற்று, இடைச் செருகல்களைக் கண்டு விலக்கிய மூலப்பாட ஆய்வு நெறியின் விளைவாகும்.

**சுவடிகளின் காலம் அறிதல்**

"920ஆம் ஆண்டு குரோதனவருஷம், சித்திரை மாசம் 15ஆம் தேதி முதல், சிந்தாமணி, திருநெல்வேலி தம்பா பிள்ளையன்

அவர்கள் ஏடு பார்த்து எழுதின, ஶ்ரீவைகுண்டம், சிவசங்கரம் பிள்ளையவர்கள் ஏடு பார்த்து இராமாயணம் திருவேங்கடம் எழுதுவித்து எழுதின ஏட்டின் படிக்கு முதற் புத்தகம் பிழைபார்த்து முடிந்தது" *(சீவகசிந்தாமணி, முகவுரை - வானமாமலைத்தாதர் அவர்கள் ஏடு)*

"ஆங்கிரச வருஷம், சித்திரை மாதம், 9ஆம் தேதி சோம வாரம் திருதியை... எழுத ஆரம்பம். ஆங்கிரச வருஷம், வைகாசி மாதம், 29ஆம் தேதி புதவாரமும் ... ரேவதி நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில், திருச்சிராப்பள்ளியிலிருக்கும் குமாரசாமி வாத்தியார் குமாரர் வேலாயுத வாத்தியார் சேலத்திலிருக்கும் அட்டாவதானச் சொக்கநாத முதலியாரவர்கள் (தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர்) மேலேடு பார்த்து எழுதியது" (சீவகசிந்தாமணி முகவுரை – சேலம், இராமசாமி முதலியார் அவர்கள் ஏடு).

சுவடிகளின் இறுதியில் காணப்பெறும் இத்தொடர்கள் மூலபாட ஆய்வின் வழி சுவடியின் காலமும் முன் ஏடும் அறியத் துணைபுரிகின்றன.

**இறுதி அமைப்பு தொகுப்பு :** நூலின் செய்திகளைத் தொகுத்துக்கூறும் பாடல்களும் இறுதியில் அமைகின்றன.

"தத்தைகுண மாலையோடு தாவில்புகழ்ப் பதுமை
யொத்தவெழிற் கேமசரி யொண்கனக மாலை
வித்தகநல் விமலையொடு வெஞ்சுரமஞ் சரிதான்
அத்தகையி லக்கணையொ டாகமண மெட்டே"
*(சீவகசிந்தாமணி இறுதி)*

என்பது தொகுப்புப் பாடலாகச் சீவக சிந்தாமணிச் சுவடிகளில் காணப்படுவதாகும்.

"நாமகள்கோ விந்தையொடு நற்காந் தருவதத்தை
தாமகுண மாலை தனிப்பதுமை – கேமசரி
மாகனக மாலைவிம லைசுரமை லக்கணையொ
டாகு திருமணங்க ளாம்" *(சீவகசிந்தாமணி இறுதி)*

என்னும் இப்பாடலும் சில சுவடிகளில் காணப்பெறுகிறது. எனவே இவை நூலாசிரியரின் பாடல்களல்ல வென்பதை அறிய முடிகிறது. மேலும்

"தத்தைகுணமாலை என்னுங்காவியம், 'பகைமாற்று' என்னுங்காவியம் கந்தியார் கூற்று" (சீவகசிந்தாமணி, சுவடி இறுதி)

என்று கூறும் நச்சினார்க்கினியர் கூற்றால் இப்பாடல்களைக் கந்தியார் என்பவர் பாடி இடையிலே சேர்த்துள்ளார் என்பதும் மூலபாட ஆய்வின் வழி தெரிய வருகிறது.

நிறைவாக

- கம்பனிலும் சிந்தாமணியிலும் காணணப்பெறும் சில பாடவேறுபாடுகளையும் சூழல்களையும் காரண காரியங்களுடன் தக்க சான்றுகளுடன் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.
- பாடவேறுபாடுகள் மூலம் மூலபாடங்கள் சிலவற்றைக் கண்டறிந்து பதிவு செய்யப் பெற்றுள்ளன.
- சுவடியியல் ஆய்வு முறைகளில் காப்பியங்களில் உள்ள பாடவேறுபாடுகளை விரிவான தளத்தில் ஆய்வு செய்வதற்கு நிறைய ஆய்வுக் களங்களும் கூறுகளும் உள்ளன என்பதை இக்கட்டுரை இனம் காட்டுகிறது.

## துணைநூல்கள்


1. என் சரித்திரம், டாக்டர் உ.வே.சாமிநாதையர், எஸ்.கலியாணசுந்தரம் பதிப்பு, சென்னை. 1950
2. கம்பராமாயணம், யுத்தகாண்டம், வெ.நா.ஸ்ரீநிவாஸயங்கார் (பதிப்பு), ஆழ்வார் திருநகர். 1954
3. கம்பராமாயணம், பாலகாண்டம், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரை (பதிப்பு), வை.மு.கோ கம்பெனி. 1973
4. கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரை (பதிப்பு), வை.மு.கோ கம்பெனி. 1973
5. சீவக சிந்தாமணி, உ.வே.சாமிநாதையர், பிரசிடென்சி அச்சுக்கூடம், சென்னை. 1907
6. சுவடி இயல், டாக்டர் பூ.சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை (குறிப்பு:இந்த நூலில் கூறப்பெற்றுள்ள அடிப்படை தரவுகளைக் கொண்டே இக்கட்டுரை உருவாக்கப்பெற்றுள்ளது). 1991
7. தமிழ்ப் புலவர் வரிசை, மூன்றாம் புத்தகம், கழக வெளியீடு, சென்னை. 1956
8. திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், மு.சண்முகம்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. 1971
9. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை. 1972

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | |
| அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு | 145.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 160.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 55.00 |
| Comparative Studies in Literary Cultures | 150.00 |
| Sangam Classics : New Perspectives | 100.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 105.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 100.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம் | 55.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 170.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 45.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 110.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 50.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 45.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 85.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1 | 75.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2 | 125.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 95.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1 | 190.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 90.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல் | 55.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 120.00 |
| வல்லம் புராணம் | 65.00 |
| இதழியல் உலகம் | 200.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 120.00 |
| படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 60.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 100.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும் | 65.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 85.00 |
| பெயரியல் | 115.00 |
| தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 55.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | |
| தமிழில் இதழியல் | |

T177
R005

Rs.135/-

750 சுவடி பதிப்புகளில் உரைவேறுபாடுகள்